இராஜாதித்தன் சபதம்



கலைமாமணி

விக்கிரமன்

இராஜாதித்தன் சபதம்

(வரலாற்றுப் புதினம்)

தமிழ்ப் பல்கலைக் கழகத் தமிழன்னை விருதுபெற்ற

கலைமாமணி

விக்கிரமன்



யாழினி பதிப்பகம்

புதிய எண். 18, அம்பர்சன் தெரு,
முதல் தளம், குறளகம் எதிரில்
பிராட்வே, சென்னை - 600 108
தொ.பேசி 044-25369892, 25363186

நூல் விளக்கக் குறிப்பு

நூலின் தலைப்பு		இராஜாதித்தன் சபதம்
நூலாசிரியர்		கலைமாமணி விக்கிரமன்
மொழி	:	தமிழ்
நூல் வகை		வரலாற்றுப் புதினம்
யாழினி முதல் பதிப்பு	:	**2012**
உரிமை	:	© ஆசிரியருக்கே
நூலின் அளவு		டெமி 1 × 8
பக்கங்கள்		256
நூலின் விலை		**₹ 160.00**
நூல் வெளியீடு		யாழினி பதிப்பகம் பு.எண் 18, அம்பர்சன் தெரு, முதல் தளம், குறளகம் எதிரில், பிராட்வே, சென்னை-600 108. தொ.பேசி. 044-25369892, 25363186
நூலழகு		குகன் கம்ப்யூட்டர்ஸ், சென்னை-8
அச்சிட்டோர்		தி இம்பீரியல் கிராபிக்ஸ், சென்னை-1

ராஜாதி ராஜ... விக்கிரம ராஜா... பராக் பராக்...!

கலைமாமணி விக்கிரமன் அவர்களின் இன்னுமொரு அதிசய அற்புத எழுத்துத் திருவிழா!

தமிழ் வர்ணனையும் வரலாற்று ஆதாரக் குறிப்புகளும் சேர்ந்து பின்னிப் பிணைந்து ஜடை போட்டுக்கொள்கிறது!

'ராஜாதித்தன் சபதம்' - ஒரு வரலாற்று இலக்கியம். சோழ சாம்ராஜ்ஜியத்தின் காதலையும், வீரத்தையும் அள்ளித்தந்து - சோழ மன்னர்களின் பெரும்புகழை நம் மனசுகளில் விதைக்கும் வித்தக பணியை விக்ரமனின் தூவல் (பேனா) செய்திருக்கிறது.

தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு சோழ மன்னர்கள் பலர் கம்பீரமாக பவனி வந்த, நடந்த கதையை வரலாறு தனக்குள் பதிவு செய்துகொண்டாலும், இன்றைய மக்களுக்குத் தங்கள் முன்னோர்கள் வாழ்ந்த வரலாற்றைக் கதை வழியாக கொண்டு செல்லும் மகாவேலையை செய்பவர்களில் முதன்மையானவர் விக்கிரமன் அவர்கள்.

உள்ளதை உள்ளபடி சொன்னால் அது வரலாறு. உள்ளபடி உள்ளதில் மக்கள் மொழியையும், தமிழ்த் தேன் நடையையும்... குழந்தைக்குப் பால் புகட்டும் பாணியில் செலுத்தும்போது, அது வரலாற்றுப் புதினம் ஆகிவிடுகிறது.

இன்றைய கம்ப்யூட்டர் மனிதர்களில் பலருக்கு வரலாறு என்பதே 'வேண்டா வெறுப்பாக பிள்ளை பெற்று காண்டாமிருகம்'னு பேரு வெச்ச கதையாகவே கசக்கிறது.

பலருக்கு மத்தியில் வரலாற்றின் பிசிறுகளை மட்டும் தெரிந்து வைத்திருப்பார்கள் ஒரு சிலர். சோழ அரசு, சோழர், சோழ வரலாறு என்று சொன்னவுடன் பலரும் சொல்லும் ஒரு சோழப் பெயர் - ராஜராஜசோழன். அந்தப் பெயரை

மட்டுமே பலர் அறிய முடிந்திருக்கிறது. ஆனால், வரலாறு சொல்லும் சோழ செய்திகளை உற்று நோக்கினால்... சோழ ராஜ்ஜியத்தைக் கட்டிக் காத்த வரிசையில் பல சோழ மாமன்னர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது தெரியவரும்.

இந்த வரிசையில் முக்கியமான சோழ மன்னன் பராந்தகச் சோழன்.

பின் வரையிலும் சோழ நாட்டை உயர வைக்கும் [illegible]யில் ராஜ தூரிகை எடுத்து சோழ ஓவியம் வரைந்தவன். அவனது வீர மகன்களில் ஒருவன் இராசாதித்தன். இவனது ஒரே அன்பு சகோதரி வீரமாதேவி. இராசாதித்தனின் சகோதரிக்கு ஏற்பட்ட அவமான எச்சிலைத் துடைத்தெறிந்து - சகோதரியையும், சகோதரியின் கணவன் கோவிந்தனையும் எழுச்சியுற வைத்து, மீண்டும் இராட்டிரகூட நாட்டு மன்னராகவும், அரசியாகவும் ஆக்கிக்காட்ட வீர சபதம் எடுக்கிறான் இராசாதித்தன்.

இந்த வரலாற்றுத் தேனை தனது ஐஸ் க்ரீம் தமிழால் படைப்பிலக்கியமாக்கித் தந்துள்ளார், வரலாற்று ஆசிரியர் களின் ஒப்பன் யுனிவர்சிட்டியாகத் திகழும் விக்கிரமன் அவர்கள்.

நாதன்

முன்னுரை

'நந்திபுரத்து நாயகி' சரித்திர நவீனத்தை நான் எழுதும் போது சோழர்களின் வரலாற்றுத் தொடர்புடைய பல நூல்களைப் படிக்க வேண்டியிருந்தது. கல்வெட்டுகள் அவற்றைத் தேடிப்பிடித்து அதற்கேற்ற சான்றுகளை, ஆசிரியர்கள் எழுதிய நூல்களோட ஒப்பு நோக்கும் வாய்ப்பும் கிடைத்தது. அப்படி வரலாற்றுக் கடலில் மூழ்கியிருக்கும் போது, சோழ மன்னர்களின் சரித்திரங்கள், பல சரித்திர நவீனங்களை எழுதத் தக்க 'கரு'வினை அளிக்க எல்லையாகத் திகழ்ந்தன. அவற்றை மன ஏட்டில் குறித்துக் கொண்டேன். பிறகு மெல்ல வாய்ப்பு ஏற்படும்போது சிந்தித்து நவீனங்களாக அமைக்கலாம் என்று திட்டமிட்டேன். அவ்வாறு மனத்தில் பதிய வைத்த சம்பங்களுள் 'இராஜாதித்தன் சபத'த்திற்கு அடிப்படையான நிகழ்ச்சியும் ஒன்று.

பிற்காலச் சோழ மன்னர்களுள் குறிப்பிடத்தக்கச் சிறந்தவர் பராந்தக சோழர். அவரை முதற்பராந்தகன் என்று வரலாறு கூறும். பராந்தகனுக்கு நான்கு புதல்வர்களும், இரு பெண்களும் இருந்தனர். அவர்களுள் தலைப்பிள்ளை இராஜாதித்தன். வீரமாதேவி, அனுபமா எனும் பெண்களுள் வீரமாதேவியை இராட்டிரகூட மன்னனான நான்கரம் கோவிந்த வல்லவரையனுக்கு மணம் செய்து கொடுத்திருந்தார்கள்.

இராட்டிரகூட நாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக கோவிந்த வல்லவரையன் பட்டமிழந்து, தன் மனைவி வீரமாதேவியுடன், சோழ நாட்டிற்கே வந்து சேர்ந்தான்.

இது சரித்திரச் சான்று. அடுத்து இளவரசன் இராஜாதித்தன், இராட்டிரகூடர்களுடன் நடத்திய போரில்

தக்கோலத்தில் உயிர் துறந்தான் என்பது. இவ்விரு சான்றுகளையும் என் மனத்தில் பல ஆண்டுகளாக அசை போட்டுக் கொண்டிருந்தேன். சான்றுகளோடு கற்பனை சேர்ந்தது. இராஜாதித்தன் சபதமாக உருவெடுத்தது.

'இராஜாதித்தன் சபதம்' வரலாற்று நவீனத்தில் பராந்தகனது ஆட்சிக் காலம், இராட்டிரகூட நாட்டில் கோவிந்த வல்லவரையன் ஆட்சி ஏற்றது பிறகு அவனுடைய சிறிய தந்தையார் மூன்றாம் அமோகவர்ஷன் பட்டம் ஏறியது, ஆகிய அனைத்தையும் கவனிக்க வேண்டியிருந்தது. நவீனத்தில் வரும் வெள்ளங்குமரன் என்ற பெயர் கொண்ட வீரனும் சரித்திரத்தில் வரும் உண்மைக் கதாபாத்திரமே. தன் சகோதரிக்கு வாழ்வளிக்கச் சீறியெழுந்த இராஜாதித்தனின் இலட்சியக் கனமே இந்த நாவலின் அடிப்படை.

இந்த நாவலை 'தினமணி கதிர்' வாரப் பதிப்பில் தொடராக எழுதுவதற்குக் காரணமாக இருந்த திரு.ரா.அ. பத்மநாபன், திரு.வித்வான் வே.லக்ஷ்மணன், திரு.'சாவி' அவர்களுக்கு இந்தச் சமயத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விக்கிரமன்

'தினமணி கதிர்' ஆசிரியர் திரு.கே.ஆர்.வாசுதேவன் அவர்களின் அணிந்துரை

முப்பது ஆண்டு காலமாக இடையறாது "எழுத்து என் தொழில்" என்று ஈடுபட்டு, பல சரித்திர நவீனங்கள், சிறு கதைகள், குழந்தைகளுக்கான கதைகள், சமூக நவீனங்கள், வரலாற்று நூல்கள் என்று இப்படி பலதரப்பட்ட நயம் மிக்க நூல்கள் பலவற்றை எழுதி வரும் அன்பர், "அமுதசுரபி" ஆசிரியர், "விக்கிரம"னின் எழுத்துக்கு அணிந்துரை தருவது அதிகப் பிரசங்கித்தனம் என்று தோன்றினாலும், அதை ஒரு பெருமையென்றே கொண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

சரித்திர நவீனங்களைத் தமிழில் நமக்களிப்பவர்கள் வெகு சிலரே. இந்த நற்பணியில் திரு.விக்கிரமன் அவர்களுக்குத் தனியொரு இடம் உண்டு என்பதை வாசகர்கள் மறுக்க மாட்டார்கள். "நந்திபுரத்து நாயகி" அவர் கை வண்ணத்தில் உருவாகிய அருமையானதொரு காப்பியமாகும். அவருடைய சரித்திர நவீனங்களில் சான்றுடன் கூடிய மையக் கருத்தை மெள்ள மெள்ள விரிவாக்கி, பின்னி, சிக்கலுக்குக் கொண்டு வந்து, பிறகு யதார்த்தமான முடிவுக்கு கொண்டு நிறுத்தும் பாங்கு போற்றுதற் குரியதாகும். தரமான, ஆனால், சரளமான தமிழில் சம்பவங் களையும், சம்பாஷணைகளையும் அளித்துப் படிப்பவர்களின் மனத்தில் சோர்வே ஏற்படாமல், கதையுடன் ஒன்றிவிடச் செய்யும் சக்தி அன்பர் விக்கிரமனுக்கு உண்டு. இந்த வகையில்தான் இப்பொழுது வெளிவரும், "இராஜாதித்தன் சபதம்" என்கிற இந்த நூலும் அமைந்துள்ளது.

பாண்டிய மன்னன் இராஜசிம்மன், சோழ மன்னர் பராந்தக சோழரால் தோற்கடிக்கப்பட்டு, ஈழ நாட்டுக்குச் சென்று அடைக்கலம் புகுந்துவிட நேரிட்டது. ஆனால், பாண்டிய சிங்காதனத்தில் அமர்ந்து மகுடாபிஷேகம் செய்து கொள்ள ஆவல் கொண்ட பராந்தக சோழ மன்னரின் எண்ணம் நிறைவேறவில்லை. பாண்டியர்களின் பரம்பரை மகுடத்தையும், வாளையும் தோல்வியுற்ற பாண்டிய மன்னன் இராஜசிம்மன் தன்னுடனேயே எடுத்துச் சென்றுவிட்டான்! இதனால் பராந்தக சோழருக்குக் கிடைத்தது ஏமாற்றமும், வேதனையும்தாம். இராஜசிம்மன் சேர நாட்டில் தன் தாயின் மாளிகையில் மனைவி, குழந்தையுடன் மறைந்து வாழ்ந்தான். அவனைக் கண்டுபிடித்து சிறைக்கு அனுப்ப வேண்டும் என்பதுடன், பராந்தகரின் மனத்தில் மற்றொரு எண்ணமும் மேலோங்கி வாட்டி வதைத்தது.

ராஷ்டிரகூட மன்னனை மணந்த அவருடைய மகள் வீரமாதேவி இப்பொழுது நாடிழந்த தன் கணவனுடன் தஞ்சையில் தமையனிடம் தஞ்சம் புகுந்தாள். அதற்குக் காரணமானவர்களை ஒழித்து மீண்டும் தன் மைத்துனனை அரியாசனத்தில் ஏற்றித் தங்கையின் மற்றொரு வேதனையைப் போக்க வேண்டும் என்று சோழ இளவரசன் இராஜாதித்தன் சபதம் டுத்தான். மன்னருக்கு போதுமானது இருந்தாலும் ஏனோ சற்று மெத்தனமாக இருப்பது பின்னால் தான் அவர் உணர்ந்தார். திறம்மிக்க அவருடைய ஒற்றர் படையின் சாளுக்கியத்தில் உள்ள நிலைமையைக் கண்டறிந்தவர் அவர்.

இந்தச் சமயத்தில்தான் சிவசேகரப் பண்டிதர் என்னும் துறவிப் பெரியொருவர் தஞ்சைக்கு வந்து சரித்திரம் ஒன்றை மாற்றி அமைக்கின்றார். அவர் பகவதி தேவியின் அருள் பெற்றவர். சிறந்த மதியூகி. திறமையாக யாரும் அறியா வண்ணம் ஏதேதோ செய்து வந்தார். சிவநேசச் செல்வரான, சோழ மன்னரின் உள்ளத்தில் தெய்வ நோக்கைப் பலப்படுத்தினார். சீறியெழுந்து சபதம் எடுத்த இளவரசன் இராஜாதித்தனிடம், ''உன் முன் நிற்பது தெய்வத் திருப்பணிகளே தவிரப் போர்க்களமில்லை'' என்று கூறி அவனைத் தடுக்க முயன்றும் அவன் சம்மதிக்கவில்லை; தடுமாறினான்.

சம்பவங்கள் ஒவ்வொன்றாக உருவாகி நம்மிடம் பரபரப்பை உண்டாக்குகின்றன. சிவாலயத் திருப்பணி ஒருபுறம். செங்குருதி பெருகியோடும் கடும் போர் மறுபுறம், இடையிலே காதலும் இடம் பெற்று நம் கண்ணீரை வரவழைக்கின்றது.

இராஜாதித்தன் சபதம் என்னவாயிற்று? துறவியின் உண்மை யாது? இவையெல்லாம் துப்பறியும் நவீனத்தில் வரும் சம்பவங்களைப் போன்றவை. ஆனால் சரித்திர வரலாற்றைப் பின்னணியாகக் கொண்ட சம்பவங்கள் மிகவும் சுவையுடன் திரு.விக்கிரமனின் பேனா மூலம் நமக்குக் கிடைக்கின்றன.

நமது அறிவை ஊக்கி, கற்பனைக்கு விருந்தளித்து, பக்தியையும், வீரத்தையும் கலந்து, ஊட்டி, நமக்கு மன நிறைவை அளிக்கிறது, பழமையான சம்பவங்களைக் கொண்டு உருவாக்கப் பட்ட இந்தப் புதினம். இதைச் செய்த அன்பர் விக்கிரமனுக்கு எழுத்துலகமும், எழுத்தை மதிக்கும் வாசக உலகமும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளன. திரு.விக்கிரமனுடைய எழுத்துப்பணி மேலும் நீடித்துத் தமிழர்களின் சிந்தனைக்கு ஊட்டமளிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

கே.ஆர்.வாசுதேவன்

7-8-1978
சென்னை-4

இராஜாதித்தன் சபதம்

அத்தியாயம் 1

கவிதையும் கடமையும்

''விநாயகப் பெருமானே! மன்னரைக் காண மாளிகைக்குச் செல்கிறேன். என் பாடலைப் பாராட்டிப் பொன்னும் பொருளும் தர அருள் செய்யுங்கள்!'' என்று தஞ்சை தளிக்குளக் கோயிலில் உள்ள பிள்ளையாரை வேண்டிக் கொண்டான் அந்தச் சிறுவன். பன்னிரண்டு வயதுக்கு மேல் அவனுக்கு இராது. அவன் கையில் சிறு ஓலைச்சுவடி இருந்தது.

அவன் தோளைத் தொட்டு, கலகலவென்று சிரித்தார் கம்பீரத் தோற்றத்துடன் ஆஜானுபாகுவாய் நின்றிருந்தவர். புலவரைப் போல் தோன்றினார். சிறுவன் மிகவும் அலட்சியமாகத் திரும்பிப் பார்த்த பார்வை, அவர் அப்படிக் காரணமில்லாமல் சிரித்ததற்குக் காரணம் கேட்பது போல் இருந்தது.

''தம்பி! நீ என்ன பாடலைச் சொன்னால் உனக்குப் பராந்தக சோழ மன்னர் பரிசு தருவார் என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. அதனால் சிரிப்பு வந்தது. அவர் பண்டித வத்சலர் ஆயிற்றே! சிறந்த புலமை உடையவர்களுக்குத்தான் பரிசு அளிப்பார். உனக்கு என்ன செய்வார்?'' என்று அவர் தம் மீசையை மெல்ல முறுக்கிவிட்டுக் கொண்டு, தமது கூர்மையான பார்வையை அந்தச் சிறுவன் இதயத்தினுள் இருப்பதை உணர முயல்பவர் போல் ஓடவிட்டார்.

அந்தச் சிறுவன் அதற்கு உடனே மறுமொழி கூறவில்லை. அவன் சென்ற வேகமும் பார்த்த பார்வையும், ''சற்று இருங்கள்; அரசரைக் கண்டு வந்த பிறகு கூறுகிறேன்'' என்பன போல் தோன்றின.

சிறிது நேரத்திற்கெல்லாம் சிறுவன் முகமலர்ச்சியுடன் திரும்பி வந்தான். அவன் உள்ளங்கையில் பொன் நாணயம் ஒன்று ஒளி வீசியது.

''தம்பி, உன் பாடலை அரசர் கேட்டாரா? பாராட்டினாரா? அவர் தந்த பரிசா இது?'' என்று வியப்புடன் கேட்டார் கம்பீரத் தோற்றமுடைய புலவர். அவர் காதுகளில் குண்டலம் அசைந்தது.

''ஆமாம்; என் பாடலுக்குத்தான் பரிசு கிடைத்தது. ஆனால் நான் பராந்தக சோழச் சக்கரவர்த்தியைப் பார்க்க முடியவில்லை. முன் மண்டபத்தில் பல புலவர்கள் காத்திருந்தனர். அவர்கள் அரசரைக் காண முடியாமல் ஏமாற்றத்துடன் அமர்ந்திருந்தனர்'' என்று கூறிச் சற்று நிறுத்தினான் அந்தச் சிறுவன்.

சுவையான கதையைக் கேட்பது போல் 'ஹூம்' கொட்டியவர், ''அப்புறம்'' என்றார்.

சிறுவன் கண்களில் ஒளி வீச, ''நான் மன்னரின் இருப்பிடத்திற்குச் செல்ல முற்பட்டேன். காவலாளிகள் தடுத்தனர். 'வீர சோழரே குஞ்சர மல்லரே! செங்கோல் வேந்தரே!' என்று கணீரென்று பாடத் தொடங்கினேன்.

''உள்ளேயிருந்து ஒருவர் வந்தார். ஆகா, அவரது அழகை என்னவென்பேன்! காலைச் சூரியனைப் போன்ற நிறம். உங்கள் மீசையைப் போலில்லாது அழகிய மீசை, கொஞ்சும் கண்கள்.

''சோழ வேந்தன் தஞ்சையர்கோன்
ஈழம் வென்ற எம்மரசன்
வாழி வாழி வாழியே!
வளையாச் செங்கோல் வாழியே!''

என்று மீண்டும் கணீரென்று நான் எழுதி வைத்திருந்த பாடலைப் பாடினேன். அவர் உள்ளே சென்றார். சிறிது நேரத்தில் காசைக் கொடுத்தார். தளிக்குள விநாயகர் அருளே அருள்!'' என்றான் சிறுவன்.

''மற்றப் புலவர்கள் எல்லாம் உன்னை வியப்புடன் பார்த்திருப்பார்களே!'' என்று கேட்டார் அந்தக் குண்டலக்காரர்.

''ஆமாம்; பொறாமையாகக் கூட இருக்கலாம். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? மன்னர் இப்போது ஒருவரையும் பார்ப்பதில்லையாம். அவர் உடல்நிலை சரியாக இல்லை என்று கூடக் கேள்வி'' என்றான் சிறுவன்.

சிறுவனின் பேச்சும், நடவடிக்கையும் வயதுக்கு மீறியவையாகத் தோன்றவே, குண்டலக்காரர் ஆவலுடன் மேலும் பேச்சுக் கொடுத்தார்.

''என் பாடலைப் பற்றி புகழ்கிறீர்களே! என் குருநாதரின் பேச்சைக் கேட்டால் நீங்கள் மயங்கி விடுவீர்கள்!'' என்றான்

அவன். மன்னரிடம் அப்பொழுது செல்வதில் பயனில்லை என்றுணர்ந்த புலவர், சிறுவன் தெரிவித்த குருநாதரைக் காண விரும்பினார். சிறுவனுடன் புறப்பட்டார். போகும்போது அந்தச் சிறுவனுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டே போனார்.

பராந்தக சோழ மன்னர் வீற்றிருந்த இடத்தில் மற்றும் யார் யார் இருந்தார்கள் என்று கேட்டுத் தெரிந்து கொள்வதில் அவர் மேலும் அதிக ஆவல் காட்டினார்.

⁂ ⁂ ⁂

ஈழமும் மதுரையும் கொண்ட மாவீரரான பராந்தக சோழச் சக்கரவர்த்தி வழக்கத்துக்கு விரோதமாக அன்று யாரையும் சந்திக்க விரும்பவில்லை. தன் இருக்கையில் சாய்ந்து கொண்டு ஏதோ சிந்தித்தவாறு இருந்தார். கவலையே அறியாத அவரது முகத்தில் கவலையின் கோடுகள் மெல்லப் பரவத் தொடங்கியிருந்தன. அவர் எதிரே இருந்த இனிய கனிகள் கவனிக்கப் படாமலிருந்தன. ஏறுபோல் குறுக்கும் நெடுக்குமாக வீர நடை போட்டுக் கொண்டிருந்த தமது மூத்த மகனும் பட்டத்து இளவரசனுமான இராஜாதித்தனுடனும் அவர் ஏதும் பேசாமலிருந்ததிலிருந்தும், தன்னைக் காண்பதற்கு எவரையும் அனுப்ப வேண்டாம் என்று கடும் உத்தரவு பிறப்பித்ததிலிருந்தும் அவர் உள்ளத்தில் கவலையுடன் சினமும் சேர்ந்திருந்தன என்பது தெரியவந்தது.

அப்பொழுதுதான் அந்தச் சிறுவனின் கணீரென்ற குரல் வெளியே கேட்டது. காவலர்கள் அவனைத் தடுத்து நிறுத்துவதும் அவன் மீற முயல்வதுமான சலசலப்பு எழவே, இராஜாதித்தன் வேகமாக வெளியே வந்தான். சிறுவனைக் கண்டவுடன், திடீரெனப் பொங்கிய சீற்றம் தணிந்தது. அவன் கையிலிருந்த ஓலையை வாங்கிச் சென்று தன் தந்தையிடம் கொடுத்தான். கவிதையென்றால் பராந்தக சோழருக்கு உயிர். புலவர்களை ஆதரித்துப் பொன்னும் பொருளும் அளித்து அதற்குப் பரிசாகக் கவிதை இன்பம் கண்டவர். அதனால் 'பண்டிதவத்ஸலன்' என்று புலவர்கள் பாராட்டிப் போற்றினர். ஆனால், அன்று பராந்தகர் மனம் கவிதை இன்பத்தை நாடவில்லை. இராஜாதித்தன் கொண்டு வந்த பாடலைப் படித்துவிட்டு, ஏதும் பேசாமல், பொற்காசு கொடுத்துச் சிறுவனை அனுப்புமாறு கூறினார்.

அந்த ஓலையை வைத்துக் கொண்டு படித்த அவர் இப்போது வாய்விட்டுச் சிரித்தார்.

''ஈழம் வென்ற எம்மரசன்'' என்று ஒருமுறை படித்து மீண்டும் சிரித்த பராந்தகர், ''இராஜாதித்தா! மகனே! ஈழம் வென்ற பெருமையை இனிப் புலவர்கள் பாடுவார்கள், ஆனால் அவர்கள் உன்னை வந்து கேட்டால் அந்த வெற்றியின் உண்மையைச் சொல்வாயல்லவா?'' என்று கேட்டார்.

அவரது கேள்வியிலும் குரலிலும் ஒருவித 'குத்தல்' இருந்தது இராஜாதித்தனுக்குத் தெரியாமல் இல்லை. பெரும்படைகளுடன் அவன் முதல்நாள்தான் ஈழத்து ரோகண நாட்டிலிருந்து புறப்பட்டுப் போயிருந்தான்.

சோழ அரியணையில் ஏறியவுடனேயே சோழ நாட்டின் பெருமையை மேலும் பரப்புவதில் கவனம் கொண்டு பல நாடுகளை வென்று வந்த பராந்தக சோழர் பாண்டிய நாட்டையும் வென்றார். அஞ்சா நெஞ்சுடன் போராடிய இராஜசிம்ம பாண்டியன் கடைசியில் தோல்வியுற்று ஈழ நாட்டிற்குச் சென்று அடைக்கலம் புக நேரிட்டது.

வெற்றிப் போதையில் கோலாகலமாக மதுரையம்பதியில் பாண்டிய அரியணையில் அமர்ந்து முடிசூட்டிக் கொள்ள ஆவல் கொண்ட பராந்தகருடைய எண்ணம் நிறைவேறவில்லை. பாண்டியர்களின் பரம்பரை மகுடத்தையும் வாளையும் இராஜசிம்மன் தன்னுடனேயே எடுத்துச் சென்றுவிட்டான். ஏமாற்றத்தால் மேலும் கொதித்தெழுந்த பராந்தக சோழர் ஈழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்றார். மகுடமும் வாளும் கிடைக்கவில்லை. அந்த ஏமாற்றம் அவர் உள்ளத்தில் மிகுந்த வேதனையை அளித்துக் கொண்டிருந்தது. நான்கு புதல்வர் களையும் இரண்டு புதல்வியர்களையும் பெற்று வாழ்வின் எல்லா இன்பங்களையும் துய்த்துவிட்ட பிறகும் அவர் உள்ளத்தில் பாண்டிய மகுடம் நிழலாடிக் கொண்டிருந்தது.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? பராந்தக சோழ மன்னனின் தலைமகன் இராஜாதித்தன் தன் தந்தையின் நெடு நாள் குறையைத் தீர்த்துவிடத் துடித்தான். தனது தோள் வலிமையையும் வாள் வலிமையையும் புலப்படுத்துவதற்கு மற்றொரு வாய்ப்புக் கிடைத்தது என ஈழ நாட்டின் மீது படையெடுத்துச் செல்லத் துடித்தான். பராந்தகர் அனுமதியும் ஆசியும் கிடைத்தன. ஈழத்துப் போரில் பகைவரது படை வீரர்களைக் கொன்று குவித்து வெற்றி சூடினான். ஆனால் பாண்டிய மகுடம் கிடைக்கவில்லை.

தன் மகன் ஈழத்தினின்று பொன்னும் பொருளுடனும், பகைவரது நாட்டில் சிறைப்பிடித்த வீரர்களுடனும் திரும்பி

[illegible] என்ற செய்தி கேட்டு மகிழ்ந்தார் என்றாலும், பராந்தகர் [illegible]த்தில் வேதனை அதிகரித்தது.

தங்களால் பாண்டிய மகுடத்தைக் கொண்டு வர முடியவில்லை [illegible] தந்தை சுட்டிக் காட்டுகிறார் என்று உணர்ந்துவிட்ட இராஜாதித்தன், ஈழத்தில் அந்த மகுடம் இல்லையென்றுதான் [illegible] தோன்றுகிறது. ரோகணத்திற்குள் நமது படைகள் [illegible] பேராசையுடன் நுழைந்து அரண்மனையின் ஒவ்வொரு [illegible]யும் விடாமல் தேடினார்கள். பாண்டிய நாட்டிலேயே [illegible] மகுடத்தையும் மற்ற சின்னங்களையும் இராஜசிம்மன் [illegible]த்து வைத்திருக்கிறான். இராஜசிம்மனும் இங்கு எங்கோ [illegible]ந்து வாழ்கிறான்!'' என்று உணர்ச்சி வேகத்தில் படபடப்பான குரலில் கூறினான்.

பராந்தக சோழ மன்னர் சற்று நிமிர்ந்து உட்கார்ந்தார், ''என்ன சொல்கிறாய்! இராஜசிம்மன் பாண்டிய நாட்டில்தான் இருக்கிறானா? நமது ஒற்றர்படை ஏதாவது வேலை செய்கிறதா இல்லையா? இவ்வளவு நாட்கள் அதை ஏன் கண்டுபிடிக்கவில்லை?'' குரலில் கோபம் கொந்தளிக்கக் கேட்டார்.

இராஜாதித்தன் முகத்தில் மெல்லிய முறுவல் அரும்பியது. ''அரசே, நமது ஒற்றர் படைகள் விழிப்புடன் இருப்பதால்தான் எனக்கு உண்மை புலப்பட்டது. நமது சிறுகுளத்தூரான் அந்தப் பொறுப்பை ஏற்று வெற்றிகரமாகவும் முடித்துத் திரும்பியிருக்கிறான்'' என்று கூறி, கை தட்டிக் காவாலாளியை அழைத்து ஏதோ கூறினான்.

தம் எதிரே வந்து வணங்கி நின்றவன் அளித்த ஓலை நறுக்கு ஒன்றை வாங்கிப் படித்த பராந்தகர், அதைக் கொண்டு வந்தவனை ஏற இறங்கப் பார்த்தார். உடனே இராஜாதித்தன், ''இவரைத் தாங்கள் மறந்துவிட்டீர்களா? சிறுகுளத்தூர் மாறன் பரமேச்வரன் செம்பியன் சோழியவரையன்'' என்று அவனுடைய ஊர், பட்டப் பெயருடன் தெரிவித்தான்.

மாறன் பரமேசுவரன் எங்கெங்கெல்லாமோ அலைந்து திரிந்து, கடைசியில் இராஜசிம்ம பாண்டியன் சேர நாட்டில் தனது தாயின் மாளிகையில் மனைவி மக்களுடன் தங்கியிருப்பதை அறிந்து வந்திருந்தான்.

பராந்தக சோழர் சற்று நேரம் மௌனமாக இருந்தார். அவர் மௌனத்தைக் கலைப்பதுபோல், ''சேர நாட்டிலே இராஜசிம்மன் தங்கியிருக்கிறான் என்ற செய்தி கேட்டவுடனேயே பெரும் படைகளுடன் புறப்படத் திட்டமிட்டுவிட்டேன்! பாண்டியனைச்

சிறைபிடிக்கும் வரையில் எனக்கு ஓய்வில்லை, உறக்கமில்லை!'' என்று துடிப்புடன் கூறினான் இராஜாதித்தன்.

பராந்தக சோழர் தம் மகனுடைய துடிப்பைக் கண்டு மெல்ல நகைத்து, ''மகனே இராஜாதித்தா! சேர நாட்டிற்குச் செல்வதற்கு மட்டுமா படை திரட்டப் போகிறாய்? வடக்கிலும், மேற்கிலும் நீ செல்வதற்கு வேண்டிய படைகளைத் திரட்டத்தான் போகிறாய்!'' என்று கூறினார்.

தந்தை கூறியதன் பொருள் இராஜாதித்தனுக்கு உடனே விளங்கவில்லை. பராந்தகர் தமக்குக் களைப்பு ஏற்பட்டதாலும், தன் மகனுக்கும் சற்று ஓய்வளிக்க வேண்டும் என்ற எண்ணத்தாலும், ''இராஜாதித்தா, எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக விளக்குகிறேன். நீ போய் சற்று இளைப்பாறு. போகும்போது, அந்தப்புரத்திற்கு உன் சகோதரி வீரமாதேவி வந்திருக்கிறாள். அவளையும் பார்த்துவிட்டுச் செல்'' என்றார்.

''வீரமாதேவி வந்திருக்கிறாளா? பிறந்த வீட்டு நினைவு இப்போதாவது ஏற்பட்டதே! தங்களுக்கு ஒரு பெயரனைத் தருவதற்காக வந்திருக்கிறாளா?'' என்று ஆவலுடன் கேட்டான் இராஜாதித்தன்.

''வீரமாதேவி, தன் கணவர் இராஷ்டிர கூட நாட்டு மன்னன் கோவிந்த வல்லவரையனுடன் வந்திருக்கிறாள்'' என்று அரசர் கூறினார்.

இராஷ்டிரகூட நாட்டு அரசியாகத் திகழும் தன் சகோதரி வீரமாதேவி வந்திருக்கிறாள் என்ற செய்தி அவனுக்குத் குதூகலத்தை அளித்தது. சகோதரியிடம் பாசம் மிகக் கொண்டவன் இராஜாதித்தன்.

உடனே அவளைக் காணப் புறப்பட்ட அவன் உள்ளத்தில் திடீரென்று சந்தேகமொன்று ஏற்பட்டது. இராஷ்டிர கூட நாட்டு அரசன் கோவிந்த வல்லவரையனும் உடன் வந்திருப்பதாகக் கூறுகிறாரே, தான் கேள்விப்பட்டது நடந்துவிட்டதோ என்ற மனக்கவலையுடன் சென்றான்.



அத்தியாயம் 2

இரு தாமரை மலர்கள்

மாளிகைத் தோட்டத்து வாவியுள் செங்கமல மலர்கள் அழகொளி காட்டிச் சிரித்துக் கொண்டிருந்தன. மிக வேகமாக மேல் திசையில் இறங்கிக் கொண்டிருக்கும் கதிரவனின் பொற்கதிர்கள் செங்கமலத்தின் முகத்தைத் தடவி விடை பெறுவதுபோல் அக்குளத்தினில் தவழ்ந்து விளையாடின.

கதிரவன் வட்ட வடிவமாகத் திகழும் அழகினை ரசித்தவாறு வாவிக் கரையில் அமர்ந்திருந்த வீரமாதேவியின் தோளை மெல்லத் தொட்டது ஒரு கரம். வீரமாதேவி திடுக்கிடவில்லை; கன்னம் குழிய நகைத்தவாறு மெல்ல அந்தக் கரங்களைத் தூக்கித் தன் கன்னத்துடன் அணைத்துக் கொண்டாள்.

''மாலை மயக்கத்திலே தேவியின் சிந்தனை தஞ்சைக்கு வெளியே பல காத தூரம் செல்கிறதோ?'' என்று கேட்டான் கோவிந்த வல்லவரையன், வீரமாதேவியை மேலும் கரங்களுக்குள் சிறைப்படுத்தி பிடியை அழுத்தியவாறே.

வீரமாதேவி அந்த அணைப்பில் தன்னை மறந்தவளாய் ''ஆமாம்; தஞ்சைக்கு வெளியே, வான வெளியின் வெகு தொலைவுக்கும் அப்பால், அதோ தெரிகிறானே சூரியன், அவன் அழகில் ஈடுபட்டிருக்கிறேன்'' என்றாள்.

''வீரமாதேவி, என்ன தவறான வார்த்தை கூறிவிட்டாய்! சோழ நாட்டுப் பெண்கள் கற்பில் சிறந்தவர்களாயிற்றே! வேறு ஆடவனை கூட மனதில் நினைக்கலாமா?'' என்று அவள் முகத் தாமரையை வருடியவாறு கேட்டான் அந்த சுந்தர புருஷன்.

வீரமாதேவி கலகலவென்று நகைத்தாள். சோழ நாட்டுப் பெண்கள் கற்புக்கரசிகள்; அதேசமயம் பேதைகள்; எதையும் நம்பிவிடும் தன்மையுடையவர்கள். பொன் வண்ணக் கதிரவனில் உங்கள் முகத்தையே கண்டேன். இதோ, இந்தக் குமுத மலர்களைக் கதிரொளி தழுவுவதைக் கண்டேன்; என் சிந்தனை எங்கோ படர்ந்தது!'' என்றாள்.

வீரமாதேவி சொன்னதுபோல் மாலைக் கதிரவனைப் போன்ற பொன்னிற மேனியுடையவன்தான் கோவிந்த வல்லவரையன். அவள் கரம்பிடித்த இராஷ்டிரகூட நாட்டு மன்னன் அழகில்

மாறனை வென்றவன். ஆனால் இப்போது தஞ்சையில் தஞ்சம புகுந்திருக்கும் வேதனை நிலை படைத்தவன்.

கோவிந்த வல்லவரையனுடைய கரங்கள் துடித்தன. வீரமாதேவியை அப்படியே மெய்யுடன் சேர்த்துத் தழுவ வேண்டும் என்று. ஆனால் அவர்களுடைய தனிமையை மற்றொரு இனிய குரல் கலைத்தது.

''அக்கா, இங்கேதான் இருக்கிறீர்களா? நான் எங்கெல்லாமோ தேடினேன்!'' என்று சொல்லிக் கொண்டே அங்கே குதித்தோடி வந்தாள் ஒரு பெண். அவள் வீரமாதேவியை விட ஐந்து வயது இளையவள். வீரமாதேவியும், அனுபமாவும் அழகில் ஒருவரையொருவர் வெல்லும் தன்மை வாய்ந்தவர்கள். வீரமாதேவி கருமை நிறமெனினும் கம்பீரத் தோற்றமுடையவள். பிறரை அடக்கி ஆளக்கூடிய விழிகள் படைத்தவள். காதல் சிந்தும் இதழ்கள் கொண்டவள். ஒடிந்து விழுந்துவிடும் கொடிதான் இவ்வாறு அசைந்து துவண்டு செல்கிறது என்று வர்ணிக்கத்தக்க வனப்பு வாய்ந்தவள்.

தேவி அநுபமாவின் தோற்றத்தில் ஆழ் கடலின் அமைதியைக் காணலாம். வெண் சங்கு போன்ற கழுத்தில் உறவாடும் முத்துமாலை, பொற்கலச மார்பிலே நிமிர்ந்து நின்று, அவள் அதரங்களுடன் ஏதோ பேச முயல்வது போல் சிரிக்கும். அந்த பாரம் தாங்காமல் இடை ஒடிந்து விடுமோ என்று காண்பவர் வியக்கும் வண்ணம் பருவச் செழுமை பொங்க மோகன வடிவம் கொண்டவள்.

''உன் சகோதரி சூரியனைத் தேடி இந்தக் குளக்கரைக்கு வந்துவிட்டாள். நீ தேடியதுபோல் நானும் தேடி அயர்ந்து என் கால்கள் துவண்டுவிட்டன'' என்று கூறிக்கொண்டே கோவிந்தன், அநுபமாவின் அழகையும் ரசிக்க முற்பட்டான்.

''பாவம், நொந்த பாதத்தை வருடி அவர் வேதனை தீர்க்கும் வேளையில் நான் இடையூறாக வந்துவிட்டேன்!'' என்று உதட்டினை மெல்ல மடக்கி, குறும்புப் பார்வையுடன் சகோதரி வீரமாதேவியைப் பார்த்தவாறு கூறினாள் அநுபமா.

''அதெல்லாம் ஒன்றுமில்லை; இரு தாமரைகளைப் பார்த்தவுடன் என் களைப்பு நீங்கிவிட்டது!'' என்று பல் வரிசை தெரிய நகைத்துக் கூறினான் கோவிந்தன்.

தன் கணவரது குணம் வீரமாதேவிக்குத் தெரியும். தன்னிடம் உயிருக்கு உயிராய் இருக்கும் அவருக்கு வேறு அழகிய மங்கையரைக் கண்டவுடன் மனம் பேதலிக்கும் என்பது அவள் இராஷ்டிரகூட நாட்டில் அனுபவித்து அறிந்ததுதானே!''



அத்தியாயம் 3

துறவியும் அரசகுமாரனும்

பாடலுக்குப் பெற்ற தங்க நாணய பரிசுடன் மகிழ்ச்சி உள்ளத்திலே பொங்க, அந்தச் சிறுவன் நடந்து கொண்டிருந்தான். அவனுடைய துள்ளல் நடைக்கு ஏற்ப அவனுடன் நடந்து செல்வது குண்டலக் கவிராயர் மாணிக்கப் புலவருக்குச் சற்றுச் சிரமமாகத்தான் இருந்தது. எனினும் அவனுடன் சென்று, அவனுடைய குருநாதரை எப்படியாவது சந்தித்துப் பேச வேண்டும் எனும் ஆர்வத்தால் அவர் தம் கன உடலைத் தூக்கிக் கொண்டு நடந்தார். சின்னஞ்சிறு வயதிலேயே சிறப்பாகக் கவி பாடுவதற்கு அவனால் முடிகிறதென்றால், அவனுக்குப் பயிற்சி அளிக்கும் அவனுடைய குருநாதர் மகாவல்லவராய் இருப்பார் என்று எண்ணினார் புலவர். இயன்றால் தாமும் அவரிடம் கற்றுக் கொள்ளலாம் எனும் எண்ணமும் உள்ளத்திலே ஒரு மூலையில் உண்டு.

''இன்னும் எவ்வளவு தொலைவு நடக்க வேண்டும்...?'' என்று கேட்டார் அவர். சிறுவனைத் 'தம்பி' என்று அழைப்பதா அல்லது இளம் புலவரே என்றழைப்பதா என்று அவருக்குப் புரியவில்லை.

சிறுவன் சிரித்தான். ''ஏன், இப்பொழுதே கால் வலிக்கிறதா? 'நடப்பதற்கே' கால் வலிக்கிறது என்றால், இன்னும் 'நிற்க வேண்டி' இருக்குமே, அதற்கு என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டான்.

அவன் கள்ளங் கபடமில்லாமல் அவ்வாறு கேட்பதாக அவர் நினைத்தார். ஆனால், சிறுவனின் கண்களில் மிளிர்ந்த குறும்புத்தனத்தை அவர் அறியவில்லை.

சிறுவன், அவரைப் பல தெருக்கள் வழியே அழைத்துச் சென்று, கடைசியில் கோட்டை வாசல் அருகேயுள்ள தோட்ட மொன்றை அடைந்தான். அந்தத் தோட்டத்தின் நடுவே பர்ணசாலைபோல் அமைந்த குடில் ஒன்று காணப்பட்டது.

குடிலை நெருங்கும்போது நறுமணம் வீசியது. தெய்வ சந்நிதானத்தில் ஏற்படும் மணம்போல் தோன்றியது. தூப வாசனையும், நறுமலர்களின் மணமும் சேர்ந்து அந்த இடத்தின் மகிமையை உயர்த்தின. உள்ளே இடமில்லாததால் வெளியே சிலர் நின்றிருந்தனர். உள்ளே பூஜை நடந்து கொண்டிருந்தது. மணியோசையும், தாள சப்தமும் சேர்ந்து வந்து பக்திப் பெருக்கை அதிகப்படுத்தின.

சிறுவன் கூறியதுபோல் நீண்ட நேரம் மாணிக்கப் புலவர் நிற்கும்படியாகிவிட்டது. சிறிது நேரம் கழித்து எல்லோரையும் உள்ளே அழைத்தான் சிறுவன். தீபாராதனை சமயம்; அனைவரும் பய பக்தியுடனும் பணிவுடனும் சென்றனர். அங்கே தூங்கா விளக்குகள் பல எரிந்து கொண்டிருந்தன. நெய்யிலே திரியிட்டு ஒளிவீசும் தீபங்கள் அவ்விடத்துப் புனிதத் தன்மையை மேலும் உயர்த்தின. மலர் மாலைகளால் தேவியின் திருவுருவம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தேவியின் அருள் முகத்தின் திருப்பொலிவை விளக்கொளி மேலும் சுடர்விடச் செய்தது.

காண்பவர்கள் இயற்கையிலேயே அந்த இடத்தின் மீது மதிப்பும் மரியாதையும், பூஜை நடத்துபவரிடம் பணிவும் கொள்ளத்தக்க சூழ்நிலை அங்கு அமைந்திருந்தது. ஒவ்வொரு மலராக எடுத்து அர்ச்சனை செய்து கொண்டிருந்தார் துறவி ஒருவர். இளம் வயது; களையான முகம்; பொன்நிறமேனி; நெற்றியிலே துலங்கும் வெண் திருநீறும் திருநீற்றின் நடுவே வட்ட வடிவமான சந்தனப் பொட்டும், கழுத்திலே ருத்ராட்ச மாலையும், மரகதக் கல் வைத்த மணிமாலையும் பூண்டு கரிய நிறத் தாடியும் சடைமுடியுமாகக் காட்சி அளித்த அந்தத் துறவியின் எதிரே அனைவரும் பயபக்தியுடன் நிற்பதும் சிறுவன் இங்குமங்கும் நடந்தும் ஓடியும் அவருக்கு ஆகவேண்டிய பணிகளைச் செய்வதும் அந்த இடத்தை பெரும் ஆசிரமம் போலவும், முனிபுங்கவருக்குச் சீடர்கள் பணிவிடை செய்வது போலும் தோற்றம் அளிக்கச் செய்தன.

பண்டிதர் ஒருவருக்கு இவ்வளவு மதிப்பும் மரியாதையும் இருக்கின்றன என்பதைக் கண்ட மாணிக்கப் புலவருக்கு வியப்பு தாங்கவில்லை. அவருடைய கண்கள் அங்கிருப்பனவற்றை ஒவ்வொன்றாக அறிய முற்பட்டன. பூஜை முடிந்து சீடர்கள் அனைவரும் பிரசாதம் பெற்றபின், ஒவ்வொருவருக்கும் அவர் மெல்லிய குரலில் அவர்கள் மட்டும் கேட்கும் வகையில், செய்ய வேண்டிய பணியைக் குறிப்பிட்டதும் ஒவ்வொருவராகச் சென்றபின், சிறுவன் துறவியை அணுகித் தன் கையிலே

வைத்திருந்த தங்க நாணயததைக் கொடுத்தான். தான் அன்று அரசனிடம் சென்றதையும், அரசர் ஒருவரையும் அன்று அனுமதிக்காமல் தன்னை மட்டும் உள்ளே அழைத்ததையும், அவரிடம் பரிசு பெற்றதையும் பெருமையாகக் கூறினான். அதுவரையில் மாணிக்கப்புலவர் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தார்.

''நான் பரிசு பெறப் போகும்போது, இதோ இவர் வியப்புடன், 'அரசரிடம் உன்னை அனுமதிப்பார்களா?' என்று கேட்டார். இந்தப் புலவர் அரசரைக் காணச் சென்று இயலாமல் தோல்வியுற்றவர் போலும். என் பாடலைக் கேட்டு, நான் பெற்ற பரிசைக் கண்டு, தங்களைக் காண வேண்டுமென்ற பிடிவாதத்துடன் வந்திருக்கிறார்'' என்று மூச்சுவிடாமல் பேசினான்.

அங்கே சிறிது நேரம் மௌனம் நிலவியது. இருவர் மனத்திலும் ஏதோ கேட்கவேண்டும் என்ற துடிப்பு இருந்தது. துறவியின் கண்கள் புலவரின் இதயத்துள் இருப்பதை ஊடுருவி அறிய முற்படுவது போல் நோக்கின. மாணிக்கப் புலவரின் நலன்களை விசாரித்தார் துறவி.

குண்டலங்கள் அசைந்தாட மாணிக்கப் புலவர் தம்மைப் பற்றியும் தாம் புலவர் பரம்பரையில் வந்திருப்பதைப் பற்றியும் பெருமையுடன் கூறினார்.

''சோழ நாட்டில் புலவர்களை ஆதரிப்பதற்குக் கேட்க வேண்டுமா?'' என்றார் துறவி.

''புலவருக்கும் பஞ்சமில்லை; புலவர்களை ஆதரிப்பவர்களுக்கும் பஞ்சமில்லைதான். ஆனால், எங்கள் சோழ மன்னர் அவ்வப்போது 'போர், போர்' என்று படையெடுத்துப் பிற நாடுகளுக்குச் சென்றுவிட்டால் எங்களைப் போன்றவர்கள் பாடு மிகவும் சிரமம்தான்'' என்றார் மாணிக்கப் புலவர்.

''மன்னரைப் புகழ்ந்து பாட முடியாததால் தங்கள் பாடு சிரமம்தான்!'' என்று மெல்ல நகைத்தவாறு கூறிய துறவி, ''ஓம் சிவாய நமஹ; அம்மை, தேவி பகவதி!'' என்றார் பெருமூச்சுடன், பிறகு, ''புலவருக்கு மட்டும் அரசனின் திக் விஜயத்தால் கஷ்டமில்லை; நாட்டு மக்களுக்கும் கூடத்தான். பிற நாட்டைப் பிடிக்க வேண்டுமென்ற ஆசையிலே அங்குமிங்கும் படைகளுடன் செல்லும்பொழுது மக்கள் எவ்வளவு துன்பப் படுகிறார்கள். போரே இல்லாமலிருந்தால் எவ்வளவு அமைதியாகவும், இன்பமாகவும் வாழலாம் என்பதை ஏன்

உங்களைப் போன்ற புலவர்கள் அவருக்கு எடுத்துச் சொல்லக் கூடாது?'' என்றார்.

அவர் சொல்வதை ஆமோதிப்பவர்போல் தலையசைத்த புலவர், ''மன்னரைச் சந்திப்பதற்கு அனுமதி கிடைத்தால் அன்றோ தாங்கள் கூறும் உயர்ந்த கருத்தைப் பாடலிலே புகுத்திச் சொல்ல முடியும்? அவருடைய தோள் வலிமையைப் புகழ்கிறோம், பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு காவிரிபூம்பட்டினத்திலும், உறையூரிலும் அரசாண்ட அவருடைய மூதாதையர்களின் பெருமையை எடுத்துக்கூறி அரசரின் புறமனத்தை மேலும் வலுப்படுத்துகிறார்களே தவிர, போரினால் ஏற்படும் அழிவை, பயங்கரத்தை எடுத்துச் சொல்லவில்லை. அகத்துறையிலே நான் நிறைய வெண்பாக்களை எழுதி வைத்திருக்கிறேன். எனது சிருங்கார ரசக் கவிதைகளைக் கேட்டால் மன்னர் அப்படியே மயங்கிவிடுவார். போரின்மீது அவருக்கு நாட்டம் செல்லாது...'' என்று அவர் கூறிக் கொண்டு போகும்போது துறவி குறுக்கிட்டு, ''உங்கள் மன்னரைக் கோழையாக்க யோசனை சொல்லுகிறீர்கள் போலிருக்கிறது. சிருங்காரக் கவிதைகள் எங்கள் மன்னரின் போர்க் குணத்தை மாற்றிவிடுமா? இப்போதே உங்கள் அரசருக்குப் பல மனைவியர்கள் இருக்கிறார்கள். மேலும் சிலரைச் சேர்த்துக் கொள்ளப் படையெடுப்பில் இறங்குவார். இதனால் காதலாகிக் கசிந்து ஈசனின் திருவடியை மனத்திலேயே நினைத்துக் கொண்டு அவர்பால் சிந்தையைச் செலுத்தும் 'காதல்' ஏற்பட்டால் தான் வெறி தணியும். நான் போகுமிடமெல்லாம் அதைத்தான் உபதேசித்து வருகிறேன்'' என்றார்.

இளம் துறவியார் பராந்தக சோழரின் சொந்த விஷயங்களைத் தெரிந்து வைத்திருப்பதையும் போரை வெறுப்பதையும் தெய்வ பக்தியின் அவசியத்தை வற்புறுத்துவதையும் கண்ட மாணிக்கப் புலவர், அவர் கூறுவதற்குத் தலையசைத்து, 'ஆகா, ஆகா' என்று கூறி, ஏதோ கேட்க விரும்புபவர்போல் சிறிது குனிந்து வாய் பொத்தி நின்றார்.

துறவி அதை அறிந்தவர்போல், ''நீர் கேட்க நினைப்பது எனக்குப் புரிகிறது. மாபெரும் சக்கரவர்த்தியிடம் போரை எதிர்த்து நான் உபதேசம் செய்ய வந்திருக்கிறேனே நான் யார் என்று அறிய நீங்கள் விரும்புகிறீர்கள் இல்லையா? சொல்கிறேன், என்னைப் பற்றி. நான், தங்களைப் போன்ற புலவரிடம் எடுத்துக் கூறினால்தான் நீங்களும் நாலு பேரிடம் சொல்வீர்கள்...'' என்று கூறியவுடன், மாணிக்கப் புலவருக்கு, துறவியின் கூர்மையான அறிவைக் கண்டு அதிர்ச்சியே ஏற்பட்டது.

இளம் துறவியின் பெயர் சிவசேகர பண்டிதர். துறவிக்கு ஏற்ற சடை முடியுடனும், தாடியுடனும் காட்சி அளித்தாலும் இளம் வயதின் கம்பீரத் தோற்றம் அனைவரையும் அவர்பால் கவர்ந்து கொண்டது. அவர் சேர நாட்டுத் திருவஞ்சைக் களத்துக்கு அருகிலுள்ள சிறு கிராமத்தைச் சேர்ந்தவர்.

சிவசேகரர் தனது விழிகளை நான்கு புறமும் சுழலவிட்டு ''நான் தென்கோடியினின்று புறப்பட்டேன். வட கோடி வரையில் செல்ல வேண்டும். காவிரியின் கரைகளில் சோழ மன்னர் சிவபெருமானுக்குப் பல கோயில்களை எழுப்பியுள்ளார் என்பதைக் கேள்விப்பட்டு ஒவ்வொரு கோயிலாகத் தரிசித்து வருகிறேன். இங்கே வந்தவுடன் என் மனம் ஏனோ மேலும் செல்ல மறுக்கிறது. புலிக்கொடி வேந்தரான உங்கள் மன்னரை எப்படியாவது சந்தித்துப் பேச வேண்டும் எனும் உள்ள உணர்வைத் தேவி பகவதி எனக்குச் சில நாட்களுக்கு முன் ஏற்படுத்தினாள். தந்தையைப் போல் பராக்கிரமம் மிகுந்த உங்கள் இளவரசரையும் நான் சந்திக்க வேண்டும். அவரது வருங் காலத்தைப் பற்றிய ஓர் உண்மையை அவரிடம் நான் எடுத்துச் சொல்ல வேண்டும்...'' இப்படிச் சொல்லி வந்தவர் சற்று நிறுத்தினார்.

பிறகு, ''புலவரே! நான் இப்போது தங்களிடம் சொல்லி வருவதை நீங்கள் உடனடியாக தக்கவர்களல்லாத மற்றவர்களிடம் சொல்லக் கூடாது. குறிப்பாக இளவரசரைப் பற்றி நான் இப்போது கூறியவற்றை நிச்சயமாகத் தாங்கள் சொல்லக் கூடாது!'' என்று கூறி நிறுத்தினார். சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு பகவதி விக்கிரகத்தின் பாதத்தில் இருந்து ஒரு மலரை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, ''தஞ்சையை வந்தடைந்தவுடனேயே சக்கரவர்த்தியைச் சந்திக்க முன்னோடியாக, எனது பரிவாரங்களுள் இதோ இருக்கும் வயதில் மிகவும் சிறியவனான பாஸ்கரனை அனுப்பினேன். அவன் பெற்று வந்த தங்கநாணயம் சுப சகுனமாக எனக்குத் தோன்றுகிறது. நான் அரசருக்குச் செய்தி அனுப்பி அவரைச் சந்திப்பதற்கு நேரம் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்போகிறேன். இதற்குள் நான் வந்திருக்கும் செய்தி அவருக்கும் எட்டியிருக்கும். புலவர்களை ஆதரிக்கும் பண்டித வத்ஸலராயிற்றே. நான் ஏதோ சிறிது கற்றறிந்த புலவன். என்னைச் சந்திக்க விரும்பமாட்டாரா?'' என்றார்.

மாணிக்கப் புலவர் அயர்ந்துபோய் துறவியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். கட்டுண்ட நாகம் போல் பேச்சில் மயங்கி நின்றார். மேலும் அவர் அதிசயிக்கும் வகையில் துறவி, ''ஐயா புலவரே! நீரே அரசரிடம் எமக்காக

செய்தி கொண்டு செல்கிறீரா? அல்லது நான் அவரைச் சந்திக்க நேரம் குறிப்பிட்டுக் கொண்டு வருகிறீரா?'' என்று கேட்டார்.

மாணிக்கப்புலவருக்குக் கசக்குமா? மன்னரைச் சந்திக்க இப்படியொரு சந்தர்ப்பம் ஏற்படுவதை நழுவ விடுவாரா?

∴ ∴ ∴

அந்தப்போதில் குடிலுக்கு வெளியே பரபரப்பு எழுந்தது. அரச குடும்பத்தவர் வருகையை அறிவிக்கும் முரசு அதிர்ந்தது. எக்காளம் எழுந்தது. எக்காளத்திற்கும், சங்கிற்கும், முரசுக்கும் இடையே ''வாழ்க, வாழ்க!'' என்ற வாழ்த்தொலி கேட்டது. வெளியே இருந்த சீடர் ஒருவர் விரைந்து வந்து, ''இளவரசர் கண்டராதித்த தேவர் வருகிறார்'' என்பதைத் தெரிவித்தார்.

மாணிக்கப் புலவருக்கு மேலும் வியப்பு அதிகமாகியது. கண்டராதித்த தேவர் இந்தக் குடிலை நோக்கி வருகிறார் என்றால் துறவியின் பெருமை இதற்குள் அரண்மனை வரையில் எட்டி விட்டது என்ற முடிவுக்கு வந்தார். மன்னரைக் காண வரும் புலவர்களுடன் உரையாடுவதில் கண்டராதித்தனுக்கு விருப்பம் அதிகம். அரசகுமாரன் தங்களுடன் அமர்ந்து இலக்கியச் சர்ச்சை செய்வதில் புலவர்களுக்குப் பெருமை. ஆனால், கண்டரன், அதிக நேரம் அவர்களுடன் உரையாடுவதில்லை. ஏனெனில் அவன் கேட்கும் சிவநெறி சம்பந்தமான கேள்விகளுக்கு விடை கூறக்கூடிய புலவர் குழாம் அங்கிருப்பதில்லை. யாப்பு, நிகண்டு, சிற்றிலக்கியங்கள் போன்றவற்றைப் பற்றியே சர்ச்சை செய்யும்போது கண்டராதித்தர் மெல்ல அங்கிருந்து புறப்பட்டு விடுவார். பிறகு அவரை தஞ்சையில் ஞானசம்பந்தர் மடத்தில் அங்குள்ள தலைவருடன் உரையாடிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

மாணிக்கப்புலவருக்கு, கண்டராதித்தரை அங்குக் கண்டதில் ஒருபுறம் மகிழ்ச்சியும், மறுபுறம் அரசகுமாரன் இங்கு வரும் காரணம் என்ன எனும் சந்தேகமும் சேர்ந்தன. அதனால் கண்டராதித்தர், சிவசேகர பண்டிதருடன் என்ன உரையாடுகிறார் என்பதை அறிவதில் ஆவல் கொண்டார்.

கண்டராதித்தர் குடிலுக்குள் நுழைந்தவுடன், மாணிக்கப் புலவர் சூழ்நிலை அறிந்தவர் போல் அங்கிருந்து வெளியே வந்து விட்டாலும், சுவரோரமாக வந்து நின்று கொண்டு உள்ளே என்ன நடைபெறுகிறது என்பதைக் கவனிக்கலானார்.

*

அத்தியாயம் 4

போரும் அமைதியும்

இராஜாதித்தன் நீராடி விட்டுக் கற்றைக் கற்றையாகத் திருநீறு துலங்க, மஞ்சள் பட்டாடை தோளின் மீது துவள, கம்பீரமாக நடந்து வந்து கொண்டிருந்தான்.

பராந்தக சோழச் சக்கரவர்த்தியின் பட்டத்து அரசி, கோக்கிழான் அடிகளார் சற்றுத் தொலைவிலிருந்து அவன் வருகையை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தாள்.

தன் மகனைப் போர் வீரன் உடையில் பார்த்து மகிழ்வதை விட தெய்வீகக் களை சேர்ந்த தோற்றத்திலே காணும் பொழுது அவள் பேருவகை எய்தினாள். கட்டுடலின் மீது திகழும் முத்துமாலையும், நடையின் பொழுது அசையும் கரங்களும், அதிலே உள்ள வீர உணர்ச்சியும் தரையிலே சரியும் மேலாடையை அவை தடுத்துநிறுத்தும் லாவகமும் காணும் அவளுடைய மனத்திலே பெருமிதம் எழுந்தது. ''ஈழத்தின் மீது படையெடுத்துச் சென்று, பல நாட்களுக்குப் பின் தஞ்சைக்குத் திரும்பி வந்த பிறகு அவனுடன் அமைதியாகப் பேசுவதற்கான வாய்ப்பே தாய்க்குக் கிடைக்கவில்லை. சோழ நாட்டின் இளவரசுப் பட்டம் சூட்டப்பட்ட பிறகு இராஜாதித்தன் மாளிகையில் தங்கியிருந்து தாயாருடன் வாஞ்சையாக உரையாடுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. தாய் மகனுடன் பேசுவதற்குக்கூட வாய்ப்பை எதிர்நோக்கும் அரச குடும்பம்!

அமைதியாக நேரம் போவது தெரியாமல் நீராடி நெற்றியில் திருநீற்றுடன், தெய்வீகக் களையுடன் செல்லும் பொழுது தன் எதிரே நின்ற தாயைக் கண்டதும் இராஜாதித்தன் சற்று நின்றான். கரம் கூப்பித் தாய்க்கு வணக்கம் தெரிவித்தான். தாயின் திருக்கரத்தில் தவழ்ந்து கொண்டிருந்த மலர்கள் நிறைந்த பூக்குடையை அவன் நோக்கியவாறு, ''இவ்வளவு அதிகாலையில் கோயிலுக்குப் புறப்பட்டுவிட்டீர்களா அம்மா?'' என்று

கேட்டவுடன் தலையசைத்த தாய், ''இவ்வளவு மலர்களையும் எடுத்துக் கொண்டு உன்னுடன் வந்து தளிக்குளத்து ஈசருக்கு உள்ளம் குளிர அர்ச்சனை செய்ய வேண்டுமென்று எனக்கு ஆர்வம் ஏற்படுகிறது. ஆனால், உன் தந்தை ஏனோ இப்பொழுதெல்லாம் எங்கும் வெளியே புறப்படுவதில்லை. ஏதோ மனத்தில் நினைத்தவாறு வெளியே என்னிடத்தில் கூட எடுத்துச் சொல்ல விரும்பாமல் மாளிகையிலே இருக்கிறார். அவரில்லாமல் நான் மட்டும் கோயிலுக்குச் செல்வதா? அதனால் அன்றாட பூஜைக்காக இங்கே மாளிகையில் பூஜை அறையை விரிவுபடுத்தியிருக்கிறேன், நீ பார்க்கவில்லையா!'' என்றாள்.

இராஜாதித்தனுடைய கவனம் தந்தையைக் காணச் செல்வதிலும் அங்கே சந்திக்கப் போகிறவரைப் பற்றிய எண்ணத்திலும் சுழன்றவாறு இருந்ததனால் தாய் இதுவரையில் கூறிவந்ததை அரைகுறையாகத்தான் செவிகளில் ஏற்றுக் கொண்டான்.

''பூஜை அறையை வந்து காணவில்லையா?'' என்ற ஒரு கேள்வி மட்டும்தான் அவன் மனத்தில் தெளிவாக விழுந்தது. அன்புத் தாய் – ஆசை மிகக் கொண்ட தாய் – அருள் உள்ளம் கொண்ட தாய் அழைப்பதை அவனால் தட்ட முடியவில்லை. தான் தந்தையிடம் அவசரமாகச் செல்வதாகக் கூறித் தாயாரிடமிருந்து விடைபெற்றுச் செல்லவும் அவனுக்கு விருப்பம் இல்லை. அழகான பூஜை அறையை ஏற்படுத்தியிருப்பது அரசி அரண்மனையில் ஒரு சிலருக்குத்தான் தெரியும். இராஜாதித்தன் தஞ்சைக்கு வந்து சில நாள்கள்தாம் ஆகியிருந்ததால் அவன் இன்னும் அதுபற்றி அறியவில்லை. தாயின் சிவபக்தியை அவன் அறிவான். கோயிலுக்கும் திருத்தலங்களுக்கும் சென்று வரவேண்டுமென்னும் எண்ணம் அவர் கொண்டிருப்பதும், தன்னுடைய சொந்தப் பணத்திலிருந்து கோயில்களின் நிர்வாகத்திற்குச் செலவிடுவதில் அவர் பேரின்பம் காண்பதையும் அவன் அறிவான். அதனால் தாயின் விருப்பத்திற்கு இணங்கத் தாயாருடன் பூஜை அறையைக் காணச் சென்றான். போகும் பொழுதே, ''விரைவாக என்னை அதிகாலையிலேயே வருமாறு தந்தை அழைத்தார். அதனால்தான் நான் சென்று கொண்டு இருக்கிறேன்'' என்று பேச்சைத் தொடங்கினான்.

ஒரு கணம் நின்ற அரசமாதேவி, ''அவசரமான பணி ஏதாவது சொல்வதற்குத் தந்தை அழைத்திருக்கும் பொழுது நான் உன்னைத் தடுத்து இங்கே அழைத்து வருகிறேனே'' என்றாள் சற்றுக் கவலை நிறைந்த குரலில்.

“[illegible]து ஒன்றுமில்லை. தந்தையைக் காண்பதற்கு [illegible] வருகிறாராம். அவர் தெற்கே கன்யாகுமரியி[illegible]டு வடக்கே கயிலையங்கிரி வரையில் ஒவ்வொரு [illegible] கண்டு செல்வதற்காகத் தனது பரிவாரங்களுடன் [illegible]. எல்லா மொழிகளிலும் இவ்வளவு இளம் [illegible] பெரும் பாண்டித்யம் பெற்றிருக்கும் அவர் சீடர்கள் [illegible] தமிழில் மிக நாவன்மை பெற்றிருக்கிறார் களாம். [illegible] ஒரு சிறுவன் அரசரிடம் வந்து அவர் மீது புகழ்ந்து [illegible]காசு பரிசு பெற்றுச் சென்றான். முனிவரின் சீடர்களில் [illegible] ஒருவனாம். எனக்கு இன்றுள்ள மனநிலையில் [illegible]ங்கிரியிலிருந்தே முனிவர் இறங்கித் தந்தையைக் காண [illegible]ந்தாலும் காணச் செல்ல மாட்டேன். ஆனால் களை [illegible]டும் முகத்துடன் ரத்தினம் போன்ற தமிழ்க் கவிதை பாடி [illegible] மகிழ்வித்த அந்தச் சிறுவனின் குருநாதர் - அந்தத் [illegible] - யார் என்பதை அறிந்த உடன் அவரைக் காண [illegible]டுமென்னும் எண்ணம் ஏற்பட்டது. தம்பி கண்டராதித்தனும் [illegible]யைச் சந்தித்துவிட்டு வந்து அவருடைய பெருமையைப் [illegible]தும் புகழ்கிறான். அவன்தான் காலையிலே வந்து என்னை [illegible] இந்தச் செய்தியைச் சொன்னான். அவர் வரப்போவது [illegible]ளுக்குத் தெரியாதா தாயே? தாங்கள் அவரைக் காண [illegible]டாமா” என்று இராஜாதித்தன் தொடர்ந்து பேசிக் கொண்டே [illegible]ந்தான்.

மகனது உடலில் வீரம் துள்ளுவதைப் போல், உள்ளத்திலே வீர எண்ணங்கள் துள்ளுவதைப் போல், சொற்களிலே உள்ள ஆர்வம் வாள் சுழல்வதைப்போல் சுழன்று வருவதைத் தாய் கவனித்து உள்ளுக்குள்ளேயே மகிழ்ந்து கொண்டாள். அவன் பிறந்த உடனே, போர்க்களத்திலும் படையெடுப்பிலும் பகைவரை வெட்டி வீழ்த்துவதிலும் தன் மகனைச் சிக்க விடாமல் சிவநேசச் செல்வனாய் வளர்க்க வேண்டுமென்ற ஆசை தாயின் உள்ளத்திலே தோன்றியது. ஆனால், அரச குலத்தின் தலைப் பிள்ளையை வீர தீரனாக்காவிட்டால், நாட்டிற்கு அதனால் கேடுதான் விளையும் என்பதை அறிந்து கொண்ட அருமைத் தாய், மகனுடைய துடிப்பான போக்கைத் தடுக்கவில்லை. போர்க்கலைகள் சகலவற்றிலும் அவன் சிறந்து விளங்கத் தடை செய்யவில்லை. அப்படி குறுக்கே அவள் நின்றிருந்தாலும் பராந்தக சோழ தேவர் ஒப்புக் கொண்டிருக்க மாட்டார். ஏனென்றால் பராந்தகருடைய மனம் சோழ நாட்டை மேலும் விரிவுபடுத்தி பலமுள்ள நாடாக்குவதில்தான் இருந்தது. பாண்டிய நாட்டின் புகழை ஒடுக்கி, புலிக்கொடி எங்கும் பறக்க வேண்டும்

என்னும் கனவு கொண்டிருந்தார். பாண்டிய மன்னனுக்கு வீரத்தில் சிறந்த இராஜசிம்மன் என்ற ஒரு மகன் இருக்கிறான் என்பதைக் கேள்விப்பட்டவுடன் தன் மகனும் அவனைவிட வீரத்தில் மிக்கவன் ஆக விளங்க வேண்டுமென்ற துடிப்பு பராந்தக சக்கரவர்த்திக்கு ஏற்பட்டது. ஆதலால் தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் இராஜாதித்தனை அழைத்துச் செல்வதும், போர்க்கலையை நன்றாகக் கற்று உணரச் செய்வதுமாக அவனைச் சிறந்த முறையில் வளர்த்து வந்தார். அதனால் தன் மகன் சிவநேசச் செல்வனாக வளர்வதற்குத் தாய் ஆசைப்பட்டிருந்தாலும் அது நிறைவேறியிருக்காது.

அவள் காணும் பொழுதெல்லாம் போர் உடையிலேயே காணப்படும் இராஜாதித்தனை சிவப்பழமாக இன்று கண் குளிரக் காணும் பொழுது தாய் புளகாங்கிதம் அடைந்தாள். மேலும் மாளிகைக்கு வரவிருக்கும் முற்றும் துறந்த முனிவரைக் காணத் தன் மகன் செல்கிறான் என்றவுடன், தன்னையும் அவரைக் காண வரவில்லையா என்று அழைக்கிறான் என்றவுடன், தாய்க்குப் பெருமை மிகுந்தது. வாஞ்சையுடன் மகனுடைய முதுகைத் தடவி, ''துறவி என்ன காரணம் கொண்டு அரசரைக் காண வருகிறாரோ! தெய்வக் காரியமாக இருந்திருந்தால் சடங்குகள் சம்பந்தமாக இருந்திருந்தால் அரசரும் என்னை அழைத்திருப்பார். அப்படி அவர் கூப்பிடாததனால் ஏதோ ராஜாங்கக் காரியம் இருக்கிறது என்று நான் உணர்ந்து கொண்டேன். நீ விரைவில் சென்று வா!'' என்று கூறினாள்.

தாய் கட்டியிருந்த பூஜை மாடத்தை இராஜாதித்தன் கண்டு மகிழ்ந்தான். தில்லைச் சிதம்பரத்திலுள்ள நடராஜரின் திருவுருவம் போன்ற அழகியதொரு விக்கிரகம் அங்கே திகழ்ந்தது. சர விளக்குகள் இருபுறமும் தொங்கின. கொன்றை மாலை ஒன்று நடராஜரின் கழுத்தில் தவழ்ந்தது. பாதத்தடியில் பூஜைக்கு வேண்டிய கலன்களும், பொன் தட்டும், விபூதி மடலும் குங்கிலியக் கலயமும் கோயிலொன்றின் கர்ப்பக்கிருகத்தில் இருக்கும் உணர்வை ஏற்படுத்தின. தாயின் பூக்குடலையிலிருந்த மல்லிகையும் முல்லையும் சாமந்தியும் அரளியும் செம்பருத்தியும் பவளமல்லியையும் கை நிறைய எடுத்து வைத்து மெய்மறந்து சிறிது நேரம் நின்றான். அப்பொழுது நடராஜரின் திருப்பாதங் களிலே அவன் என்ன பிரார்த்தனை செய்து கொண்டிருப்பானோ?

''உன் பாதத்தடியில் முயலகன் என்னும் அரக்கனை மிதித்து ஆனந்தத் தாண்டவம் ஆடும் சிவபெருமானே! என் சகோதரிக்கு நேர்ந்துவிட்ட இடுக்கண்ணை நீ அறிய மாட்டாயா? சோழ

... நாட்டின் இளவரசியாய்ப் பிறந்து ராஷ்டிரகூட அரசியாக ...யும் அதிர்ஷ்டம் பெற்ற என் தங்கை விதி வசத்தால் நாடிழந்து ...கே தஞ்சம் புகுந்திருக்கிறாள். அவள் துன்பம் துடைப்பதற்கு ... பலவிதப் படைகளுடன் புறப்பட சக்கரவர்த்திகளை நேற்றே அனுமதி கேட்கச் சென்றேன். களைப்பு மிகுதியால் தந்தை உறக்கத்தில் ஆழ்ந்து இருந்தார். அவரைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று திரும்பி வந்த நான் இன்று எப்படியும், அவரிடம் அனுமதி பெற நினைத்திருக்கிறேன். சுடலையிலே ஆனந்தத் தாண்டவமாடி முயலகன்ன அழிக்கும் குஞ்சரப் பதத்தோனே! மான்ய கேட நகரிலே நானும் அதுபோல் பகைவரின் உடல் மீது நர்த்தனமாடி அவர்களை ஓடச் செய்து, கரியும் பிடியும் பிளிர்ந்து எழ எதிரிகளின் உடலைப் பந்தாடச் செய்து, வெற்றி கொண்டு, இந்த அரியணையில் என் மைத்துனனை அமர்த்தி மகுடாபிஷேகம் செய்விக்க எனக்குப் புதுப் பலமும் உறுதியும் அளித்து அருள்புரிவாய்' என்றுதான் அவன் வேண்டிக் கொண்டிருக்க வேண்டும்.

அப்படி உள்ளம் கசிந்து வேண்டியதன் அறிகுறிபோல் அவன் விழிகளின் கடையோரத்தில் ஒரு துளி முத்தாகப் பிரதிபலிப்பதைத் தாய், முக்கோக்கிழான் அடிகள் தெரிந்து கொண்டாள். தாய்க்கு மட்டும் தன் மகள் பிறந்தகத்திற்கு வேதனையுடன் வந்திருப்பது தெரியாதா? மகள் கவலையை நீக்க வேண்டும் என்ற துடிப்பு இருக்காதா?

பிரார்த்தனையை முடித்துத் தாயை நோக்கிய இராஜாதித்தன் உள்ளத்தில் இருப்பதை புரிந்து கொண்டுவிட்டவள் போல், ''எல்லாம் விரைவில் நன்றாக நடக்கும் காலம் வர வேண்டும் என்றுதான் நானும் ஈசனை வேண்டிக் கொண்டிருக்கிறேன் மகனே!'' என்று கூறியவள், ''சீக்கிரமாகச் செல், குழந்தாய்! அரசர் காத்திருக்கப் போகிறார்'' என்று பரிவுடன் கூறினாள்.

பராந்தக சோழ மாமன்னர் வீற்றிருக்கும் கூடத்தை நோக்கிச் செல்லும் பொழுது வழியிலேயே கண்டராதித்தனைச் சந்தித்தான். இராஜாதித்தனுக்கு அடுத்துப் பிறந்தவன் கண்டராதித்தன். பராந்தக சோழ தேவருடைய நான்கு புதல்வர்களுள் கண்டராதித்தன் இரண்டாவது மகன். இராஜாதித்தனுக்கும், கண்டராதித்தனுக்கும் குணவேறுபாடுகள் பல உண்டு.

''உன் வரவை எதிர்பார்த்து, இவ்வளவு நேரம் சிவசேகர பண்டிதர் காத்திருந்தார், தந்தையும் அவரும் மிக மிக முக்கியமான விஷயங்களைப் பேசிக் கொண்டனர். இதோ இப்பொழுதுதான் அவர் செல்கிறார்'' என்று கண்டராதித்தன் கூறிய பொழுது,

இராஜாதித்தனுக்கு ஏமாற்றம் ஏதோ நேர்ந்துவிட்டதுபோல் தோன்றியது. இயற்கையாகவே திடீரெனக் கோபம் கொள்ளும் தன்மை படைத்த அவன் இந்த நிகழ்ச்சியைக் கேட்டவுடன், குரலில் சற்றுக் கடுமை ஏற, ''நான் தாமதமாக வரவில்லையே! குறித்த நேரத்தில் வந்துவிட்டேனே. பண்டிதருக்கு வேறு அவசரமான காரியம் இருக்கலாம். அதனால் புறப்பட்டு விட்டார் போலும்'' என்றான்.

கண்டராதித்தன் அமைதியான குரலில், ''ஆமாம், அவர் குறிப்பிட்ட நேரத்திற்கு மிக முன்னதாக வந்துவிட்டார். மன்னர்கூட எதிர்பார்க்கவில்லை. நல்ல வேளையாக நான் அங்கே இருந்தேன். இருவரும் பொதுவாக ஏதேதோ பேசிக் கொண்டிருந்தபோது பேச்சு கோயில்கள் பக்கம் திரும்பியது. சக்கரவர்த்திகளுடன் சேர்ந்து தாமும் சிதம்பரம் சென்று நடராஜரைத் தரிசிக்க விரும்புவதாகவும், உடனே ஏற்பாடு செய்தால் தாமும் கலந்து கொள்வதாகவும் கூறினார். நாளையே நாம் அனைவரும் சிதம்பரத்திற்குச் செல்லத் திட்டமிட்டிருக் கிறோம்'' என்றான்.

இராஜாதித்தனின் எண்ணம் வேறு; இப்போது அவன் செவிகளில் விழுவது வேறு! ஒரு கணம் ஏதோ யோசித்த அவன், ''இல்லை இல்லை. இப்பொழுது சிதம்பரப் பயணமில்லை. தம்பி! நீயும் ஆயத்தமாக இரு. படையெடுப்பதற்கு அனுமதி பெறவே மான்யகேட நகரை நோக்கி நாம் புறப்படுகிறோம். சக்கரவர்த்தி யிடம் நான் இப்போது செல்கிறேன்'' என்றான்.

தன் சகோதரனின் பிடிவாத குணத்தையும் கோபங் கொண்டால் அது இலேசில் அடங்காது என்பதையும் கண்டராதித்தன் அறிவான். அவன் எண்ணத்தை மாற்ற முயல்வதுபோல், ''அண்ணா! அண்ணா! போரின்றி நாம் காரியத்தில் வெற்றி காண முடியாதா?'' என்று கேட்டான்.

இராஜாதித்தன் சிரித்தான். அவன் குரலில் மிகுந்த ஏளனம் கலந்திருந்தது.

''ஆகா! மான்ய கேட நகரத்தில், கிழவன் அசோகவர்ஷன் ஆர்ப்பரிக்கிறான்! அவனிடம் தூது அனுப்புவோம். ஏன், நீயும் நானும் செல்வோம்! அந்தக் கிழவன் முன்பு மண்டியிட்டு சோழ சக்கரவர்த்தியின் மருமகப்பிள்ளைக்கு மீண்டும் சிங்காதனத்தைக் கொடுங்கள். எங்கள் ஆருயிர் சகோதரி வீரமாதேவிக்கு அரசி என்னும் பட்டப்பெயரை மீட்டுக் கொடுங்கள் என்று வேண்டுவோம்'' என்று மிகவும் அமைதியான குரலில் இராஜாதித்தன் கூறினான்.

கண்டராதித்தன் அவன் சொற்களில் மறைந்திருந்த சீற்றத்தைப் புரிந்து கொள்ளாமல், அவன் கூறுவதை ஆமோதிப்பதுபோல் தலையசைத்து, ''ஆமாம், ஆமாம் சிவசேகர பண்டிதரும் அந்த யோசனையைத்தான் சொன்னார்'' என்றான்.

இராஜாதித்தனுக்குக் கோபம் கட்டுக்கடங்கவில்லை.

''பண்டிதர் அப்படியா சொன்னார்? துறவிக்கு ஏன் ராஜங்க விவகாரம்? புலிக்கொடி ராஷ்டிரக்கூட நாட்டில் அவமதிக்கப் பட்டுவிட்டது. நம் அருமைச் சகோதரி, கண்ணீர் சிந்துகிறாள். அதை மாற்ற நம்மை மண்டியிடவா அவர் சொல்லுகிறார். வாளும் வேலும் முடிவு செய்ய வேண்டிய விஷயத்தைச் சமாதானம் ஒருநாளும் செய்யாது தம்பி! இந்த விஷயத்தில் உன் கருத்தை ஏற்க இயலாது. என்னுடன் சேர்ந்து போர்க்களத்துக்கு வருவதற்கு நீ சம்மதிக்கவில்லை என்றாலும் சரி; நான் ஒருவன் மட்டுமே செல்கிறேன். இதோ இப்பொழுதே தந்தையிடம் அனுமதி பெற்று விடுவேன்'' என்று கூறியவாறு விரைந்தான். அவன் சீற்றத்தின் அளவை அவன் நடையால் அதிர்ந்த பூமியும் புலப்படுத்தியது.

சிவசேகர பண்டிதர் போரிடக் கூடாது என்று பராந்தக சக்கரவர்த்தியிடம் எடுத்துக் கூறிய காரணத்தையும், இராஜாதித்தன் போரிட வேண்டும் என்று துடிப்பதையும் நினைத்துப் பார்த்தபோது, ''என்ன நேருமோ?'' என்று கண்டராதித்தன் உள்ளம் நடுங்கியது.



அத்தியாயம் 5

எதிர்க்காற்று

இராஜாதித்தனுக்குத் தன் சகோதரி வீரமாதேவியிடம் இருந்த பாசம் மேலும் அதிகமாகியது. தன் சகோதரியின் உள்ளம், சோழ நாட்டிற்கு வந்த பிறகு மேலும் மேலும் புண்படாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அவன் விரும்பினான். தனக்கிருக்கும் ஆர்வமும் துடிப்பும் சக்கரவர்த்திக்கு இல்லை என்பது அவனுடைய எண்ணம், பாண்டியனை வென்று, சோழ நாட்டுப் படைத்தலைவன் சக்கசேனாபதி என்பவனை ஓடோட விரட்டிய பராந்தக சோழ மன்னரா இப்படி இராஷ்டிர கூடர்களின் அவமதிப்பைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்? மகளுக்கு நேர்ந்த அவமானம் தனக்கு நேர்ந்தது என்று அவர் நினைத்தால் இதற்குள் பெருங்கடல் போன்ற படைகளைத் தாமே முன்னின்று தலைமை வகித்து நடத்திச் சென்று, மீண்டும் அரச உரிமையை மீட்டு, கோவிந்த வல்லவரையனுக்குக் கொடுத்திருக்கமாட்டாரா?

வயோதிகம் காரணமாக அவர் மெத்தனமாக இருக்கிறார் என்று சொல்ல முடியாது. இப்போதுகூட அவர் வாளெடுத்துச் சுழற்றினால் இளைஞர்கள் பலர் கூடினாலும் அவர் எதிரே நிற்க முடியாது என்பது இராஜாதித்தனுக்குத் தெரியும். ஈழப் போர்க்களத்திலே எப்படியெல்லாம் தாம் போராடினோம் என்பதை விளக்கிச் சொல்லி வந்த பொழுது, சக்கரவர்த்தி யுத்த களத்தைப் பற்றித் தன்னைக் கேட்ட கேள்விகளையும், அப்பொழுது அவர் துடிதுடிப்புடன் பேசியதையும், நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டும், பிறகு எழுந்து வீர வாலிபன் போன்று போர்க்களத்திலே இடது சாரி, வலது சாரியாக வாளைச் சுழற்றுவதுபோல் நடுக்கூடத்தில் அவர் நடித்துக் காட்டியதையும் இராஜாதித்தன் அதற்குள் மறந்துவிடவில்லை. ஆனால் இராஷ்டிரகூட நாட்டுத் தலைநகரான மான்யகேடநகர் முற்றுகையைப் பற்றிப் பேசியவுடன் அவர் மௌனம் சாதிக்கிறார்.

இராஜாதித்தன் தந்தையைக் காணச் சென்றபோது [illegible] குறித்துத் தந்தையின் சம்மதம் பெறுவதையே [illegible] கொண்டான்.

[illegible] அவனை வரவேற்ற முறையே புதுமையாக [illegible]

[illegible] மனத்தில் உள்ளதை அவர் ஒருவேளை தெரிந்து [illegible] டாரோ?

''இராஜாதித்தா, இப்பொழுதுதான் சிவசேகர பண்டிதர் [illegible] வந்து சென்றார்'' என்று பேச்சைத் தொடங்கினார் [illegible]. பொதுவாக அவர் எப்போதுமே பேச்சை ஆரம்பிக்க [illegible]. தம்மைக் காண வருபவர்கள் பேச்சைக் கேட்ட பிறகே [illegible] ஏதாவது தேவையெனில் பேசுவார்.

அவர் மேலும் தொடர்வதற்குள், ''நான் குறிப்பிட்ட [illegible]க்குள் வந்துவிட்டேனே. அவர் என்னைப் பார்க்காமல் [illegible]து என் உள்ளத்தில் வருத்தத்தை அளிக்கிறது. இரண்டு [illegible]களாகப் பற்பல வேதனைகளில் சிக்கியிருந்த மனம் இன்றைய [illegible]சியால் மேலும் துயரமுற்று விட்டது!'' என்று இராஜாதித்தன் '[illegible]'வென்று பொழிந்தான்.

பராந்தகரும் அதை எதிர்பார்த்தவர்போல், ''பண்டிதரும் [illegible] வரவை எதிர்பார்த்துத்தான் சிறிது நேரம் இருந்தார். பகவதி தேவியின் பூஜைக்கு நேரம் கடந்துவிடப் போகிறது என்று [illegible]பட்டுச் சென்றுவிட்டார்'' என்று சமாதானம் கூற முயன்றார்.

சக்கரவர்த்தி இவ்வாறு மற்றவருக்காக சமாதானம் கூறுவது என்பதே வியப்பே.

''பூஜை இருக்கிறது என்று தெரிந்ததும் அவர் இந்த நேரம் பார்த்து வருவது ஏன்? தங்கள் நேரம் மட்டும் சாதாரணமானது என்பது அவர் எண்ணமோ?'' என்று கேட்டான் இராஜாதித்தன்.

சக்கரவர்த்தி மெல்லச் சிரித்தது அவன் காதுகளில் விழ நியாயமில்லை. ''இராஜாதித்தா, சோழ நாட்டின் நலனுக்காக அவர் பூஜை தொடங்கியிருக்கிறாராம். அதைப்பற்றி அவர் விளக்கமாக எடுத்துக் கூறினார். பகவதி தேவி பூஜை செய்து ஏதோ கேட்க விரும்பினாராம். நானும் சில சந்தேகங்களுக்கு விளக்கம் கூறுமாறு வேண்டினேன். உடனே 'பூஜை செய்து சொல்கிறேன்' என்று சொன்னார். பண்டிதரை நாம் எப்பொழுது வேண்டுமானாலும் சென்று காணலாம். உன்னை அவர் நேரிடையாக சந்திக்கவில்லையே தவிர உன்னைப் பற்றியும்,

உன் குணநலன்களைப் பற்றியும் அவர் என்னிடம் கூறிய போது...'' என்று சொல்லத் தொடங்கிய அரசர் பெருமூச்சுவிட்டுச் சற்று நிறுத்தினார்.

''பிறகு... நானே வியப்படைந்தேன். அவர் முக்காலும் உணர்ந்த முனிவர்தான்'' என்றார்.

இராஜாதித்தன் தந்தை சொல்வதை ரசித்ததாகத் தெரியவில்லை. துறவியை அவர் இவ்வாறு புகழ்வது அவனுக்கு வியப்பை அளித்தது.

தந்தை பேசிக் கொண்டே வரும்போது அவன் நோக்க மெல்லாம், படையெடுப்புக்கான திட்டம் தீட்டுவதில் இருந்தது. படைத்தலைவராக யாரை நியமிப்பது, படை வியூக அமைப்பை எவ்வாறு அமைப்பது, படை வீரர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்க வேண்டும், அவர்களுக்கு வேண்டிய உணவு வசதிகளை எப்படிச் செய்வது என்பதிலேயே வட்டமிட்டுக் கொண் டிருந்தது.

அவன் திடீரெனத் தன் தந்தையை நோக்கி, ''ஆமாம், ஆமாம் முக்காலும் உணர்ந்த அந்த ஞானி, வீரமாதேவியின் வருங்காலம் குறித்து என்ன சொல்கிறார்?'' என்று கேட்டான்.

சக்கரவர்த்தி இப்போது வாய் விடடே சிரித்தார். ''மகனே, இராஜாதித்தா! உன்னுடைய பரபரப்பும் துடிதுடிப்பும் எனக்குப் புரிகிறது. இப்படித்தான் இளவயதில் இருக்க வேண்டும். உள்ளத்திலே வேக உணர்ச்சி இருந்தால் தான் செயலிலும் அது ஓரளவுக்குப் பிரதிபலிக்கும். உன்னுடைய பாட்டனார் ஆதித்த சோழர் அடிக்கடி சொல்வார்: 'ஒரு நொடியேனும் அயரக் கூடாது. எப்பொழுதும் நம் சிந்தனை போர்க்களத்திலும் படை எடுப்பதிலும் இருக்க வேண்டும். புலிக்கொடி நாலா திக்கிலும் பறக்கத் திட்டமிட வேண்டும். அதற்கு இடையூறாக இருக்கும் எவரையும், உற்றாரையும் உறவினர்களையும் கூட, அகற்றுவதில் தயங்கக் கூடாது' என்று.

''நானும் அப்படியே மனத்திலே திடமான எண்ணம் கொண்டு விளையாட்டுப் போல் ஒவ்வொரு போர்க்களத்திலும் புலிக் கொடியை உயர்த்தி வந்தேன். கையகலம் இருந்த இந்த நாட்டை காளத்தி மலை முதல் குமரித்துறை வரை விரிவுபடுத்தினேன். இன்னும் முயன்றிருந்தால் வடக்கே பொத்தப்பி நாடும், மேற்கே சேர நாடும் நம் வயப்பட்டிருக்கும். எதற்காக இந்தக் கதையைச் சொல்லுகிறேன் என்றால், உன்னைப் போன்றும், எனக்கும் ஆர்வம் அக்காலத்தில் இருந்தது என்பதை விளக்கவே.

''ஆனால், இராஜாதித்தா, காற்று எப்பொழுதும் போல் ஒரே மாதிரியாக வீசுவதில்லை. நான் போட்ட திட்டங்கள் எல்லாம் சரிவர நடைபெற்றுக் கொண்டுதான் வந்தன. ஆனால் காலம் அப்படியே இல்லையே! இரண்டு நிகழ்ச்சிகள் என் மனத்திலே மிகுந்த கவலையையூட்டி, சில நாட்களிலேயே என் உடல் வலிமை குறைந்து போகும்படி செய்துவிட்டன என்பது உனக்குத் தெரியுமோ, தெரியாதோ?

''எந்தப் போர்க்களமும் எனக்கு மனக்கவலையை அளிக்க வில்லை. யுத்தத்திலே ஏற்பட்ட பெரும் இழப்புக் காரணமாகவும் நான் சோர்ந்துவிடவில்லை. விழுப்புண் பெற்று அதனால் படுத்த படுக்கையாகவும் வீழ்ந்து விடவில்லை. பாண்டிய மகுடம் கிடைக்கவில்லையே என்பதும் உனக்குக் கவலை அளிக்க வில்லை.

ஆனால், மகனே, இராஜாதித்தா! வாணர்களையும், வைதும்பர்களையும் வெல்வதற்குப் போர்க்களத்தில் என் தோளோடு தோள் நின்ற கங்க மன்னர் பிருதிவீபதி படுத்த படுக்கையாகக் கிடக்கிற செய்தி என்னை மிகவும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கிவிட்டது. உற்ற நண்பனை இழந்துவிடுவேனோ எனும் கவலை என்னைச் சூழ்ந்து கொண்டுள்ளது. மான்ய கேடத்திலிருந்து நாட்டை இழந்து இங்கு வந்துள்ள வல்லவரையருக்கு மீண்டும் மகுடத்தை மீட்டுத் தரக்கூடியவன் பிருதிவீபதி ஒருவன்தான். அதற்கும் இடையூறு வந்துவிட்டது என்றறிந்தவுடன் என் வலிமை பாதி குன்றிவிட்டது'' என்று கூறினார்.

இராஜாதித்தன் பரபரப்புடன் கேட்டான்: ''என்ன, என்ன பிருதிவீபதி படுத்த படுக்கையில் இருக்கிறாரா?''

பராந்தக சோழ தேவர் மெல்லிய குரலில் கூறினார்: ''ஆமாம்... ஆமாம்... எதிர்பாராதது நிகழ்கிறது. அதனால் தான் சொல்கிறேன். காற்று நமக்குச் சாதகமாக வீசவில்லை என்று. கடலிலே செல்லும் கலத்தை ஓட்டும் கலபதி எப்பொழுதும் காற்றடிக்கும் திசையைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருப்பான்...''

இதற்குள் இராஜாதித்தன் குறுக்கிட்டு, ''அதற்காகக் காற்று வீசும் திசையிலேயே கலத்தைச் செலுத்த மாட்டான் இல்லையா? அரசே, என்னைப் பொறுத்தருளுங்கள். இப்படி நான் பேசுவதற்கு. தங்களுக்கு ஏற்பட்ட உடல் நோய்க்குக் காரணம் என்ன என்பதை இப்பொழுது நான் புரிந்து கொண்டேன். மனநோய் உங்கள் வலிமை குன்றச் செய்துவிட்டது. இந்தச்

செய்தி அண்டை நாடுகளுக்குத் தெரிந்தால் அவர்கள் மேலும் துணிந்து விடுவார்கள். நாம் யாரை நம்பி நாட்டை விரிவு படுத்தினோம்? சேரரும், கங்கரும் என்றுமே நமக்குத் துணையாக இருப்பார்கள் என்று நம்பலாமா?'' என்று மூச்சுவிடாமல் கேட்டான்.

பிறகு, ''அந்தக் காலத்தில் நாங்கள் சிறுவர்களாக இருந்தோம். நாங்கள் விளையாடும்போது நான்கு திசைகளையும் வெல்ல நால்வரும் செல்வதாகப் பேசிக் கொள்வோம். நானும் கண்டராதித்தனும், அரிஞ்சயனும், உத்தம சீலியும் நான்கு பேரும் வீரர்களாய்த் தங்கள் முன்னே நிற்கும் பொழுது, போரைப் பற்றித் தாங்கள் சந்தேகம் கொள்ளலாமா? வீரமாதேவி வேதனை யுடன் இங்கே இருப்பதைக் கண்டு இனியும் மௌனமாக இருக்கலாமா! உடனடியாக எனக்கு நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும். இப்பொழுதே தலையசைத்து ஆசி வழங்குங்கள்!'' என்று ஆவேசம் வந்தவன் போல் பேசினான்.

சிறிது நேரம் தன் மகன் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்த மன்னர் விழிகளில் ஏனோ நீர் ததும்பியது.

''இராஜாதித்தா, சற்றுப் பொறு. நாம் எதையும் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். இரண்டு நாள்களாக எனக்குக் கிடைக்கும் செய்திகள் அவ்வளவு சாதகமாக இல்லை. உன் அருமை நண்பன் சேர நாட்டு இளைஞன், வெள்ளங் குமரன் கங்க நாட்டிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கிறான், ஓர் அவசரச் செய்தியுடன். செய்தியை அவன் சொல்லவில்லை. ஆனால், தான் கங்கபாடியினின்று புறப்படும் முன்னர் ஒற்றன் ஒருவனிடம் செய்தி சொல்லி அனுப்பியிருக்கிறான். அவன் என்ன செய்தி கொண்டு வருகிறானோ! அவன் மனத்தில் ஒருவித வேதனை நிழலாடுகிறது. போருக்கும் படையெடுப்புக்கும் அஞ்சக் கூடியவன் நான் அல்லன். என் கரங்கள் சோர்ந்து விடவில்லை. என்னைவிட வயதில் முதிர்ந்த அந்தக் கிழவன் அசோகவர்ஷன் மான்ய கேடயத்தில் அரியணையில் அமர்ந்திருப்பதா? ஒருநாளும் நான் நீடிக்க விடமாட்டேன்! நான் அடியெடுத்து வைக்கும் முன்பாக தீர ஆலோசித்து விடுவேன். அடி எடுத்து வைத்த பிறகு வெற்றியில்லாமல் திரும்பமாட்டேன். புலி பதுங்கித்தான் பாயும். சிவசேகர பண்டிதர் கூறியவை பல எனக்குச் சம்மதமாகப்பட்டன. கிரகங்கள் நமக்குச் சாதகமான நிலையில் இல்லை என்றார். பகவதி தேவியை விடை கேட்டுச் சொல்கிறேன் என்று சொன்னார். நல்ல சமயத்திற்குக் கடவுள் அனுப்பியவர் போல் வந்து சேர்ந்தார். நீ இப்பொழுதே சிவசேகர பண்டிதரைக்

... சந்தித்துவிடு. உன் வருகைக்காக ஒருகால் அவர் காத்திருக்கலாம். போய் நல்ல சேதியுடன் வா!''என்று கூறிய ...., தமது இமைகளை மூடி, மீண்டும் மறுபக்கமாகத் திருப்பிப் ...த்துக் கொண்டார்.

தந்தையின் குணம் இராஜாதித்தனுக்குத் தெரியும். கண்களைச் ... மூடி மறுபக்கம் திரும்பிவிட்டார் என்றால், அங்கே யாரும் இருக்கக்கூடாது என்பதும், அவர் இட்ட உத்தரவை யாராயிருந் தாலும் உடனே நிறைவேற்ற வேண்டும் என்பதும் பொருள்.

∴ ∴ ∴

இராஜாதித்தன் சோர்ந்த உள்ளத்துடன், தந்தையிடமிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தான். திடீரெனத் தஞ்சைக்கு வந்த துறவி, தந்தையைச் சந்தித்து அவர் மனத்தை ஏன் மாற்றி யிருக்கிறார் என்ற சந்தேகம் இராஜாதித்தனுக்கு ஏற்பட்டது.

''யார் இந்தத் துறவி? ஏன் அரசியல் விவகாரங்களில் தலையிடுகிறார்?'' என்ற எண்ணம் இராஜாதித்தனுக்கு ஏற்பட்டது. அதே நினைவுடன் நடந்து வந்தான். வெள்ளங்குமரன் வரப் போகின்றான் என்ற நினைவும் உடன் எழுந்தது. அதனால் சோர்ந்த உள்ளத்திற்கு புதுத்தெம்பு ஏற்பட்டது.

வெள்ளங்குமரன் இல்லாதது இராஜாதித்தனுக்கு ஒரு கரம் குறைந்தது போன்றே தோன்றியது. குகனுடன் சேர்ந்து ஐவரானது போல், வெள்ளங்குமரனுடன் சேர்ந்து ஐந்து குமாரர்களை உடையவரானார். பெற்றால்தான் பிள்ளையா? வெள்ளங்குமரன் பராந்தகனின் நான்கு புதல்வர்களைவிட நாட்டின் மீதும் பராந்தகர் மீதும் நன்றி உடையவராகத் திகழ்ந்தார்.

''உன்னைத் தம்பி என்று இனி அழைக்கப் போவதில்லை'' என்று வேடிக்கையாக ஒருநாள் இராஜாதித்தன் கூறினான். வேடிக்கை வெளியே புலப்படவில்லை.

வெள்ளங்குமரன் திடுக்கிட்டுவிட்டான். முன்கோபக்காரனான இராஜாதித்தனுக்குத் தான் எந்த விதத்திலும் கோபம் ஏற்படும் செயல் செய்யவில்லையே! கவலை நிறைந்த முகத்துடன் கேள்விக்குறி எழுப்பும் வெள்ளங்குமரனைப் பார்த்துக் குலுங்கச் சிரித்து, அவனை அணைத்துக் கொண்டு, ''ஐயோ பாவம்! உன் முகம் ஏன் இப்படி அதற்குள் மாறிவிட்டது? சக்கரவர்த்தி களுக்கு ஓர் எண்ணம் இருப்பது எனக்குத் தெரிந்தது. அனுபமாவை உனக்குத் திருமணம் செய்து வைத்து விட வேண்டும் என்பதில் அவர் ஈடுபாடு செலுத்துகிறார். அதனால்

உன்னை குறுநில மன்னராக்கவும் விரும்புகிறார். ஆனால் தம்பி தங்கையை எப்படி மணப்பதாம்? ஒன்று; தம்பி எனும் இடத்திலிருந்து உன்னை மாற்ற வேண்டும் அல்லது அனுபமா உனக்கு இல்லை என்ற முடிவுக்கு வர வேண்டும். தம்பி என்றழைப்பதை விட்டுவிடப் போகிறேன்'' என்றான் இராஜாதித்தன்.

வெள்ளங்குமரன் இதயம் ஒருமுறை சுழன்று வந்து மீண்டும் ஒட்டிக் கொண்டது. இராஜாதித்தனுக்குத் தன் மீது இருக்கும் அளவு கடந்த ஆசையை எண்ணும்போது, வெள்ளங்குமரன் கண்களில் நீர் சுரந்தது. இவ்வளவு அன்பு கொண்டிருக்கும் அள்வுக்குத் தான் ஏற்றவனா என்று ஆத்ம விசாரணை செய்து கொண்டான். இராஜாதித்தன் மீதும் சோழ நாட்டின் மீதும் அவனுக்கு மேலும் மதிப்பு அதிகமாகியது. ஈழ நாட்டின் மீது தன்னந்தனியனாக இராஜாதித்தன் படையெடுத்துச் செல்லுவது வெள்ளங்குமரனுக்குச் சம்மதம் ஏற்படவில்லை. சக்கரவர்த்திகளிடம் சென்று தானும் உடன் செல்வதாக வாதாடினான்.

''ஈழ வெற்றியைத் தான் ஒருவனே அடைய வேண்டும் என்று இராஜாதித்தன் விரும்புகிறான். மேலும், உனக்கு ஒரு முக்கியமான பணியொன்று ஏற்படுத்திருக்கிறேன்'' என்று சக்கரவர்த்திகள் கூறிவிட்டார்.

கங்க நாட்டிற்கு அவசரமாகச் செல்லும் பணியை அவனுக்கிட்டார் மன்னர். தன் அந்தரங்கத் தூதுவனாக அனுப்பினார். கங்க மன்னர்களின் மேற்பார்வையில்தான் வாணகப்பாடி நாடு இருந்தது. பராந்தகன் பரிசாக அந்த நாட்டை கங்க நாட்டு மன்னன் பிருதிவீபதிக்கு அளித்திருந்தார். வடமேற்கே இருந்த கங்க நாட்டினின்று தொண்டை மண்டலத்தில் உள்ள வல்லத்தில் ஆட்சிப் பொறுப்பை நிலைநாட்டுவது பிருதிவீ பதிக்குக் கஷ்டமாக இருந்தது. அதனால் நம்பிக்கை வாய்ந்த வெள்ளங்குமரனை வல்லத்திலிருந்து நிர்வாகம் நடத்தச் செய்யலாம் என்ற எண்ணம் பராந்தகனுக்கு இருந்தது. மிகவும் இரகசியமான இந்தச் செய்தியை வெள்ளங்குமரனிடமே கொடுத்து அனுப்புவது என்ற முடிவுக்கு வந்தான்.

இராஜாதித்தன் ஈழம் செல்வதும், வெள்ளங்குமரன் கங்க நாடு செல்வதும் ஒரே சமயத்தில் நடைபெற்றன. ஈழத்தில் வெற்றியடைந்து பொன்னும் பொருளுமுடன் இராஜாதித்தன் திரும்பி வந்தான். கங்க நாடு சென்ற வெள்ளங்குமரன் இன்னும் திரும்பி வரவில்லை என்பதைத் தெரிந்து கொண்டான். அவன் இப்போது இருந்திருந்தால் மான்யகேடத்தின் மீது படை

[illegible] செல்லும் அவசியத்தை சக்கரவர்த்திகளிடம் [illegible]ப்பான் என்று எண்ணினான். இன்னும் சில [illegible], அதற்குள் வெள்ளங்குமரன் வந்துவிடுவான்'' [illegible]ப்படுத்திக் கொண்டான்.

[illegible] [illegible]வலைகளுடன் இராஜாதித்தன் திரும்பி [illegible]. ஒற்றர்ப் படையைச் சேர்ந்த வீரனொருவன் [illegible] ஒரு லிகிதம் கொடுப்பதற்காகத் தயங்கி நின்றான்.

[illegible]தித்தன் அவனிடமிருந்து ஓலைச்சுருளை வாங்கிப் [illegible]. வெள்ளங்குமரன் செய்தி அனுப்பியிருந்தான். தனது [illegible]ரும், இளவரசருமான இராஜாதித்தனுக்கு வணக்கம் [illegible], நலன் விசாரித்துப் பிறகு சுருக்கமாக எழுதியிருந்தான்.

''....கங்க நாட்டிலிருந்து நான் புறப்பட இன்னும் ஓரிரு [illegible] ஆகலாம். இங்கே சூழ்நிலை சரிவர இல்லை. தந்தையும், [illegible] கடும் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள். பூதூகன் என்பவன் [illegible] கங்க நாட்டு மாளிகையில் தோன்றியுள்ளான். தனக்கு [illegible] தருபவர்களுடன் இரகசியமாய்ப் பேசுகிறான். எனக்குப் [illegible] ஐயம் தோன்றியுள்ளது. கங்க நாட்டின் தலைவிதியையே [illegible] மாற்றி விடுவானோ எனும் அச்சம் எனக்கு ஏற்படுகிறது. [illegible]ால் உடனடியாக நாம் படைகளைத் திரட்டி வந்து, [illegible]விபதிக்கு உதவ வேண்டும் என்று தோன்றுகிறது. [illegible]வற்றையும் எழுத முடியவில்லை. சக்கரவர்த்திகளிடமும் [illegible]த் தெரிவிக்குமாறு ஒற்றரிடம் கூறியுள்ளேன். ஈழத்திலிருந்து [illegible]ம் வெற்றியுடன் தாங்கள் தஞ்சைக்குத் திரும்பியிருப்பீர்கள் [illegible] எண்ணுகிறேன்.''

'பராந்தக சோழதேவர், மான்யகேடத்தின் மீது படை [illegible]டுத்துச் செல்வதற்கு ஏன் தயங்குகிறார் என்பது இப்போது [illegible]ராஜாதித்தனுக்குப் புரிந்துவிட்டது. ஆனால் மன்னர் [illegible]லைப்படும் அளவுக்கு ஏதும் பாதகமான சூழ்நிலை ஏற்பட்டு [illegible] வில்லை. கங்க பாடிக்கு வெள்ளங்குமரனைப் படைகளுடன் அனுப்புவது; அரிஞ்சயனையும் உத்தமசீலியையும் சேர நாட்டுப் [illegible]குதிகளுக்குப் பாண்டியனைச் சிறைப்படுத்தி வர அனுப்புவது, [illegible]ண்டராதித்தனும் நானும் குந்தள நாட்டை நோக்கிச் செல்வது - இவ்வாறு வசதியான வீரர்கள் இருக்கும்போது மன்னர் ஏன் தயங்குகிறார்' என்று இராஜாதித்தன் தனக்குள் கேட்டுக் கொண்டான்.

''ஆமாம், தந்தைக்கு சமீப காலத்தில் இவ்வாறு தயக்கம் ஏன் ஏற்படுகிறது?'' என்று தன் அருகே வந்து நின்று

தன்னிடமிருந்து வெள்ளங்குமரனுடைய ஓலையை வாங்கிப் படித்த தன் சகோதரன் கண்டராதித்தனை நோக்கிக் கேட்டான்.

சிவசேகர பண்டிதரிடம் சென்று வரத் தொடங்கிய பிறகு கண்டராதித்தனுக்கு யுத்தம், போர்க்களம், படையெடுப்பு என்பவை மீது வெறுப்பு ஏற்பட்டது. ஒரு முறை சிவசேகரரின் உபதேசங்களைக் கேட்டால் மனம் கட்டாயம் மாறும். இயற்கையிலேயே சிவன்பால் சிந்தை செலுத்துவதில் நாட்டம் கொண்ட கண்டராதித்தன் மனத்திலே சிவசேகரரின் அறிவுரைகள் மாற்றம் ஏற்படச் செய்தன.

''தந்தை சொல்வதும், சிவசேகர பண்டிதர் சொல்வதும் அந்தப் போரில் சரியாகவே இருக்கின்றன!'' என்றான் கண்டராதித்தன்.

இராஜாதித்தன் சற்று எரிச்சலுடன், ''சிவசேகர பண்டிதருக்கு நம் நாட்டை இன்று எதிர்நோக்கியுள்ள ஆபத்து தெரியுமா? வீரமாதேவியின் கண்ணீரை அறிவாரா?'' என்று கேட்டான்.

''ஆகா! அவர் அறியாததே ஏதும் இல்லை. படை திரட்டிச் செல்வதற்கு இது ஏற்ற தருணம் இல்லை என்று அவர் கருதுகிறார்'' என்றான் கண்டராதித்தன்.

''அவர் அப்படி நினைப்பதற்கு என்ன ஆதாரம் வைத்திருக்கிறார்? ராஜநீதி அறிந்தவரா? ராஜதந்திரத்தில் கரை கண்டவரா? அல்லது நமது விரோதிகளால் நம்மைக் கோழை களாக்க அனுப்பப்பட்ட சதிகாரரா?'' இராஜாதித்தன் ஆத்திரத்துடன் கேட்டான்.

''சிவ சிவ!'' என்று கூறிச் செவிகளை மூடிக்கொண்ட கண்டராதித்தன், ''அண்ணா! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்! நம் நாட்டிற்கு ஏதோ ஒரு சாபக்கேடு இருப்பதாக அவர் சொல்கிறார். மேலும் சிவநேசச் செல்வரைப் பழித்த அபசாரமும் நமக்குச் சேர வேண்டாம். அவர் சொல்வது ஒவ்வொன்றும் பகவதி தேவியின் வாக்காகும்!'' என்று கண் கலங்கக் கூறினான்.

''அது யார் பகவதி தேவி?'' என்று இராஜாதித்தன் கேட்ட கேள்வியில் அலட்சியம் இருந்ததை உணர்ந்தான் கண்டராதித்தன். ''அண்ணா, தாங்கள் இங்கு இருந்தபடியே ஏதும் பேசி விடக்கூடாது. பண்டிதரின் குடிலுக்கு வர வேண்டும். அங்கு நடைபெறும் பூஜையைக் காண வேண்டும். துறவியாரின் அருள் நோக்கு தங்கள் மீது விழுமாறு செய்து கொள்ள வேண்டும். நம் முன்னோர்கள் செய்த தவப் பயனாய்த்தான் துறவி அவர்கள்

இங்கேயே வாழ்ந்தருளி இருக்கிறார். அவருக்கு இந்த நாட்டின் மீது மிகுந்த அன்பு ஏற்பட்டுவிட்டது. நாட்டு நலனை அவர் தவத்தின் மூலம் விரும்புகிறார். தங்கள் நலனைப் பற்றியும் தாங்கள் நீடூழி வாழவேண்டும் என்பது குறித்தும் அவர் எப்பொழுதும் சிந்திக்கிறார். பகவதி, சிவசக்தியின் மற்றொரு அம்சமாகும். தந்தை வணங்கும் நம் நிதம்ப சூதனியும் ஒன்றுதான். தங்கள் வருகையை அவர் ஒவ்வொரு கணமும் எதிர்பார்க்கிறார். அவரைத் தேடிக் குறிப்பிட்ட நேரத்தில் தாங்கள் வந்ததையும், அவர் தங்களைச் சந்திக்காமல் போய்விட்டதாகத் தாங்கள் வருந்தியதையும் அவரிடம் தெரிவித்தேன். அவர் அப்படிச் சந்திக்காமல் சென்றதற்கும் காரணம் உண்டு. இப்போது தங்களை எந்த நேரத்திலும் காண்பதற்குச் சித்தமாக இருக்கிறார். இல்லாவிடில் அவரே தங்களிடம் வந்தாலும் வந்து விடலாம்....'' என்று கண்டராதித்தன் கூறினான்.

அவனுடைய சொற்கள் இராஜாதித்தனை மெய் சிலிர்க்க வைத்துவிட்டன.

''கண்டராதித்தா, நீ இவ்வளவு புகழும் பண்டிதரைக் காண வருகிறேன். வீரமாதேவியின் வருங்காலம் குறித்துக் கேட்கவாவது வருகிறேன். இப்போதே போய் என் அருமைத் தங்கையை அழைத்து வருகிறேன்'' என்றான்.

கண்டராதித்தன் முகம் மலர்ந்தது. இளவரசன் இராஜாதித்தன் வருகையை சிவசேகர பண்டிதரிடம் தெரிவிப்பதற்காக அவன் விரைந்தான்.

ஆனால், அவன் வந்து சொல்வதற்கு முன்பே சிவசேகர பண்டிதர், இராஜாதித்தன் வரப்போவதை அறிந்து வைத்திருந்தது, கண்டராதித்தனுக்கு வியப்பை அளித்தது.



அத்தியாயம் 6

புதிய ஓவியம்

கலைமகளின் கரத்திலும் இராவணேச்வரன் கரத்திலும் உதயணன் வாசவதத்தையின் கரங்களிலும் தவழ்ந்த பெருமை பெற்ற வீணை இராஷ்டிரகூடம் எனப்படும் குந்தள நாட்டு மன்னனாகத் திகழ்ந்து, இப்பொழுது சோழ நாட்டில் தன் மாதுலர் நாட்டில் அடைக்கலம் புகுந்திருக்கும் கோவிந்த வல்லவரையன் கரங்களிலே கிடந்து படாத பாடுபட்டுக் கொண்டிருந்தது.

ஒரு சமயம் இன்னிசை எழுந்து கேட்போர் செவிகளை மகிழ்விக்கும். பல சமயம் ஒலி பேதத்துடன் வீணை நரம்புகள் கோர இசையை எழுப்பி, மாளிகையின் உயரமான கூடத்து விதானங்களில் உட்கார்ந்து இருக்கும் பறவைகள்கூட அஞ்சி ஓடும்படிச் செய்துவிடும். அங்கும் இங்கும் வண்ணப் பறவைகள் போல் கொஞ்சும் மொழி பேசிச் செல்லும் பணிப்பெண்கள் வீணா கானத்தைக் கேட்டுத் தங்களுக்குள்ளேயே நகைப்பர். வாளேந்தி நிற்கும் அரண்மனைக் காவல்காரர்கள்கூட, 'கர்ண கடூரமான ஒலியைக்' கேட்டுத் தங்களுக்குள்ளேயே சிரிப்பர்.

பொழுது போக வேண்டுமென்பதற்காக கோவிந்த வல்லவரையன் மேற்கொண்ட பணிகளுள் வீணையைத் தொந்தரவு செய்வதும் ஒன்று. குந்தள நாட்டுத் தலைநகரான மானியகேடத்திலும் சரி, அந்நாட்டில் அவன் விஜயம் செய்யும் மற்ற ஊர்களிலும் சரி, பொழுது ஓடிக்கொண்டே இருக்கு, போதவில்லையே என்று புலம்புவான். வீணையைப் போன்ற வனிதையர் அவன் அணைப்பில் சிக்கித் திணறுவர்; சிணுங்குவர். வீரமாதேவியை மணந்த பிறகு பிற பெண்களை நாடும் குணம் சற்று மாறியது. தேவியை ஒரு நாள் கூடப் பிரியாமல் பொழுதைக் கழிப்பான்.

வீரமாதேவியும் மிகவும் புத்திசாலித்தனமான காரியம் ஒன்று செய்தாள். தான் மீட்டும் வீணையைக் கோவிந்தனுக்கும் கற்றுத் தந்தாள். வீரமாதேவி வீணை மீட்டுவதில் வல்லவள். ஆனால்,

[illegible] சிறிது காலத்திற்குத்தான். குந்தள நாட்டில் அரசியல் [illegible]ங்கள் மிகுந்தன. வீணை உறைக்குள்ளேயே உறங்கிக் [illegible]ருந்தது. மானியகேட நகரிலிருந்து தப்பினோம் [illegible]தோம் என்று கோவிந்த வல்லவரையன் வீரமாதேவியோடு [illegible] [illegible]ந்தபோது வீணையைக் கொண்டு வரவில்லை.

[illegible]ந்தை வந்த பிறகு வீரமாதேவிக்குச் சிறப்பான முறையில் [illegible]து தரப்பட்ட வீணையின் அழகு கண்டு வியந்து, அதைக் [illegible]ந்தையைப் போல் சில நாள் அணைத்துக் கொஞ்சினான். [illegible], மெல்ல மெல்ல மறைந்திருந்த கலையை மீண்டும் [illegible]பிக்க வீணையை மீட்டத் தொடங்கினான்.

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்....''

[illegible]ற பதிகத்தை வாசித்து அவன் மிகவும் சிரமப்பட்டு தன் [illegible]விரல்களை அங்குமிங்கும் ஓட்டிக் கண்களை மூடி, நாத [illegible]வெள்ளத்தைப் பாய்ச்ச முயன்றான்.

''ஆகா, ஆகா... என்ன சுகநாதம்! மெய்சிலிர்க்க வைக்கும் இசை வெள்ளம்! திருநாவுக்கரசர் இருந்தால் தங்கள் வீணை [illegible]லியைக் கேட்டு, தங்கள் திறமையை மிகவும் பாராட்டி மற்றொரு [illegible]திகம் பாடியிருப்பார்!'' என்று கூறி, குலுங்கக் குலுங்க [illegible]கைத்தாள், அனுபமா தேவி. அவள் முகத்திலே குறும்புத்தனம் [illegible]ளிர்ந்து கொண்டிருந்தது. கோவிந்தன் வீணையிலிருந்து தன் கரங்களை எடுத்து அனுபமாவைச் சிறிதுநேரம் [illegible] வைத்த விழி வாங்காது நோக்கினான். ஏன் சிரித்தாய் என்று அவளைக் கேட்காமல், ஆஹா, நீ சிரிக்கும்போது உன் முகம் விரியும் அழகையும், கண்கள் ஒளிவிடும் நேர்த்தியையும், முத்துப்பல் வரிசை மயக்கம் தரும் வனப்பையும், வேய்ந்தோள்கள் குலுங்குவதையும், இன்றெல்லாம் கண்டு ரசிக்கலாம் என்று தோன்றுகிறது!'' என்றான்.

கோவிந்த வல்லவரையனின் சிங்காரப் பேச்சில் மயங்காதவர் களே இருக்க முடியாது. போதையூட்டும் சொற்களும் மயக்கந் தரும் அவன் அழகுத் தோற்றமும் மாய சக்தி கொண்டவை. ஆனால் அவையே அவனுக்கு நேரும் தொல்லைகளுக்குக் காரணம்.

அனுபமா மட்டும் அதற்கு விலக்கா? வல்லவரையன் பார்வையில் வேகம் தாங்காதவளாய், தன் சிரிப்பை நிறுத்தித் தலையை மெல்லத் தாழ்த்தி, நாணம் முகத்தில் படர, கடை விழிப் பார்வையை வீசி, ''உங்கள் வீணை வாசிப்பை விட

உங்கள் வர்ணனை மிக நேர்த்தியாக இருக்கிறது. நீங்கள் ஓவியராக இருந்திருந்தால், என்னை அப்படியே வர்ண ஜாலங்களால் வரைந்து விடுவீர்கள், இல்லையா?'' என்று கேட்டாள்.

அனுபமாவின் புகழ் மாலையை நிஜமாலை என்று நம்பிய வல்லவரையன், ''என்ன சொன்னாய்... ஓவியராக இருந்திருந்தாலா? நான் பிறவியிலேயே சித்திரக்காரன். என் திறமையைப் பற்றி உன் சகோதரி சொல்லவில்லையா? மானிய கேடத்து அரண்மனைச் சுவர்களை நான் வரைந்த சித்திரங்கள் அலங்கரிக்கின்றன'' என்றான் பெருமையுடன்.

''ஓகோ!'' என்று ஏளனம் வெளியே புலப்படாமல் கேட்ட அனுபமா, ஒயிலுடன் தன் இடையைச் சிறிது அசைத்துப் புதுக்கோணத்தில் திரும்பி நின்று, ''அரண்மனைச் சுவரில் நீங்கள் எழுதிய சித்திரங்கள் இன்றும் திகழ்கின்றனவா? என்னென்ன ஓவியம்? பார்வதி பரமசிவனுக்குப் பணிவிடை செய்வது, திருப்பாற்கடலில் யோக நித்திரை புரியும் திருமாலின் பாதங்களை வருடும் திருமகள், போர்க்களத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் தன் கணவருக்குத் திலகமிட்டு அனுப்பும் இல்லத்தரசி, பிக்ஷை கேட்டு வரும் அடியார்க்கு அமுதிடும் ஆரணங்கு, இப்படித்தானே அழியாத சித்திரங்கள்... இல்லையா?'' என்று கேட்டாள். அவள் இமைகள் படபடத்தன. உதடுகள் குவிந்தன. கீழ் உதட்டை முன் வரிசையின் பற்கள் மெல்ல அழுத்தின. இரு கரங்களையும் அவள் தன் மார்புடன் சேர்த்துக் கட்டிக் கொண்டு வல்லவரையனை நோக்கினாள்.

வல்லவரையன் தலையைப் பலமாக அசைத்து, 'ச்சூ! ச்சூ' என்று சூள்கொட்டி ''ஐயய்ய... அந்த மாதிரி பழங்காலக் கதைகளையா வரைவேன்? ஆகா! நான் வரைந்த சித்திரங்கள் நிஜ உருவங்கள். ஒவ்வொருவரையும் நேரிடையே உட்கார வைத்து வரைந்தவை. உன்னைப் போன்ற அழகிகள் போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள் என் தூரிகையில் சிக்க...'' என்றான். இப்படிக் கூறியவுடன், அவன் பழைய இன்ப அனுபவங்களைச் சற்று நினைத்துப் பார்த்தான்.

பிறகு, ''உன்னைப்போன்ற பூலோக அரம்பையர்களைச் சித்திரமாக வரைய வேண்டும் என்ற ஆசை எனக்கு. நீயும் நாள்தோறும் சிறிது நேரம் என் எதிரே அமர்ந்து உன்னை ஓவியக் கன்னியாக மாற்ற வாய்ப்பளிப்பாயானால், மற்றொரு அனுபமாவை நான் இங்கே படைத்துவிடுவேன்'' என்றான்.

அனுபமா உள்ளூர நகைத்தாள். 'அரசாட்சியைத் தவிர மற்றெல்லாவற்றையும் இவர் செய்வார்போல் தோன்றுகிறதே!' என்று எண்ணும்போது, அவளுக்குச் சிரிப்பு வந்தது; அப்படியே அதை வெளிப்படையாகச் சொல்லிவிடும் குணம் அவளுக்கு உண்டு... ஆனால், தன் சகோதரி வீரமாதேவி வருத்தப்படுவாளே என்பதற்காக அவள் மௌனமாக இருந்தாள்.

கோவிந்த வல்லவரையன் பேச்சும், பார்வையும் முதலில் அருந்தவிதக் குற்றம் நிறைந்ததாகவும் அவளுக்குத் தோன்றவில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும் அது போதையேறி வருவது புரிந்தது. அவருடைய நடவடிக்கைகளைப் பற்றி, அவள் முன்பே கேள்விப்பட்டிருக்கிறாள். மானியகேட நகரத்தில், அவர் முறை தவறி மங்கையர்களிடம் நடந்தமையால் பலமுறை சிறு கலகங்கள் நேர்ந்ததும், அவையே அவருக்கு எதிராகப் பலர் சேர்வதற்கும் காரணமாக அமைந்ததையும் அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். அவ்வளவு குணக்கேடனாக இருக்கும் அவரிடம் தன் சகோதரி உயிரையே வைத்திருக்கும் இரகசியம் என்ன வென்றுதான் அனுபமாவுக்குப் புரியவில்லை. அதைத் தெரிந்து கொள்ளும் பருவம் அவளுக்கு இன்னும் வரவில்லை. இன்னும் குறும்புத்தனம் நிறைந்த விளையாட்டுத்தனம் மாறவில்லை. மகுடியின் நாதம் ஏற ஏற, பாம்பு மேலும் படத்தை உயர்த்துவது போல், கோவிந்த வல்லவரையன் எதிரே போதை தரும் முறையில் நடந்து கொண்டு படம் எடுத்து அவனை ஆடச் செய்து, பிறகு திடீரெனத் தணிய வைக்கும் குறும்புச் செய்கைகளை ஒரு பொழுதுபோக்காகக் கருதினாள். அதில் மிகுந்த ஆபத்து இருக்கும் என்று அவள் நினைக்கவில்லை.

''சித்திரம் தீட்டுவதற்கு நான் தினமும் உங்கள் எதிரே வந்து அமர வேண்டுமா?'' என்று கேட்டாள் அனுபமா.

''ஆமாம், உன்னைப் பார்க்காமல் பின் எப்படி உன்னை விட அழகான சித்திரத்தை நான் வரைய முடியுமாம்?'' என்று கேட்டான் கோவிந்தன்.

''ஏன், ஓவியர்கள் ஒரு பொருளைப் பார்த்தவுடன் அதை மனத்திலே அழியாக் கற்பனையாகச் செய்து கொண்ட பிறகு, மனக்கண் முன் அதை நிறுத்தி சித்திரம் வரைய முடியாதா? மற்ற சித்திரக்காரர்கள் இப்படிப் பெண்களை அமர வைத்துத்தான் சித்திரமும் சிற்பமும் செய்தார்களா?'' என்று கேட்டாள் அனுபமா.

அவளுடைய கேள்விக்கு உடனடியாக மறுமொழி சொல்லாத கோவிந்தன் சுற்றி வளைத்து, ''மனக்கற்பனையின் மூலமும்

சித்திரம் வரையலாம். அழகி ஒருத்தியின் கூந்தலை மட்டும் பார்த்துவிட்டுச் சித்திரம் வரைந்த கதையை நீ கேள்விப் பட்டதில்லையா? ஆனால், எதிரே ஓர் அழகியை உட்கார வைத்து வண்ணக் குழம்பெடுத்து ஓவியம் தீட்டும்பொழுது, தீட்டுபவனுக்கு ஏற்படும் உற்சாகம் அந்தச் சித்திரத்தில் பிரதிபலிக்கும். அதனால் ஜீவகளையுடன் மேலும் திகழும். இந்நகரத்திற்குள் நுழைந்த அன்றே உன்னை என் தூரிகைக்குள் பிடித்துப் போட வேண்டும் என்று திட்டமிட்டேன்!'' என்று தேனொழுகப் பேசினான்.

ஃ ஃ ஃ

அனுபமாவின் உடல் ஒரு முறை குலுங்கியது. கோவிந்தனை எப்படியாவது வெட்கித் தலைகுனியும்படி செய்ய வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள். அதிலும் தன் மைத்துனியிடம் இவ்வாறு தகாத எண்ணம் கொள்ளும் கோவிந்தனுக்கு எப்படி புத்தி கற்பிப்பது என்று எண்ணினாள்.

அவளுடைய மௌனத்தைக் கண்ட கோவிந்தன் அவள் அருகே நெருங்கி, அவளுடைய கரங்களைப் பிடித்து, ''ஆஹா இந்த மெல்லிய கரங்களை நான் எங்கோ உணர்ந்த நினைவு வருகிறதே...!'' என்றான்.

மெல்ல கரத்தை விடுவித்துக் கொண்ட அனுபமா, ''உங்கள் ஊரில் ஏதாவது மங்கையிடம் உணர்ந்திருப்பீர்கள்'' என்றாள்.

''இல்லை, இல்லை. அல்லி மலரைப் பறிக்கும்போது அந்தத் தண்டின் ஸ்பரிசம்தான் இதற்கு இணை!'' என்று கூறிக் கொண்டே அவளுடைய வட்ட வடிவமான முகத்தில் உதடுகளின் கீழே சற்று வளைந்திருக்கும் முகவளைவைப் பிடிக்கத் தன் கரங்களைக் கொண்டு சென்றான் கோவிந்தன்.

''உன் முகம் சாமுத்திரிகா லட்சணங்களுக்கு ஓர் எடுத்துக் காட்டு! வட்ட முகத்திலே இதோ இந்தச் செம்பவழ அதரங்கள் இருக்கின்றனவே... ஆஹா...'' என்றான்.

அனுபமாவின் உடல் நடுங்கியது. தன் சகோதரி பார்த்துவிட்டால்... என்ற அச்சம் எழுந்தது. அவள் நினைத்தபடி ஆகவும் ஆயிற்று.

''என்ன அனுபமா, உனக்கு நடனம் ஆட இவர் கற்றுக் கொடுக்கிறாரா? அவர் வீணையை மீட்ட, நீ நடனம் ஆடுவது மிகவும் பொருத்தம்தான்...!'' என்று கூறிக் கொண்டே வீரமாதேவி அப்போது அங்கே வந்து கொண்டிருந்தாள்.

வீரமாதேவி திடீரென அங்கு வந்தவுடன் அனுபமாவின் நெஞ்சில் ஒரு கணம் ஏதோ அடைத்துக் கொண்டது போன்ற வேதனை ஏற்பட்டது. பேச நா எழவில்லை. கொடும் வெயிலில் ஏற்படும் புழுக்கம்போல் உடல் வியர்த்தது.

ஆனால், வீரமாதேவியின் முகத்தில் ஒரு பிரகாசமான புன்னகை பூத்திருப்பதைக் கண்டாள். "அப்பாடா, பிழைத்தோம்!" என்று இதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டாள். ஆனாலும், மறுநொடியில் வீரமாதேவி கேட்ட வேள்வி முள்போல் அவளை உறுத்தியது கோவிந்தனின் வீணை வாசிக்கும் அழகுபோல் அவளது நாட்டியமும் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறாள் என்று எண்ணினாள். அதற்கு சுடச்சுட மறுமொழி கூற வேண்டும் என்ற எண்ணத்தில் "நீயும் நானும் இளம் வயதில் ஒரே நட்டுவனாரிடம்தானே பரதம் பயின்றோம்!" என்று கேட்டாள்.

வீரமாதேவி அங்கே இருந்த மஞ்சத்தில் அமர்ந்து, வீணையின் நரம்புகளைச் சுண்டி ஒலி எழுப்பி, "ஏன் கேட்கிறாய் அனுபமா? இருவரும் ஒரே பரத ஆசிரியரிடம்தான் பயின்றோம்" என்றாள்.

"நாம் இருவரும் சிறந்த முறையில் ஆடுவதைத் தந்தை பாராட்டி, நீங்கள் இருவரும் அரசகுமாரிகளாகப் பிறக்காமல் இருந்திருந்தால் உங்களை ஒவ்வொரு திருவிழாவின் போதும் பொதுமக்கள் மகிழ ஆடுவதற்கு நான் ஏற்பாடு செய்திருப்பேன் என்றாரே, அதை மறந்துவிட்டாயா? ஆட்டத்தில் நாம் இருவரும் மயிலுக்கு ஒப்பானவர் என்று புகழ்ந்தாரே, என் நடனம் சரியில்லை என்றால் உன் பரதத்திற்கும் குறைபாடுதானே?" என்று சற்றுக் கோபத்துடன் கேட்டாள் அனுபமா.

∴ ∴ ∴

தன் சகோதரி தவறாகப் புரிந்து கொண்டுவிட்டாள் என்று அறிந்து, "அதற்குள் கோபிக்கிறாயே அனுபமா! அவருடைய வீணை வாசிப்பிற்கு ஏற்ப நடனம் ஆட வேண்டுமென்றால் நடனக் கலையையே நீ மூட்டைக் கட்டிவிட வேண்டும் என்பதற்காக வேடிக்கையாகச் சொன்னேன். அவர் சற்று முன்பு உனக்கு நடனம் கற்றுக் கொடுப்பது போல் முகபாவத்தைத் திருப்பி ஏதோ சொல்ல முயன்றாரே என்பதற்காகத்தான் அவ்வாறு கேட்டேன். வல்லவரையருக்குப் பொழுது போகவேண்டுமே... பாவம்!" என்றாள்.

வீரமாதேவி தன்னைத் தவறாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதை அனுபமா உணர்ந்து பெருமூச்சு விட்டாள். எனினும் தன் சகோதரியை மட்டம் தட்ட வேண்டும். அவள்

கணவனுடைய குணக்கேட்டை எடுத்துக் கூற வேண்டும் என்று எண்ணினாள்.

''வல்லவரையருக்குப் பொழுது போகவில்லை என்றால் அந்தப்புர பெண்களைப் பார்த்துச் சித்திரம் வரைவதிலும், நடனம் கற்றுக் கொடுப்பதிலும் மானியகேடத்தில் காலம் கழிப்பாரோ?'' என்று குறும்புத்தனம் மிளிரக் கேட்டாள்.

அனுபமாவின் வார்த்தைகளுக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் குறைவுபடுத்தும் கருத்தை வீரமாதேவி புரிந்து கொண்டு விட்டாள். ஆனால் கோபப்படாமல், ''ஓ! அங்கே அந்தப்புரப் பெண்களுக்கு பாவம், ஓய்ச்சல் ஒழிவு என்பதே கிடையாது. அரச குடும்பப் பெண்களும் கன்னிமாடம் விட்டு ஆடவர் எதிரே வருவது வழக்கம் இல்லை. இவர் தான் எப்போதாவது அங்கே வருவார். நானும்தான் அவருடன் இருப்பேன்'' என்றாள்.

அனுபமா உதட்டை மெல்ல மடக்கி விட்டுக் கொண்டாள். தன் சகோதரி தனக்குத் தக்க மறுமொழி கூறிவிட்டாள் என்பதைப் புரிந்து கொண்ட அனுபமா, ''ஆனால், சோழ நாட்டிற்கு வந்தவுடன் வல்லவரையருக்கு எது அந்தப்புரம், எது சபை மண்டபம் என்பது கூடத் தெரியவில்லை. வல்லவரையரைக் காண வேண்டுமானால் தவறாமல் இங்கே பார்த்து வரலாம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. தஞ்சையிலே பொழுது போவதற்கு ஏதாவது நாம் செய்தாக வேண்டும். அக்கா, நீங்கள் அவர் அருகே இராமல் எங்கே போய்விடுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

வீரமாதேவி இதற்கு மறுமொழி கூற விரும்பவில்லை. அவள் உள்ளத்தில் வேதனை சூழ்ந்தது. அந்தச் சமயம் பார்த்து அரிஞ்சயன் அங்கே வந்ததால் பேச்சு மேலே தொடரவில்லை.

⁂ ⁂ ⁂

அரிஞ்சயனும், அனுபமாவும் ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள். பராந்தக சோழ மாமன்னரின் மற்றொரு பட்டத்து அரசியான பழுவேட்டரையர் மகள் வயிற்றில் உதித்தவர்கள். பழுவேட்டரையர் மகளிடம் பராந்தகர் அதிக அன்பு கொண்டிருந்தார்.

சேரர் குலத்துதித்து, நாளடைவில் பழுவூரில் வந்து தங்கிவிட்ட கிளை மரபினரான பழுவேட்டரையர்கள், சோழர் குலத்துக்குப் பலவித உதவி செய்ததுடன், மணவினை மூலம் தொடர்பும் கொண்டிருந்தனர். தங்கள் சந்ததியார் சோழ சிங்காதனத்தை

[illegible] வேண்டும் என்ற அவாவும் பழுவேட்டரையரிடம் [illegible]ருந்தது.

[illegible]ழான் அடிகளுக்கு முன்னதாகவே இராஜாதித்தன் [illegible]தால், அவனுக்குத்தான் அடுத்துப் பட்டத்துரிமை [illegible] வாகிவிட்டதால் பழுவேட்டரையருக்குச் சற்று [illegible]றைந்தது. எனினும், தன் பெயரன் அரியஞ்சயனை, [illegible]த்தனுக்கு இணையாக வீரமுடையவனாக்க அவர் [illegible]ந்த மேற்பார்வையில் வளர்க்கலானார்.

[illegible]மாதேவியை, குந்தள நாட்டு இளவரசன் கோவிந்தனுக்கு [illegible] காலத்தில் திருமணம் செய்து கொடுக்கப் பராந்தகர் [illegible] செய்தபோதே பழுவேட்டரையர் எதிர்த்தார். வடக்கே [illegible]கூடருடன், சோழர்கள் உறவு இதனால் பலப்படும் என்று [illegible]தகர் அழுத்தமாக நம்பியதால் பழுவேட்டரையரால் வேறு [illegible]ம் சொல்ல முடியாமல் போய்விட்டது.

பிறகு கோவிந்தன் நாடிழந்து திரும்பியவுடன், பழு [illegible]ரையர் கோவிந்தனைப் பார்க்கக்கூட விரும்பவில்லை. [illegible]தாப உணர்ச்சியைத் தன் பெயரன் அரிஞ்சயனும், [illegible]பமாவும் வல்லவரையரிடம் புலப்படுத்தவும் அவர் [illegible]மதிக்கவில்லை.

ஃ ஃ ஃ

கோவிந்த வல்லவரையர் அங்கு இருப்பதைக்கூடக் [illegible]ணாதவன் போல், ஆனால் அதே சமயம் வீரமாதேவியின் [illegible]லன் விசாரிப்பவன் போல் அரிஞ்சயன் வீரமாதேவியை நோக்கினான்.

அனுபமா வீரமாதேவியிடம் கூறிய கடைசி வார்த்தைகள் அவன் செவிகளில் வீழ்ந்தன. தன் சகோதரியைக் கடிந்து கொள்பவன் போல், ''என்ன இருந்தாலும் வயதில் இளையவளான நீ வீரமாதேவியின் மனம் புண்படும்படியாக [illegible]தும் பேசக்கூடாது. காலவித்தியாசத்தால் வீரமாதேவி மீண்டும் தஞ்சைக்கு வந்துவிட்டாள் என்பதனால், நீ அவ்வப்போது அவள் சந்தோஷமாக இருப்பதற்கு வேண்டியவற்றைச் செய்ய வேண்டும்'' என்றான்.

நாடிழந்து வந்ததைச் சுட்டிக் காட்டி அரிஞ்சயனும் அனுபமாவும் பேசுவது வீரமாதேவிக்கு மனவருத்தத்தை அளித்தது. இதயத்தில் அடக்க முடியாது ததும்பிக் கொண்டிருந்த

வேதனை, துக்கமாக உருவெடுத்துப் பொங்கிக் கண்ணீராகப் பாயும் நிலையில் இருந்தபோது, அவள் சகோதரன் இராஜாதித்தன் பராந்தக சோழ தேவரைச் சந்தித்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான். தந்தையைச் சந்திக்கச் சென்றபோது இருந்த உற்சாகமும், பீடு நடையும் இப்போது அவனிடமில்லை. எனினும் தன் உணர்ச்சியைப் புலப்படுத்த விரும்பாத அவன், கலங்கிய கண்களுடன் நிற்கும் வீரமாதேவியை நோக்கி, ''வீரமாதேவி, விடிவு காலம் விரைவில் வந்துவிடும். அதுவரையில், என் வேண்டுகோளை முன்னிட்டு, கண்ணீர் சிந்தாமல் இரு. பிறந்த மண்ணில் பிறந்த வீட்டு பெண் கண்ணீர் சிந்தக் கூடாது. யார் எது சொன்னாலும் இன்னும் சில நாட்கள் பொறுத்திரு'' என்று கனிவுடன் ஆனால் உணர்ச்சி நிறைந்த குரலில் கூறினான்.

கோவிந்த வல்லவரையன் உற்சாகத்துடன் இராஜாதித்தனை நோக்கி, ''படை எடுப்புக்கு நாள் குறித்தாகிவிட்டதா, இராஜாதித்தா?'' என்று கேட்டான்.

''தந்தை சம்மதித்து விட்டாரா?'' என்று அரிஞ்சயன் ஆவலுடன் கேட்டான்.

ஃ ஃ ஃ

இராஜாதித்தன் ஒருகணம் அதற்கு மறுமொழி கூற நினைத்தான். ஆனால் அவன் மௌனமானான். அவன் பார்வை வாயிலில் நின்று கொண்டிருந்த இளம் புலவனான, சிவசேகர பண்டிதரின் சீடனின் மீது சென்றது. ஏதோ சொல்வதற்கு அவன் காத்திருக்கிறான் என்பதை அறிந்த இராஜாதித்தன் சைகை செய்து அவனை அழைத்தான்.

எப்பொழுதோ அங்கு வந்து அவர்கள் பேசுவதைக் கேட்டவாறு நின்றிருந்த சிறுவன் பயபக்தியுடன் வணங்கி லிகிதம் ஒன்றைக் கொடுத்தான். சிவசேசரபண்டிதர், உடன் காணவருமாறு இராஜாதித்தனை அழைத்திருந்தார்.

ஓலை நறுக்கை வீசிக் கீழே எறிந்த இராஜாதித்தன், 'முடியாது, முடியாது! இப்போது நான் வருவதற்கில்லை என்று போய்ப் பண்டிதரிடம் சொல்லு. என்னைச் சந்திக்க விரும்பாது குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே புறப்பட்டுச் சென்றுவிட்ட அவருக்கு இருக்கும் பல முக்கியப் பணிகளைப்போல் எனக்கும் அவசரமான வேலைகள் இருக்கின்றன!'' என்று கூறினான்.

மறுகணம் கோபம் தணிந்தவனாக, அந்தச் சிறுவனைத் தன் அருகே அழைத்து அவன் கன்னத்தைத் தடவி, ''குழந்தாய்,

[illegible]விதை பாடிப் பரிசு பெற்றுச் சென்றாய்?'' என்று [illegible] கேட்டான்.

[illegible]லியான அந்தச் சிறுவன், ''ஆமாம் இளவரசே! [illegible] திருக்கரத்தால் பரிசு பெறும் பேறு பெற்றவன் நான் [illegible] ஆனால்...'' என்றான்.

'' ஆனால்... என்ன சொல்ல விரும்புகிறாய் குழந்தாய்? [illegible]மாகச் சொல்லு'' என்று இராஜாதித்தன் கேட்டான்.

''பரிசு பெற்ற பெருமை என் குருநாதரைத்தான் சேரும். [illegible]ரைத் தாங்கள் காணவேண்டாமா?'' என்று மழலையும் [illegible]யும் கம்பீரமும் ஒன்று சேரக் கேட்டான் சிறுவன்.

இராஜாதித்தன் கோபம் பறந்து ஓடிவிட்டது. சிறுவனைத் [illegible]டிக் கொடுத்து, ''கெட்டிக்காரன் நீ. வருங்காலத்தில் மிக [illegible]சாலியாக மிகப் பெரியவனாக ஆவாய். உன் குருநாதரிடம் [illegible]யச் சொல்லு, நான் வருகிறேன் என்று. தந்தையும் அவ்வாறே [illegible]ளையிட்டிருக்கிறார். வரும்போது வீரமாதேவியையும், அரிஞ்சயனையும், அனுபமாவையும் வல்லவரையரையும் உடன் அழைத்துக் கொண்டு வருகிறேன்'' என்று உற்சாகத்துடன் கூறினான்.

அரிஞ்சயனுக்கு, சிவசேகர பண்டிதரைக் காணச் செல்வது [illegible]டோடு பிடிக்கவில்லை. இதனால் அவன் அங்கிருந்து சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டான்.

கண்டராதித்தன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.



அத்தியாயம் 7

உண்மையும், உபதேசமும்

''சிவசேகர பண்டிதரைக் கண்டு வணங்கினால், கட்டாயம் மான்யகேட நகரத்தில் மீண்டும் அரியணை ஏறி அமர அவர் வழி கூறுவார்'' என்று கண்டராதித்தன் கூறினான்.

''நாம்தான் அவரைக் காணப் போகிறோமே. கோவிந்த வல்லவரையரும், வீரமாதேவியும் கட்டாயம் நம்முடன் வரவேண்டும். அவர்களுக்காகவே நான் துறவியாரைச் சந்திக்கப் போகிறேன்'' என்று இராஜாதித்தன் வீரமாதேவியைப் பார்த்தவாறு சொன்னான்.

''ஆகா; எனக்காகத் துறவியைச் சென்று காண வேண்டாம். நம்மிடம் படை பலம் இருக்கிறது. உடலில் வலிமை இருக்கிறது. உள்ளத்தில் துணிவு இருக்கிறது. எதற்காகத் துறவியின் உபதேசம்? அரசியல் விவகாரங்ளில் துறவியின் தலையீடு கூடவே கூடாது'' என்றான் கோவிந்தன்.

அவன் இவ்வாறு கூறியது மற்றவர்களுக்குப் பிடிக்கவில்லை என்பது அவர்களுடைய முகமாறுதலிருந்தே தெரிந்தது. கண்டராதித்தனும் இராஜாதித்தனும் கோவிந்தனை மறுத்துக் கூறச் சற்றுத் தயங்கினார்கள்.

கோவிந்தன் அத்துடன் தன் பேச்சை நிறுத்திக் கொண்டிருக்கலாம். ''திடீரென்று தஞ்சையில் வந்து முகாமிட்டு, சக்கரவர்த்தியைச் சந்தித்தும் அரச குடும்பத்தவரைச் சந்தித்தும் உபதேசம் செய்யும் அளவுக்கு அந்தத் துறவிக்குச் சோழ நாட்டின் மீது என்ன அன்பு?'' என்று கோவிந்தன் கேட்டான். குரலில் ஏளனம் பிரதிபலித்தது.

கண்டராதித்தனுக்குச் சற்று கோபம் எழுந்தது. துறவியிடம் ஈடுபாடு மிகக் கொண்டுவிட்ட அவனால், துறவியைக் குறித்து குறைவாகப் பேசுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தன் சகோதரன் இராஜாதித்தனே, சிவசேகரரைச் சந்திக்க சம்மதித்திருக்கும்போது, கோவிந்தன் இப்படி பேசுவது கண்டராதித்தனுக்குப் பிடிக்கவில்லை.

''நான் வருகிறேன் அண்ணா! என்னை அழைத்துச் செல்லுங்கள். நல்லாரைக் காண்பது நன்று. அவரது பாதார விந்தங்களில் விழுந்து வணங்கி எங்களுக்கு ஒரு விடிவு காலம் எப்பொழுது வரும் என்பதைக் கேட்டறிகிறேன். எவ்வளவு காலம் தஞ்சையிலே பிறருக்குச் சுமையாக வாழ முடியும்?'' என்று வீரமாதேவி குரல் தழுதழுக்கக் கூறினாள்.

''பிறருக்குச் சுமை என்று மட்டும் இனி கூறாதே தேவி! நீ இங்கிருப்பதால் எந்தவிதத் தொல்லையுமில்லை. ஆனால் எங்கள் உரிமையைப் பறித்த அசோகவர்ஷனையும் அவன் மகன் கண்ணனையும் முறியடிக்காவிட்டால் உனக்கு வீர சகோதரர்கள் இருந்தும் பயனில்லையல்லவா? நாங்கள் வாள் வித்தை பயின்றது வீணன்றோ? குதிரையேற்றம், யானை ஏற்றம் கற்றது வெட்டிக்குத்தானோ? எங்கள் திறமையைப் புலப்படுத்தி உனக்கும் நாட்டை மீட்டுத் தருவோமே என்பதற்குத்தான் இவ்வளவு தூரம் பாடுபடுகிறேன். படை உதவி கேட்கவா சிவசேகர பண்டிதரிடம் செல்கிறோம்? அவர் ஆசி பெற, அவருக்குப் பிரத்தியட்சமாகும் பகவதி தேவியின் அருள் பெறச் செல்கிறோம்'' என்று இராஜாதித்தன் கூறி, தன் சகோதரியைத் தேற்ற முயன்றான்.

❖ ❖ ❖

வீரமாதேவியின் கண்களில் நீர் ததும்பியது. தன் உள்ளத்தில் இதுவரை அடக்கி வைத்திருந்தவற்றை எடுத்துச் சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்பு அவளிடம் எழுந்தது.

வீரமாதேவிக்குத் தன் கணவரிடம் அளவிட முடியாத அன்பு உண்டு. மங்கையர் மோகம் கொண்டு அலையும் குணமுடையவன் எனினும், கொஞ்சம் கொஞ்சமாக அவரைத் திருத்திவிடலாம் என்ற நம்பிக்கையில், அன்பை ஒருபடி அதிகமாகவே செலுத்தினாள் எனலாம். தன் கணவரை மற்றவர்கள் குறைவாகப் பேசப் பொறுக்கமாட்டாள். ராஷ்டிரகூட நாட்டில் அவள் காதுபட யாரும் பேசிவிட முடியாது. ஆனால் தஞ்சையில் அப்படி யில்லையே தவிர மனத்தில் இதுவரை அடக்கி வைத்திருந்த வேதனையை இதுவரை தன் தாயிடம் கூடச் சொல்லவில்லை. தன் சகோதரரிடம் கூறினால்தான் மன அமைதி ஏற்படும் என்ற நிலை வந்துவிட்டது. அனுபமாவிடம் வல்லவரையர் பழகும் முறையை மேலும் நீடிக்கவிட்டால் இருக்கும் இடத்திலும் ஆபத்து ஏற்படும் என்பதால், விரைவிலேயே மான்யகேட நகரை அடைவதற்கு எப்படியும் முயலவேண்டும் என்று உறுதியாக எண்ணினாள். சகோதரர் இராஜாதித்தனிடம் உள்ளத்தில் பதியும்படியாக எடுத்துக் கூறுவதற்கு இது தான் சரியான சமயம் என்ற முடிவுக்கு வந்தாள்.

''அண்ணா! துறவியைத்தான் போய்ப் பார்ப்போமோ அல்லது தெய்வ சன்னிதானத்திற்குத் தான் போவோமோ, என் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வழி செய்துவிடுங்கள். அவர் அப்படித்தான் சொல்லுவார். அவருக்குப் புலவர்களைப் பிடிக்காது. துறவிகளைப் பிடிக்காது. ஆனால் இவருக்கென்று ஒரு துன்மந்திரி கிடைத்தார். அவருடைய யோசனையினால் இவர் வேண்டாத தொல்லையை வரவழைத்தார். வேங்கி நாட்டில் யுத்தமல்லனும், வீமனும் மனக்கசப்புக் கொண்டனர். இவரும் சும்மாயிருக்கக் கூடாதா? யுத்தமல்லனுக்கு உதவி செய்வதற்குத் தன் படைகளை அனுப்பினார். தோல்விதான் ஏற்பட்டது. தோல்வி ஏற்படாமல் என்ன செய்யும்? நம் வீரர்களிலேயே நம்மைப் பிடிக்காதவர் பலர் இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளவில்லையே! யுத்த தந்திரம் தெரியவில்லையே! இந்தத் தோல்வியை அறிந்த இவருடைய சிறிய தகப்பன் மகன் கிருஷ்ணதேவன் நாட்டில் தனக்கு வேண்டியவர்களை ரகசியமாகச் சேர்த்து வந்தான். நான் பெண்தான்; ஆடவர்களாகிய உங்கள் எதிரே மனம் விட்டுச் சொல்கிறேன். வயதில் சிறியவளாகிய நான் கூறுவதில் பிழை இருந்தால் பொறுத்துக் கொள்ளுங்கள். என் கணவர் மீதே குற்றம் கூறி மனைவி இவ்வாறு பேசுவதும் சரியான தர்மமாகாதுதான். ஆனால் எங்கள் அழிவுக்குக் காரணமாயிருந்தவற்றைச் சொல்வதனால் மீண்டும் அப்படி ஏற்படாது தடுக்க முடியுமல்லவா? பெண் உகுக்கும் கண்ணீர் எப்போதும் தீயாய் மாறி அழித்துவிடும். எத்தனையோ கன்னிகள் கண்ணீர் விட்டனரோ! அவர்களின் சாபம் எங்களை நாட்டை விட்டு ஓட்டியது. இரகசியமாக சதித்திட்டம் வகு கிருஷ்ணதேவன், ஒரு நாள் போர்க்கொடி உயர்த்தினான். எங்கும் கலகம். நான்தான் இவரை வற்புறுத்தினேன். இனி ஒருகணம் கூடத் தாமதிக்கக் கூடாது என்று. இரவோடு இரவாகத் தப்பித்து ஓடிவந்தோம். கிருஷ்ணதேவன் முதியவரான தன் தந்தை அசோகவர்ஷனுக்கு முடிசூட்டி அவர் சொற்படி நாட்டை ஆள்கிறான். இந்த நிலையில் தெய்வ சங்கல்பத்தோடு, பெரியவர்கள் ஆசியும், ஒழுக்கமும், செய்த பழைய தவறுகளை மீண்டும் செய்யாது இருக்கும் குணமும் இருந்தால் தான் இழந்த நாட்டை மீண்டும் பெற முடியும். அதனால் சிவசேகர பண்டிதரை உடனே சென்று பார்ப்போம். என் கணவரை அழைத்து வருவது என் பொறுப்பு!'' அவள் நிதானமாக, உணர்ச்சியுடன் பேசினாள்.

கோவிந்த வல்லவரையன் தலைகுனிந்து மௌனமாக இருந்தான். வீரமாதேவி சொல்வதையும், அவளுக்குப் பண்டிதரைக் காண ஆவல் இருப்பதையும் மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். இராஜாதித்தன் பரபரப்படைந்தான்.

''[illegible]! வீரமாதேவி! கவலைப்படவே வேண்டாம். [illegible] வாழ்வை உனக்களிக்காமல் நான் அமைதியாக [illegible] போவதில்லை. யார் தடுத்தாலும் விடமாட்டேன். [illegible]தர் 'சரியான கால நேரமில்லை' என்று கூறினாலும் [illegible]த்துச் செல்லாமல் இருக்கமாட்டேன். என் உயிர் [illegible] வெள்ளங்குமரன் வருகைக்காகக் காத்திருக்கிறேன். [illegible], தம்பி கண்டராதித்தன் வற்புறுத்திக் கூறுவதற்கிணங்க [illegible] ணர்ந்த பண்டிதரைத் தரிசித்து ஆசி பெறுவதால் [illegible]மை தானே! வல்லவரையர் வராவிடில் யார் அவரை [illegible] போகிறார்கள்?'' என்று உற்சாகத்துடன் கண் [illegible]வாறு வல்லவரையரைப் பார்த்துப் பேசினான்.

''நீங்கள் என்னதான் சொல்லுங்கள். எனக்குத் துறவிகளைக் [illegible] பிடிக்காது. கண் எதிரே இயற்கையின் சிருஷ்டிகளான [illegible] வாழ்வு இருக்கும்போது அவற்றைத் துறந்து வாழ்வதால் [illegible] எந்தவித நன்மை?'' என்று கோவிந்த வல்லவரையன் [illegible] நகைத்தான்.

[illegible]மே வந்தறியா கண்டராதித்தனுக்கும் கோபம் [illegible]யது. ''வல்லவரையரே, அப்படிச் சொல்லாதீர்கள்! [illegible] பண்டிதருக்குத் தெரிந்ததோ என்னவோ, நேற்று [illegible] பெற்று முடிந்த பிறகு நல்ல விஷயங்களை எடுத்துக் [illegible]போது ராமாயணத்தில் அயோத்தியா காண்டத்தில் [illegible] தன் சகோதரன் பரதனுக்கு ராஜ தர்மங்களை உபதேசம் [illegible]தை அழகாக எடுத்துக் கூறினார். அவற்றுள், 'பரலோக [illegible] என்று வாதிப்பது, பொய் சொல்வது, எல்லா [illegible]க்கும் காரணமான ஸாதுக்களைத் தரிசிக்காமலிருப்பது, [illegible] தூங்குவது, பெண்களுடனே காலம் கழிப்பது, இவற்றை [illegible]வது சிறந்த அரசர்களுக்கு அழகு' என்பவை முக்கிய [illegible]வை. ஆனால், தாங்களோ எவை தீமையோ அவற்றைச் [illegible]திருக்கிறீர்கள். ராஜநீதிக்கு மாறுபட்டு நடந்ததால்தான் [illegible] இழந்தீர்கள். இனியும் இவ்வாறு பெரியோர்களை [illegible]திக்காதீர்கள். முக்கியமாக, இந்திரியங்களை வெல்லும் [illegible]த்தைக் கேட்பதற்காகவாவது பண்டிதரைத் தாங்கள் [illegible] தானாக வேண்டும்'' என்றான்.

கோவிந்த வல்லவரையன் திடுக்கிட்டான்; திகைத்தான். [illegible] ராதித்தன் இவ்வாறு சீற்றத்துடன் பேசுவான் என்று அவன் [illegible]பார்க்கவில்லை. அதனால் அவர்களுடன் பண்டிதரைச் [illegible]திக்கச் செல்ல வேண்டியவனான்.

❖ ❖ ❖

சிவசேகர பண்டிதரைச் சந்தித்து, அங்கு தங்கியிருந்து அவர் செய்யும் பூஜையை வெகுநேரம் இருந்து கவனித்து அவர்

கூறிய உபதேசங்களைக் கேட்டு இராஜாதித்தனும், வீரமா தேவியும் கண்டராதித்தனும், வல்லவரையனும் புறப்பட்டனர்.

திரும்பி வரும்போது ஒவ்வொருவர் மனத்திலும் வெவ்வேறு சிந்தனை படர்ந்திருந்தது. வீரமாதேவி கவலையில் ஆழ்ந்தவள் போல் தோன்றினாள். இராஜாதித்தனுக்கு ஏமாற்றம் மிகுந்திருந்தது. கண்டராதித்தன் திருப்தி அடைந்தவன் போல் காணப்பட்டான். தன்னைப் போன்றே இராஜாதித்தனும் சிவசேகர பண்டிதர் கூறியவற்றை ஏற்றிருப்பான் என எண்ணினான்.

''பார்த்தீர்களா? நான் கூறியது போலவே; மானியகேட நகரில் கோவிந்த வல்லவரையன் நடவடிக்கைகளை நேரில் பார்த்தது போல் சிவசேகரர் கூறியதிலிருந்து அவர் முக்காலும் உணர்ந்தவர் என்று தங்களுக்குத் தெரியவில்லையா?'' என்று கண்டராதித்தன் கேட்டான்.

இராஜாதித்தனுக்கு அவ்வாறு தோன்றவில்லை. நடந்த செய்தியை அவர் எவ்வாறோ அறிந்திருந்து கூறுவது போலவே பட்டது.

இராஜாதித்தன் மௌனத்தைக் கண்ட கண்டராதித்தன், ''மானியகேடத்தின் மீது படையெடுத்துச் செல்ல இது தருணமல்ல என்று தேவியின் வாக்கைக் கூறிவிட்டார் பண்டிதர். ஏதோ ஒரு சாபம் இருக்கிறதாம். அதற்குப் பரிகாரமாக வீரமாதேவியும் வல்லவரையரும் பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று, புண்ணிய தீர்த்தங்களில் நீராடி வரவேண்டும் என்று கூற வில்லையா? அவை எல்லாம் முடிந்த பிறகு நாம் படையெடுத்துச் சென்றால் வெற்றி நிச்சயமாம்... இதுவும் நியாயமாகத் தோன்றவில்லையா?'' என்று கேட்டான்.

இராஜாதித்தனுக்கு என்ன சொல்லுவதென்றே புரியவில்லை. அவன் மனம் குழம்பி நின்றது. பண்டிதர் கூறுவது சரியென்றும் தோன்றியது; சரியில்லை, அவர் ஏனோ படையெடுப்பைத் தாமதம் செய்ய யோசனை கூறுகிறார் என்றும் தோன்றியது.

மேலும், அவர் மற்றவர்களைச் சற்று விலகியிருக்கச் சொல்லிவிட்டு தன்னைத் தனியே அழைத்துத் தன்னைப் பற்றிக் கூறினாரே, அது அவன் மனத்தில் பெரும் குழப்பத்தை உண்டாக்கியது.

''இராஜாதித்தா! உன் வருங்காலம் மகத்தானதாக இருக்க வேண்டும்; ஆனால் உன் முன் நிற்பது தெய்வத் திருப்பணி களேயொழிய போர்க்களங்கள் அல்ல'' என்று அவர் கூறினாரே!

அவர் கூறியதை இராஜாதித்தன் ஆமோதிக்காமல் சந்தேகக் [illegible] பார்த்தபோது, ''ஆமாம், தெரிகிறது. நீ இலேசில் [illegible] குணம் படைத்தவன் அல்லன். ஆனால், [illegible]தா, நேற்று நான் நடத்திய விசேட பூஜையின் போது, [illegible] முன் தோன்றியவற்றைக் கூறுகிறேன் கேள். [illegible]ய பாட்டனார் ஆதித்த சோழர் மாபெரும் வீரர்; [illegible]. அவருடைய பெருமை எதனால் இன்றும் நிலவுகிறது [illegible]? காவிரி ஆற்றின் இரு கரைகளிலும் அவர் பல சிவன் கோயில்களைப் புதுப்பித்துக் கற்றளியாக ஆக்கியமையால் [illegible]. அவர் உன்னை ஆர்வத்துடன் கைகொடுத்துப் பல கோயிலுக்கு அழைத்துச் சென்றதைக் கண்டேன். இது எதைக் [illegible]றிகிறது? பாட்டனாரைப் போன்று சிவ பக்தனாக கோயில்கள் [illegible]டும் தர்மசீலனாக நீ ஆக வேண்டும் என்பதையன்றோ?' என்றார்.

இதற்கு இராஜாதித்தன் என்ன மறுமொழி கூறுவான்? ஆதித்த சோழரைப் போல் தானும் பெயரும் புகழும் பெற வேண்டும் என்பது அவன் இலட்சியம். அது எப்படிப் பண்டிதருக்குத் தெரிந்தது? அதனால் பண்டிதருக்கு வருங்கால உணர்வு உண்டு என்றும், பூஜையின் போது பகவதி தேவி கூறுவது உண்மை என்றும்தான் தோன்றுகிறது. அப்படியென்றால், போர்க்களத்தில் அடியெடுத்து வைக்காமல் கோயில் திருப்பணிகளில் காலம் கழிக்க வேண்டும் என்றால், பாண்டிய மகுடத்தைப் பெறுவது, வீரமாதேவிக்கு மறுவாழ்வு அளிப்பது எல்லாம் நடவாது போய் விடுமா?

''உன்னுடைய மௌனம் எனக்கு எதையும் புரியவைக்க வில்லையே அண்ணா!'' என்று கண்டராதித்தான் கேட்டான்.

''எனக்கே ஏதும் புரியவில்லை. என் மனம் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கிறது. அமைதியாக நான் இன்று யோசித்துத்தான் ஒரு முடிவுக்கு வரவேண்டும்'' என்றான் இராஜாதித்தன்.

''சிதம்பரத்திற்குச் செல்ல வேண்டும்; அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசரிடம் சொல்லிச் செய்ய வேண்டும் என்று பண்டிதர் கூறினாரே?'' என்றான் கண்டராதித்தன்.

''மன்னரிடம் சென்று நீயே கேட்டு புறப்படும் நாளை முடிவு செய்துவிடு'' என்றான் இராஜாதித்தன்.

⁂ ⁂ ⁂

இராஜாதித்தன் மாறன் பரமேச்வரனைக் காணச் சென்றான். அவருடைய திறமையான மேற்பார்வையின் கீழ் சோழ நாட்டில்

ஒற்றர்படை இயங்கி வந்தது. வடக்கும் தெற்கும், கிழக்கும், மேற்குமாக ஒற்றர்கள் அலைந்துத் திரிந்து செய்திகளை எவ்வளவு இரகசியமாயினும் கொண்டு வந்து சேர்த்தனர்.

இராஜாதித்தனை வரவேற்ற மாறன் பரமேசுவரன், ''வருக, வருக, இளவரசே! பண்டிதர் குடிலிலிருந்து நேரே வருகிறீர்களா அல்லது...?'' என்று கேட்டார்.

தான் பண்டிதரைக் கண்டு வருவதை அதற்குள் தெரிந்து வைத்துக் கொண்டிருந்த பரமேசுவரனின் விழிப்புணர்ச்சியைப் பாராட்டி, ''நல்ல வேளை, ஒற்றர் படையாவது, சுறுசுறுப்புடன் இயங்குகிறதே! அதற்கும் பகவதியின் அருளைப் பெற்று, இயங்கக் கூடாது என்று சிவசேகர பண்டிதர் சொல்லி விடுவாரோ என்று பயமாயிருக்கிறது!'' என்றான்.

பரமேச்வரன் மெல்லச் சிரித்தான். ''பகவதி என்ன சொல்லப் போகிறாள் என்பதை முன்பாகவே அறிந்து விடுவோமே நாங்கள்! அதனால் பண்டிதரிடம் நாம் போக மாட்டோம்'' என்றான்.

இராஜாதித்தன் சற்று மெல்லிய குரலில், ''அரசரும் நானும் அந்தத் துறவியிடம் ஈடுபாடு கொண்டிருக்கிறோம் என்பதற்காக அவரது குடிலைத் தங்கள் பார்வையினின்று விட்டு விடாதீர்கள்'' என்று கூறினான்.

''வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் பார்த்து ஒற்றர் படை இயங்கினால் என்ன ஆவது? சிவசேகர பண்டிதர் தஞ்சைக்கு வரப்போகிறார் என்பதை அறிந்தவுடனேயே அவருடன் நிழல்போல் நிற்கத் தக்கவரை நியமித்துவிட்டேன். பண்டிதர் பெரும் அறிவாளி. ஞான திருஷ்டியுடன் நொடியில் நடப்பதை அறிந்து கொள்ளும் புத்திசாலியான சீடர்களையும் கொண்டிருக்கிறார்'' என்றார்.

பரமேச்வரனின் திறமையைக் கண்டு வியந்த இராஜாதித்தன், ''பிறகு ஏதாவது முக்கிய செய்தி உண்டா? மானியகேடத்தினின்று செய்தி வந்ததா?'' என்று கேட்டான்.

''அதைத்தான் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் விரைவாக நமக்குத் தகவல்கள் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில்தான் இப்போது கவனம் செலுத்தி வருகிறேன். திருக்கோவிலூரிலிருந்தும், கங்கபாடியினின்றும் முக்கியமான செய்தி வரவேண்டும்'' என்று கூறிச் சற்று நிறுத்திய பரமேச்வரன், ''இளவரசே! ஒரு முக்கியமான காரியம் மிக அவசரமாகச் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்குத் தங்கள் அனுமதி தேவை'' என்றான்.

இராஜாதித்தன் நகைத்து, ''என் அனுமதியா! தங்களுக்குத் தக்கது என்று தோன்றுவதைச் செய்ய அனுமதி எதற்கு?'' என்றான்.

''இல்லை, அனுமதியுடன் தங்கள் யோசனையும் வேண்டும். நாம் இருவரைத் தவிர மற்றவர்கள் அறியக் கூடாது'' என்று பரமேச்வரன் கூறி இராஜாதித்தனுக்கு மட்டும் கேட்கும் குரலில், ''தங்கள் சகோதரர் உத்தமசீலியை கங்கபாடிக்கு அனுப்ப வேண்டும் என்று அரசர் திட்டமிட்டுள்ளார். அதைத் தடுப்பது ஒன்று, மற்றொன்று...'' என்று நிறுத்தினான் பரமேச்வரன். பிறகு இராஜாதித்தனை நெருங்கி, அவன் காதோடு காதாக சில யோசனைகளைக் கூறினான்.

ஒரு கணம் இராஜாதித்தன் திகைத்தான். பிறகு ஏதும் கூறவில்லை. பரமேச்வரன் கேட்டதைக் குறித்து ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். பிறகு தெளிவுபட்டவன் போல், ''ஆம், அப்படியே செய்வோம். எனக்கும் பலவிதமான உண்மைகளை அறிய வேண்டியிருக்கிறது. என்னுடைய முழு அனுமதியும் ஒத்துழைப்பும் கட்டாயம் உண்டு. அரசர் அறிந்தாலும் அவர் கோபமடையாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். உத்தமசீலியைக் கங்கபாடிக்குச் செல்ல வேண்டும் என்று நான்தான் யோசனை கூறினேன். வெள்ளங்குமரன் வந்த பிறகுதானே அனுப்பப் போகிறேன்!'' என்றான்.

பிறகு கவலை நிறைந்த குரலில், ''என்ன நேரப் போகிற தென்று என்னால் முன்கூட்டியே திட்டமிட முடியவில்லையே! எப்போதும் போர் என்றால் முன் நிற்கும் அரசரே, சூழ்நிலை காலம் என்று பார்க்கும்போது, சூழ்நிலையும் காலமும் நமக்கு விரோதமாகிவிட்டால் என்ன செய்வது என்ற கவலை எனக்கும் ஏற்படுகிறது பரமேச்வரா!'' என்றான்.

பரமேச்வரன் அமைதியான குரலில், ''கவலைப்படாதீர்கள், இளவரசே! எத்தகைய இடர் வந்தாலும், அதை நாம் வென்றுவிடுவோம் என்பது உறுதி. நான் கூறியது மட்டும் நினைவிருக்கட்டும். நான் நாளைய இரவு தங்களை வெண்ணாற்றங்கரை மாளிகையில் சந்திக்கிறேன்'' என்று கூறிப் புறப்பட்டான். பரமேச்வரனுடைய துணிவு இராஜாதித்தனுக்கு வியப்பை ஏற்படுத்தியது. துறவியைப் பற்றி அறிந்து கொள்ளப் போகிறோம் என்பதில் பரபரப்பு ஏற்பட்டது.



அத்தியாயம் 8

கதவு திறந்தது

பொழுது சாய்வதற்கு முன்பே திருவையாறு வந்தடைந்து விட்டார் குண்டலம் அசைந்தாடும் மாணிக்கப் புலவர். பொதுவாக அவர் ஐயாறு அடையும்போது ஞானசம்பந்தப் பெருமானை நினைக்காமல் இருக்க மாட்டார். ஞானசம்பந்தருடைய பாடலொன்றை, அவர் அடிக்கடி நினைவுப்படுத்திக் கொள்வார்.

''வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென் றஞ்சிச்
சில மந்தி அலமந்து மரமேறி முகில் பார்க் குந்,
திருவையாறே...''

என்ற பாடல் அவருக்கு நகைப்பை வரவழைக்கும். ''கணிகைப் பெண்கள் கூத்து வகைகளை ஆடவும், அதற்கேற்ப மத்தளங்கள் முழங்கவும், அந்த முழக்கம் கேட்டு, இடி முழக்கமோ என்று பயந்து சில குரங்குகள் மரங்களின் மேல் ஏறி ஆகாயத்தை அண்ணாந்து பார்க்குமாம்'' என்ற பொருள் பாடலுக்கு.

மாணிக்கப் புலவர், சம்பந்தப் பெருமானின் நகைச்சுவை யையும், வர்ணனைத் திறனையும் எண்ணி வியப்பார், திருவையாற்று நிகழ்ச்சிகளை வைத்துத் தாமும் அழகிய பாடல் ஒன்றை எழுத வேண்டும் என்று எண்ணுவார். சம்பந்தர் காலத்தில் நடனமாடும் கணிகையர்கள் இருந்ததுபோல் இப்போதும் அவருக்குத் தெரிந்த கணிகை மகள் காமவல்லி இருக்கிறாள். அவளையும் குரங்கையும் வைத்து எப்படி உவமைப்படுத்த முடியும்? இப்படி நினைப்பது தெரிந்தாலே முறமெடுத்துப் புடைக்க வந்துவிட மாட்டாளா? மாணிக்கப் புலவருக்கு மீண்டும் சிரிப்பு வரும். காமவல்லியிடமே அந்தப் பாடலைப் பாடிக் காட்டியிருக்கிறார். காமவல்லி மிகவும் பெருமையுடன், ''பார்த்தீர்களா, எங்கள் ஊர்ச் சிறப்பை! தஞ்சையைப் பற்றி சம்பந்தப் பெருமான் பாடியிருக்கிறாரா? எங்கள் குலத்தையும் எங்கள் கலையையும் எவ்வாறு புகழ்ந்து பாடியுள்ளார் பார்த்தீர்களா? எங்கள் முப்பாட்டிக்குப் பாட்டி காலத்தில், சம்பந்தர் இங்கு வந்திருக்கிறார். திருநாவுக்கரசர் இங்கு வந்திருக்கிறார்.

இந்த நகரத்தைத் தெய்வத் தமிழில் அவர் பாராட்டியதைப்போல் இனி ஈரேழு ஜன்மங்களிலும் யாரால் பாராட்ட முடியும்? நறுமணங் கமழும் கொன்றை மாலையைத் தலையில் சூடிய சிவபெருமான் அன்புடன் வீற்றிருக்கும் இந்தத் தலத்தின் அழகு மிக்க வீதிகளிலே மேடை அமைத்துச் சில பெண்கள் 'தோம்-தாம்' என்று நடனம் செய்யும் சிறப்பு வாய்ந்த நகரமாக்கும் இந்த திருவையாறு!'' என்று உடனே மாணிக்கப்புலவருக்குச் சரி சமமாகத் தான் அறிந்த புலமையை உகுப்பாள் காமவல்லி.

மாணிக்கப் புலவருக்கு வியப்பு கட்டிலடங்காது. தன்னால் தமிழ் அறிவும் புலமையும் அறிந்து கொண்ட காமவல்லி தனக்குத் தெரியாத பாடலையும் கூறுகிறாளே என்று ஆனந்தப்படுவார்.

ஒரு காலத்தில் காமவல்லிக்கும் மாணிக்கப் புலவருக்கும் நெருங்கிய நட்பு இருந்தது. அவருக்குத் திருமண வேலி ஏற்பட்ட பிறகு, அவளை அதிகம் சந்திக்க முடியாமல் போய்விட்டது. ஆனால் அவள் அவ்வப்போது செய்தி சொல்லியனுப்புவாள். நடன அரங்கேற்றத்துக்கு வேண்டிய பாடல்கள் சிலவற்றை அவரிடம் கேட்பதற்காக அவள் அவரை வரவழைப்பாள். அவளுக்காக அவர் எழுதிய சிருங்காரப் பாடல்கள் பல. அந்தரங்கமாக அவற்றைப் பாட, அவள் ஆனந்தமாக அனுபவித்து மகிழ்ந்த காலம் இப்போது பொய்யாய், பழங் கதையாய்ப் போய்விட்டது. வீட்டிலே மனைவி கமலத்தாச்சியின் ஆதிக்கம், சோழ மன்னரின் ஏக சக்கராதிபத்தியத்தையும் மிஞ்சிவிட்டது. குறிப்பிட்ட நேரம், வேலை என்றெல்லாம் இல்லாள் பாகுபாடு செய்துவிட்டாள். கண்டிப்பு உண்டு.

இப்பொழுதுகூட அவர் திருவையாறு சென்று, இரவு உணவுக்கு வீடு திரும்பி ஆகவேண்டும். பகலிலேயே அவர் சென்றிருக்கலாம். ஆனால், சிவசேகர பண்டிதரின் சீடர்களுடன் அவர் பழக ஆரம்பித்த பிறகு, அவர்கள் அவரை எளிதில் விடுவதில்லை. மாணிக்கப் புலவர் அவர்களிடமிருந்து தமிழ் கற்க வந்தது போக, அந்தச் சீடர்கள் மாணிக்கப் புலவர் அறிந்திருந்த விசேடப் புலமை ஒன்றைக் கண்டுபிடித்து தங்களுக்கும் அதை வழங்குமாறு வற்புறுத்தத் தொடங்கினர். மாணிக்கப் புலவர் விசேடமாக அறிந்திருந்தது சிருங்காரப் பாடல்கள். அவரே சொந்தமாக ஏராளமாக இயற்றியிருந்தார்.

சிவசேகர பண்டிதரின் சீடர்கள், பேரின்ப நிலைக்கு வழி காட்டும் துறவி ஒருவரின் சீடர்கள். இவ்வாறு சிற்றின்ப இலக்கியத்தில் ஈடுபடுவது புலவருக்கு முதலில் வியப்பை அளித்தது. ஆனால், தன்னைவிட வயதில் மிக இளையவர்களான

அவர்களது கோரிக்கையை நிறைவேற்றினால் சில ஆதாயங்கள் தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர் அவர்களின் வேண்டுகோளுக்கு இசைந்தார். பாடல்கள் யாவும் சரியாக நினைவுக்கு வரவில்லை. பாடல் எடுகள் காமவல்லி வீட்டுப் பரண்மேல் இருந்தன. அவற்றைக் கொண்டு வருவதற்காகத்தான் அவர் திருவையாறு வந்து சேர்ந்தார்.

காமவல்லியின் வீட்டு நிலைப்படிக்கருகே உள்ளமாடத்தில் அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அந்த வீதியிலே அது சற்று உயர்ந்த வீடு. மாடவீடு; விசாலமான திண்ணைகளை உடைய வீடு. திண்ணையில் உள்ள மரத்தூண்களின் முகப்பில் சித்திர வேலைப்பாடுகள் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் திகழ்ந்தன. புதுச்சுண்ணம் அடிக்கப்பட்ட பொலிவுடன் திகழ்ந்தன. வாயிலில் பூவரசம் மரம் ஒன்று, அதை ஒட்டிச்சிறு மல்லிகைப் பந்தல், அதில் ஏழெட்டு மல்லிகை மலர்கள் மணம் வீசிச்சிரித்தன. திண்ணையிலும், இடது பக்கத்து அறையிலும் இருந்த சாளரக் கதவுகள் மூடப்பட்டிருந்தன. வாயிற் கதவு தாளிடப்பட்டிருந்தது.

மாணிக்கப் புலவர் கதவைத் தட்டினார். ''யாரது?'' என்ற முதிய குரல் கேட்டது.

''நான்தான்'' என்று குரல் கொடுத்தார் மாணிக்கம். குரலிலிருந்தே அவரை அடையாளம் கண்டுவிட்டனர் போலும். தாழ்ப்பாள் நீக்கும் ஒலியும், கதவு திறக்கும் கிரீச் ஒலியும் கேட்டன.

இடைக்கழி சற்று இருள் நிறைந்திருந்தாலும், முதல் கட்டைத் தாண்டி இரண்டாவது கட்டில் விசாலமான கூடமும் முற்றமும் ஒளிவீசும் விளக்குகள் நிறைந்து பொலிவுடன் விளங்கின. முற்றத்தின் மீது மேல் மாடத்தினின்று காணுவதற்கு வசதியாகச் சாளரங்கள் இருந்தன. காற்றும் அவ்வழியே வந்து கொண்டிருந்தது.

முற்றத்துத் தரை பளிங்குக் கற்களால் ஆனது போல் பளபளவென மின்னியது. வண்ணச் சீலைகள் அங்கும் இங்கும் அசைந்தாடின.

கூடத்தில் பஞ்சணை மெத்தைகளும் சாய்மானத் திண்டுகளும் போடப்பட்டிருந்தன. உயர்தரமான தேக்குமர முக்காலிகளில் விசித்திரமான கலன்களில் கனி வகைகள் வைக்கப்பட்டிருந்தன. பலவித வண்ணச் சித்திரங்கள் திரைச்சீலையில் எழுதப் பட்டிருந்தன. கூடத்து இருபுறமும் விசாலமான அறைகள், ஓவிய வேலைப்பாடுகள் மிகுந்த கதவுகளால் தடுக்கப்பட்டுத்

சூழ்ந்தன. இப்போது நமக்கும் அங்கே வேலையில்லாததால், அதிக சோபையுடன் திகழும் கூடத்திலும் முற்றத்துடனும் நின்று கொள்வோம்.

ஃ ஃ ஃ

மாணிக்கப் புலவரை எதிர் கொண்டழைக்கக் காமவல்லியே வந்துவிட்டாள். ஆண்டுதோறும் அறுவகைப் பருவங்கள் பல பல வந்து சென்றாலும், அவளுடைய தோற்றத்தில் மட்டும் மாறுதலை ஏற்படுத்த அவற்றால் இயலவில்லை என்பது இயற்கையை வென்ற செயற்கையாலா, அல்லது இயற்கையின் அதி வலிமையாலா என்பது தெரியவில்லை.

மாநிற மேனி. அகன்ற நெற்றியில் வட்ட வடிவமான குங்குமப் பொட்டு, கழுத்திலும், கரங்களிலும், இடையிலும் கால்களிலும் போட்டி போட்டு அலங்கரிக்கும் ஆபரணங்கள், கூறை நாட்டு வெண்பட்டுச் சேலை அவளது அழகை மேலும் அதிகப்படுத்த முயன்றது. வயது அவளது நடைக்குத் தடையாயில்லை; ஒயிலுக்கு எதிராயில்லை; நளினத்திற்கு விரோதமாயில்லை; முகத்தில் கணத்திற்குக் கணம் தோன்றும் குறிப்புகளும் பாதகமாயில்லை. அந்தச் சிரிப்பிலே தனிக் கவர்ச்சி; பேசும்போது சுழலும் விழிகள் எதிராளியை அடிமைப்படுத்தவே படைக்கப்பட்டவை போல் தோன்றின.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு காமவல்லியின் கணைகளின் வலிமையை எவ்வாறு தாங்க முடியாது குண்டலப் புலவர் தவித்தாரோ, இன்று அதற்கு எந்த விதத்திலும் குறைவில்லாமல் தடுமாறினார்.

''வாரும், வாரும் புலவரே! வழி அறிந்தீரோ?'' என்று கலகலப்புச் சிரிப்பினால் அவள் வரவேற்றபோது புலவர் தூணைப் பிடித்துக் கொண்டது தடுமாற்றத்தாலா?

அங்கே அவர் பொழுதைக் கேளிக்கையில் கழிக்க வரவில்லை. வந்த காரியத்தைத் தெரிவித்து விரைவில் அங்கிருந்து புறப்பட்டுவிடத் திட்டமிட்டார்.

தான் வந்த காரியத்தைச் சுற்றி வளைக்காமல் கூறினார் மாணிக்கப் புலவர். இவ்வளவு வயதுக்கு மேல் சிருங்கார இலக்கியங்கள் மீது நாட்டம் செல்வதைக் கண்டு காமவல்லி தன்னைத் தவறாக எண்ணிவிடப் போகிறாளோ என்பதற்காக, தஞ்சையில் வந்து தங்கியிருக்கும் சிவசேகர பண்டிதரைப் பற்றியும், அவரது சீடர்களின் தமிழ்ப் புலமையைக் கண்டு வியந்து, தான் அவரது குடிலை அடைந்து பழக ஆரம்பித்ததையும்

ஒன்று விடாமல் கூறிவந்து, சீடர்களில் இளம் பிராயத்தினரின் ஆசையை நிறைவேற்றத்தான் புறப்பட்டு வந்ததையும் கூறினார்.

காமவல்லி வியப்புடன் தான் சொல்வதைக் கேட்பாள் என்று எண்ணிய அவர் ஏமாந்தார். தனக்கு முன்பே எல்லாம் தெரியும் என்பதுபோல், ஒன்றுமே பேசாமல், அவரை உள்ளே நடுக்கூடத்தில் உள்ள பரண் இருக்குமிடத்திற்கு அழைத்துச் சென்றாள். ஏணி ஒன்று கொண்டுவரப்பட்டது. தன் உடலைத் தூக்க முடியாமல் சுமந்து ஒவ்வொரு படியிலும் மிகவும் கவனமாகக் கால் வைத்து ஏறினார் புலவர்.

மீண்டும் வாயிற் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டது. கீழே நின்றிருந்த காமவல்லி பரபரப்படைந்தாள். மேலே இருந்து எட்டிப் பார்த்த மாணிக்கப் புலவரைச் சைகை செய்து அங்கேயே இருக்குமாறு கூறி ஏணியை அங்கிருந்து அகற்றிவிட்டு வாயிற் கதவைத் திறக்குமாறு தாதியை ஏவினாள்.

உள்ளே ஏறுநடை போட்டவாறு கட்டிளங் காளை, உத்தமசீலி என்றழைக்கப்படும் பராந்தக சோழ தேவரின் கடைசிக் குமாரன் வந்து கொண்டிருந்தான். அவனை அந்த நேரத்தில் காமவல்லி எதிர்பார்க்கவில்லை போலும். கூடிய வரையில் இளவரசன் உத்தமசீலி அங்கே வருவதை மெல்லத் தடுத்துக் கட்டுப்படுத்துமாறு தஞ்சை மாளிகை மெய்க்காவல் படைத் தலைவரின் கோரிக்கையும் அவளுக்கு வந்திருந்தது.

அரச குடும்பத்தவர்கள் பலர் வந்து செல்லும் அந்த இல்லத்தில் உத்தமசீலிதான் வயதில் இளைஞன். இசைக் கலையிலும் நாட்டியத்திலும் ரசனை மிகுந்த அவன் வருகையைக் காமவல்லி முதலில் வரவேற்றாள். பிறகு அவனைத் தடுப்பது என்பது இயலாத காரியம் என்று தோன்றிவிட்டது. மிகவும் சாமர்த்தியமாக, அவன் வருகையை அரசர் விரும்பவில்லை என்பதையும் சொல்லிப் பார்த்தாள். பயன் இல்லை. அந்த இல்லத்தில் இருக்கும் இரு இளங்கொடிகளான குஞ்சரியும், வண்டார் குழலியும் அவனைக் காந்தம்போல் இழுப்பதைக் காமவல்லி அறிவாள். அவர்கள் இருவரும் இல்லாவிடில் அவன் வரமாட்டான். அவனைத் தடுப்பதற்காக அவர்கள் இருவரையும் இழக்க அவள் சித்தமாயில்லை.

இளவரசனின் குதிரை வெளியே கனைக்கும் சப்தம் பரண்மேல் இருந்த புலவருக்குத் தெளிவாகக் கேட்டது.

மிடுக்குடன் நடந்து கம்பீரமாக திண்டில் சாய்ந்து கொண்டே உத்தமசீலியைப் பரண் மேலிருந்து பார்த்த புலவர் திடுக்கிட்டார். பராந்தக சோழரின் கடைக்குட்டிப் புதல்வனின் போக்கு அவருக்கு

வருத்தத்தை அளித்தது. மற்ற மூன்று சகோதரர்களுக்கில்லாத குணம் இவனுக்கு எப்படி வந்தது என்று கவலையடைந்தார். அவன் வருவது தெரிந்து தானே ஏணியை அப்புறப்படுத்தி விட்டாள் காமவல்லி என்று எண்ணினார்.

மணம் வீசும் புகை அங்கே பரவியது. எங்கிருந்தோ வீணையின் மெல்லிய நாதம் காற்றில் மிதந்து வந்தது. சதங்கை ஒலி விட்டு விட்டு ஒலித்தது. யாரோ அடுத்த கூடத்தில் நடமாடுவது போன்ற ஓசையெழுந்தது. மெல்லிய புன்சிரிப்பும் இடையிடையே நாணயத்தை நழுவ விட்டது போன்று கேட்டது.

காமவல்லி தூணோடு ஒட்டி நின்றாள், இளவரசர் என்ன சொல்வாரோ என்று எதிர்பார்த்து.

உத்தமசீலி சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, ''காமவல்லி நான் திடீரென்று இங்கு வந்தது உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?'' என்று கேட்டான்.

காமவல்லி ஏதும் மறுமொழி கூறாமல் மௌனமாக நின்றாள். பரண்மேல் புலவர் இருக்கிறார் என்பதாலோ என்னவோ அவள் ஏதும் பேசவில்லை. பொதுவாக மலர் அம்பினைப் போல் அவளுடைய சொல்லம்பும் வேகமாக வந்து வீழ்ந்திருக்கும்.

உத்தமசீலி திடீரென இருப்பிடத்தை விட்டுத் துள்ளி எழுந்தவனாக, ''என்ன, உன் முகத்தில் நான் வாட்டங் காண்கிறேன்! இன்று இந்த வீடே களையிழந்தது போல் தோன்றுகிறது. மத்தள சப்தம் கேட்கவில்லை. நூபுர ஓசை எங்கே? வளை குலுங்கும் வனிதையின் முகங்களைக் காட்டாது மறைத்து வைத்திருக்கிறாயா? இன்னும் ஓரிரு நாட்களில் எனக்கு வெளிநாட்டுப் பயணம் ஏற்பட்டுவிடும். அரசர், எந்த நொடியும் கட்டளையிடுவார். யுத்த மேகம் திரண்டு வருகிறதாம், காமவல்லி, மேக மண்டலத்தின் உற்பத்தி ஸ்தானத்திற்கே சென்று தாக்க வேண்டும் என்று என் பெரிய சகோதரர் கட்டளையிட்டிருக்கிறார். அவர் புறப்படுகிறார். புறப்படுமுன்பு இங்கே கலை விருந்துண்ண வந்தேன். களையிழந்து காணப்படுகிறீர்களே!'' என்றான்.

இளம் வயது வாலிப மிடுக்குடன் பேச்சு இருந்தாலும், அதில் பெண்களிடம் பேசும்போது ஏற்படும் குழைவும் இருந்தது.

காமவல்லி தூணின் அருகே நின்றவள் உத்தமசீலியின் அருகே முகமலர்ச்சியுடன் வந்தாள். அவள் பார்வையும் முகத்தில் வரவழைத்துக் கொண்ட மகிழ்ச்சியும் உத்தமசீலிக்குத் தெம்பளித்தன.

''உன் வளர்ப்புப் புதல்விகள் எங்கே? பெண் வாடையே அற்ற வீடாக இன்று காட்சியளிக்கிறதே! கோயிலுக்குச்

சென்றிருக்கிறார்களா?'' என்று கேட்டுச் சுற்றும் முற்றும் பார்த்தான். மேலே நோக்கினான். குண்டலப் புலவர் அவன் கண்களில் பட்டுவிடுவாரோ என்று காமவல்லி பயந்தாள். அதனால் அவன் கவனத்தைத் திருப்புவதற்காக, ''அடுத்த கூடத்தில் குஞ்சரியும், குழலியும் இருக்கிறார்கள். சிலம்பொலி கேட்கவில்லையா? தங்களைத் தவிர அவர்கள் வேறு ஆடவர் எதிரே வருவதுகூடக் கிடையாது!'' என்று குழைந்தாள் காமவல்லி.

உத்தமசீலியின் உற்சாகம் அதிகமாகியது. அவன் பெருமூச்சு விட்டவாறு மீண்டும் திண்டில் சாய்ந்து கொண்டான்.

பரண்மேல் இருந்த புலவருக்கு அங்கே இருப்புக் கொள்ளவில்லை. நேரமாகிக் கொண்டே இருக்கிறது. ''சுவடிகளை எடுத்துக்கொண்டு நம் வேலையைப் பார்க்கச் செல்வோம் என்றால் நந்திபோல் குறுக்கே நிற்க வந்துவிட்டானே இந்த நம்பி?'' என்று வேதனைப்பட்டார். 'கணிகையின் வீடே கதி என்று இருக்கும் நிலையை இவ்வளவு இளம் வயதிலேயே அடைந்து விட்டானே. இவன் நிலையை மன்னர் பராந்தகர் அறிந்தால் இவன்கதி என்ன ஆகுமோ?'' என்று கவலையும் கொண்டார்.

''குஞ்சரியும் குழலியும் எங்கே? அவர்களைக் கூப்பிடேன். புதிதாகக் கற்றுக்கொண்ட நடனம் ஏதாவது ஆடட்டுமே. நான் செல்லப்போகும் இடத்தில் கலை வாசனையே கிடையாது'' என்றான் உத்தமசீலி.

''எங்கே செல்லப் போகிறீர்கள் எங்களை விட்டுவிட்டு? வடக்கே ரொம்ப தொலைவோ?'' என்று காமவல்லி கேட்டாள்.

ராஜாங்க விஷயங்களைப் பொதுவாகக் காமவல்லி காதில் போட்டுக்கொள்ள மாட்டாள். ஆனால், இன்று வழக்கத்திற்கு விரோதமாகக் கேட்கிறாளே என்ன காரணமோ என்று மாணிக்கப்புலவர் யோசித்தார்.

காம வசத்தில் ஆட்பட்டாலும் அரசாங்க இரகசியங்களை எளிதில் விடுபடாத திடத்தன்மை உத்தமசீலியிடம் இருந்தது.

''வடக்கோ தெற்கோ எங்கோ செல்லப் போகிறேன். என்னுடன் குழலியையாவது குஞ்சரியையாவது அனுப்பு கிறாயா?'' என்று குழந்தை போன்று கேட்டான் உத்தமசீலி.

குழலியும் குஞ்சரியும் பாத சதங்கை ஒலிக்க அவன் எதிரே வந்து வணங்கி நின்றனர். பரண்மேல் இருந்த புலவர் உடல் ஒரு முறை சிலிர்த்தது. அந்தக் காலத்தில் காமவல்லிக்கு இவ்வளவு நாகரிகம் தெரியவில்லை. உடையிலும் ஆபரணங்களிலும்

இரு மங்கையரும் உள்ளத்தைக் கிள்ளும் வகையில் விளங்குகிறார்கள். சித்திரம் உயிர் பெற்று வந்துவிட்டதா? பூமாலையில் மலர்களைச் சுற்றும் வண்டினம் முக மலரைத் தேடிக் கண்களாக வந்து அமைந்துவிட்ட னவா? மார்பகத்திலே செவ்விளநீர் இரண்டு தங்கி விட்டனவா? மூங்கில்கள் தோள்களாயினவா? இடையில்லையோ இவர்களுக்கு? தாமரை மொட்டுகள் பாதங்களாயினவா?

''இவர்கள் இருவரில் தாங்கள் யாரை அழைத்துச் செல்கிறீர்கள்?'' என்று காமவல்லி கேட்கும்போது அவள் முகத்தில் குறும்புத்தனம் மிளிர்ந்தது.

உத்தமசீலி துடித்தான். அடடா யாரைச் சொல்வது? குஞ்சரியும், குழலியும் ஒருவரையொருவர் போட்டிப் போட்டுக் கொண்டு எழிலுடன் மிளிர்ந்தார்கள்.

''தாங்கள் செல்வது எந்த இடமோ? வசதி எப்படியோ, இளவரசர் என்ற முறையில் செல்கிறீர்களா அல்லது படைகளுக்குத் தலைமை தாங்கிச் செல்கிறீர்களா? மறைந்திருந்து வாழ்வீர்களா? அல்லது மகத்தான உபசாரம் பெற்று மாளிகையில் வாழ்வீர்களா? மலை நாடோ, பாலைப் பகுதியோ? குஞ்சரிக்கு முன்கோபம் அதிகம். ஆனால் எத்தகைய துன்பமும் தாங்குவாள் மையில் என்றால் துவண்டு விடுவாள் குழலி. யாரைத் தேர்ந்தெடுக்கிறீர்கள்?'' என்றாள் காமவல்லி.

பிறகு, ''யாரை அழைத்தாலும் சக்கரவர்த்திகள் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் இருவரும், நடனமாடிப் பரிசுகள் பெற்ற பிறகுதான் வருவார்கள்...'' என்று கூறினாள்.

உத்தமசீலியின் முகம் கறுத்தது. ''நான் இரு தினங்களில் புறப்படப் போகிறேனே'' என்று கூறியபோது அவன் குரல் தழுதழுத்தது.

''அதனாலென்ன, விழா முடிந்தவுடன் தக்க துணையுடன் குஞ்சரியை அனுப்புகிறேன். தாங்கள் செல்லும் இடம் சொல்லுங்கள்'' என்று காமவல்லி கேட்டவுடன் உத்தமசீலியின் முகம் மலர்ந்தது.

''ஆகா, அனுப்புவாயா? நிச்சயம்தானா? நான் கங்கபாடிக்குச் செல்கிறேன். துணை கூட்டி அங்கே வரச் செய்வாயா!'' என்று ஆவலுடன் கேட்டான்.

பரண் மேலிருந்த மாணிக்கப் புலவர், காமவல்லி மிகவும் சாமர்த்தியமாக இளவரசன் செல்லுமிடத்தை அறிந்து கொண்டதைக் கண்டு வியநதார்.

''குழலி, குஞ்சரி! நேற்றுப் பழகினீர்களே காந்தாரப் பண்ணிலே பாடலுக்கு ஏற்ற பரதம், அதை இளவரசருக்கு ஆடிக் காட்டுங்கள்'' என்று காமவல்லி கட்டளையிட்டாள். இருவரும் நடனமாடத் தங்களைச் சரிசெய்து கொண்டபோது, மீண்டும் வாயிற்கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

''யாராயிருந்தாலும் திண்ணையிலேயே உட்கார்ந்திருக்குமாறு சொல்!'' என்று தாதியிடம் கூறினாலும், காமவல்லியின் உள்ளத்தில் கவலை இல்லாமலில்லை, யார் வந்துள்ளார்களோ என்று.

கதவைத் திறந்து வந்தவரை அறிந்த தாதியும் பரபரப்புடன் ஓடிவந்து காமவல்லியின் செவியில் கிசுகிசுத்தாள். காமவல்லியின் முகம் மாறியது. உத்தமசீலியின் அருகே சென்று, ''வாயிலில் மன்னரது அந்தரங்கத் தூதுவர் வந்து நிற்கிறார்'' என்று கூறவும், உத்தமசீலி திடுக்கிட்டெழுந்து, இப்படியும் அப்படியுமாக அலைந்து எங்கே சென்று மறைந்து கொள்வது என்று திகைக்க, காமவல்லி அவனுக்குப் பின்கட்டிலுள்ள ஓர் அறையைச் சுட்டிக்காட்டினாள்.

பராந்தக சோழ வேந்தரது மெய்க்காவல் படையைச் சேர்ந்தவர் என்று கூறிக்கொண்டு புலி இலச்சினையை விரலில் அணிந்திருந்தவர் மிகவும் மரியாதையுடன் காமவல்லியிடம் செய்தி ஒன்றைக் கூறினார். அவரை இது வரையில் காமவல்லி பார்த்ததில்லை.

''இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகும் என் நினைவு மன்னருக்கு இருக்கிறதா!'' என்று கேட்டாள் காமவல்லி.

''ஆகா! மன்னர் யாரையும் மறப்பதில்லை; செய்த உதவியையும் மறப்பதில்லை. அதனால்தான் தங்களை இன்று வெண்ணாற்றங்கரை மாளிகையில் வந்து சந்திக்குமாறு கூறியுள்ளார்'' என்றார் மெய்க்காவலர்.

காமவல்லியின் உடலில் பரபரப்பு ஏற்பட்டது. ''என்னையா?'' என்று வியப்புடன் கேட்டாள்.

''ஆமாம், மிகவும் முக்கியமான காரியம், தவறாமல் வந்துவிடுங்கள். செய்தியும் மிகவும் இரகசியமாக இருக்க வேண்டும்'' என்று கூறினார் தூதுவர். அவரது கூர்மையான விழிகள் நான்குபுறமும் வட்டமிட்டன.

அரச தூதுவர் வந்து சென்ற பிறகு அந்த இல்லத்திலிருந்த மூவர் உள்ளங்களிலும் மூன்று விதமான கவலைகள் எழுந்தன.



அத்தியாயம் 9

இருளில் ஒரு பெண்

உத்தமசீலியை அந்த வீட்டின் கடைசிக் கட்டில் உள்ள அறைக்குள் செல்லச் சொல்லிவிட்டு, வெளியே கதவைத் தாளிட்டுச் சென்றாள் காமவல்லி. அந்த அறையில் இருள் நிறைந்திருந்தது. ஆனால் பாழடைந்திருக்கவில்லை.

கவனிப்பாரற்ற, உபயோகமற்ற அறை அன்று. எனினும், உத்தமசீலியின் மனத்தில் வெவ்வேறு விதமான கவலைகள் தோன்றின. தந்தையின் மெய்க்காவல் படையைச் சேர்ந்தவர் செய்தி ஒன்றைக் கொண்டு வந்து இருக்கிறார் என்று கேள்விப்பட்டவுடனே அவனுக்குப் பயமேற்பட்டது.

பராந்தக சோழ தேவர் மிகவும் உறுதியானவர். திருவையாறு பக்கம் செல்லவே கூடாது என்று அவர் அவனுக்குக் கண்டிப்பான உத்தரவிட்டிருந்தார். குமரப்பருவத்தில் இப்படியொரு சபலம் ஏற்படும் என்பது அவருக்குத் தெரிந்திருந்தாலும், அரச குமாரனுக்குரிய இலட்சணங்களில் இளம் வயதில் கட்டிக் காக்க வேண்டியவற்றுள் ஒழுக்கம் மிக முக்கியம் என்பதும் அவர் கருத்து. இராஜாதித்தனுக்குத் திருமணம் செய்த பிறகு, முறையே கண்டராதித்தன், அரிஞ்சயன் இவர்களுக்கெல்லாம் திருமணமான பிறகுதான் உத்தமசீலிக்குத் திருமணமாக வேண்டும்.

பருவத் துடிப்பினால் சற்று அவன் முறை தவறி வழி பிசகி நடக்க முயன்றாலும் திருமண வேலியைப் போட்டுத் தடுத்துவிடலாம் என்று எண்ணினார். சகோதரர்கள் மூவருக்கும் திருமணம் செய்த பிறகன்றோ உத்தமசீலிக்குச் செய்ய வேண்டும்? மேலும் சோழ அரசத் தகுதிக்குத் தகுந்த இடத்திலிருந்து பெண் வர வேண்டும். அதனால் உத்தமசீலியின் திருமணம் பல ஆண்டுகளுக்குத் தடைபட்டுத்தான் இருக்கும். இதற்கிடையில் ஒழுக்கத்தைக் கடைபிடித்து நெறி தவறாமல் இருப்பது ஒன்றும் கடினமான செயல் அன்று என்று பராந்தக சோழர் எண்ணினார். பட்டமேறிய பிறகு அரசர்கள் பல அரசகுமாரிகளை மணப்பது

வேறு, திருமணத்திற்கு முன்பே கணிகையின் வீட்டிற்குச் செல்வது வேறு.

தன் இளைய மகன் காமவல்லியின் வீட்டிற்குச் செல்கிறான் என்பதைக் கேள்விப்பட்டவுடனே பராந்தக சோழர் அவனைக் கண்டித்தார்.

அவனைக் கண்டித்த பராந்தக சோழருக்குக் காமவல்லியின் மீது அபிமானம் உண்டு. அந்த அபிமானம் ஒன்றே தன் மகன் செல்லக்கூடாது என்ற கண்டிப்புக்குக் காரணமாக இருந்தது. தந்தையின் கண்டிப்பைச் சிரமேல் ஏற்றுக்கொண்ட உத்தமசீலியும் திருவையாற்றின் பக்கமே செல்லாமல் இருந்தான்.

பிறகு எப்படியோ வாலைக் குமரிகளான குழலியும், குஞ்சரியும் அவனைக் காந்தம் போல் இழுத்துவிட்டார்கள். அவனைக் கங்கநாடு செல்ல வேண்டுமென்று தந்தை கட்டளையிட்ட பொழுது உள்ளத்தில் எழுந்த சிறு ஆசை ஒன்று காமவல்லியின் வீட்டிற்கு அவனை அழைத்துச் சென்றது. அவன் வந்து அதிக நேரம்கூட ஆகியிருக்காது. அதற்குள் மன்னரின் மெய்க்காவல் படையைச் சேர்ந்தவர் அங்கு வந்துவிட்டார். தான் அங்கிருப்பது அவருக்குத் தெரிய நியாயமில்லை என்றாலும், வெளியே கட்டப்பட்டிருக்கும் குதிரை சொல்லிவிடுமே; காட்டிக் கொடுத்துவிடுமே! என்ன செய்வது என்று தெரியாமல் அந்த இருட்டறையில் இப்படியும் அப்படியுமாகச் சிறிது நடந்தான். அந்த அறையில் என்ன இருக்கிறதோ என்ற அச்சமும் அவனுக்கு இல்லாமலில்லை.

அவனுக்கு முன்பாக அந்த அறையில் யாரோ இருந்திருக்க வேண்டும். மூச்சுவிடும் ஒலியும் மெல்லிய முனகல் சப்தமும் கேட்டன.

''யார் அது?'' என்ற குரலும் இருளிலிருந்து எழுந்தது. திடீரென்று அந்தக் குரல் கேட்டதால் அவன் - உத்தமசீலி, இளைஞன், வீரன் என்றாலும் நடுங்கினான். யாராரோ நடந்து வரும் ஓசை கேட்டது. திடீரென்று மங்கிய வெளிச்சமும் அங்கு ஏற்பட்டது. கையிலே அகல் விளக்குடன் ஓர் உருவம் அங்கு நடந்து வந்தது. அந்த அறைக்குள் அறை ஒன்று இங்கே இருக்கிறது போலும்! உள் அறையிலிருந்து அகல் விளக்கை எடுத்துக்கொண்டு அந்த உருவம் வந்தது. ஏற்கெனவே நடுங்கிய உத்தமசீலி மூர்ச்சை அடையும் நிலைக்குக்கூட வந்துவிட்டான் என்று சொல்லலாம். அந்த உருவத்தைப் பார்க்க சக்தி இல்லாத காரணத்தாலும், அருவருப்பு ஏற்பட்டதாலும் அவன் கண்களை மூடிக் கொண்டான், பயத்துடன்.

அப்பப்பா! குஞ்சரியையும் குழலியையும் பார்த்த கண்களால் அந்த இருட்டு அறையில் குரூரமான ஓர் உருவத்தைத் தாம் பார்ப்போம் என்று அவன் நினைக்கவே இல்லை. இது என்ன சோதனையோ என்று எண்ணினான். பயமும் அருவருப்பும் ஒன்றுசேர அவன் கதவை திறந்து கொண்டு வெளியே வந்து விடவும் முயன்றான். வெளிப்பக்கம் தாழ்ப்பாள் போடப் பட்டிருந்தது. அகலை எடுத்து வந்த அந்த உருவம் உத்தமசீலியை ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்த பிறகு, அங்கிருந்த சிறு மாடத்தில் விளக்கை வைத்துவிட்டு வந்தபடியே திரும்பிச் சென்றுவிட்டது. மற்றொரு அறையின் கோடியில் சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டது அந்த உருவம்.

அது பேய் அன்று, பெண்தான்! பாதங்கள் பூமியில் படுகின்றன. தலை மயிர் விரிந்திருக்கவில்லை. ஆனால் தலையிலே கூந்தல் இல்லை. கருகி உதிர்ந்துவிட்டது போல் குச்சுக் குச்சாக, அறுவடை செய்யப்பட்ட வயல்களில் உள்ள கரம்புகளைப் போல் காட்சியளித்தது. உருவத்தின் கீழே உள்ள விழிகள் மட்டும் இப்படியும் அப்படியும் அசைந்தன. குழி விழுந்தது போல எவ்வளவு மேடு பள்ளங்கள்! பிரம்மதேவன் இப்படிக்கூட படைத்திருப்பானா? உத்தமசீலியைத் தவிர வேறு யாராவது அங்கிருந்திருந்தால் கட்டாயம் வாய்விட்டு அலறி மூர்ச்சையாகி இருப்பார்கள்.

இப்பொழுது அவனுக்கு அச்சமில்லை. ஆனால் அருவருப்பு நிறைந்திருந்தது. காமவல்லி அழகிய பெண்களைத்தான் வீட்டிலே வைத்துக் கொண்டிருக்கிறாள் என்று இதுவரை அவன் எண்ணினான். இப்படிப்பட்ட குரூரமான பிறவிகளைக்கூட அவள் சேர்த்து வைத்திருப்பது எதற்காக என்று அவனுக்குப் புரியவில்லை. அவன் தன் கரங்களால் முகத்தை மூடிக்கொண்டு கதவோரமாக நின்றிருந்தான். கதவைத் தட்டித் திறக்கச் சொல்லலாம் என்றாலோ வந்திருக்கும் காவலர் போயிருப்பாரோ மாட்டாரோ! 'இது ஏதடா தொல்லை' என்று அவன் கதவருகே நின்று கொண்டிருந்தான்.

❖ ❖ ❖

சிறிது நேரம் சென்றது. தாழ்ப்பாள் நீக்கும் ஓசை கேட்டது. காமவல்லி உள்ளே நுழைந்தாள்.

''இளவரசே! என்மீது மிகவும் கோபப்பட்டிருப்பீர்கள் இல்லையா, இளவரசே?'' என்றவாறு உள்ளே நுழைந்தாள். இருட்டிலே இளவரசர் வேதனையுடன் இருப்பார் என்ற எண்ணத்தில் வந்தவளுக்கு அந்த அறையில் மங்கலான

வெளிச்சம் இருப்பதைப் பார்த்தவுடன் 'திக்'கென்றது. தொலைவிலிருக்கும் அந்த விசித்திர உருவத்தையும் உத்தம சீலியையும் மாறிமாறிப் பார்த்தாள்.

''அவளைப் பார்த்துவிட்டீர்களா என்று கேட்கும் பாவனையில் அவனை நோக்கினாள். உத்தமசீலி அந்தப் பக்கம் திரும்புவதற்கே பிரியப்படாமல் அந்த அறையை விட்டு வெளியே செல்வதற்கு ஆயத்தமானான்.

''வந்தவர் போய் விட்டாரா?'' என்று மெல்லிய குரலில் கேட்டான். ''நான் தவறு செய்து விட்டேன். வீட்டு வாசலில் குதிரையைக் கட்டாமல் இருந்திருக்கலாம். வந்தவர் என்னைப் பற்றி கேட்டாரா?'' என்று பரபரப்புடன் உத்தமசீலி காமவல்லியிடம் கேட்டான்.

காமவல்லிக்கும் அப்பொழுது தான் நினைவுக்கு வந்தது. வெளியே கட்டப்பட்டிருக்கும் குதிரைப் பற்றி நினைத்த அவளுக்குத் திக்கென்றுதான் இருந்தது. வந்தவர் சாதாரண பேர்வழி அல்லர். அவருடைய விழிகள் ஒளிவீசும் கூர்மையுடன் இதயத்திற்குள்ளே புகுந்து பார்த்துவிடும் தன்மை வாய்ந்தவை என்பதை அவள் முதல் நோக்கிலேயே கண்டுகொண்டாள். ஒரு வினாடிகூட அவர் அங்கு தங்கவில்லை.

அவர் குதிரையைப் பார்க்காமல் போய் இருப்பாரா? உயர்ந்த ஜாதிக் குதிரையான அது உத்தமசீலியினுடையது என்பது அவருக்குத் தெரிந்திருக்காதா? அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? இளவரசரை வா வா என்று நான் அழைக்கவில்லையே! அவராக வந்தார். அவரே வேதனைப்படட்டுமே! இவ்வாறு எண்ணித் தன்னைத் தேற்றிக் கொண்டாள் காமவல்லி. ஆனால், அவள் உள்ளத்துக்குள்ளே மற்றொரு கவலை இருந்தது. வெண்ணாற்றங்கரை மாளிகைக்கு மன்னர் தன்னை எதற்காக வருமாறு அழைத்திருக்கிறார் என்பதுதான் அக்கவலை.

வெண்ணாற்றங்கரையில் கம்பீரமாகத் திகழும் மாளிகை அரசருடைய அந்தரங்க மாளிகை. அவள் பல ஆண்டுகளுக்கு முன்பு சென்றிருக்கிறாள். அவளுக்கு அது நன்றாக நினைவிருந்தது. இளம் வயது. ஆதித்தசோழர் அப்பொழுது அரியணையில் கொலு வீற்றிருந்தார். அவருடைய ஒரே புதல்வர் பராந்தகருக்குக் காளை வயது; இளவரசர் மற்றும் பல குறுநில மன்னர்கள், குறிப்பாகக் கங்க நாட்டு விக்கியண்ணன், பிருதிவீபதி, சேர நாட்டு தாணு ரவி போன்ற முக்கியமானவர்கள் அங்கே

கூடியிருந்தார்கள். அவள் அவர்கள் எதிரே நடனமாடினாள். சபையில் கூடியிருந்தவர்கள் அவள் ஆட்டத்தை ரசித்தார்கள். நடனத்துக்கு ஏற்ற அவள் உடல் வனப்பை ரசித்தார்கள். பரிசுகள் வந்து குவிந்தன.

நடனம் முடிந்ததும் எல்லோரும் அங்கிருந்துப் புறப்பட்ட பிறகு காமவல்லியும் தனது கோஷ்டியுடன் புறப்பட்டு மாளிகையின் வாயிலுக்கு வந்தபொழுது இளவரசர் பராந்தகர் அவள் எதிரே வந்தார். அவரும் அவளும் ஒரு கணம்தான் பார்த்திருப்பார்கள். அந்தப் பார்வையிலே எத்தனை எத்தனையோ பொருள்கள் பொதிந்திருந்தன.

பராந்தகர் ஒரே ஒரு வார்த்தைதான் பேசினார். ''உனது நடனம் மிகவும் நேர்த்தியாக இருந்தது'' என்று கூறிப் பளபளக்கும் வைரமாலை ஒன்றைப் பரிசாக அவள் முன் நீட்டினார். அங்கே வேறு யாரும் இல்லாதிருந்தால் அவள் கழுத்திலேகூட அவர் அதை அணிவித்திருப்பார்.

அதற்குப் பிறகு பராந்தகர் இளவரசராய் இருந்த போதே ஒரு முறை திருவையாறு வீட்டிற்கு வந்திருக்கிறார். அரசரான பிறகு ஒரு முறை அதேபோல் சிறந்த நடன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். குறிப்பிட்ட சிலருடன் அதே வெண்ணாற்றங்கரை மாளிகையில் நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது. காமவல்லி உற்சாகத்துடனும், துள்ளும் உள்ளத்துடனும் தன் திறமையையெல்லாம் காட்டி ஆடுவதற்கு ஆயத்தமாக இருந்தாள். நேரமாகிக் கொண்டே வந்தது. ஆனால் அன்று பராந்தகரால் வர முடியவில்லை. அவசரமாக அவர் போர்க்களம் செல்லும் நிமித்தம் ஏற்பட்டு விட்டது. காமவல்லிக்கு ஏமாற்றம்தான். ஆனால், வாழ்வில் ஏற்படும் ஏமாற்றங்களால் உற்சாகமிழந்து விட மாட்டாள். அவள் மறந்தேவிட்டாள். அந்த வெண்ணாற்றங் கரை மாளிகைக்கு இப்பொழுது தன்னை அழைக்கிறார்.

எத்தனையோ ஆண்டுகள் கழிந்துவிட்டன. வீதியிலே பவனி வரும்பொழுது மன்னரை அவள் பார்த்திருக்கிறாள். காலம் செய்த முதுமை அவரை ஆட்கொண்டாலும் இன்னும் அந்தக் கம்பீரம் போகவில்லை. இப்பொழுது அவர் அழைக்கிறார். எதற்காக இருக்கலாம்? சேச்சே! அவர் கூப்பிடுவது சிருங்காரத்தை ரசிப்பதற்காக இருக்காது! அவருக்கில்லாத அந்தப்புரத்துப் பெண்களா, என்னைக் கண்ணெடுத்துப் பார்க்க! ஒருவேளை அந்த நிகழ்ச்சியில் நடனம் ஆடத் தன்னை அழைத்திருக்கலாம். அதற்கும் வாய்ப்பில்லை.

ஏனெனில், இன்னும் சில தினங்களில் பிறந்த நாள் விழாவின்போது முக்கியமான புதிய பாடல்களுக்கு நடனமாடும் இளஞ்சிட்டுகளை அரங்கேற்றுவதற்கு ஏற்பாடாகி இருக்கிறது. அப்படியென்றால் எதற்காக அரசர் தன்னை அழைக்க வேண்டும்? அந்தக் கவலைதான் அவளை இப்போது உலுக்குகிறது.

∴ ∴ ∴

அவள் உள்ளத்தில் ஏற்பட்ட கவலை பெரிதாகப்பட்டது. உத்தமசீலியின் உள்ளத்தில் ஏற்பட்ட சலனம், சஞ்சலம் அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. அதனால் வெளியே கட்டப்பட்டிருக்கும் குதிரையை மெய்க்காவலர் கண்டிருப்பர் என்று உத்தமசீலி கவலை அடைந்தாலும், அவள் அதைப் பொருட்படுத்தாமல், ''எனக்குத் தெரிந்த வரையில் அவர் குதிரை நிற்பதைப் பார்த்ததாகத் தோன்றவில்லை. அப்படிப் பார்த்திருந்தாலும் உங்களுடைய குதிரைதான் இங்கு இருக்க வேண்டும் என்று அவர் எப்படி நினைக்க முடியும்?'' என்று கேட்டாள்.

அவளுடைய நல்ல சொற்கள் உத்தமசீலிக்குச் சற்றே தெம்பை ஊட்டின. அவள் அந்த அறையைவிட்டு வெளியேறு வதில் துடிப்பாக இருந்தாள். இனி, குழலி, குஞ்சரி இருவரின் நடனத்தைப் பார்த்துவிட்டுப் போக வேண்டும் என்ற ஆவல் அவனுக்கு எழுந்தது. இருட்டறையில் அந்தக் குரூரமான பெண்ணைப் பார்த்த பிறகு சற்று மன அமைதி பெறுவதற்காக அழகுடைய மங்கையின் அபிநயத்தையாவது காணலாம் என்ற ஆசை கொண்டான்.

''என்ன? நாம் போவோமா? நாட்டியத்தைக் காணலாமா?'' என்று அவன் மெல்லக் கேட்டான்.

ஆனால், காமவல்லிக்கு உத்தமசீலியை விரைவில் அங்கிருந்து அனுப்பிவிட வேண்டுமென்ற எண்ணமே ஏற்பட்டது. ஒருவேளை மீண்டும் மெய்க்காவலர் திரும்பி வந்துவிட்டால் சங்கடமாகப் போய்விடும் என்ற எண்ணத்தில் அவனை எப்படித் தட்டிக் கழிப்பது என்று யோசிக்கலானாள்.

அவன் குரூரமான அந்தப் பெண்ணைப் பார்த்திருந்தாலும், அவளைப் பற்றித் தன்னிடம் ஏதும் கேட்க விரும்பவில்லை என்பதை அறிந்து கொண்டாள். நாட்டியத்தைக் கண்டபிறகு அங்கிருந்துச் செல்ல அவன் துடிக்கிறான் என்பதை அறிந்து கொண்ட அவள் அந்த உபாயத்தையே கையாள்வதற்காக, ''இளவரசே! தங்களை இருட்டறையில் சிறிது நேரம்

வைத்ததற்காக என்னைப் பொறுத்தருள வேண்டும். இருட்டறையில்கூட மருட்சி ஏற்படும் வகையில் உங்களுக்கு புது அனுபவம் ஏற்பட்டிருக்கும் இல்லையா?''

உத்தமசீலி சற்று திரும்பி அவளை நோக்கினான். தரையில் உட்கார்ந்திருந்த அந்தப் பெண் உருவம் எழுந்திருப்பது போலவும், அவர்களை நோக்கி வருவது போலவும் தோன்றவே, அவன் அந்த அறையில் இருப்பதற்கே பிடிக்காமல் விரைந்து வெளியே வந்தான். காமவல்லியும் அவனைத் தொடர்ந்தாள். அவனைத் தொடர்ந்தவாறே அவள் கூறினாள்:

''கடவுளின் படைப்பில் நாம் ஏற்றத்தாழ்வுகளைக் காணத்தான் செய்கிறோம். அரசரையும் பார்க்கிறோம்; ஆண்டியையும் பார்க்கிறோம். தோள் வலிமை மிகுந்தவர்களையும் காண்கிறோம்; அஞ்சி நடுங்குபவரையும் பார்க்கிறோம். என்றாலும் மனத்திற்கு வேதனை ஏற்படுவதில்லை. நல்லதையே பார்க்கும் தங்கள் கண்களுக்கு இப்படி ஓர் அழகற்ற உருவத்தைக் காட்ட நேர்ந்தது எனக்கு வருத்தத்தைத்தான் அளிக்கிறது. நான் என்ன செய்வது? மெய்க்காவலர் வரவில்லையென்றால் உங்களை நான் இந்த இடத்திற்கு அனுப்பியிருக்க மாட்டேன். தாங்களும் அந்த உருவத்தைப் பார்த்து வேதனைப்பட்டிருக்க மாட்டீர்கள்'' என்றாள்.

இப்பொழுது பேசிக்கொண்டே அவர்கள் நடுக்கூடத்திற்கு வந்துவிட்டனர். இளவரசரின் உடலெல்லாம் வியர்ந்திருந்தது. வியர்வை ஆறாகப் பெருகித் தலையிலிருந்து பாதம் வழியே வழிந்து கொண்டிருந்தது. அவனை ஆசுவாசப்படுத்துவதற்காக, மஞ்சரியும், குழலியும், மயில் தோகை விசிறி கொண்டு விசிறினார்கள். பன்னீர் தெளித்தார்கள்.

சற்று நேரம் அப்படியே பேசிக் கொண்டிருந்துவிட்டு பேச்சிலேயே அவன் அங்கிருந்து எழுந்து செல்லும்படியான வழியைச் செய்துவிட வேண்டுமென்ற எண்ணத்தில், ''பிறவியிலேயே அந்தப் பெண் குரூபியாய் இருந்தாள் என்று நினைக்க வேண்டாம்'' என்று ஆரம்பித்தாள் காமவல்லி. உத்தமசீலிக்கு அந்தப் பெண்ணைப் பற்றிய பேச்சைக் கேட்பதற்கே பிடிக்கவில்லை.

இருபுறமும் மேனகையும் ரம்பையும் போல் இளம் வனிதையர்கள் இருவர் இருக்கும்பொழுது, அழகற்ற அவளைப் பற்றி எதற்காகக் காமவல்லி பேசுகிறாள் என்றுகூட அவனுக்குக் கோபமாக இருந்தது.

ஃ ஃ ஃ

அங்கு நடைபெறும் உரையாடலை அருகே அசைந்தாடிக் கொண்டிருக்கும் பெரும் திரைச்சீலையின் மறைவிலிருந்து மாணிக்கப் புலவர் கேட்டுக் கொண்டிருந்தார். மெய்க்காவலர் வந்தவுடன் உத்தமசீலி பின்கூடத்து அறைக்குச் சென்றதும், மெய்க்காவலர் அரசரின் ஓலை ஒன்றைக் கொடுத்துவிட்டுச் சென்றவுடன் பரண்மீது உட்கார்ந்திருப்பது அவருக்கு மிகவும் சங்கடமாகி விடவே, சிருங்காரம் பாடல் நிறைந்த ஓலைச் சுவடிகளைக் கையிலே எடுத்துக் கொண்டு மெல்லக் கீழே குதித்துவிட்டார். கீழே திண்டுகள் இருந்ததால் ஓசை எழவில்லை.

மீண்டும் உத்தமசீலியும் காமவல்லியும் வருவது தெரிந்ததும், அங்கிருந்த திரைக்குப் பின்னே மறைந்து கொண்டு அங்கே நடப்பதை அறிய முற்பட்டார். கடவுள், படைப்பு, அழகற்றவள், குரூபி என்றெல்லாம் பேச்சு ஏற்பட்டவுடன், அவர் கூர்மையாகக் காது கொடுத்துக் கேட்கலானார்.

''இளவரசே! தாங்கள் அந்த இருட்டறையில் பார்த்தீர்களே... அவளைப் பார்த்தவுடன் உங்களுக்கு மிகவும் வேதனையாக இருந்ததா? ஆனால் எனக்கு என்னவோ அந்த உருவத்தின் புற அழகையெல்லாம்விட அந்தக் குரூபத் தன்மையுடைய தோற்றத்தில் தான் உள நிறைவு இருக்கிறது. அந்த அம்மையைப் பார்க்கும்பொழுது, இந்த அழகு நிறைந்த மேல் தோலுக்கு உள்ளே இருக்கும் எலும்பும், நரம்புகளும், குருதியும்தான் எனக்கு நினைவு வருகின்றன.

''இந்த அழகை வளர்க்கவும் அழிக்கவும் சக்தி வாய்ந்தவையே அவைதானே! ஆனால் வெறும் எலும்புக்கூட்டைப் பார்க்கும் பொழுது நமக்கு வெறுப்பேற்படுகிறது. உண்மையில் நம்மை இயக்கும் தசைகளும் நரம்புகளும் இல்லாவிட்டால் இவ்வளவு ஆட்டபாட்டங்களும், வாழ்வில், 'நான் அழகானவள்; நீ அழகற்றவள்' என்ற மமதையும் எப்படி இருக்க முடியும்?'' என்றாள்.

உத்தமசீலிக்கு அவளுடைய அந்த வேதாந்தப் பேச்சு ஏனோ பிடிக்கவில்லை. கற்கண்டு மொழியாள் காமவல்லி விரக தாபத்தை வளர்க்கும் வார்த்தைகளைப் பேசாமல் வேதாந்தம் பேசலாமா? கண்ணை மூடிக் கொண்டாலும் கண்ணெதிரே அந்த அழகற்ற உருவத்தைக் காணும் விதத்தில் ஏன் இப்படிப் பேசுகிறாள் என்றுகூடத் தோன்றியது.

காமவல்லி அத்துடன் விடவில்லை. ''இளவரசே! அவளுக்கு அதிக வயதாகிவிடவில்லை என்று உங்களுக்குத் தெரியுமா?

[illegible]ரும் இந்த இரு மங்கையரின் வயதைவிட ஓரிரண்டுதான் [illegible]மாக இருக்கும். ஆனால், அவளைப் பார்க்கும் பொழுது [illegible] முகம் மருள்கிறது. அங்கே நீங்கள் கண்களை [illegible]கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டீர்கள். [illegible]னால் அந்தப் பெண் வேதனைப்பட்டிருப்பாள் என்பது [illegible]மா? அவள் பார்வைக்கு அவ்வளவு குரூரமாக இருந்தாலும் [illegible] இதயம் மென்மையானது.

''ஆனால் இதய மென்மையை யார் இந்தக் காலத்தில் [illegible]ருகிறார்கள்? முக அழகையும், பருவ எழிலையும் பார்த்து [illegible]பிடும் உலகமன்றோ இது; இப்படியெல்லாம் நான் [illegible]கிறேனே என்று நீங்கள் வியப்படைவீர்கள். அதிலும் [illegible]லக சுகவாழ்வின் முதல் படிக்கட்டிலே நிற்கும் உங்களிடம் [illegible]டைசிப் படிக்கட்டிலிருந்து ஒவ்வொரு அணுவாக வாழ்க்கைக் [illegible]ம்பை ருசித்த நான் கூறுவது என்றால் உங்களுக்கு [illegible]ரிச்சலாகத்தான் இருக்கும்.

''ஆனால், பாவம் அந்தப் பெண்ணைப் பார்த்ததிலிருந்து [illegible]க்கு மனத்தில் ஒருவித விரக்தி ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. [illegible]லும் நாட்டிய அரங்கேற்றத்திற்காக ஞானசம்பந்தரின் [illegible]டல்களையும் நாவுக்கரசரின் பாடல்களையும் சொல்லக் [illegible]கட்கும்பொழுது, இதுவரையில் நான் செய்ததெல்லாம் [illegible]ந்துவகை மாபாதகங்களைவிட அதிகப்பட்டனவே என்றுகூடத் [illegible]தோன்றுகிறது'' என்றாள்.

உத்தமசீலி செவிகளைப் பொத்திக் கொண்டான். 'காமவல்லிக்கு என்ன நேர்ந்துவிட்டது? திடீரென்று இப்படி வாழ்க்கையை வெறுத்துப் பேசத் தொடங்கிவிட்டாளே! வாழ்க்கைச் சுவையை அணு அணுவாக அனுபவிப்பதற்காக இருபுறமும் மங்கையர்களை நிறுத்திவிட்டு ஏன் இப்படியெல்லாம் உலக மாயைப் பற்றி அவள் பேசுகிறாள்? என்னால் நம்ப முடியவில்லையே! சரி! இன்று வந்த வேளை சரியில்லை. இனியும் நான் இங்கு உட்கார்ந்திருந்தால் இந்தக் கூடத்திற்கே அந்தப் பயங்கரப் பெண்ணை அழைத்து வந்துவிடுவாள் என்ற எண்ணத்தில் உத்தமசீலி திடீரென அந்த இடத்தைவிட்டு எழுந்தான்.

காமவல்லி மீண்டும், ''இளவரசே! இருட்டறையில் அந்தப் பெண்ணைப் பார்த்தீர்களே, தலைமயிரெல்லாம் கொட்டி, முகத்திலே தழும்புகள் நிரம்பி இருக்க, அழகிய கண்கள் பயங்கரமாகத் தோற்றமளிக்க இருந்தாளே! அந்தப் பெண்ணை,

இன்னும் இந்த உலகத்தின் சுவையை அறியாத அந்தப் பெண்ணை, வெளிச்சத்திலே நீங்கள் பார்க்க வேண்டாமா? அவளுடைய புற அழகை மட்டும் கண்டு எரிச்சலுறும் நீங்கள் அவளுடைய அக அழகைப் புரிந்து கொள்ள வேண்டாமா? அவள் தன்னைப் பற்றிச் சொல்லும் சோகக் கதையைக் கேட்டு நீங்கள் நெஞ்சுருக வேண்டாமா?'' என்று சொன்னவுடன், உத்தமசீலி அந்த இடத்தைவிட்டு ஒரே தாண்டாகத் தாண்டி, ''காமவல்லி, இன்று உனக்கு மனம் திடீரென்று ஏன் பேதலித்துவிட்டது? நான் இங்கு வந்த வேளை சரியில்லை. நான் இன்னொரு நாள் வருகிறேன்'' என்று கூறிக்கொண்டே ஓட்டமும் நடையுமாக வெளியே வந்தடைந்தான்.

குதிரையேறி அவன் புறப்பட்டது கண்டு கதவைத் தாளிட்டுக் கொண்டபிறகு, காமவல்லி பரணை நோக்கி, ''புலவரே, நெடுநேரம் பரண்மீது உட்கார வைத்துவிட்டேன். வியர்த்து விறுவிறுத்துச் சோர்வுற்றிருப்பீர்களே! இறங்கி வாருங்கள்'' என்று கூறவும், திரையை விலக்கிக் கொண்டு, ''இதோ வந்துவிட்டேன்'' என்று மாணிக்கப் புலவர் அவள் எதிரே தோன்றி, ''காமவல்லி, அழகற்ற பெண் - குரூபி - சோகக் கதையைக் கேட்டாலே உள்ளம் உருகும் - என்றெல்லாம் சொன்னாயே, அவள் யார்? இந்த வீட்டில் அப்படி ஒரு பெண் இருப்பதை நான் கண்டதும் கேட்டதும் இல்லையே'' என்று கேட்டார்.

காமவல்லிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. மாணிக்கப் புலவரிடம் அப்பெண்ணைக் காட்டலாமா, கூடாதா என்று யோசித்தாள். அவளைப்பற்றிச் சொல்லலாமா, கூடாதா என்று யோசித்தாள்.

ஆனால் அவளை யோசிக்க விடாமலேயே மாணிக்கப் புலவர் பின்கட்டில் அப்பெண் இருக்கும் அறையை நோக்கிச் செல்ல முற்பட்டார். அவரைத் தொடர்ந்து காமவல்லி கையை உதறிக்கொண்டு, ''என்ன செய்வது? என்ன செய்வது?'' என்று புரியாமல் குழப்பத்துடன் சென்றாள்.

❖ ❖ ❖

இருட்டறையிலிருந்து கதவைத் திறந்து எட்டிப் பார்த்த மாணிக்கப் புலவர் நடுநடுங்கிவிட்டார். அவர் காரைக்கால் அம்மையாரைப் பற்றி படித்திருக்கிறார். ஆனால் இப்பொழுது இப்படி ஒரு பெண் அத்தகைய அம்மையார் தோற்றத்தில் இருப்பார் என்று அவரால் நம்பமுடியவில்லை. அவர் அதிக

நேரம் அந்தக் காட்சியைக் காண விரும்பவில்லை. கதவைத் தாழிட்டு, சட்டென்று திரும்பி, ''காமவல்லி, அந்தப் பெண் யார்? எதற்காக இருட்டறையில் அடைத்து வைத்திருக்கிறாய்? எனக்கு இவ்வளவு நாளும் சொல்லவில்லையே!'' என்று பரபரப்புடன் கேட்டார்.

காமவல்லி பெருமூச்சு விட்டாள். ''அந்தப் பெண் இங்கு அடைக்கலம் புகுந்து சில நாட்கள் ஆகின்றன. யாருக்கும் அவள் இங்கு இருப்பது தெரியக்கூடாதே! இப்போது தெரிந்துவிட்டதே என்று கவலைப்படுகிறேன்'' என்றாள் காமவல்லி.

''ஏன், எனக்குத் தெரிந்தால் என்னவாம்? அழகிய பெண்களை மட்டும்தான் நான் காண்பேனா? இப்படி ஒரு பெண்ணை விசித்திர மங்கையை வைத்து நான் கவிதை புனைவதற்கு நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது. யார் இந்தப் பெண்?'' என்று மீண்டும் கேட்டார் மாணிக்கப் புலவர்.

''புலவரே, உங்களிடம் மறைப்பதில் என்ன பலன்? ஆனால் இதை வெளியே யாரிடமும் சொல்வதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்தால் நான் சொல்கிறேன்'' என்றாள் காமவல்லி.

குண்டலக் கவிராயர் மெல்ல நகைத்து, ''காமவல்லி, உனக்குச் சங்கடம் ஏற்படும் வகையில் நான் ஏதும் செய்துவிட மாட்டேன், உன்னுடைய இரகசியம் என்பது எனக்குத் தெரியாதா? இதற்குச் சத்தியம் வேறு செய்ய வேண்டுமா? பிறகு எப்படியாவது வெளியே தெரிந்துவிட்டால், அதற்கு நான் காரணம் என்று கோபிப்பாய். நிச்சயமாக நான் இதை யாரிடமும் சொல்ல மாட்டேன்!'' என்றார்.

''புலவரே! ஆனால் யாரிடம் இப்பொழுது அதிகம் ஈடுபாடு காட்டுகிறீரோ, யாரை மிகவும் பெருமையாக எண்ணி நீங்கள் போற்றுகிறீரோ அந்தப் பண்டிதருக்கும் இந்தப் பெண்ணிற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு'' என்று அவள் சொல்ல ஆரம்பித்தவுடன் குண்டலக் கவிராயருக்கு உடல் சிலிர்த்தது. அடுத்து அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்று பரபரப்புடன் ஆவலும், அதே சமயத்தில் ஒருவித அச்சமும் அவரிடம் குடிகொண்டன.



அத்தியாயம் 10

கொய்த மலர்

காமவல்லியின் வீட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லும்போது குண்டலப் புலவரின் மனத்தில் பல்வேறு விதமான சிந்தனைகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. சிருங்காரக் கவிதைகள் கைவசமிருந்தாலும் காமவல்லி சொன்ன மற்றொரு பெண்ணைப் பற்றிய உண்மைக் கதை சோகக் கவிதைகளாக அவர் உள்ளத்தில் நிழலாடின.

வெளியே மை இருட்டு. சில நாழிகைக்கு முன்பே திரும்பிவிடலாம் என்ற எண்ணத்தில்தான் அவர் திருவையாறு வந்தார். ஆனால், காமவல்லியின் வீட்டில் அடுத்தடுத்து நடைபெற்ற சம்பவங்கள் நேரம் போவதே தெரியாமல் செய்து விட்டன.

அவர் என்னதான் விரைவாக நடந்தாலும், அவர் உள்ளத்தில் காமவல்லி கூறியவை சுற்றிச்சுற்றி வந்து நடையைத் தடைப் படுத்தின. காமவல்லி சொன்னவை அவளுடைய கற்பனையாக இருக்க முடியாது. தன்னிடம் அப்படியொரு கற்பனைக் கதையைச் சொல்ல வேண்டிய கட்டாயமில்லை. காமவல்லி வீட்டில் அடைக்கலம் புகுந்திருக்கும் அழகு சிதைந்து குரூரமாயுள்ள அந்த மங்கையைப் பற்றி உணர்ச்சி ததும்ப, அவள் கூறியவற்றையே நினைத்தவாறு நடந்தார்.

சில நாட்களுக்கு முன்பு வழக்கம் போல் காமவல்லி அதிகாலையில் இருள் பிரியும் மூன்பு காவிரியில் நீராடி வரச் சென்றிருந்தாள். வயது ஏறஏற, அவள் உள்ளத்தில் புதிய சிந்தனை, மனமாற்றம் எல்லாம் ஏற்பட்டதுபோல் ஓடும் நீரில் அமிழ்ந்து குளிக்க வேண்டும் என்ற எண்ணமும் ஏற்பட்டது.

வீட்டிலே அவள் அமைத்திருந்த குளியலறை மிகப் பெரியது. அமிழ்ந்து குளிக்கத் தொட்டி. அருகில் வாசனைத் திரவியங்களைக் கரைத்து சுகமாக நீராடி மகிழ்ந்திருக்கிறாள் என்றாலும் இளங்காலைப் போதில் காவிரியின் பிரவாகத்தில் நீராடுவது

போன்ற இன்பம் எப்போதும் ஏற்பட்டதில்லை. துணையின்றியே வீட்டிற்கு அருகிலிருந்து காவிரிக்கரைக்கு இருள் பிரியுமுன் சென்று குளித்து, மற்றவர் காணும் முன்பே வீட்டை அடைந்து விடுவாள்.

அன்றும் அவ்வாறே அவள் அமைதியாக நீராடி, இடுப்பு ஈரச்சேலையை மாற்றிக் கொண்டு, தலையைத் துவட்டிக் கொள்ளத் திரும்பியபோது படித்துறையில் மேல்படியினின்று யாரோ மெல்ல மெல்லப் பதுங்கி நடந்து வருவதுபோல் தோன்றியது. மெல்லிய வெளிச்சத்தில் அவ்வுருவம் நெருங்கி வந்தபோது அவளுக்குப் பேசுவதற்குக் கூட நா எழாமல் போவதை உணர்ந்தாள். படிக்கட்டுகளில் இறங்கிவருவது பேயோ என்ற பயம்கூட எழுந்தது. அடுத்தகணம் அவள் நிலை தடுமாறினாள்.

காமவல்லி ஓடும் நீரில் வீழ்ந்து விட்டாள். ஆனால், அவள் யாரைக் கண்டு பயந்தாளோ, அந்த உருவம் கணம் கூடத் தாமதிக்கவில்லை. பரபரவென்று குதித்தோடி, காமவல்லியைப் பற்றி இழுத்துக் கரை சேர்த்துவிட்டது. நல்லவேளையாகக் காமவல்லிக்கு ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. பயத்தாலும், மீண்டும் உடல் முழுவதும் குளிர் நீரில் நனைந்ததாலும் உடல் சற்று நடுங்கிக் கொண்டிருந்தது.

காமவல்லி கரையில் அமர்ந்து, தன் எதிரே நிற்கும் அவ்வுருவத்தைப் பார்த்தாள். உருண்டுபோய் நீரில் மிதந்து சென்ற குடத்தை கையிலேந்தி நின்று கொண்டிருந்த உருவம் பேயன்று! பெண்தான். காமவல்லி கண்களை அகல விரித்துப் பார்த்தாள். சற்று முன்பு தான் பயந்ததையும், தவறாக எண்ணியதையும் கண்டு வெட்கித் தலைகுனிந்தாள்.

யாரைக் கண்டு அவள் பயந்தாளோ அவளே வாய் திறந்து பேசியவுடன் காமவல்லிக்கு அவள் மீது கருணை ஏற்பட்டது. ஆற்றுப் பிரவாகத்தில் சென்றிருக்க வேண்டிய தன்னைக் கணத்தில் காப்பாற்றிய அவள் திறமை கண்டு அவள் மீது தனிப்பட்ட பாசம் ஏற்பட்டது.

''அம்மா, என்னைக் கண்டு நீங்கள் பயந்து விட்டீர் களில்லையா?'' என்று அவள் கேட்டாள். தோற்றத்திற்கும் குரலுக்கும் சம்பந்தமில்லை. அவள் குரலில் நளினம் மிகுந்திருந்தது; வீணையைச் சுண்டியது போன்ற ஓர் ரீங்காரம் இருப்பது போலும் காமவல்லி உணர்ந்தாள்.

''ஆமாம்... நான் தவறு செய்துவிட்டேன். என்னைப் பொறுத்தருளுங்கள்... நான் வேறுவிதமாக எண்ணிப்

பயந்துவிட்டதை இப்போது நினைக்கும்போது வெட்கமாக இருக்கிறது'' என்று காமவல்லி மனம் விட்டுக் கூறினாள்.

அந்தப் பெண் உருவம் மெல்லச் சிரித்தது. காமவல்லியின் செவிகளில் கேட்டது.

''அம்மா, நீங்கள் வெட்கப்படவோ, வேதனைப்படவோ வேண்டாம். நான் பெண்ணாகப் பிறந்த வேளை அம்மா. நானும் தங்களைப் போன்ற பெண்ணாகத்தான் இருந்தேன். இப்பொழுதும் பெண்ணாகத்தான் இருக்கிறேன். ஆனால், 'பெண்' என்றவுடன் கற்பனை செய்து பார்த்து மகிழும் எழில் மிக்க தோற்றமில்லாமல் இருக்கிறேன். அழகற்ற என்னைக் கண்டு அனைவரும் அருவெருப்படைகிறார்கள். பகலிலே நான் நடமாடினால் என்னைத் துரத்துகிறார்கள்.

அதனால்தான் இரவோடு இரவாக நான் பயணம் செய்து வருகிறேன். தஞ்சையை அடைய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு. திருவையாறு தானே அம்மா, இந்த ஊர்? தஞ்சையை அடைவதற்குள் பொழுது புலர்ந்து விடும். அதற்கு முன்பு நீராடிவிட்டு எங்காவது மறைந்து பகல் முழுவதும் இருந்துவிட்டு பொழுது சாய்ந்தவுடன் புறப்படப் போகிறேன்...'' என்று கூறினாள் அந்தப் பெண்.

'பகல் முழுவதும் எங்காவது ஒளிந்திருந்துவிட்டு பின்னர் இரவில் பயணப்படும்' செய்தி கேட்டு, காமவல்லி வருந்தினாள்.

''அம்மா, உன்னை நான் இன்னும் முழுமையாக உணர வில்லை. ஆனால், உன் இதய ஒலியைப் புரிந்து கொண்டு விட்டேன். பகலிலே நீ மறைந்து வாழ்வானேன்? அழகற்றவள் நாட்டிலே நடமாடக் கூடாதா? மிக்க அழகுள்ளவள் வீதியில் நடந்தால் எல்லோர் கண்களும் பசியுடன் பார்க்கின்றன. அழகற்றவளையும் பார்க்கக் கூடாதா, இது என்ன உலகம்?'' என்று வேதனையுடன் கேட்டாள் காமவல்லி. நனைந்த ஆடையின் ஈரங்கூட மெல்ல மெல்லக் காயத் தொடங்கியது.

''உங்களுக்குத் தெரியாது அம்மா. உலகத்தைக் கோபித்து என்ன பலன்? நான் பிறந்தவேளை. நேரமாகிறது; வருகிறேனம்மா, என்னிடம் இவ்வளவு நேரம் கனிவுடன் பேசியதற்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்று கூடத் தெரியவில்லை'' என்று கூறிக் கொண்டே குளிப்பதற்காகப் படிக்கட்டுகளில் இறங்கினாள் அந்த விசித்திரத் தோற்றமுடையவள்.

காமவல்லி சட்டென்று அவள் கரங்களைப் பிடித்துக் கொண்டு, ''ஆகா, இனி நான் விட்டுவிடுவேனா? அம்மா என்று

அழைப்பதற்காக வருத்தப்படாதீர்கள்; உங்கள் வயதோ, பெயரோ எனக்குத் தெரியவில்லை. சற்று முன்பு, உலகத்து மற்றவரைப் போன்று நானும் தங்களைத் தவறாக நினைத்து விட்டேன். அதற்குப் பரிகாரமாக உங்களை என் வீட்டிற்கு அழைத்துச் செல்ல நான் உறுதி கொண்டுவிட்டேன். என் வீடு அருகேதான் இருக்கிறது. நானும் தங்களைப் போல் வெளிச்சத்தில் வீதியில் நடமாடுவதில்லை. வீடு சென்ற பிறகு மற்றவற்றைப் பேசிக் கொள்ளலாம்'' என்றாள்.

காமவல்லி இவ்வாறு கூறியது கேட்டவுடன் அவளுக்கு என்ன தோன்றியதோ என்னவோ, ''சற்று இருங்கள்; நான் குளித்துவிட்டு வந்துவிடுகிறேன்'' என்று கூறினாள்.

கீழ்வானம் வெளுத்துவிட்டது. அந்தப் பெண் நீராடி வரும் வரை காத்திருந்த காமவல்லி, நீராடும் போது அந்த இளமங்கையின் அங்க வனப்பைக் கண்டு தனக்குள்ளே வியப்படைந்தாள்.

வீட்டிலும், வீதியிலும் இன்னும் யாரும் எழுந்திருக்கவில்லை. கிழவி மட்டும் வாசலில் சாணம் தெளித்துக் கோலமிட்டுக் கொண்டிருந்தாள். விரைவாக வீட்டிற்குள்ளே 'அவளையும்' அழைத்துக் கொண்டு காமவல்லி நுழைந்துவிட்டாள். கூடத்து அறைக்கதவு திறக்கப்படவில்லை. நடுக்கூடத்திலே போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு இளமங்கையர் இருவர் உறங்கிக் கொண்டிருந்தனர். அந்த இடங்களைத் தாண்டி மூன்றாவது கட்டிலிலிருந்த தனி அறையில் அவளைக் கொண்டு சேர்ப்பித்து புத்தாடை கொடுத்து உடுத்திக் கொள்ளச் செய்தாள்.

இயற்கை வெளிச்சத்தில், அவள் குரூபியாகக் காட்சியளிப்பதைக் கண்டு காமவல்லி வேதனையடைந்தாள். பிறக்கும்போதே அவள் அவ்வாறு கோர உருவுடன் பிறந்திருக்க முடியாது. பிறகு ஏதோ ஒரு காரணத்தால் அவள் தோற்றத்தில் இத்தகைய மாறுதல் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள் காமவல்லி. அவள் உடல் ஏனோ ஒருமுறை சிலிர்த்து அடங்கியது. தன்னையே இமை கொட்டாமல் காமவல்லி பார்ப்பதைக் கண்ட அவள் சற்று நாணமுற்றாள்.

ஆனால், நாணம் முகத்திலே பிரதிபலிக்கவில்லை. சண்பக மலர் மேனி, வெம்மிய கனி போல் மாறியிருப்பதையும் கருணையும், காமமும், அன்பும், அரவணைப்பும், வியப்பும், விநயமும் புலப்படுத்தக்கூடிய அவளுடைய விழிகள் சிதைந்து, சுழல முடியாமல் இருக்கும் வேதனை நிலையையும் கண்டு காமவல்லியின் கண்கள் கலங்கின.

''உங்கள் பெயர் என்னவென்று நான் அறிந்து கொள்ளலாமா?'' என்று காமவல்லி நெஞ்சு தழுதழுக்கக் கேட்டாள்.

''பெயருக்கென்ன? என் தாயார் குமுதவல்லி என்று பெயர் வைத்து மகிழ்ந்தாள். இப்பொழுது தீயில் விழுந்த குமுதமாக நான் இருக்கிறேன்'' என்று கூறும்போது குமுதவல்லியின் குரலில் உணர்ச்சியே இல்லை.

மாற்றுடை உடுத்திக் கொண்டு சற்று ஓய்வெடுத்துக் கொள்ளட்டும் என்று காமவல்லி அங்கிருந்து அகன்றாள். அவளுக்கு இன்னும் எத்தனையோ வேலைகள். நந்தவனத்திலிருந்து பலவித மலர்களைக் கொய்து வந்திருப்பார்கள். மனம் நிம்மதி அடையும் வரையில் ஈசனுக்கு அர்ச்சித்த பிறகுதான் காலை உணவு. அன்று பூசை செய்யும்போதும் அவளுக்குச் சிந்தனையெல்லாம் குமுதவல்லியின் மீது இருந்தது.

பூசை முடிந்தவுடன் கையில் பலகாரத் தட்டுடன் இருட்டறைக்குள் நுழைந்தாள்.

''குமுதம்... குமுதம் இருட்டறையில் உன்னை உட்கார வைத்திருப்பதற்கு என் மீது கோபமா?'' என்று காமவல்லி கேட்டாள்.

குமுதவல்லி மெல்லச் சிரித்தாள். பெண்களின் மெல்லிய பூஞ்சிரிப்பிலே முத்துப்பல் வரிசை எட்டிப் பார்த்து மோகங்கொள்ளச் செய்யும். ஆனால், குமுதவல்லி சிரித்தவுடன் முன் பற்கள் இரண்டும் இல்லாததால் காணக் கண் கூசியது.

''அக்கா, இருள் எனக்கு மிகவும் வேண்டிய ஒன்று. உங்கள் இல்லத்தில் உள்ள இருட்டு இதம் அளிக்கிறது. இவ்வளவு நாட்கள் பாழடைந்த மண்டபத்திலும் தோப்பிலே அடர்ந்த புதர் மறைவிலும் பகல் முழுவதும் இருக்கும்பொழுது எனக்கென்ன இன்பமாகவா இருக்கும்?'' என்றாள்.

''குமுதா! உன்னைப் பார்த்தவுடனேயே எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. அடைக்கலம் புகும் பெண்களுக்கும் அடைக்கலமாக நான் அழைத்துவரும் பெண்களுக்கும் இங்கு குறைவே இல்லை. அவர்களுடைய சிரிப்பொலியும், கால் சதங்கை ஒலியும், வேடிக்கைப் பேச்சொலியும், மான் போல் ஓடும் ஒலியும் கேட்டவாறிருக்கும்.

''இந்த அறைக்குள் ஒருவரும் வந்து உன்னைத் தொந்தரவு செய்யமாட்டார்கள். நல்ல உணவு இல்லாததால் நீ மெலிந்து

...கிறாய். நல்ல உறக்கம் இல்லாததால் கண் பஞ்சடைந் ...றது. இன்னும் சில நாட்களில் பழைய நிலையை அடையச் ...துவிடுகிறேன்...'' என்று காமவல்லி அன்புடன் கூறினாள்.

...முதா பெருமூச்சுவிட்டாள். ''பழைய நிலையை அடையச் ... இனி ஒரே ஒருவரால்தான் முடியும். அந்த ஒருவரைத் ...த்தான் நான் அலைகிறேன். இருள் என்று பாராமல் நடைத் ...ல்லை பாராமல் அலைகிறேன். தேச தேசாந்திரங்களைக் ...ம் தன்னந் தனியளாய் அலைகிறேன்'' என்றாள்.

''என்ன குமுதா! கடவுளைத் தேடி அலையும் பக்தையை ... பேசுகிறாயே... கடவுளை அவ்வளவு எளிதில் கண்டுவிட ...மா? காரைக்கால் அம்மையார் ஒருவர் தாம் அந்தப் ...க்கியம் பெற்றாள். கடவுளைத் தேச தேசாந்திரங்களில் தேடி ...லைவானேன்? அவர் குறிப்பிட்ட இடமொன்றில் தானா ...ப்பவர்? அவர் எங்கும் நிறைந்திருப்பவராயிற்றே?''என்றாள் ...மவல்லி.

''நீங்கள் கூறும் கடவுள் வேறு, என் கடவுள் வேறு. என் ...வுள் என் இதயத்திலே அழியாமல் இருப்பவர். என் கடவுள் ...னுடன் பேசுவார். என் கடவுள் என்னிடம் அன்பாய் ...ருந்தவர். தனது அழகிய கரங்களால் எனக்கு ஆதரவு தந்து ...ணைத்தவர். அவரது அன்பு ததும்பு விழிகளில் கருணையை ... மீது பொழிந்தவர். ஆ! அந்த விழிகளுக்குண்டான காந்தச் ...தியை நான் என்னென்பேன்! முதன் முதல் அந்த விழிகளைச் ...தித்தேன். அவற்றிற்கு அடிமையானேன். செந்தாமரைக் ...கள் என்று வர்ணிப்பேனா சந்திர சூரியர்கள் விழிகளாய் ...றி அமர்ந்திருக்கிறார்கள் என்று கூறுவேனா? அக்கா, நான் ...ன சொல்வேன்? என் கடவுளை எங்கே தேடுவேன்? குருடன் ...ழி பெற்று இழந்த நிலையில் இருக்கிறேனே...'' என்று ...தவல்லி கூறும்போது உணர்ச்சி மிகுதியால் விம்மினாள்.

காமவல்லி ஏதும் பேசவில்லை. ஆழ்கடல் போல் தன் ...தயத்துள் பெரும் உணர்ச்சிகளை அடக்கி வைத்திருக்கிறாள் ...லிருக்கிறது என்று அறிந்தாள். அதை எப்படிக் கேட்பது?

அவள் எந்த ஊரைச் சேர்ந்தவள்? எந்த நாட்டைச் சேர்ந்தவள். ...மவல்லி அறிவதற்குத் துடித்தாள். குமுதவல்லியின் வாழ்க்கை ...கசியங்களை எதற்காக அறிந்து கொள்வது என்று ஒருபுறமும், ...றிய வேண்டும் என்ற ஆவல் மறுபுறமாகக் காமவல்லி ...பித்தாள்.

''அக்கா, என் பேச்சே புதிர்போல் தோன்றுகிறதல்லவா? ...ண்ணே ஒரு புதிர். அதில் நான் பெரும் புதிர். என்னைப்

பற்றி இதுவரையில் யாரிடமும் சொல்லவில்லை. பாண் நாட்டின் மதுரையில் வீதி வீதியாக அலைந்தேன். கொ நாட்டில் திரிந்தேன். கங்கபாடி சென்றேன். கரூரில், உறையூ கொடும்பாளூரில், பழுவூரில், நான் அலையாத இ பாக்கியில்லை. பரிவுடன் என்னை நடத்தியவர்களிடங் நான் என்னைப் பற்றிய உண்மையைச் சொல்லவில்ல என்று குமுதவல்லி கூறினாள்.

காமவல்லியின் புருவங்கள் வியப்பால் உயர்ந்துத் தணிந் ''தன்னைப் பற்றிய உண்மையா?'' என்று ஒரு முறை சொ கொண்ட காமவல்லி, ''இவளிடம் அவ்வளவு பெரிய ரகசி என்ன புகுந்து கொண்டிருக்குமோ?'' என்று வியப்பு எதிர்பார்த்தாள்.

''நான் என் கதையை விஸ்தாரமாகச் சொன்ன உங்களுடைய நேரமும் வீணாகும். அதனால் பலனும் ஏற்பட ஆனால் சொல்லாமலும் இருக்க முடியாது. உங்களி சொல்வதால் எனக்கு நிச்சயம் பலன் ஏற்படும் என்ற நம்பிக் இருக்கிறது. நான் தேடிச் செல்லும் தெய்வத்தைத் தங்கள தேடித் தர முடியும் என்று உள்ளுணர்வு கூறுகிறது. அதன நான் என் கதையைச் சுற்றி வளைத்துக் கூறாமல் சுருக்கம கூறுகிறேன். கதையைக் கேட்ட பிறகு தங்களுக்கு என் மீது அனுதாபம் அதிகமாகலாம். அல்லது நான் செய்த பிடிக்காததால் என்மீது வெறுப்பும் உண்டாகலாம். எப்ப தங்கள் மனம் மாறினாலும் என் தெய்வத்திடம் என்ன சேர்ப்பிக்கத் தாங்கள் உதவ வேண்டும்''எ ன்று முன்னுரைய கூறித் தன் வரலாற்றைக் கூறத் தொடங்கினாள் குமுதவ

⁂ ⁂ ⁂

சேர நாட்டின் கடற்கரை ஓரத்தைச் சேர்ந்த கிராமம் ஒன் குமுதவல்லி பிறந்தாள். இயற்கை கொலு வீற்றிருக்கும் அ ஊரில் அழகி என்று எல்லோராலும் புகழப்பட்டாள். தாயைப்போல் பேரழகியாகக் குமுதவல்லி திகழ, இயற் சூழலும் உதவி செய்தது.

மஞ்சள் நிறமேனியும், கருங்கூந்தலும், வெண்ண ஆடையும், மாவடு பிளந்தாற்போன்ற விழிகளும் கொ அவள் அந்தக் கிராமத்து இளைஞர்களின் மனத்தைச் சுவ இழுத்துக் கொண்டு இருந்தாள். பருவக் காலக் கார்மேகம் விட மழைபொழிவது போல் அவளுடைய எழில், இளைஞ உள்ளத்தில் தாபக்கனலைப் பொழிந்து கொண்டிருந்த

குமுதவல்லியின் தாயார் இசையில் வல்லவள். தன் மகளுடைய சிந்தையை வேறு எங்கும் சிதற விடாமல் வீணை பயிற்சிக் கொடுப்பதில் கவனம் செலுத்தி வந்தாள். பஞ்சும் நெருப்பும் போன்ற அந்த இளம் பருவத்து உணர்ச்சி களும், அதன் விளைவுகளும் குமுதத்தின் தாய் அறிந்திருந்ததால் தன் மகளுக்கு வீட்டைச் சுற்றிப் படல் போட்டு வேலியிட்டிருந்த போன்று, தன்னுடைய கண்டிப்பும் எனும் கடும் வேலியையும் இட்டு உயர்ந்த முறையில் வளர்ந்து வந்தாள்.

ஆனால் அக்னிக்குஞ்சை எப்படிப் பாதுகாக்க முடியும்? திரண்டு வரும் கரும் மேகங்களை மலைச்சிகரத்தில் படியாமல் தடுக்க முடியுமா? தேன் சிந்தும் மலரிடம் வண்டினம் சேராமல் எப்படிப் பாதுகாப்பது?

அந்தக் கிராமத்தில் நாராயண பண்டிதர் என்ற மகா மேதை ஒருவர் இருந்தார். சேர நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இளைஞர்கள் பலர் அவரிடம் குருகுல வாசம் செய்து வியாகர்ணம், தர்க்கம், காவ்யம், தர்மம், நியாயம் கற்க வந்திருந்தனர்.

ஒவ்வொருவருடைய முகத்திலும் கல்வியின் ஒளி வீசியது. சகல கலைகளையும் கற்றுணர்ந்து மேதையாகி விடவேண்டும் என்ற துடிப்பும், ஆவலும் சுடர்விட்டுக் கொண்டிருந்தன. கடுமையான உழைப்பையும், ஆழ்ந்து கற்றுத்தேர்ந்து கொள்ளும் இலட்சியத்தையும் அவர்கள் கொண்டிருந்தனர். பொதுவாக அவர்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும், உற்றார் உறவினர் இல்லாதவர்களாகவும், வாழ்க்கையின் கடும் சோதனைகளை மிக இளம் பிராயத்தில் அனுபவித்தவர்களாகவும் காணப்பட்டார்கள்.

வெள்ளி முளைக்கும் வேளையில் நாராயண பண்டிதர் வீட்டிலிருந்து மாணவர்களின் வேதகோஷம் குமுதவல்லியைத் துயில் கலையச் செய்யும். வீட்டைச் சுற்றியுள்ள அடர்ந்த மரங்களில் புள்ளினங்கள் கலகலவென எழுப்பும் ஓசையும் மாணவர்களின் வேதகோஷமும் அவளைச் சுறுசுறுப்பாக இயங்கச் செய்யும். தாய் விழிப்பதற்கு முன்பு அவள் படுக்கையினின்று எழுந்துவிடுவாள்.

நீராடிவிட்டு வீணையை மீட்டத் தொடங்கி விடுவாள் அவள் வீட்டைக் கடந்து செல்லும் மாணவர்கள் வீணையின் நாதம் கேட்டு ஒருமுறை அவள் குடிலைத் திரும்பிப் பார்ப்பார்கள். அவ்வழியே செல்லும் மாணவர்கள் வீணையின் நாதத்தை ரசித்துச் செல்வது குமுதவல்லிக்குப் பல நாட்கள் தெரியாது.

அன்று ஏனோ அவள் அதிக நேரம் ஆனபின் தாய் எழுப் பிறகுதான் திடுக்கிட்டு விழித்தாள். நீராடிவிட்டு வீணையி செல்ல முனைந்தவளைத் தாய் தடுத்து பூந்தோட்டத்தினி பூஜைக்கு மலர்கள் பறித்து வரக் கட்டளையிட்டாள். தா அந்தச் செயல் குமுதவல்லியின் வாழ்க்கையில் பெருந்தி பத்தை ஏற்படுத்தியது.

அமைதியான நீர் நிலையில் ஒரு சருகு விழுந்தால் வ வட்டமான நீர்ச் சலனம் ஏற்பட்டு எல்லையில்லா வளைய எப்படி மாறுமோ அதுபோல அவள் இதயக் குளத்தில் பெ சலனம் ஏற்படவும் புதிய உணர்ச்சிகள் உதித்தெழவும் இதய புரிய முடியா இன்பம் ஏற்படவும் காரணமாயிற்று.

அருகேயிருந்த முல்லை மலர்களைப் பறிக்கும்போது அ புதுமை நேர்ந்து விட்டது. முழங்கால் வரை மடித்துக் கட் ஈர ஆடையும் தோளில் பிழிந்துத் தொங்கும் உத்தரீய ஒரு கரத்தில் செம்பில் நீரும் மற்றொரு கரத்தில் பறித்த கீரை வகைகளுமாக மாணவர்கள் நடந்து வந்து கொண்டிருந்த

இருவரும் கிட்டத்தட்ட ஒரே உயரம். ஒரே வயதினராக இருக்கலாம். அகன்ற மார்பு, அடர்ந்த சிகையைப் பின்ட அள்ளிக் கட்டியிருந்தனர். கல்வி ஒளி முகத்தில் வீசியது. புஜ உடையவர்கள் என்பதைப் பரந்த மார்பு புலப்படுத்தி இருவரும் சுவாரசியமாக ஏதோ தர்க்கம் செய்து வந்த போதி ஓர் இளைஞன் மட்டும் மலர் கொய்து கொண்டிருந்த மங் குமுதவல்லியை ஏனோ திரும்பி நோக்கினான். அந்த ஒரு க அந்தப் பார்வை பல பல புதுமைகளைப் படைத்துவிட் குமுதாவின் உள்ளத்தில்.



அத்தியாயம் 11

காதல் மாயை

காதல் எனும் மாயை தரம் பார்ப்பதில்லை. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வித்தியாசம் பார்ப்பதில்லை! சாதியும் அதன் குருட்டுக் கண்களுக்குத் தெரிவதில்லை. மின்னல் போன்ற ஒரு நிலை மாபெரும் சக்தியாக உருவாகி ஆண், பெண் இருவருள்ளங்களிலும் சென்று சேர்ந்துவிடுகிறது.

இருவர் இதயங்களிலும் புகுந்த பிறகு அதன் விளையாடலே தனிதான். கண்ணீர் ததும்ப வைக்கும். களிநடம் புரியவைக்கும். கைகோத்து உலவ வைக்கும். நாணிக் கண் புதைக்க வைக்கும். அதன் வழியில் நிற்பவரை எதிர்த்துப் போராடச் செய்யும்.

குமுதவல்லியிடம் பெரும் மாறுதல் ஏற்பட்டது. அவள் உள்ளம் கவர்ந்த அச்சுதவர்மனிடம் அப்படி என்ன மாய சக்தி இருந்தது? கண்கவர் வனப்புடையவன். அப்படி என்றால் அச்சுதவர்மனுடன் இணை பிரியாது சென்று கொண்டிருக்கும் அவனுடைய நண்பனின் அழகுக்கும் குறைவில்லை.

இன்னும் சொல்லப் போனால் அச்சுதனைவிட அழகானவன். அவன் நண்பன் என்றும் கூறலாம். இருவரும் ஒரே சமயத்தில்தான் குமுதவல்லியைச் சந்தித்தார்கள். ஆனால், காதல் எனும் விந்தைச் சக்தி குமுதவல்லியிடமும், அச்சுதனிடமும் இயங்கத் தொடங்கியது.

அதனால் கிடைத்த முதல் பலன், இவ்வளவு நாட்கள் உயிர் நண்பனாக இணைபிரியாத நண்பனாக இருந்தவனை அச்சுதன் இழக்க நேர்ந்தது. குமுதவல்லி தன்னை விரும்பவில்லையே என்பதால் அச்சுதனிடம் அவனுக்குக் கோபமும், பிரிவும் ஏற்படவில்லை. அச்சுதன் வழக்கம்போல் தன் நண்பனைச் சந்திக்க முடிவதில்லை. மனம் விட்டுப் பேச முடிவதில்லை.

இப்படியொரு நிலை ஏற்பட்டதால் பிறகு நட்புப் பிணைப்பு உறுதியுடன் இருக்குமா? இரண்டாவதாக குருநாராயண பண்டிதர்

அச்சுதனின் போக்கில் ஏற்பட்ட மாறுதலை உணர்ந்து கண்டிக்கத் தொடங்கினார். அதிகாலையில் நீராடச் செல்லும்போது மாணவர் குழுவில் அச்சுதன் காணப்படமாட்டான். மாலை வேளைகளில் அச்சுதனை ஆற்றங்கரையருகே ஏகாந்தமான இடத்தில் காணலாம். அவன் என்ன செய்வான்; குமுதவல்லியைச் சந்திக்காமல் அவனால் இருக்க முடியவில்லையே!

''குமுதா! வீணை வாசிப்பதில் நீ வல்லவளாமே? எனக்கும் அக்கலையைக் கற்றுத் தருகிறாயா?'' என்ற அச்சுதன் குமுதவல்லியின் வீணை மீட்டும் விரல்களை வருடியவாறு கேட்பான்.

''உங்களுக்கு எப்படித் தெரியும். நான் வீணை மீட்ட அறிந்திருக்கிறேன் என்று?'' எனக் குழைவாள் குமுதா.

''வீணையின் நாதம்தானே குமுதா உன்னிடம் என்னைச் சேர்ப்பித்தது. நாள்தோறும் வைகறை வேளையில் காற்றினிலே மிதந்து வரும் வீணாகானம் உன் இருப்பிடத்தை திருப்பிப் பார்க்குமாறு செய்யும்!''

''அப்புறம்?''

''அப்புறம் வீணையை மீட்டும் அந்த அழகு மங்கையைக் காண வேண்டும் என்ற துடிப்பு ஏற்படும்.''

''உங்கள் ஒருவருக்கு மட்டுந்தானா?''

''அப்படிச் சொல்ல முடியாது. என் வயதொத்த மாணவர்கள் அனைவருக்கும் நிச்சயமாக ஆவல் ஏற்பட்டிருக்கும். ஆனால் துணிந்து உன்னைச் சந்திக்கும் ஆர்வம் எனக்குத்தான் ஏற்பட்டது. அந்த நாதத்தில் ஏதோ ஒரு தெய்வீக சக்தி இருக்க வேண்டும். அதனால்தான் நாம் சந்தித்தோம்.''

''அப்படியென்றால் தெய்வீக சக்தி நம்மைச் சந்திக்க வைத்தது என்று உறுதியுடன் நம்புகிறீர்களா?''

அப்படித்தான் நினைக்கிறேன். இல்லை என்றால் இவ்வளவு காலமும் இல்லாமல் எனக்கு வேறு எதிலும் கவனம் செல்லாமல் உன்னையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதில் ஆவல் ஏற்படுமா? உன் முகத்தில் இலக்கியத்தைக் காண்கிறேன். உன்னுடன் பேசிக் கொண்டிருப்பதில் வியாகர்ணத்தையும் தர்க்கத்தையும் அறிகிறேன்.''

அச்சுதன் இவ்வாறு உணர்ச்சி மிகுதியால் பேசிக் கொண்டிருக்கும்போது குமுதா மெய்மறந்து கண்களை

யவாறு அவனுடைய அகன்ற மார்பிலே அடைக்கலம் புகுந்திருந்தாள். புது உலகம் ஒன்றை உடனே படைக்க வேண்டும் என்றும், அந்த உலகிலே தானும், அச்சுதனும் மட்டுமே ராஜ்ய பரிபாலனம் செய்யவேண்டும் என்றும் கனவு காண்பாள்.

''அன்பே! நீங்கள் நினைப்பதுபோல்தான் எனக்கும் தோன்றுகிறது. வீணை மீட்டப்படாமல் கிடக்கிறது. தாய் கவலையுடன் என்னை நோக்குகிறாள். எப்பொழுது விடியும் என்று காத்திருப்பேன். நீராடவரும் அவ்வேளையில் சிறிது நேரம் தங்களைச் சந்திக்க வாய்ப்பு ஏற்படுமே என்று. அந்தி வானத்துச் செந்நிறம் எப்போது மறையும் என்று ஆவலுடன் காத்திருப்பேன். மாலை வந்தனம் அளிக்க நதித் துறைக்கு நீங்கள் வரும்போது தங்களைச் சந்திக்க வாய்ப்பு ஏற்படுமென்று'' என்று குமுதா கூறும்போது அவள் இதய ஒலி தெளிவாகப் பிரதிபலித்தது.

ஒருநாள் அச்சுதன் கூறினான்: ''குமுதா, இனி வீணையை நீ மறந்து இருப்பது சரியன்று.''

ஏனென்று கேட்பதுபோல் குமுதா அவனை விழிகளை உயர்த்தி நோக்கினாள்.

''இப்படி நாம் பிறர் அறியாமல் காலையிலும், மாலையிலும் சந்திப்பது எவ்வளவு நாட்களுக்கு நடக்கும். அதனால், உன்னை உன் வீட்டிலேயே இனிச் சந்திக்கப் போகிறேன்'' என்றான் அச்சுதன் மகிழ்ச்சி பொங்க.

''என் வீட்டிலேயே சந்திக்கப் போகிறீர்களா? எனக்கு அதைவிட மகிழ்ச்சி வேறு உண்டா? ஆனால் என் தாய் அதற்குச் சம்மதிக்க வேண்டுமே. என் தாய் கண்டிப்பு மிக மிகுந்தவள் தெரியுமா? பிற ஆடவர் தன் வீட்டிற்கு வருவதை ஒப்புக் கொள்ள மாட்டாள்?' என்று குமுதா வேதனையுடன் கேட்டாள்.

''நான் பிற ஆடவனாக வரப்போவதில்லை. முதலில் உன் மாணவனாக வரப்போகிறேன். பிறகு பிறகு...'' என்று கூறிச் சிரித்தான் அச்சுதன்.

குமுதவல்லிக்கு அவன் கூறியது புரியவில்லை. தனக்கு வீணை கற்றுக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் என்றும், குமுதாவிடம் வீணை கற்றுக் கொள்ளும் மாணவனாக அவள் வீட்டிற்கு வரப்போவதாகவும் விளக்கினான்.

அந்த யோசனையில் வெற்றியும் பெற்றான் அச்சுதன். குமுதாவின் தாயும் அதற்குச் சம்மதித்தாள். கலையைத்

தெய்வமாகப் பூஜிக்கும் அவள், அதன் மூலம் காதல் வளரப் போகிறது என்பதை அறியவில்லை. வீணை பயில்வதற்கு அனுமதியும் நாராயண பண்டிதரிடம் பெற்றுவிட்டான்.

வீணையைக் கற்றுக் கொடுப்பது முறையுடன் தொடங்கியது. அச்சுதனின் உடலில் இப்போது இரு சக்திகள் முனைந்து வேலை செய்தன. காதல் சக்தி ஒன்று; கலை பயில வேண்டும் என்னும் ஆர்வம் உள்ள சக்தி மற்றொன்று.

இயற்கையிலே கலைப் புலமை பெற்றிருந்த அச்சுதனுக்கு வீணையில் இனிய நாதம் எழுப்புவது கடினமாகத் தோன்ற வில்லை. நாட்கள் மெல்ல நகரவில்லை! வேகமாக நகர்ந்தன. மனித மனத்தில் எண்ணங்களும் திட்டங்களும் விரைவில் உருவாகின.

நாராயண பண்டிதரிடமும் குமுதாவின் தாயிடமும் பலர் பலவிதமாக அவர்களைப் பற்றிக் கூறினர். அச்சுதன் குமுதாவிடம் காதல் கொண்டிருக்கிறான் என்ற செய்தியைக் கேள்வியுற்ற நாராயண பண்டிதர் மிகச் சினமுற்றார். அதிலும் அச்சுதனைப் போன்ற திறமை மிக்கவர்கள் இவ்வாறு மங்கையர் மோகத்தில் ஆழ்வது தகாதது; உடனே அதைத் தடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

நேரே குமுதாவின் தாயிடம் வந்தார். தன் மாணவனை மயக்கி அவனது கல்வி கேள்விகளில் குறுக்கிட்டதற்காக அவளை மிகவும் சினந்தார். நாராயண பண்டிதரிடம் குமுதாவின் தாய் மிகுந்த மதிப்பு வைத்திருந்தாள். மேலும் அந்த கிராமமே அவரைப் போற்றும்.

அவர் இவ்வாறு கூறியவுடன் குமுதாவின் தாய் அச்சுதனை மீண்டும் அந்த வீட்டின் பக்கமே வராமல் தடுத்து முன்போல் கல்வியில் அதிக கவனம் செலுத்துமாறு செய்வதாக உறுதியளித்தாள்.

தன் மகளிடம் வீணை பயில்வதற்கு வந்த அச்சுதன் தன் மகளின் உள்ளத்திலும் நிறைவு பெற்றிருப்பாரென்று குமுதாவின் தாய் நினைக்கவில்லை. தன் மகளைத் தனியே அழைத்து அச்சுதனை மறந்துவிடுமாறு எவ்வளவோ கேட்டுக் கொண்டாள். ஆனால் குமுதாவின் மனத்தை அவளால் மாற்ற முடியவில்லை. அவரில்லாமல் தன்னால் வாழவே முடியாது என்று உறுதியாய்க் கூறிவிட்டாள் குமுதா.

தாய் என்ன செய்வாள் பாவம்? நாராயண பண்டிதரிடமே ஓடினாள். தக்க வழி ஏதாவது செய்யுமாறு கேட்டுக் கொண்டாள்.

சகல சாத்திரங்களிலும் தேர்ந்து மேதாவியான அவரால் காதலர் போக்கில் ஒன்றுமே செய்ய முடியாமல் போய்விட்டது.

அச்சுதனை அந்த ஊரிலேயே இல்லாமல் செய்துவிட்டால் அவன் குமுதாவை சந்திக்க முடியாதுபோய் மறந்துவிடுவான் என்று எண்ணினார். அதனால் திருவஞ்சைக்களத்தில் பாடசாலை வைத்து நடத்தும் மற்றொரு பண்டிதரிடம் அவனை அனுப்பி விடுவதென்று முடிவு செய்தார். அச்சுதனுக்கும் குமுதாவுக்கும் பண்டிதரின் சூழ்ச்சி தெரியாதா? இருவரும் ஒருவரை யொருவர் பிரிவதில்லை என்று உறுதிப்படுத்திக் கொண்டனர்.

நாராயண பண்டிதரிடம் விடைபெற்றுக் கொண்டு அச்சுதன் பகல் நேரத்திலே கிராமத்திலிருந்து புறப்பட்டுவிட்டான். ஊர் எல்லையில் ஓடும் ஆற்றங்கரையில் காத்திருந்தான். இரவு, தாய் உறங்கிய பிறகு குமுதா அவளது பாதங்களைத் தொட்டு வணங்கி யாரும் அறியாமல் வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டாள். எல்லையில் காத்திருந்த அச்சுதனுடன் சேர்ந்து கொண்டாள்.

அச்சுதன் முதலில் தனது சொந்த கிராமத்திற்குப் போய்ச் சேர்ந்தான். வறுமையால் மிக வாடும் குடும்பத்தைச் சேர்ந்தவன் அச்சுதன். சிறு வயதிலேயே தந்தையை இழந்தவன். முதிய பிராயத்துத் தாயை கடைசிக் காலத்தில் காப்பாற்றுவதற்காகவே சகல கலைகளையும் கற்கக் குருகுல வாசம் செய்ய வந்தவன். குருவிடம் கல்வி கற்று முடித்து அவர் ஆசியுடன் திரும்பி வந்திருப்பதாக அவன் தாய் நினைத்துக் கொள்வாள். ஆனால் அவனோ குமுதாவுடன் அவள் எதிரில்போய் நின்றான்.

முன்பே சொல்லி வைத்ததுபோல் குமுதா தாயின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினாள். களையான முகத்துடனும் பண்புடனும் அடக்கமாக நிற்கும் குமுதாவுக்கு ஆசி கூறிவிட்டு, அவளைப் பற்றி விசாரித்தாள் அச்சுதனின் தாய்.

நடந்தவற்றை அச்சுதன் ஒளிக்காமல் கூறியதைக் கேட்டு அவள் தாய் திடுக்கிட்டாள். அவளால் ஒன்றுமே பேச முடிய வில்லை. தன் மகனைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தாள். கடைசியில் கனவு சிதைந்து போக வேண்டுமா? அதற்கு இந்தப் பெண் குமுதா ஒரு காரணமாக இருக்க வேண்டுமா என்று வருந்தினாள்.

அச்சுதனின் தாய் அன்று முழுவதும் யோசித்தாள். காதல் வயப்பட்டு, குமுதாவின் அழகொன்றே சரி என்று இருந்தால் அச்சுதனின் வருங்காலம் பாழாகிவிடும் என்பதை அவள்

உணர்ந்தாள். அதனால் தன் மகனுக்குக் கட்டுப்பாடொன்று விதித்தாள். திருமணம் முடியும்வரை குமுதாவை அவன் நெருங்கக் கூடாது என்பது ஒன்று.

வாழ்க்கையை சிறந்த முறையில் நடத்துவதற்கு வேண்டிய பொருளீட்டும் வழியை அவன் அடையும் வரையில் திருமணத்தைப் பற்றி நினைக்கக் கூடாது என்பது மற்றொன்று. இந்த இரண்டிலும் வெற்றியுற்றால்தான் குமுதவல்லியின் வருங்காலமும் இனிதே அமையும் என்று வற்புறுத்திக் கூறினாள் அச்சுதனின் தாய்.

தாயின் கட்டளையைக் கேட்டு அச்சுதன் திடுக்கிட்டான். பயங்கரமான பரீட்சை என்று பெரிதும் வாதாடினான். ஆனால் அவன் தாய் அமைதியாகச் சொன்னார். ''மகனே! வாழ்க்கை என்பது எப்போதும் சுகமாய் அமையாது. குமுதவல்லியின் முகத்தை மட்டும் பார்த்துக் கொண்டே காலத்தைக் கழித்துவிட முடியாது.

நாராயண பண்டிதர் கூறியதுபோல திருவஞ்சைக் களம் சென்று அங்குள்ள பாடசாலையில் சேர்ந்துவிடு. கலியாண மானவர்களை அங்குள்ள குரு ஏற்கமாட்டார். அரைகுறை கல்வி கற்றால் உனக்குத்தான் வருங்காலத்தில் கஷ்டம். அதனால் கலியாணம் ஆகுமுன்பே நீ கற்க வேண்டியதைக் கற்று முடித்துவிடு'' என்றாள்.

அச்சுதன் ஏக்கத்துடன் குமுதவல்லியை நோக்கினான். தாய் சொல்வதுபோல் நடப்பதுதான் சரியென்று அவள் எடுத்துக் கூறினாள். அதுவரையில் குமுதா எங்கிருப்பாள்? தன்னுடைய அருமைத் தாயைப் பிரிந்து தன்னை நம்பி வந்துவிட்ட அந்த இளங்கொடியைத் திண்டாட விட்டுவிட முடியுமா?

''குமுதாவைப் பற்றிக் கவலைப்படுகிறாயா? குமுதா இங்கேயே இருப்பாள். நான் உண்பதில் ஒரு பாதியை அவளுக்குத் தருகிறேன். நீ உன் கடமையை முடித்து வரும் வரையில் அவளை இமை காப்பது போல் காப்பாற்றி உன்னிடம் ஒப்படைப்பது என் பொறுப்பு'' என்று உறுதி கூறினாள். உற்சாகப்படுத்தினாள் தாய்.

''குமுதாவைப் பிரிவதில்லை என்று உறுதி பூண்டிருக்கிறேன் தாயே'' என்று அச்சுதன் பிரியும்போது பிரிவு தாங்காமல் விம்மினான்.

''அழாதே அச்சுதா? கோழைகள் தாம் அழுவர். நான் கூறியவை மிக எளிதானவை. எனக்கும் உன்னை மணக்கப்

போகும் குமுதாவுக்கும் வருங்காலத்தில் மிகுந்த நன்மையை அளிக்கும். திருவஞ்சைக்களம் பாடசாலையில் கவனத்துடன் பயின்று வா. அங்கே அன்னை பகவதி தேவியின் திருக்கோயில் இருக்கிறது. நாள்தோறும் பகவதி தேவியைத் தவறாமல் வணங்கி வா. எல்லாம் வெற்றிகரமாக நடக்கும். உன் வாழ்க்கையைச் செப்பனிட வழியொன்றைத் தேடிய பிறகு குமுதாவை மணந்து கொள்வதுதான் முறை. தாய் சொல்லைத் தட்டாமல் தைரியமாகச் சென்று வா. அதுவரை குமுதா உனக்காகக் காத்திருப்பாள்'' என்று நல்வார்த்தை கூறி உற்சாக மூட்டி, விடை கொடுத்து அச்சுதனை அனுப்பினாள் தாய்.

குமுதவல்லிக்குத் தன் இதயங்கவர்ந்த அச்சுதன் திருவஞ்சைக் களம் என்று கூறப்படும் வஞ்சிமாநகருக்குச் சென்றவரையில் தான் தெரியும். தனக்கு மாமியாராக வரப்போகும் அச்சுதனின் தாயின் முகம் கோணாது நடப்பதில் தன் கவனத்தைச் செலுத்தலானாள்.

நாட்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு யுகம் போல கழிந்து கொண்டிருந்தன. மழைக்காலம் தொடங்கிவிட்டது. பேய் மழை கொட்டியது. மழைக் காலம் முடிந்த பிறகு தன் மகன் வந்துவிடுவான் என்று தாய் ஆறுதல் கூறினாள்.

குமுதவல்லி சில வேளைகளில் யாரும் அறியாமல் விம்மி விம்மி அழுவாள். தன் அருமைத் தாயின் நினைவு வந்துவிடும். சில சமயம் தன்னையறியாமலேயே சிரிப்பாள். தாயைத் துறந்து அன்புக் காதலன் அருகில் இல்லாமல் ஓரிடத்தில் எதிர் காலம் எப்படி இருக்குமோ என்று இருள் நிலையில் வாழ வேண்டியிருக்கிறதே என்ற சோகம் அவளைப் பிடித்து ஆட்டும். ஏனோ அவள் மனதில் ஒருவித பயம் ஏற்பட்டது.

இரவில் தூக்கம் வருவதில்லை. தூக்கம் வந்தாலும் தீய கனவுகள் தோன்றி அவளைத் திடுக்கிட்டு எழச் செய்துவிடும். கனவுகள் அச்சுதனைப் பற்றியதாகவே இருக்கும்.

கடற்கரையிலே பெரிய மரக்கலம் ஒன்று வந்து நிற்கிறது. அதில் ஏறி அச்சுதன் செல்கிறார். கலம் புறப்படப் போகும் வேளையில் குமுதா கடற்கரைக்கு ஓடோடி வருகிறாள். கலம் புறப்பட்டு விடுகிறது.

காட்டின் வழியே அச்சுதனும் குமுதாவும் சென்று கொண்டிருக்கின்றனர். கொம்பன் யானையொன்று எதிரே வருகிறது. குமுதாவை அருகேயுள்ள மரத்தின்மீது ஏற்றிவிடுகிறான்

அச்சுதன். யானை வருகிறது. அச்சுதனின் மிக அருகில் வருகிறது. ''ஐயோ, அச்சுதா, அச்சுதா'' என்று பயத்தால் கூவுகிறாள். ஆனால், யானை அச்சுதன் அருகே மண்டியிட்டுக் குனிகிறது.

அச்சுதன் கம்பீரமாக யானை மீது ஏறி அமர்கிறான். யானை வந்த வழியே அவனையும் சுமந்துகொண்டு விரைந்து செல்கிறது. ''அச்சுதா, அச்சுதா'' என்று கூவுகிறாள் குமுதா.

தீயகனவுகள் கேட்டுக் குமுதா விம்மும்போது, அழுது கண்ணீர் விடும்போது அச்சுதனின் தாய் கதவருகே வந்து அவளுக்கு இதமான மொழிகளைக் கூறுவாள். காணும் கனவின் உட்பொருள், அச்சுதனுக்குப் பெரும் அதிர்ஷ்டம் வரப் போவதை உணர்த்துகிறது. அவன் அரசரால் மதிக்கப்படுவான். உயர்ந்த பதவிகளை அடைவான் என்பதைப் புலப்படுத்துகிறது. அதற்காக நீ அழலாமா? என்று சமாதானம் கூறுவாள்.

திருவஞ்சைக்களத்திலிருந்து செய்திகள் வந்த வண்ண மிருந்தன. அச்சுதன் கல்வி கேள்விகளில் சிறந்தவனாகத் திகழ்வதாக ஒரு செய்தி கூறும். தாய் சொல்லியபடி பகவதி கோயிலுக்கு நாள்தோறும் செல்வதாகவும் அங்கே ஒரு மந்திரவாதியின் அறிமுகம் அவனுக்குக் கிடைத்திருப்பதாகவும் செய்தி வரும்.

அச்சுதனுக்கு இப்போது செல்வாக்கு அதிகம் என்றும், அரசரும் ராணியும் மற்ற உயர்தர அதிகாரிகளும் அச்சுதனிடம் நெருங்கினார்கள் என்றும் ஒருவர் வந்து கூறும்போது அச்சுதனின் தாய் அகமகிழ்வாள். குமுதாவின் முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடிக்கும்.

''அரசரைச் சந்தித்தார். அரசியைச் சந்தித்தார். மந்திரவாதியின் நண்பரானார். அதனால் என்ன பயன்? என்னை மறந்து விட்டாரே, அவர் வருவாரா, மாட்டாரா?'' என்று குமுதா வாய்விட்டுக் கூறி விம்முவாள். அச்சுதனைப் பற்றிய செய்தி தெரிந்த ஒருவருடைய வீட்டிற்கு ஒருநாள் குமுதா நேரே சென்றுவிட்டாள். மீண்டும் வஞ்சிமாநகர் சென்று அச்சுதனைக் கண்டால் தான் கூறியதாக ஒரு முக்கிய செய்தி கூற வேண்டும் என்பதைத் தெரிவிக்கச் சொன்னாள்.

அந்தக் கிராமத்துக்கு மிக அருகே இருந்தது அந்த ஊர். வெள்ளங்கரைப் புதூர் எனும் பெயர். அந்த வீட்டிற்குள் குமுதா நுழைந்துக் கதவைத் தட்டினாள். கதவு திறந்தது. கதவை திறந்தவனும் திகைத்தான். முன்பு குமுதா வசித்த ஊரிலே நாராயண

...தரிடம் கல்வி பயின்ற அச்சுதனின் உயிர் நண்பன் அங்கே ...றிருந்தான்.

தன்னை ஏற்காது அச்சுதனைக் காதலித்த அதே குமுதா அங்கே நிற்கிறாள். ஒருகணம் அவன் திகைத்தான் என்றாலும், குமுதவல்லியை முகமலர்ச்சியுடன் வரவேற்றான். அச்சுதனைப் பற்றி வினவுகிறான் அவன். திடீரென்று அவனுக்கு யோசனை ஒன்று தோன்றியது.

அச்சுதன் மீது வெறுப்பு ஏற்படுமாறு திருவஞ்சைக்களத்தில் அச்சுதன் நடவடிக்கைகளை எடுத்துக்கூற வேண்டும் என்ற யோசனை திடீரென்று அவனுக்கு உதயமாகியது.

அவனுடைய தந்தையிடம் குமுதா பேசிக் கொண்டிருந்த போது இதுவரை நடந்த விஷயங்களை அவள் உணர்ந்தாள். அவனும் திருவஞ்சைக்களத்திலிருந்து அன்றுதான் சொந்த ஊருக்கு வந்திருந்தான்.

குமுதாவிடம் அவன் மிகவும் மரியாதையான குரலில், அனுதாபமும் அதில் கலந்து ஒலிக்கப் பேசினான். திருவஞ்சைக் களத்தில் அச்சுதனைத் தினந்தோறும் சந்திப்பதாகவும் இருவரும் மீண்டும் உயிர் நண்பர்களாகிவிட்டதாகவும், அவன் கூறியபோது, குமுதா, பரபரப்புடன் ஆவல் மிகுதியால் தன் உயிர்ப் பொருளைப் பற்றி மேலும் கூறுமாறு அவனை வேண்டினாள்.

''என்னைப் பற்றிய நினைவு அவருக்கு இருக்கிறதா? தாயைப் பிரிந்து அவருடன் வந்த அபலையை அவர் மறக்காமல் இருக்கிறாரா? தன்து அன்பைப் புலப்படுத்திக் கொள்ளவும், திருமணம் புரிந்து கொள்வதற்குப் பொருள் ஈட்டவும் அவர் சென்றாரே அதில் வெற்றிக் கண்டாரா? அவர் எப்போது வருவார்? என்னைப் பிரிய மாட்டேன் என்று சபதம் செய்து கொடுத் திருக்கிறாரே அதை அவருக்கு நினைவுப்படுத்துகிறீர்களா?'' என்று மளமளவென்று தன் உணர்ச்சியையெல்லாம் கொட்டிக் கேள்விமேல் கேள்வி கேட்டாள்.

அதற்கு அவன் கூறிய மறுமொழி குமுதாவைப் பெரிதும் கலக்கி வேதனை அடையச் செய்தது.



அத்தியாயம் 12

"உங்களால் முடியும்"

அச்சுதன் வஞ்சிமா நகரில் எப்படி வாழ்க்கை நடத்துகிறான் என்பது குறித்து அவனுடைய நண்பன் சொல்லி வந்ததைக் கேட்கும்போது குமுதவல்லிக்கு ஒருகணம் பெருமையாக இருந்தது. ஆனால், மறுகணமே சொல்ல முடியாத வேதனையொன்று இதயத்தில் எழுவது போல் தோன்றியது.

வஞ்சிமா நகர மதிளகத்திற்கு அவன் அடிக்கடிப் போகிறானாம். சேர மன்னரது கனிவு நிறைந்த திருப்பாவை அவன் மீது வீழ்ந்துவிட்டதாம். ஆஹா! அரசரின் அன்புக்குத் தன் ஆருயிர் பாத்திரராகிவிட்டாரென்றால் பெருமைதானே!

மாளிகையில் உள்ளவர்கள் அவருக்கு அறிமுகமாயிருக்கிறார்களாம்; அவர்களது நிமித்தமாக வஞ்சிமா நகருக்கு அருகேயுள்ள பகவதி அம்மன் கோவிலுக்கு அடிக்கடி செல்கிறார் அவர் என்பதைக் கேட்கும்போது குமுதவல்லிக்கு வேதனை ஏற்பட்டது. தெய்வ சந்நிதானத்திற்கு அவர் செல்கிறார் என்பதைக் கேள்விப்படும்போது ஏன் வேதனை?

அச்சுதன் பகவதி அம்மையின் திருச்சந்நிதியில் நின்று மெய்சிலிர்க்க வணங்கித் துதித்தால் சரி; ஆனால், அங்கே சாத்தன்குட்டி என்னும் மந்திரவாதியிடம் நெருங்கிப் பழகுகிறார் என்றால் குமுதவல்லிக்கு வேதனை ஏற்படாதா?

குமுதவல்லி இதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

"தேவி பகவதி! என் அன்பரை, ஆருயிரை, யாருக்கா இவ்வளவு காலம் காத்திருக்கிறேனோ அவரை விரைவில் என்னிடம் சேர்க்கமாட்டாயா?" என்று அவள் கண்ணீர் ததும்ப பிரார்த்தனை செய்து கொண்டாள்.

அவளுடைய கண்ணீரைக் கண்ட அச்சுதனின் நண்பன் திடுக்கிட்டான். மெள்ள மெள்ள அச்சுதனைப் பற்றிக் குமுதவல்லியிடம் கூறி, அவன் மீது அவளுக்கு வெறுப்பு ஏற்படுமாறு செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்தான்

அச்சுதனின் நண்பன். 'அச்சுதனுக்கு வஞ்சி நகரில் வஞ்சி மாருத்தியின் மீது காதல் ஏற்பட்டிருக்கிறது. அவளை விட்டு அவன் எங்கே வரப்போகிறான்' என்றும் கடைசியாகக் கூறிவிட வேண்டும் என்ற திட்டமும் அவனுக்கு இருந்தது.

ஆனால், குமுதவல்லி ஏனோ கண்ணீர் விட்டாள். விம்மல் ஒலி எழுந்தது. அவள் பிரார்த்தனையின் குரல் அவன் காதில் விழுந்தது. அச்சுதனிடம் அவளுக்கு உள்ள அசைக்க முடியாத அன்பை அறிந்த அவன் மெல்ல அங்கிருந்து நழுவிவிட்டான். ஏதாவது கூறப்போக அவள் கோபத்துக்கு ஆளாகாம இருக்கலாமன்றோ?

குமுதவல்லி அன்று முழுமையும் யாருடனும் பேசவில்லை. அச்சுதனின் தாய் பலவாறு கேட்டும் அவள் ஏதும் சொல்ல வில்லை. நிலைகுத்திட்ட அவள் பார்வை தாய்க்குப் பயத்தை அளித்தது. ஊர்ப்பூசாரியை அழைத்து வருவதற்கு அந்த மூதாட்டி விரைந்தாள்.

அவள் சென்ற மறுகணம் குமுதவல்லி எழுந்து கிராமத்தின் எல்லையிலுள்ள காளி கோயிலை நோக்கி ஓடினாள். உள்ளத்திலே உள்ள வேதனை அனைத்தையும் காளியிடம் சொல்லிப் புலம்பினாள். வாய்விட்டழுதாள். பல முறை சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தாள். கர்ப்பக்கிருகத்தின் படிகளில் தலையைப் பலமுறை முட்டி மோதிக்கொண்டாள்.

தாம் என்ன செய்கிறோமென்றே அறியாத நிலை. மயக்கமுற்று வீழ்ந்துவிட்ட அவளைச் சிலர் வீடு கொண்டு சேர்த்தனர். கண் விழிக்கவில்லை அவள். உடல் தணலாய்க் கொதித்தது. ஆயிரம் ஊசிகள் அவள் உடல் எங்கும் குத்தப்பட்டதுபோல் அவளுக்குத் தோன்றியது. யாரோ உடலெனும் வீணையின் மெல்லிய நரம்புகளைச் சுண்டிவிட்ட உணர்வு அவளுக்கு ஏற்பட்டது. இந்த உலகத்திலேயே இல்லாதது போன்ற பிரமை ஏற்பட்டது அவளுக்கு.

மறுகணம் பூப்போன்ற படுக்கையில் அவள் அமர்ந்திருக் கிறாள்; அன்னத்தூவி போன்ற அப்பஞ்சணை அவளை மெல்லச் சுமந்து கொண்டு புறப்படுகிறது. வானவீதியிலே பவனி வருகிறது. அதே வஞ்சிமா நகரத்து வானைத் தொடும் மாட மாளிகை. சுற்றிலும் மதில், அவர் அங்கிருக்கிறாரா? இல்லை, சரி... பகவதி கோயிலில் தான் இருப்பார்.

குமுதவல்லி அங்கே விரைகிறாள். தாள சப்தம் கண கணவென ஒலிக்கிறது. 'பூம் - பூம்' என்ற சங்கொலி எழுகிறது. 'டண் டண்' என்ற மத்தள சப்தம். பட்டத்து யானை அசைந்தாடி

நிற்கிறது. சர விளக்குகள் சந்நிதியில் மிளிர்ந்து அவளை அழைக்கின்றன. விளக்குகளுக்கு விளக்காய் ஓராயிரம் கோடி கோடிக் கதிரொளிப் பிழம்பாய் அன்னை பகவதி அவள் எதிரே நிற்கிறாள்.

தேவி பராசக்தி மட்டும்தானா அவள் விழிகளுக்குத் தெரிகிறாள்? அதோ, அச்சுதனும் தேவியின் காலடியில் நிற்கிறான். தேவியை வணங்கத் தோன்றவில்லை குமுதவல்லிக்கு. அவள் அச்சுதனைக் கூவி அழைக்கிறாள். 'வந்து விடு, வந்துவிடு' என்று கூவுகிறாள். அச்சுதன் தலையசைத்து வர மறுக்கிறானா?

குமுதவல்லிக்கு ஏற்பட்டது கோபமா? தாபமா? காதல் வேதனையா; "அச்சுதா! வந்துவிடு நாம் ஓடிப்போய் விடுவோம். உங்களை என்னிடமிருந்து பிரிக்கச் செய்யும் இந்தச் சூழலில் இருந்துத் தப்பிவிடுவோம். எனக்குக் கொடுத்த வாக்கு என்னவாகியது! உங்கள் தாய் கூறிய உறுதியின் கதி என்ன? என் ஊருக்கு நாம் திரும்பிவிடுவோம். அங்கே என் தாய் உனக்காகக் காத்திருப்பாள். அங்கே என் வீணை தூசு படிந்து கிடக்கும். அதை மீட்டி இன்பநாதம் கூட்டுவேன். நீ என் வாழ்வில் நற்கீதம் சேர்க்க வா..." என்று கூவுகிறாள்.

அச்சுதன் வரவில்லை. குமுதவல்லிக்குக் கோபம் கோபமாக வருகிறது. கருணை வடிவாய்த் திகழும் பகவதித் தாய் மீது கோபங்கொள்கிறாள். தாயை நோக்கி என்னென்னவோ கேட்கிறாள்; அவளுக்கே தெரியவில்லை; புரியவில்லை; செய்வதென்னவென்று அறியவில்லை.

அவளுக்கு மட்டும்தானா அந்த நிலை? அவளைச் சுற்றியுள்ள ஒருவருக்கும் புரியவில்லை. குமுதவல்லி கடும் காய்ச்சல் வேகத்தில் 'ஏதேதோ பிதற்றுவதை உணர்ந்து கொள்ளக்கூடிய சக்தி அவர்களுக்கில்லை. அவள் பகவதி கோயிலுக்குச் சென்றதும் தீப்பிழம்பான தாயின் அருள் வடிவைக் கண்டதும் எப்படி என அவளே அறியாததுபோல் மற்றவர்களும் அறியாமல் திகைத்தனர்.

குமுதவல்லிக்கு இதுவரையில் நடந்ததுதான் தெரியும். அதைக் காமவல்லியிடம் கூறும்போது குமுதவல்லி கண் கலங்கினாள். "அம்மா; அந்த விநாடிவரை தான் எனக்கு நினைவு இருந்தது.

கிராமக்கோயிலில் நான் மயக்கமடைந்த வரையில்தான் எனக்குத் தெரியும். மற்றவை பிறர் சொல்லித்தான் அறிந்தேன். கடும் காய்ச்சல் உடல் முழுமையும் முத்து முத்தாய் மலரச் செய்தது. அச்சுதனின் தாய் இரவு பகலும் என்னருகே இருந்து

வேதனையுடன் பாடுபட்டார்கள். பச்சை வாழைத் தண்டிலே என்னைப் படுக்க வைத்தார்களாம்.

''நான் யார் வருகைக்காக இவ்வளவு வேதனையையும் அடையச் சித்தமாயிருந்தேனோ, கனவிலும் பகவதி தேவியை நோக்கி, 'நீ அவரை என்னுடன் அனுப்பு' என்று கூவ விடை வராது கோபித்தேனோ, அவர் ஒரு நாள் திடீரென வந்தாராம். தாய்க்கே தன் மகனை அடையாளம் தெரியவில்லையாம். பிறகு அறிந்து என்னைச் சுட்டிக்காட்டி வேதனையால் கண்ணீர் விட்டாளாம். என்னருகேயே உட்கார்ந்து கொண்டு என்னைப் பிரியாமல் இருக்குமாறு தாய் வேண்டினாளாம். ஆனால், அவர் அந்த வீட்டிலே ஒரு கணம் கூட அமரவில்லை.

''என் அருகே வந்து நின்று என்னையே உற்றுச் சிறிது நேரம் பார்த்து இருந்துவிட்டுப் பிறகு தன் தாய் அருகே சென்றாராம். தாயின் பாதங்களை தொட்டு வணங்கி, 'பெரும் கடமையைத் தலைமீது சுமந்து இருக்கிறேன். அதை நிறைவேற்றிவிட்டு வந்து தங்களைச் சந்திக்கிறேன்' என்றாராம்.

''எப்போது வருவாய் என்று தாய் கேட்டதற்கு, 'ஒரு நாளோ, ஒரு மாதமோ, பல ஆண்டுகளோ, யுகமோ தெரியாது!' என்றாராம். ஒரு யுகம் என்ன ஓராயிரம் வரை கூடக் காத்திருப்பேன். ஆனால் வருவாரா? எனக்கு ஏற்படப் போகும் இந்த கோர நிலையை அறிந்து கொள்ளத் தான் என்னைக் கைவிட்டுச் சென்றுவிட்டாரா? கடமையைத் தலைமேல் ஏற்றிருக்கிறேன் என்றாரே? என்ன கடமை என்று எனக்கு இன்று வரையில் தெரியவில்லை அம்மா!'' குமுதவல்லி இங்கு சற்று நிறுத்தினாள். அவள் கண்களில் கண்ணீர் பொங்கியது.

''என் கரம் தொட்டது கடமையன்றோ! என்னைப் பிரிய மாட்டேன் என்று கூறியது கடமையன்றோ? பின் ஏன் அவர் என்னை விட்டுப் பிரிந்தார்? என் அழகு குன்றியதாலா? என் நீண்ட கருநாகக் கூந்தல் பட்டமரமென ஒற்றைச் சரடு போல் ஆகியதாலா? வேல்விழி சரிந்து பால் விழியானதாலா? முழுமதி முகம் முழுவதும் களங்கத்தால் கருமையாகியது போல் மாறியதாலா? வேய்ந்தோள் வாடி குறுகியதாலா? குமிழ்ச் சிரிப்பு மறைந்து அதில் கோரநகை பிரதிபலிப்பதாலா! சொல்லுங்கள் தாயே, சொல்லுங்கள்'' என்று விம்மினாள் அவள். பிறகு தொடர்ந்து, ''ஐயோ, நீங்கள் என்ன சொல்வீர்கள்? உங்களைக் கேட்கிறேனே! உங்களுக்கு நடந்தவை எல்லாம் தெரியுமா? என் நோய் தீர்ந்தது. புயல் வீசி ஓய்ந்து பாழான களம் போலானேன். எழுந்து நடமாடும் சக்தி பெற்றவுடன், என் தெய்வம் என் அருகே வந்து நின்றுவிட்டுச் சென்றதை

அறிந்தேன். எனக்கு மட்டும் அப்போது நினைவு இருந்திருந்தால் அவரைப் பிரிந்திருப்பேனா? என் கடவுளை நாடிப் புறப்பட்டேன். வஞ்சிமா நகரம் சென்றடைந்தேன். அங்குதான் என் உருவத்தில் ஏற்பட்டுவிட்ட பயங்கர மாறுதலை அறிந்தேன். என் அழகு சிதைந்ததைக் கண்டு நான் வருத்தப்படவில்லை.

''ஆனால் என்னைக் கண்டவுடன் முகம் சுளிக்கிறார்களே, வேதனையால் கண்களை மூடிக் கொள்கிறார்களே, அதை நினைக்கும்போதுதான் என் இதயமே வெடித்துவிடும் போலிருக்கிறது. பகலிலே நடமாடக் கூசினேன். இருளை ஏற்றேன்; ஊர் ஊராக நாடு நாடாக அவரை நாடித் தேடி அலைகிறேன். கடைசியாகச் சோழ நாடு வந்தடைந்தேன். தாங்கள் என்னைக் காப்பாற்றினீர்கள்'' என்றாள் கோர வடிவமடைந்த குமுதவல்லி.

''நீ தானம்மா என்னைக் காப்பாற்றினாய். இல்லாவிடில் நான் காவிரியுடன் காவிரியாய்ச் சென்றிருப்பேன்'' என்று உடல் சிலிர்க்க கூறினாள் காமவல்லி.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்! நான் தங்களைக் காப்பாற்றினேன். பிரவாகத்தோடு பிரவாகமாகச் செல்லாமல் காப்பாற்றினேன். நீங்கள்தான் என்னைப் பிறவிப் பெருங்கடல் அலையில் மிதந்து செல்லாமல் காப்பாற்ற வேண்டும்'' என்றாள் குமுதவல்லி.

❖ ❖ ❖

காமவல்லியிடம் குமுதா கூறிய இவற்றை அப்படியே ஒன்று விடாமல் காமவல்லி மாணிக்கப் புலவரிடம் கூறியவுடன் சுவையாகக் கேட்டவண்ணமிருந்த அவர், ''ஆமாம், தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று உன்னை வேண்டிக் கொண்டாளே எதற்காக? நீ எவ்வாறு அவளைக் காப்பாற்ற முடியும்?'' என்று கேட்டார்.

காமவல்லி சற்றுநேரம் மௌனமாக இருந்தாள். பிறகு மெல்லிய குரலில், ''புலவரே சரியான கேள்வி கேட்டீர்! அந்தக் கேள்வியிலே அவளைக் காப்பாற்ற நீங்கள் முன் வருவீர்கள் என்னும் நம்பிக்கை பிரதிபலிக்கிறது. முதலில் அவள் கேட்டபோது எப்படிக் காப்பாற்ற போகிறோமோ என எண்ணினேன். பிறகு உங்கள் நினைவு வந்தது'' என்றாள்.

புலவர் பரபரப்புடன், ''என் நினைவா!'' என்று கேட்டார்.

''ஆமாம்! தங்களுக்கு என் நினைவு எப்போதாவது தான் வருகிறது. ஆனால் நான் அவ்வப்போது நினைத்துக்

கொள்கிறேன். பாவம், அந்தப் பெண் கண்ணீர் விட்டுக் கூறும்போது உங்களை உறுதியாக நினைத்துக் கொண்டேன்.''

''எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் என்ன சம்பந்தம்? ஒரு கிழவனை நான் அந்த அச்சுதன் என்று ஏற்றுக் கொள்ளச் சொல்கிறாயா?''

புலவர் கூறியதைக் கேட்டுக் காமவல்லி குலுங்கக் குலுங்க நகைத்து, ''சரிதான் அச்சுதனாக மாற உங்களால் முடியுமா? அவர் இளைஞர்.'' அவளுடைய வர்ணனையைப் பார்க்கும் போது சுந்தர ரூபமுடையவராய்த் தோன்றுவார் போலிருக்கிறது. அத்துடன் தங்களைக் குமுதவல்லி பார்த்தால் அச்சுதன் நினைவை அவள் மறந்துவிடுவாள். நான் அதைச் சொல்ல வரவில்லை! தஞ்சையில் துறவியொருவர் வந்திருக்கிறாராமே?'' என்று பேச்சைத் தொடங்கினாள் காமவல்லி.

''ஆமாம், வந்திருக்கிறார். சிஷ்யகோடிகளோடு வந்திருக்கிறார். அவரிடம் தமிழின்பம் அனுபவிக்கலாம் என்று அவர் குடிலுக்குச் செல்லப் போக, அவர் சீடர்கள் சிற்றின்ப இலக்கியத்தை என்னிடம் பாடம் கேட்க முனைந்துவிட்டார்கள்.

''மிகவும் நல்லதாய் போயிற்று! சீடர்களின் கருணை தான் வேண்டும். அவர்களை வசியப்படுத்த நல்ல காரியம் செய்தீர்கள். பரண்மேல் தாங்கள் தேடிய சுவடிகள் கிடைத்தனவா?''

''ஆகா; அகப்பட்டன; எனக்கென்னவோ இந்த வயதில் அப்படிப்பட்ட நூல்களைக் கற்பிக்க விருப்பம் ஏற்படவில்லை. ஆனால், ஒரு காரணத்துக்காக அவர்களுடன் பழக வேண்டியிருக்கிறது. பழகுவதற்காக அவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது.''

காமவல்லி அவ்வாறு கூறியதும் குண்டலக் கவிராயரான மாணிக்கப் புலவரின் உடல் சிலிர்த்தது. ''குஞ்சரியையும், குழலியையும் அழைத்துச் செல்வது என்றால் அவர் மகிழ்ச்சியுடன் ஏற்பார். பிறர் கண்டால் முகம் சுளிக்கும் ரூபமுடையவளை அந்தக் குடிலுக்கு அழைத்துச் சென்றால் கல்லையும், மண்ணையும் எடுத்து 'சீடகோடிகள்' விட்டெறிய மாட்டார்களா?'

''துறவியின் குடிலுக்கா?'' என சோகக் குரலில் கேட்டார்.

''ஆமாம், நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் குமுதாவை அங்கே இரவோடு இரவாக அழைத்துச் செல்ல வேண்டும். அவர் தங்கியிருக்கும் இடத்தின் பின்புறத்தில் அவளை இருக்கச் செய்ய வேண்டும். அதிகாலையில் அவள் வீணை மீட்டுவாள்....'' காமவல்லி கூறிக்கொண்டே செல்லும்போது புலவருக்குப் புரிந்துவிட்டது.

தஞ்சையில் வந்து தங்கியிருக்கும் சிவசேகர பண்டிதர் தான் அச்சுதனாக இருக்கும் என்று குமுதவல்லி நினைக்கிறாள். வீணை ஒலியெழுந்தவுடன், பழக்கப்பட்ட இசையினால் அவர் திடுக்கிட்டுக் குமுதவல்லியை வந்து சந்திப்பார்.

புலவர் முகத்தில் தெளிவு ஏற்பட்டது. ஒரு பெண்ணுக்கு மறுவாழ்வு அளிக்கும் நல்ல காரியத்தைத்தான் செய்யப் போகிறோம் என்ற பெருமிதம் உண்டாயிற்று. அதே கணத்தில் துறவியின் பெயருக்கு மாசு கற்பிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தும்படி நேரிடுகிறதே என்ற வருத்தமும் ஏற்பட்டது.

''என்ன சிந்தனையிலாழ்ந்து விட்டீர்கள்? பிறவி எடுத்ததே வாழ்நாளில் யாருக்காவது நல்ல காரியமொன்று செய்ய வேண்டும் என்பதற்காகத்தான். அதிலும் ஒரு பெண்ணை மணாளனுடன் சேர்த்து வைப்பதைப் போன்ற கைங்கரியம் வேறு எதுவுமில்லை. உங்களால் முடியும் என்று எனக்குத் தெரியும். அப்படி ஒருவேளை முடியாவிட்டால் நானே துறவியின் குடிலுக்கு நேரே சென்று அவரைச் சந்தித்துக் காரியத்தை வெற்றிகரமாக முடிக்கிறேன்'' என்றாள் காமவல்லி.

காமவல்லி ஆத்ம சோதனையைப் பற்றிப் பேசுகிறாள். மணாளனைச் சேர்த்து வைப்பதைப்பற்றி இவள் பேசுவதா? மாணிக்கப் புலவர் வியப்படைந்தார். அவள் இட்டிருக்கும் பணி மகத்தானதுதான்.

ஆனால், அதிலே பெரும் தொல்லையும் இருக்கிறது. இதுவரை இப்படிப்பட்ட சங்கடங்களில் அவர் சிக்கியது கிடையாது. இப்போது இப்படி நேர்ந்துவிட்டது. காமவல்லியின் வேண்டுகோளைத் தட்டவும் முடியாது; ஆனால் அதை நிறைவேற்றுவதில் ஏற்படப்போகும் விளைவோ...''

குண்டலப் புலவர் பெருமூச்சு விட்டபடி எழுந்தார். ''ஒன்றுமே மறுமொழி கூறாமல் புறப்பட்டுவிட்டீர்களே...'' என்று குழைந்தவாறு அவருடைய தோள்களைப் பற்றினாள் காமவல்லி.

வயதின் முதிர்ச்சி, ஸ்பரிசத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. ஆனால், அதை அவர் உணர்ந்து அனுபவிக்கும் நிலையிலில்லை.

''நீ சொல்லிவிட்டால் நான் மறுப்பேனா?'' என்று சிறிது நகைத்துக் கொண்டு கூறியவாறு அவர் அந்த வீட்டிலிருந்து புறப்பட்டார்.



அத்தியாயம் 13

பெண்ணா பேயா?

மாணிக்கப் புலவர் தள்ளாடியவாறு நடந்து கொண்டிருந்தார். முன்பே அவருடைய உடல் சுமை நடையைத் தடைப்படுத்தும். இப்போது மனச்சுமை வேறு சேர்ந்துவிட்டது. காமவல்லியின் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும். எளிதான காரியத்தை அவள் சொல்லிவிடவில்லை.

துறவி ஒருவரிடம் சென்று அவருடைய மனதுக்கு இனியவளை ஏற்றுக் கொள்ளுமாறு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது சாதாரண காரியமா? சோழச் சக்கரவர்த்திகளின் மதிப்பையும் மரியாதையையும் பெற்றிருக்கும் அந்தத் துறவி, தன் பெயர் மாசுபடும்படியான ஒரு காரியத்தில் இறங்குவாரா? அமுதவல்லியின் மீது திடீரென்று காமவல்லி அபிமானம் மிகக் கொண்டதற்குக் காரணம் என்னவாக இருக்கும்? இவ்வாறு புலவர் சிந்தித்தவாறு நடந்தார்.

குழப்பம் அதிகமானதே தவிர, வழி பிறக்கவில்லை. அதற்குத்தான் வழி பிறக்கவில்லை; நடந்து செல்லும் வழியாவது சரியாக இருக்கிறதா என்றால், சாலை இருள் நிறைந்து காணப்பட்டது.

ஆற்றிலே தண்ணீர் முழு அளவுக்கு ஓடிக் கொண்டிருந்தது. தோணியின் உதவியில்லாமல் ஆற்றைக் கடக்க முடியாது. இதுபோன்ற வேளைகளில் எந்நேரமானாலும் அக்கரைக்கு அழைத்துச் செல்லத் தோணி ஓட்டும் தோணிக்காரனை வழக்கமான இடத்தில் காணவில்லை.

புலவருக்குப் பசியும், சிந்தனை அதிகரித்ததால் ஏற்பட்ட மனச் சோர்வும் சேர்ந்தன. 'குறிப்பிட்ட நேரத்தில் தஞ்சைக்குச் செல்ல முடியாது. நடு சாமத்தில் சென்று விட்டுத் தேவியை எழுப்ப வேண்டும். அவள் கோபத்துக்கு ஆளாக வேண்டும். கடவுளே! நமக்கு ஏன் இந்த வம்பு எல்லாம்? 'சிவனே' என்று இரண்டு அந்தாதியும் வெண்பாவும் இயற்றிக் கொண்டு

காலத்தைக் கழிப்பது போக, சிக்கல்களில் தலையைக் கொடுப்பானேன்.

வானத்தே மதி ஒளி மெல்ல எழுந்தது. தோணி ஒன்று மறுகரையிலிருந்து வருவது தெரிந்தது. அப்பாடா என்று பெருமூச்சு விட்டவாறு புலவர் தோணித்துறை அருகே அமர்ந்தார். என்னதான் மறக்க முயன்றாலும் காமவல்லியின் வீட்டில் சில நாழிகைப் போதில் நடைபெற்ற சம்பவங்களை அவரால் அவ்வளவு சாதாரணமானவை என்று தள்ள முடியவில்லை.

இளவரசன் உத்தமசீலி வந்தது இருக்கட்டும்; சக்கரவர்த்தி காமவல்லியை மறுநாள் வெண்ணாற்றங்கரை மாளிகைக்கு வருமாறு கூறி அழைத்திருப்பதற்கு ஏதாவது முக்கிய காரணம் இருக்க வேண்டும்.

காமவல்லி தன் வீட்டில் குரூபியான குமுதவல்லியை மறைத்து வைத்திருப்பதற்கும் திட்டமொன்று பின்னணியில் இருக்க வேண்டும். குமுதவல்லியின் கதையைத் தன்னிடம் கூறி மீண்டும் அவளுக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துவதும் 'உள்ளர்த்தம் அற்றது' என்று தள்ளிவிட முடியாது.

புலவருடைய கற்பனை அருவி எங்கெல்லாமோ பாய்ந்தாலும், வயிறு அவரை அதிகம் சிந்திக்க முடியாமல் தடுத்து நிறுத்தியது. தோணி வந்து சேர்ந்துவிட்டது. தோணிக்காரன் உடனே புறப்பட முடியாமல் நிம்மதியாக அவர் எதிரே வந்து உட்கார்ந்து வெற்றிலைப் பாக்குப் போடத் தொடங்கி விட்டான். அவர் அவசரம் அவருக்குத் தான் தெரியும். ''என்ன புறப்படலாமா?'' என்று கேட்டுக் கொண்டே புலவர் எழுந்தார்.

தோணிக்காரன் மறுமொழி ஏதும் பேசாமல் எதிரே உள்ள சாலையை நோக்கி, ''யாராவது வருவது தெரிகிறதா பாருங்களேன்'' என்றான்.

''ஏன் இன்னும் கூட்டம் சேர்ந்தால்தான் தோணி ஓட்டுவாயா?'' என்று புலவர் கவலை நிறைந்த குரலில் கேட்டார்.

தோணிக்காரன் சாலைப்பக்கம் நோக்கியவாறு, ''சாயங் காலமே மற்றொருவர் இந்த நேரத்தில் வருவதாக உறுதி கூறி அதற்கான கூலியையும் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டதாகவும், அவர் ஊருக்குப் புதிது என்றும், அதனால் தான் காத்திருப்பதாகவும்' அவரிடம் கூறினான். புலவரும் சேர்ந்து

சாலையை உற்று நோக்கினார். நிலவு ஒளியில் யாரோ வேகமாக வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

தோணிக்காரன் கூறியது உண்மைதான். அவர் பார்வை யிலிருந்தும் தோற்றத்திலிருந்தும் அவர் ஊருக்குப் புதியவர் என்பதும் தெளிவாகத் தெரிந்தது. யாருடனும் எளிதில் பேச்சுக் கொடுத்துப் பழகக்கூடிய குண்டலப் புலவர் அந்தப் புதியவரையும் வெகு எளிதில் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டார்.

ஆனால், வந்தவர் எண்ணி எண்ணிப் பேசக் கூடியவராக இருந்தார். பேச்சை அளந்து பேசுவது அவரது இயற்கைக் குணமா அல்லது அந்தச் சூழ்நிலைக்காக அப்படி நடிக்கிறாரா என்பதைப் புரிந்து கொள்வது புலவருக்கு எளிதாகப்படவில்லை.

குண்டலப் புலவரின் சொல் திறமையில் பேசா மடந்தையும் பேசிவிடும். உடன் வந்தவர் தொண்டை மண்டலத்திலிருந்து வருவதாகவும், கோயில்களை ஆகம முறைப்படி அமைக்கும் கலையில் வல்ல சிற்பிதான் என்பதையும், தஞ்சைக்கு வந்து சோழ சக்கரவர்த்திகளை எவ்விதமாவது சந்தித்துச் சோழ நாட்டில் கோயில்களைப் புதுப்பிக்கும் பணியை ஏற்க விரும்புவதாகவும் கூறினார்.

சிற்பி ஒருவரை அறிமுகம் செய்து கொண்டதில் புலவர் மிக மகிழ்ச்சியடைந்தார். மேலும் அவர் காஞ்சி மாநகரிலுள்ள கைலாசநாதர் ஆலயத்தைப் பற்றியும், ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலைப் பற்றியும், வைகுண்டவாசன் விண்ணகரத்தைப் பற்றியும் விவரித்தார்.

''சோழ நாட்டிலும் காஞ்சியைப் போன்று பெரும் கோயில்கள் எழுப்ப வேண்டும் என்பது என் நெடு நாளைய ஆசை'' என்றார் சிற்பி.

''ஓகோ! காஞ்சி நகரம் தஞ்சையைவிட அவ்வளவு பெரிதா?''

''நான் தஞ்சையைப் பார்த்ததில்லை. ஆனால் உறுதியாக நான் சொல்வேன். தஞ்சையை விடக் காஞ்சி மாநகர் பல மடங்கு பெரிதாகத்தான் இருக்கும் என்று. தஞ்சை பெரிய நகரமா இருந்திருந்தால் கட்டாயம் பல கோயில்கள் இங்கு இருந்திருக்கும். சிவநேசச் செல்வர் மூவரில் ஒருவர் கூட தஞ்சையைப் பற்றி பாடியதாகத் தெரியவில்லையே....'' என்றார் சிற்பி.

ஊரைக் குறைத்துக் கூறுகிறார் என்று புலவருக்குச் சற்று வருத்தம்தான். சோழநாட்டுத் தலைநகரை விடப் பெரிய நகரம் மற்றொன்று இருக்கிறது என்று சிற்பி கூறும் போது சற்றுப்

பொறாமையாகக் கூட இருந்தது. எந்தவிதத்திலாவது தன் புலமையால் வெல்ல வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

''சோழ நாட்டின் தலைநகரைக் கடல் கொண்டுவிட்டது. இல்லாவிடில் பூம்புகாரைவிடவா காஞ்சி பெரிதாக இருந்திருக்க முடியும்? நந்திபுரம் சென்று பார்த்தீர்களா? எங்கள் சக்கர வர்த்தியின் தந்தை காவிரிக்கரை முழுவதும் கோயில் எடுத்தாரே, உங்களுக்குத் தெரியுமா?'' என்று ஒரு போடு போட்டார் புலவர்.

''உண்மைதான், பல கோயில்கள் எடுத்தது உண்மைதான். ஆனால், காஞ்சியில் உள்ளதைப்போன்று சிற்பங்களை அற்புதமாக அமைத்து ஒரு கோயில்... புலவரே நீங்கள் ஒரு முறை காஞ்சி மாநகருக்கு வந்து பாருங்கள். நகரத்திலே சிறந்தது காஞ்சி என்று வடமொழிப் புலவர் பாராட்டியுள்ளார் தெரியுமா?'' என்றார் சிற்பி.

புலவர் சற்று மௌனமாக இருந்தார். புலவர் முதலில் சந்தேகப்பட்டதுபோல் வேறு நாட்டிலிருந்து சோழ நாட்டிற்கு உளவறிய வரவில்லை என்று தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டுவிட்டார்.

ஆனால் இவ்வளவு கூர்மையாக அவருடன் பேச்சுக் கொடுத்தவரால் தோணி ஓட்டுபவனிடம் முன்பே வந்து தோணிக்கான கட்டணத்தைக் கொடுத்துவிட்டு மீண்டும் எங்கு சென்று வந்தார் என்பதை அறிய முடியவில்லை. அறியும் எண்ணமும் ஏற்படவில்லை.

''உங்கள் சக்கரவர்த்திகளைச் சந்தித்துச் சோழ நாட்டில் கோயில் திருப்பணியைத் தொடங்கச் செய்ய வேண்டும் என்பதற்காகக் காஞ்சியிலிருந்து புறப்பட்டேன். சிற்பிகள் பலர் தொழிலின்றி அங்கே வாடுகிறார்கள். சமாதான காலத்தில் தானே கோயில் திருப்பணிகளைச் செய்யலாம்'' என்றார் சிற்பி. சக்கரவர்த்தியிடம் சிற்பியை அழைத்துச் சென்று தானே அறிமுகப்படுத்த வேண்டும் எனும் ஆவல் மாணிக்கப் புலவருக்கு ஏற்பட்டது.

மறுகரையை அடைந்து தஞ்சை செல்லும் சாலையில் இருவரும் பேசியவாறு நடந்தனர். தொண்டை நாட்டிலுள்ள திருக்கோயில்களைப் பற்றியும், அங்கே பிறந்த புலவர்களைப் பற்றியும் சிற்பி கதை கதையாகக் கூறினார். சோழ நாட்டில் திருவாரூரில் பிறந்த சுந்தரர், தொண்டை நாட்டிற்கு வந்த கதையைச் சொல்லத் தொடங்கினார் சிற்பி.

திருவொற்றியூர் பெருமானைத் தரிசிக்க வந்த சுந்தரர், சங்கிலியார் என்னும் நங்கையைத் திருமணம் செய்து கொண்டு, 'உன்னைப் பிரியேன்' என்று உறுதியளித்ததும், பிறகு ஒருநாள் அவளிடம் சொல்லாமலேயே திருவொற்றியூரை விட்டுப் புறப்பட்டதும், உறுதியினின்று தவறியதால், அவர் கண் பார்வையை இழந்ததும், காஞ்சிமா நகரிலுள்ள ஈசனை வணங்கி, இடக்கண் பார்வையைப் பெற்றதும் ஆகிய இவற்றைப் பற்றி மிகவும் சுவையாகக் கதை போல் கூறிக் கொண்டே வந்தார் சிற்பி.

வாக்குக் கொடுத்து அதை மீறும் மற்றொரு கதையைத் தான் கூறத் துடித்தார் புலவர்.

''கடவுளின் மீது எல்லையற்ற பக்தி உடையவர்கள் ஏன் இவ்வாறு சொன்ன சொல் மீறுகிறார்களோ தெரியவில்லை. வாக்கை மீறுவது என்பது இந்தக் காலத்தில்தான் நடக்கிறது என்று நினைத்தேன். அந்தக் காலத்திலேயே நடந்திருக்கிறது'' என்று தொடங்கினார் புலவர்.

''அறவழிப்படி நடப்பதும், மீறுவதும் உலகம் தோன்றிய போதே தொடங்கிவிட்டது. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது தான் மிகவும் முக்கியமானது'' என்றார் சிற்பி.

''ஓகோ! அப்படியென்றால், மீறுபவருக்குத் தண்டனை ஏற்படுவதும் நிச்சயம்தானே?'' என்றார் புலவர்.

''ஆமாம், அதிலென்ன சந்தேகம்? மேலே இருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே இருக்கும் ஆண்டவனுக்கு அந்தக் காலம், இந்தக் காலம், பழமை, புதுமை என்ற பாகுபாடு கிடையாது. வாக்குறுதியை நிறைவேற்றும் போது பல இடையூறுகள் வரலாம். அவை எல்லாம் சோதனை, சோதனையைக் கடந்தால் வெற்றி உறுதி!'' என்றார் சிற்பி.

புலவர் மெல்ல நகைத்தார். பிறகு, அவர் மெல்லக் கேட்டார்: ''பெரியவர் ஒருவருக்கு மகத்தான சோதனையை ஏற்படுத்தும் கடமையை நான் ஏற்றிருக்கிறேன். அதனால் எனக்குப் பாவம் வந்து சேருமோ?''

''பெரியவரை - மகானைச் சோதிக்கலாமா? அது பாவம் தானே, புலவரே!'' என்றார் சிற்பி.

''பெரியவர் என்றால் வயதில் பெரியவர் அல்லர். இளம் வயதுதான். ஆனால், உலக பந்தங்களைத் துறந்த பெரும் துறவி. அவருக்கு நல்லது ஏற்படுத்தவே சோதனையை

மேற்கொள்ளப் போகிறேன். அவர் ஒரு மங்கைக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியைத் தவறவிடாமல் நிறைவேற்றும் சூழ்நிலையொன்றை அவருக்கு நான் ஏற்படுத்துவதால் எனக்கும் பாவமா விளையும்?'' என்று கேட்டார் புலவர்.

''இப்படியெல்லாம் அரைகுறையாகக் கூறினால் நான் எப்படி அதற்கு மறுமொழி கூற முடியும்?'' என்று சிற்பி கேட்டார்.

கிண்டலாகப் புலவர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு குமுதவல்லியின் கதையைக் கூறி, காமவல்லி தன்னிடம் அளித்துள்ள மகத்தான பொறுப்பை விளக்கினார்.

''நீங்களே சொல்லுங்கள்; அவரோ துறவி. அவரிடம் சென்று நான் எப்படிக் கேட்பது? 'உங்களது பூர்வாச்ரமக் காதலியை நீங்கள் ஏற்க வேண்டும்' என்று சொல்வது சரியா?'' என்று கவலையுடன் கேட்டார் புலவர்.

''நீங்கள் கேள்விப்பட்ட கதை உண்மையென்று தாங்கள் நம்புகிறீர்களா? இவ்வாறு தான் மகான்கள் மீது அவதூறு சொல்பவர்கள் திடீரென்று காளான்கள் போல முளைப்பார்கள். தீர விசாரித்தே நாம் எதையும் செய்ய வேண்டும்'' என்றார் சிற்பி.

புலவர், சற்று நேரம் மௌனமாக இருந்தார். பிறகு ''காமவல்லி யாரையும் அவ்வளவு எளிதில் நம்ப மாட்டாள். அவள் குமுதவல்லியைக் குறித்து என்னிடம் மிகவும் சிபாரிசு செய்கிறாளே?'' என்று கூறினார்.

''காமவல்லிக்குத் துறவியைக் கண்டால் பிடிக்காமல் இருக்கலாம். அவருக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த இவ்வாறு சூழ்ச்சி செய்யலாம் அன்றோ?'' என்று சிற்பி மறுபடியும் மடக்கினார்.

சிற்பி கூறுவதும் உண்மையாக இருக்குமோ என்று தோன்றியது புலவருக்கு. சிறிது நேரம் இருவரும் மௌனமாகவே நடந்தார்கள். தஞ்சைக்கோட்டை வாயிலை நெருங்கிவிட்டார்கள். திடீரென்று புலவருக்கு யோசனை ஒன்று தோன்றியது.

''சிற்பியாரே! நான் நன்றாக யோசித்தேன். அந்த அழகு குலைந்த மங்கை பொய் சொல்லமாட்டாள் என்று தான் எனக்குத் தோன்றுகிறது. அந்தப் பெண் உண்மை நிலையை உறுதிப்படுத்த ஒரு யோசனையையும் கூறியிருக்கிறாள். அவளுடைய வீணா கானத்தில் மயங்கித்தான் துறவியார் பூர்வாச்ரமத்தில் அவள் மீது மோகங் கொண்டாராம்.

இப்பொழுது துறவியின் நேர் எதிரே வராமல் அவர் பலகணிகளில் மட்டும் வீணா கானம் கேட்கும்படி வீணையை மீட்டினால், அப்போது துறவி திடுக்கிட்டுத் திகைத்துத் தன்னைக் காரணமாயம் காண விரும்புவார் என்று கூறுகிறாள். இதற்கென்ன நீங்கள் சொல்கிறீர்கள்?'' என்றார் புலவர்.

சிற்பி ஏதும் மறுமொழி கூறவில்லை. மேலும் தனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாதவர் போல பேச்சை வேறு திசையில் திருப்ப விரும்பினார்.

∴ ∴ ∴

தஞ்சை நகரமே உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. நிலவொளி நகரத்தின் அழகை மேலும் அதிகப்படுத்தியது. அரசரின் மாளிகையின் எழிலைப் புலவர் சிற்பிக்குச் சுட்டிக் காட்டினார். இரவு தன் வீட்டிலேயே தங்கிக் காலையில் எழுந்தவுடன் சக்கரவர்த்தியைக் காணச் செல்லலாம் என்றும் புலவர் கூறினார்.

மாணிக்கப் புலவரின் வருகைக்காக அவர் மனைவி காத்திருந்தாள். எள்ளும் கொள்ளும் வெடிக்கவில்லை. முகத்தில் மலர்ச்சி தவழ்ந்தது. புலவருக்கே வியப்பாக இருந்தது. நல்லவேளையாக வேற்று மனிதர் எதிரே தன் மனைவி சுயரூபத்தைக் காட்டாமல் இருக்கிறாளே என்று அவர் மகிழ்ந்தார்.

கூடத்தில் தட்டு நிறையப் பழங்கள் வைக்கப்பட்டிருந்தன. ''வெகுநேரம் தங்களுக்காகச் சிவசேகர பண்டிதரின் மடத்திலிருந்து அவரது சீடர்களில் ஒருவர் வந்து காத்திருந்தார். அவர் கொண்டு வந்தவைதான் இந்தப் பழங்கள்'' என்றாள் அவரது மனைவி.

சீடர் இன்னும் நிறையக் கொண்டு வந்திருப்பார்; அவர் மனைவி அதைச் சுவைக்காமல் எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டே காத்திருப்பாள்? மீதியைச் சிற்பியும் புலவரும் 'சம்ஹாரம்' செய்தனர்.

திண்ணையிலே படுத்தனர் இருவரும். புலவர் ஏதேதோ பேச முற்பட்டார். ஆனால் சிற்பி படுத்தவுடனேயே நித்திரையில் ஆழ்ந்துவிட்டார். புலவருக்குத் தூக்கமே வரவில்லை. அதிகாலை வேளையில் சில்லென்ற இளங்காற்று அவரைக் கண் அயரச் செய்தது. விடிந்து, கதிரொளி அவரைத் தட்டி எழுப்பியவுடன் திடுக்கிட்டு விழித்தார் புலவர்.

முதல் நாள் இரவு சிற்பியிடம், காமவல்லி கூறியவற்றை அப்படியே கூறிவிட்டோமே! முன்பின் அறிமுகம் இல்லாதவரிடம்

அவ்வாறு கூறலாமா' என்ற கவலையுடனேயே அவர் எழுந்தார். அருகில் படுத்திருந்த சிற்பி விடியும் முன்பே எழுந்து போய் விட்டார் போலும். சொல்லாமல் அவர் போய்விட்டது புலவரின் வேதனையை மேலும் அதிகரிக்கச் செய்தது.

சிவசேகர பண்டிதரின் குடிலுக்கு அவர் வழக்கம்போல் சென்றார். பண்டிதரை எப்போது நெருங்கிப் பேசுவது என்ற யோசனையில் ஆழ்ந்தவாறு, பூஜை எப்போது முடியும் என்று காத்திருந்தார்.

பூஜை முடிந்தவுடன் புலவரைப் பண்டிதர் அழைப்பதாகச் சிறுவன் வந்து கூறினான்.

∴ ∴ ∴

சிவசேகர பண்டிதர் மட்டும் கண்ணை மூடியபடி தியான நிலையில் இருந்தார். புலவர் உள்ளே நுழைந்த காலடி ஓசை கேட்டவுடன், "வாரும், வாரும் குண்டலப் புலவரே! நேற்று இரவு நெடுநேரம் கடந்து வந்தீர்கள் போலிருக்கிறதே!" என்றார்.

"புலவரே! நேற்று நீங்கள் காமவல்லி எனும் கணிகையின் வீட்டிற்குச் சென்றீர்களா?" என்று துறவி கேட்டவுடன் புலவரின் உடல் ஏனோ நடுங்கியது. அவர் அதற்கு ஆம் என்று சொல்வதற்கு முன்பே, "புலவரே! காமவல்லியை உங்களுக்கு நீண்ட காலமாகத் தெரியுமா?" என்று துறவி கேட்டார்.

"ஆம் சுவாமி; அவளை அறிவேன்."

"நல்ல குணம் படைத்தவள் தானே அவள்?"

"ஆமாம். ஆமாம். இப்போது அவள் கவனம் நாட்டுப் பணியில் திரும்பியிருக்கிறது."

"அவள் வீட்டில் ஓர் உருவம் வந்து சேர்ந்திருக்கிறது; நீங்களும் பார்த்தீர்கள் அல்லவா?" இப்படிக் கேட்டு விட்டு பண்டிதர் புலவரின் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். அவருடைய பார்வையின் வேகம் தாளாமல், "ஆமாம், ஆமாம், அதைப்பற்றிப் பேசத்தான் தங்களிடம் வந்தேன்" என்றார் புலவர்.

"உமது அபிமானத்திற்குப் பாத்திரமான காமவல்லியிடம் உடனே போய்ச் சொல்லுங்கள்; அந்தப் பேய் யார் வீட்டில் ஏழு நாட்கள் உணவு உட்கொள்ளுகிறதோ அங்கேயே அதிகப் பலம்பெற்று அதற்கு உணவளிப்பவர்களின் உயிரைக் குடித்துவிடும்" என்று கூறிச் சற்று நிறுத்தினார் சிவசேகர பண்டிதர்.

புலவரின் உடல் முழுவதும் வியர்த்தது. நடுங்கியது.

''புலவரே! காலையில் பூசையின்போது பகவதி சொன்னாள் என்று உடனே காமவல்லியிடம் சொல்லிவிடுங்கள்'' என்றார்.

புலவர் வேதனை நிறைந்த குரலில், ''சுவாமி! பெண் வடிவில் உள்ள அந்தப் பேய் சொன்ன கதையை நம்பிவிட்டாள் காமவல்லி. இப்போது என்ன செய்வது?'' என்றார்.

துறவி புன்முறுவலுடன் பகவதி தேவியின் பாதங்களிலிருந்து குங்குமத்தை எடுத்து அவரிடம் கொடுத்து, ''புலவரே! காமவல்லியின் உயிரைக் குடித்தவுடன் என்னிடம் வந்து சேர அது எண்ணங் கொண்டுள்ளது. ஆனால், அது நடக்காது'' என்றார்.

''சுவாமி இப்போது நான் என்ன செய்வது? அந்தப் பேயைக் காமவல்லியின் வீட்டிலிருந்து ஓட்ட வேண்டும். பல ஆண்டு களுக்குப் பிறகு இப்போதுதான் சக்கரவர்த்திகள் அவளைக் காண அழைக்கிறார். புதிய நடனம் ஒன்றை அவள் அரங்கேற்றப் போகிறாள். இந்தச் சமயத்தில் அவளுக்கு ஆபத்து நேரலாமா? ஆபத்தைத் தடுக்கத் தாங்கள்தான் உதவ வேண்டும். அங்கே வந்து மந்திரம் ஜபித்துப் பேயை ஓட்டுகிறீர்களா?'' என்று புலவர் அச்சத்துடன் கேட்டார்.

''வேண்டாம், வேண்டாம்; காமவல்லியை இங்கே அழைத்து வா! நான் மந்திரித்த குங்குமம் தருகிறேன், எல்லாம் சரியாகிவிடும்'' என்றார்.

புலவர் உடனே அங்கிருந்து புறப்பட்டார். இந்தச் செய்தியைத் தெரிவிக்கத் திருவையாறு நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றார் அவர்.



அத்தியாயம் 14

சிரிப்பும் நெருப்பும்

வெண்ணாற்றங்கரை மாளிகை, நிலவொளியில் குளிது எழுந்து புதுச்சோபையுடன் விளங்கியது. புதுச்சுண்ணம் அடிக்கப்பட்டிருந்த அம்மாளிகையின் மீது வெண்மதியின் தண்ணிலவு படர்ந்து எழிலை மேலும் அதிகப்படுத்தியது. சாளரங்கள் வழியே தெரியும் விளக்கொளி மாளிகைக்கு மன்னரோ அல்லது அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் யாரோ வந்திருக்கின்றனர் என்பதைப் புலப்படுத்தியது.

மாளிகையைத் தழுவுவதுபோல் செல்லும் வெண்ணாறு மாளிகையின் படித்துறையின் அருகே வந்து, மோதிச் சுழன்று ஓடிக் கொண்டிருந்தது.

கரை ஓரமாகத் தாழ்ந்து கிளைகளை ஆற்று நீரில் தாழவிட்டுக் கொண்டிருந்த மரத்தின் மீது நீரின் அலைகள், மெல்ல மெல்ல மோதி ஒருவித மெல்லிய ஒலியை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

மாளிகைப் படித்துறை அருகே அந்தத் தோணி வந்து நின்றது. தோணியை எதிர்பார்த்துக் காத்திருப்பதுபோல் இருந்த மாளிகைக் காவல்வீரன் ஒருவன், கையில் விளக்குடன் வழிகாட்டுவதற்காகப் படித்துறையில் வேகமாக இறங்கி வந்தான்.

தோணியிலிருந்து முதலில், இறங்கியவர் தோணியில் வந்த மூதாட்டியை முதலில் மெல்லக் கைலாகு கொடுத்து இறக்கினார். அம்மூதாட்டி, காமவல்லியை மிகவும் மரியாதையுடனும், கவனத்துடனும் இறங்குவதற்கு ஒத்தாசை செய்தாள்.

காமவல்லி புத்தாடை உடுத்தியிருந்தாள். தலையைப் புதுவிதமாக அலங்கரித்திருந்தாள். கூந்தலில் மணமுள்ள மலர்களைச் சூடியிருந்தாள். கால்களிலே செம்பஞ்சுக் குழம்பெடுத்துச் சித்திரம் தீட்டியிருந்தாள். உள்ளங்கையில் புதுமைக்கோலம் வரைந்திருந்தாள்.

இடையில் முப்பத்திரண்டு முத்து வடங்களால் ஆன மேகலை அசைந்தாடியது. பாதங்களிலே பாடகமும், சதங்கையும் ஓசை எழுப்பின; செவிகளில் உள்ள தோட்டிலே விளங்கும் வைர, வைடூரியம் இருளிலும் ஒளி வீசின. நறுநெய் பூசி, நறுமண நீரில் குளித்ததால் எழுந்த மணம் வெகு தூரம் பரவியது. அவள் அன்று செய்து கொண்டிருந்த ஆடை அலங்காரம் அவளுடைய வயதை மேலும் பத்தாண்டுகள் குறைவாகத் தோன்றுவதற்கு உதவியது.

அவள் அறிந்ததும், அவளுக்குத் தாய் கற்றுக் கொடுத்ததுமான அலங்கார வகைகள் முறைகள் அனைத்தையும் அவள் அன்று பயன்படுத்தினாள். மெல்லிய விரல்களில் நெளி, மணிமோதிரம், வைரமோதிரம் ஆகியன அணிந்திருந்தாள். தோளுக்கு அழகிய தோள் வளைகள் அணிந்திருந்தாள்.

எட்டுத் திசையும் போற்றிப் புகழும் சோழ மாமன்னரை அன்றோ அவள் அன்று சந்திக்கப் போகிறாள்! தன்னைக் காணவருமாறு அவர் தனது மெய்க்காவலரை அனுப்பி அழைத்திருக்கிறார். முக்கியமான ஏதோ ஒரு காரியத்திற்காகத்தான் அவர் அவளை அழைத்திருக்க வேண்டும். மன்னரைக் காணும்போது உற்சாகத்துடன் இருக்க வேண்டும். உற்சாகத்துக்கு உதவுபவை அலங்காரங்கள். அவை தோற்றத்திலும் கவர்ச்சியை ஊட்டுகின்றன.

காமவல்லி சகல கலையிலும் வல்லவள். ஆதலால் மன்னர் மனத்திலே பூரண மகிழ்ச்சி ஏற்படுத்தும் நுட்பம் அறிந்து வந்தாள். வெண்ணாற்றங்கரை மாளிகையை நெருங்க, அவள் இதயத்தில் ஒருவித படபடப்பு ஏற்பட்டது. 'என்ன பேசுவது? அவர் கேள்விக்கு என்ன விடை கூறுவது?' என்ற எண்ணமே அவள் உள்ளத்தில் சுழன்றது. காற்று இனிமையாகவும், இதமாகவும் வீசும்போதே ஏனோ அவள் உடல் வியர்த்தது.

தீவர்த்தியின் ஒளியில் காமவல்லியின் அழகை மௌனமாக ரசித்தான் மாளிகைக் காவல்காரன். மெல்லத் தனக்குள் சிரிக்கவும் செய்தான். அது எதற்காக இருக்கும்? முதுமையை நெருங்கும் அவள் செயற்கையான முறையில் தோற்றத்தை இளமையாக்கிக் கொண்டிருக்கிறாளே என்பதற்காக இருக்குமோ?

ஃ ஃ ஃ

வெண்ணாற்றங்கரை மாளிகை அளவில் பெரியது என்று சொல்ல முடியாவிடினும், மந்திராலோசனை நடத்துவதற்கு

ஏற்ற கட்டுக்காவலும், இரகசிய அறைகளும், வழிகளும் நிறைந்தது என்று கூறலாம். அந்த மாளிகையில் எத்தனையோ முக்கியமான பிரச்சனைகளுக்கு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. பெரும் படையெடுப்புகளுக்கு வேண்டிய திட்டங்கள் அங்கேதான் தீட்டப்பட்டிருக்கின்றன.

காமவல்லி மாளிகையின் நுழைவாயிலின் பிரம்மாண்டமான கதவுகளை ஒருமுறை நோக்கினாள். கீழே விரிக்கப்பட்டிருந்த இரத்தினக் கம்பளங்களைப் பார்த்தாள். அசைந்தாடும் திரைச் சீலைகளை நோக்கினாள்.

விதானத்தில் தீட்டப்பட்டிருந்த ஓவியங்களை ஒரு முறை பார்த்தாள். கூடத்தில் கம்பீரமாக நிற்கும் வழவழப்பான பெருந்தூண்களைத் தொட்டாள். கூடத்துக்கு ஒளி வீசத் தொங்கும் சித்திர வேலைப்பாடு நிறைந்த - அயல்நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட அழகிய விளக்குகளைக் கண்டாள்.

அந்த மாளிகை அப்படியேதான் இருக்கிறது. பருவ வயதில் நடன விருந்தளிக்க அவள் வந்தபோது எப்படி விளங்கியதோ அப்படியேதான் இருக்கிறது. சொல்லப் போனால் மேலும் அழகுடன் காட்சி அளித்தது. சுவர் ஓவியங்கள் கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றன.

விஜயாலய சோழர் முத்தரையர்களுடன் போரிடும் காட்சியை விளக்கும் சித்திரம், அதறகடுத்து மண்ணியாற்றங்கரையில் ஆதித்த சோழர் பாண்டியர்களை எதிர்த்துப் போராடும் உடல் சிலிர்க்க வைக்கும் காட்சி.

''ஆகா! அவ்விருவருடைய பரம்பரையில் வந்தவரன்றோ இப்போது நம்மை ஆளும் பராந்தகச் சோழ தேவர் என்று எண்ணும்போது காமவல்லிக்குப் பெருமையாக இருந்தது.

காமவல்லியின் அருகே அவளுக்குத் துணையாக வந்த மூதாட்டி அடக்க ஒடுக்கமாக நின்று கொண்டிருந்தாள்.

இன்னும் சக்கரவர்த்தி மாளிகைக்கு வரவில்லை என்பதை அங்கே இருந்த காவல்காரரிடமிருந்து கேட்டறிந்தாள் காமவல்லி. அரசர் வருவதற்குள் அந்த விசாலமான கூடத்துச் சுவர்களில் தீட்டப்பட்டிருக்கும். சித்திரங்களை மீண்டும் ஒரு முறை பார்த்து மகிழலாம். தன்னுடன் வந்திருக்கும் மூதாட்டிக்குக் காட்டி விளக்கலாம். தனக்குப் பல பல விஷயங்கள் தெரியும் என்பதைப் பெருமையாகப் புலப்படுத்தலாம்.

''இதோ இதுதான் சிதம்பரம் கோயில்! நமது சக்கரவர்த்திகளின் பாட்டனார் ஆதித்த சோழர் கொங்கு நாட்டிலிருந்து கொண்டுவந்த செல்வங்களின் மூலம் இக்கோயிலின் விமானத்தைப் புதுப் பித்தார்'' என்று காமவல்லி ஓர் ஓவியத்தை விளக்கினாள்.

''அவர் அருகே இருக்கும் சின்னஞ்சிறு பாலகனின் முகத்தில் மின்னும் ஒளியைப் பார்த்தாயா? பராந்தக சக்கரவர்த்தியின் ஆவல் ததும்பும் விழிகளைப் பார்த்தாயா? எப்போதுமே அவருக்குக் கலையார்வம் அதிகம்'' என்று காமவல்லி சித்திரத்திலுள்ள மற்ற ஓவியத்தைக் காட்டி விளக்கினாள்.

''அந்த ஓவியத்தை மீண்டும் உற்றுப் பாருங்கள்; அந்தச் சிறுவனையும், அவரது தந்தையையும் தங்களால் அடையாளம் சொல்ல முடியவில்லையா?'' என்ற குரல் கேட்டுக் காமவல்லி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

இளவரசன் இராஜாதித்தனும் காமவல்லியின் வீட்டுக்கு வந்து அரசருடைய கட்டளையை அறிவித்தவரும் நின்றிருந்தனர்.

காமவல்லிக்கு ஒருகணம் ஏதும் தோன்றவில்லை. அவள் இளவரசரை எதிர்பார்க்கவில்லை. அவர் கேட்டதும் அவள் செவிகளில் சரிவர விழவில்லை. இளவரசரின் கம்பீரத் தோற்றத்தை மீண்டும் ஒருமுறைக் கடைக்கண்ணால் பார்த்தாள். மன்னர் பராந்தக சோழ தேவரை இளமைத் தோற்றத்துடன் காண்பது போலவே இருந்தது.

ஆனால், ஒரு வித்தியாசம்; பராந்தகர் அந்தக் காலத்தில் இவ்வளவு பரபரப்புடன் பேசமாட்டார். அவர் பார்வையிலே ஆழ்ந்த சிந்தனையும், இதயத்திலுள்ளதை நொடியில் அறிந்து கொள்ளக்கூடிய வேகமும் இருக்கும். இராஜாதித்தன் பார்வையிலே பரபரப்பும், எதையும் உடனே செய்துவிட வேண்டும் என்ற துடிப்பும் இருக்கும்.

காமவல்லி தலைகுனிந்து கொண்டு நிற்பதைக் கண்ட இராஜாதித்தன், மரியாதை நிறைந்த குரலில், ''அந்தச் சித்திரத்தில் இருப்பவர் எனது பாட்டனார் ஆதித்தரல்லர். என் தந்தை பராந்தகச் சோழ தேவர் தில்லைச் சிற்றம்பலத்தை எனக்குச் சுட்டிக் காட்டுகிறார்.

''நான் அந்தச் சம்பவத்தை மறந்துவிடவில்லை. பாட்டனாரின் திருப்பணியை என் தந்தை தொடர்ந்தார். என் தந்தையின் பணியை நான் தொடர வேண்டாமா?'' என்று கேட்டான்.

இளவரசருடன் காமவல்லி நேருக்கு நேர் பேசியவளல்லள். அவளுக்கு மகனைப் போன்ற வயதுடைய இராஜாதித்தனுடன் பேசும்போது அவளுக்குக் கூச்சம் ஏற்படுகிறதா? நாணம் எழுகிறதா? அல்லது இயற்கையான மரியாதையா? இயற்கை யாகப் பேச முடியாத காரணம் என்ன? அவளாலேயே புரிந்துகொள்ள முடியவில்லை.

காமவல்லிக்கு அதிர்ச்சிமேல் அதிர்ச்சியாக ஏற்பட்டது. சக்கரவர்த்திகளுக்கு உடல்நிலை சுகமில்லை என்று கூறுகிறார். அதே சமயம் வெளியூருக்குச் செல்லப் போவதாகவும் கூறுகிறாரே அது எப்படி முடியும்? நமக்கிப்போது சோதனை காலமோ...?'

''காமவல்லி, கவலைப்படாதீர்கள். எல்லாம் நல்லபடியாக நடந்தால் தங்கள் குழந்தைகளின் அரங்கேற்றத்தை மிகச் சிறப்பாக நடத்திவிடலாம். நடனத் திறமைக்காகச் சக்கரவர்த்திகள் அளிக்கும் பரிசைப்போல் பல மடங்கு பரிசு தங்களுக்குக் காத்திருக்கிறது.'' என்று இளவரசன் அருகே வீற்றிருந்த பரமேசுவரன் கூறினார்.

''பரிசா? பலமடங்குப் பரிசா? எதற்காகப் பரிசு!'' என்று கேட்பதுபோல் காமவல்லி அவரை நோக்கினாள். அவளைப் பேச விடாமலேயே பரமேசுவரன், ''வரியற்ற தானமாகத் தங்களுக்குக் கொடுப்பதற்கு கட்டளையைச் சக்கரவர்த்தி திருமந்திர ஓலை நாயகத்திடம் கூறிவிட்டார்.

நாட்டுச் சேவைக்கும் புஜபல பராக்கிரமம் மிகுந்த மல்லர் களுக்கும், யுத்த களத்திலே உயிர்நீத்த வீரர்களுக்கும் விழுப் புண்கள் பெற்ற அஞ்சா நெஞ்சகர்களுக்கும் கூட ஒரு கிராமம் இறையிலியாகக் கிடைக்கவில்லை தெரியுமா?'' என்றார்.

''அடடா; நாம் என்ன அவர் கூறுவதை மறுத்துவிட்டோமா? சேவைக்குத் தகுந்த பரிசு போதாது என்றோமா? ஒன்றுமே சொல்லாமல் இருக்கும்போது இவர் ஏதேதோ பேசுகிறாரே! இவர் யார்? இவரைப் பேசவிட்டு இளவரசர் மௌனம் சாதிக்கிறாரே ஏன்? என்னால் ஆகக் கூடியது என்ன? ஒரு கணிகையால் இளம் உள்ளங்களை வேண்டுமானால் மயக்கி இருக்க முடியும்'' என்று எண்ணினாள் காமவல்லி.

அவள் நினைவு தொடர்ந்தது; ஓகோ! இளவரசர் உத்தமசீலி வந்து சென்றதைக் குறித்துதான் இவ்வாறு பேசுகிறார்களோ? அவரை வரவிடாமல் தடுப்பதற்குப் பரிசு தரப்போகிறார்களோ? ஒன்றும் புரியவில்லையே... ஒரு வேளை கங்கபாடிக்கு இளவரசர் செல்லும்போது அவருடன் குஞ்சரியையாவது, குழலியையாவது அனுப்புவதாகக் கூறினேன். அதைத் தடுக்க வேண்டும்

..ன்பதற்காகப் பரிசு தரப் போகிறார்களோ? குழலியையும், ..ஞ்சரியையும் அவ்வளவு எளிதில் அனுப்பிவிடுவேனா! ஏதோ ..ரு பேச்சுக்காக நான் சொன்னேன்; அது இவர்கள் செவிகளுக்கும் ..டிவிட்டதா? உத்தமசீலி வந்து சென்றது தெரிந்துவிட்டதா?

∴ ∴ ∴

காமவல்லியின் அமைதியான தோற்றத்தையும் அவளது ..ழ்ந்த சிந்தனையையும் கண்ட இராஜாதித்தன் பரமேச்வரனைப் ..ார்த்து, "சோழ நாட்டுக் குடிமக்கள் நான் முந்தி, நீ முந்தி ..ன்று போட்டி போட்டுக் கொண்டு தியாகம் புரிய வருவார்கள்; ..வை செய்ய வருவார்கள். இரவு நேரமாகிக் கொண்டு வருகிறது; ..வர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கிச் ..சால்லுங்கள்" என்றான்.

"காமவல்லி!" என்றழைத்த பரமேசுவரன் தொண்டையைக் ..னைத்துக் கொண்டு, 'நாட்டை எதிர்நோக்கியிருக்கும் ஆபத்து ..ங்களுக்குத் தெரிந்திருக்கும் இல்லையா?" என்றான்.

இப்போது இராஜாதித்தன் குபீரென்று சிரித்துவிட்டான். ..ரிப்பை அடக்க முடியாமலேயே பரமேச்வரனை நோக்கி, "ஒற்றர் படையைச் சேர்ந்த உங்களுக்கே ஆபத்தின் முழு ..ளவு தெரியாதிருக்கும்போது அவர்களுக்கு ஆபத்தைக் குறித்து ..ன்ன தெரியும்?" என்றான்.

❋

அத்தியாயம் - 15

இரு சிவிகைகள்

இளவரசரின் சிரிப்பொலி கண்டு காமவல்லிக்கு உள்ளூர நடுக்கம்தான். பரமேசுவரனுக்கு பேச நா எழவில்லை. இளவரசர் வேடிக்கையாகச் சொல்கிறாரோ? ஆபத்தைக் குறித்து அவர் அறிய மாட்டாரா? காமவல்லியைப் போன்ற பெண்களிடம் ரகசியத்தைக் கூறக் கூடாதென்பதற்காகச் சொல்லவில்லையா? ஒற்றர் படைகளைப் பற்றி ஒரேயடியாகக் குறை கூறிவிட்டாரே!

இராஜாதித்தனின் சிரிப்பொலி அடங்கியது. அவரது முகத்தில் பெரும் உணர்ச்சி மாறுதல் கண நேரத்தில் ஏற்பட்டது.

''இதுவரையில் சோழ நாட்டுக்கு எந்தவித ஆபத்தும் இல்லைதான். ஆனால், ஆபத்தை ஏற்படுத்தச் சிலர் பார்க்கிறார்கள். அதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும் என்பதற்காகத்தான் உங்களை இங்கே வரவழைத்தேன். வெண்ணாற்றங்கரை மாளிகைக்கு இந்த நேரத்தில் தன்னை வரச் சொன்னதிலிருந்து அவசரத்தை உணர்ந்திருக்கலாம். தங்களால் ஒரு காரியம் ஆக வேண்டும்'' என்று இராஜாதித்தன் ஆவேசமும், ஆக்ரோஷமும், அதே போதில் அன்பும் குழைவும் கலந்த குரலில் பேசும்போது காமவல்லி உணர்ச்சிவசப்பட்டாள். அவள் விழிகளில் கண்ணீர் தளும்பியது.

இளவரசர் உத்தமசீலியைத் தங்கள் வலையில் விழாமல் நல்வழி திருப்புவதற்காகவே இவ்வளவு பூர்வ பீடிகையும் போடுகிறார் இவர் என்று எண்ணினாள். அவள் குரலில் சோகமும், துக்கமும் ஒன்று கலந்தன.

''இளவரசே!'' என்று பேச ஆரம்பித்த அவள் விம்மினாள். ''இளவரசே! என்னைப் பொறுத்தருளுங்கள். குலத்தொழிலை நான் நடத்துவதை விட்டுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நான் கற்ற நடனக் கலையை இறைவனுக்கு காணிக்கையாக்க மீதி நாட்களைக் கழிக்கத் திட சங்கல்பம் பூண்டுவிட்டேன்.

தேவ சேவையே என் இலட்சியம். இளவரசர் உத்தமசீலி என் வீட்டுக்கு வரும்போது அவர் மீண்டும் வராத வகையில்தான் நல் உபதேசம் செய்து அனுப்புகிறேன். என் வீட்டில் வளரும் குழலி, குஞ்சரி என்ற இரு பெண்கள் மீது அவருக்கு மோகம் ஏற்பட்டுவிட்டது என்று தெரியும். அவரை அந்த மையலில் இருந்து எப்படி விடுவிப்பதென்று நானே தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறேன் நல்ல வேளையாக இன்னும் இரு நாட்களில் அவரும் கங்கபாடிக்குச் செல்லப் போகிறாராம். இளவரசே! நான் இதயப் பூர்வமாகக் கூறுகிறேன். அரச குலத்தவருக்கு ஒருபோதும் தவறான வழிகாட்டமாட்டேன். இதைச் சொல்வதற்காக என்னை இங்கே வரவழைத்திருக்க வேண்டாம். கட்டளையிட்டு லிகிதமொன்று அனுப்பியிருந்தாலே போதும்'' என்று கூறினாள்.

❖ ❖ ❖

அவள் விம்மியவாறு கூறியதும், குரலில் தெரிந்த துக்கமும், விழிகள் சொரிந்த கண்ணீரும் ராஜாதித்தனை வேதனை அடையச் செய்யவில்லை. அதற்கு மாறாக, அவன் மீண்டும் அந்தக் கூடமே அதிரும் வண்ணம் சிரித்தான்.

''ஆகா! அரசாங்க இரகசியங்கள் எவ்வளவு தூரம் செல்கின்றன பார்த்தீர்களா பரமேசுவரன்! உங்கள் ஒற்றர் படையைவிடக் காமவல்லியின் திறமை அதிகம் என்றுதான் நினைக்கிறேன். உத்தமசீலி கங்கபாடிக்குச் செல்லப்போவதை எவ்வளவு அழகாக அறிந்து, தான் அறிந்ததையும் மெல்ல நம்மிடமும் சொல்லிவிட்டாள் பார்த்தீர்களா? உத்தமசீலி இவ்வளவு திறமையற்றவன் என்று எனக்குத் தெரியாது.

இளம் வயதிலேயே பெண் மோகம் ஏற்படுவது இயற்கை. இரகசியங்களை மோகத்துக்கு அடகு வைக்கும் மௌடீகத் தனத்தை நான் இதுவரையில் கேள்விப்பட்டது இல்லை. உத்தமசீலியைக் கங்கபாடிக்கு அனுப்ப வேண்டாம். குஞ்சரியையாவது குழலியையாவது அனுப்புவோம்'' என்று கூறிவிட்டுச் சட்டென்று தனது சிரிப்பை அடக்கி கொண்டான். அந்தச் சிரிப்பில் நெருப்பின் கடுமை புதைந்திருந்தது.

காமவல்லியை வரவழைத்ததே அதற்காகத்தான். கங்க நாட்டுத் தலைநகரான கங்கபாடியில் குழப்பநிலை நிலவுகிறது. கங்கநாட்டு அரசன் பிருதிவிபதியும் அவன் மகன் விக்கி யண்ணனும் கடும் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள் இருவரும் சோழ நாட்டுக்கு மிகவும் வேண்டியவர்கள்.

பூதுாகன் என்ற அவர்களது உறவினன். இந்தச் சமயம் பார்த்து கங்க நாட்டையே தன் வசப்படுத்தத் திட்டம் தீட்டி வருகிறான். பூதுாகனின் பேச்சிலும், திட்டங்களிலும் மயங்கிப் பலர் அவனது வலையில் வீழ்ந்து அவனுக்குதவ முற்பட்டுள்ளனர். பூதுாகனது திட்டங்களை அறியவும் அவனது வேகமான போக்கைத் தடுத்து நிறுத்தவும் சோழ நாட்டிலிருந்து செல்லும் கலைஞர்கள் குழுவினால் தான் இயலும்.

அவ்வப்போது பூதுாகனின் திட்டங்களையும் அரசியல் சூழ்ச்சிகளின் ரகசியங்களையும் அறியக் கலைக்குழுவினரால் தான் முடியும். அதிலும் அழகான பெண்கள் ஓரிருவர் இருந்தால் போதும். உத்தமசீலியின் தலைமையின் கீழ்க் கலைக்குழு ஒன்றை கங்கபாடிக்கு அனுப்ப வேண்டும் என்று ஒற்றர் படைத்தலைவர் பரமேசுவரன் முடிவு செய்தார். எப்படியும் காமவல்லியைப் போன்றவர்களின் உதவி தேவை என்பது தெரியும்.

குஞ்சரியையாவது குழலியையாவது கங்கபாடிக்கு அனுப்ப வேண்டும் என்று காமவல்லியைக் கேட்டுக் கொள்ளவே அவளை வெண்ணாற்றங்கரை மாளிகைக்கு வரவழைத்தது. கங்கபாடிக்குச் செல்லும் அழகு மங்கை செய்ய வேண்டியது என்னென்ன வென்பதை விளக்கவும் பரமேசுவரன் விரும்பினார்.

உத்தமசீலி வந்த விஷயத்தை வாய் தவறிச் சொல்லி விட்டோமே என்று காமவல்லி வேதனைப்பட்டாலும், சோழ நாட்டிற்குத் தனது சேவையை இளவரசர் விரும்புவதில் பெருமிதம் அடைந்தார்.

நன்றி உணர்ச்சி விழிகளில் ஒளிர, ''அரச சேவை செய்ய நான் எப்போதோ அர்ப்பணித்துக் கொண்டுவிட்டேன். தேச சேவையே தேவ சேவை. குஞ்சரி என்ன, குழலியையும் கங்கபாடிக்கு அனுப்பச் சித்தமாயிருக்கிறேன்'' என்று கூறினாள்.

''வேண்டாம், வேண்டாம், யாரையாவது ஒருவரை அனுப்புங்கள் போதும், மற்றொரு இளமங்கையின் சேவை இங்கே தஞ்சையில் தேவை'' என்று கூறி வாய் திறவாமலேயே புன்முறுவல் பூத்தான் பரமேசுவரன்.

''தெய்வ சேவை செய்து கொண்டு இருக்கும் துறவி ஒருவருக்குப் பணிவிடை செய்வதற்கு மற்றொருத்தியை அனுப்ப வேண்டும். நந்தவன மலர் கொய்து, கிணற்று நீர் கொணர்ந்து, பூஜைப் பாத்திரம் துலக்கி, இனிய குரலில் பூஜையின்போது பாடி, தெய்வீகத் தொண்டு செய்ய நீங்கள் மற்றொரு பெண்ணை

அனுப்ப வேண்டும்'' என்று பரமேசுவரன் கூறும்போது, அவருடைய கூரிய விழிகள் காமவல்லியின் இதயத்தில் இருப்பதை அறிந்து விடுவதுபோல் நோக்கின.

''துறவிக்குப் பணிவிடையா?'' - இதைக் கேட்கும்போது காமவல்லி திடுக்கிட்டாள். அவள் உடல் ஏனோ நடுங்கியது.

∴ ∴ ∴

காமவல்லிக்கு இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. படுத்தவாறு சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். குஞ்சரியும், குழலியும் கவலையற்று உறங்கிக் கொண்டிருந்தனர். துன்பமும், சூழ்ச்சியும் அறியாது சுகபோகங்களில் ஆழ்ந்து களிக்க வேண்டிய பருவம்.

இவ்வளவு காலம் ஒன்றாக இந்த வீட்டிலிருந்தவர்கள், இப்போது பிரிந்து செல்லும் வேளை வந்துவிட்டது. பிறப்பால் சகோதரிகளல்லரெனினும் ஒற்றுமையாக வாழ்ந்ததால், ஒன்றாக கலை பயின்றதால், ஒன்றேபோல் நடனமாடுவதால் அவர்கள் சகோதரிகள் போன்றே திகழ்ந்தனர்.

குழலி சற்று தைரியசாலி. உள்ளத்தில் தோன்றுவதை மறைக்காமல் கேட்டுவிடுவாள். குஞ்சரி அமைதியான குணம் படைத்தவள். எதையும் உடனே வெளியிட்டு விடாமல் ஆழ்ந்த யோசனையுடன் எண்ணிப் பேசக்கூடியவள். இவர்களுள் யாரைக் கங்கநாட்டிற்கு அனுப்புவது என்று காமவல்லி யோசிக்கலானாள். குழப்பம் நிறைந்த சூழ்நிலையிலுள்ள ஒரு நாட்டிற்கு இளம் பெண் ஒருத்தி செல்ல வேண்டும் என்றால் மிகுந்த துணிவு வேண்டும். குழலி ஏற்றவள்தான். ஆனால், அவளுடைய முன்கோபம் எடுத்துக் கொண்ட பணிக்கு ஏற்குமா?

கங்கபாடிக்குச் செல்லும் கலைஞர் குழுவை முன்னின்று யார் அழைத்துச் செல்லப் போகிறார்களோ? இளவரசர் உத்தமசீலி செல்கிறார் என்றால் அவருக்கு ஈடு கொடுக்கக் கூடியவள் குழலிதான். ஹூம்! ஒன்றும் புரியாமல் திகைத்தாள் காமவல்லி. உறக்கமும் வரவில்லை. மெல்ல எழுந்து குமுதவல்லி இருக்கும் அறைக்குச் சென்று கதவைத் தட்டினாள்.

''யார்?'' என்ற குரல் உடனே கேட்டது.

''நீயும் தூங்கவில்லையா குமுதா!'' என்று காமவல்லி கேட்டாள்.

கதவு திறக்கப்பட்டது. விளக்கைப் பெரிது பண்ண வேண்டாம் என்று காமவல்லி கேட்டுக் கொண்டாள்.

''என் மனத்திலே சொல்ல முடியாத பரபரப்பு. தாங்கள் அனுப்பியுள்ள புலவர் உடனே துறவியைச் சந்தித்திருப்பார் இல்லையா?'' என்று கேட்டாள் குமுதவல்லி.

''ஓ! அதையே நினைத்துக் கொண்டிருக்கிறாயா நியாயம்தான். விடிவெள்ளியைக் கண்ட பிறகு கதிரைப் பார்க்கும் ஆவலில் உறக்கம் வராதுதான்'' என்று கூறி காமவல்லி மெல்ல நகைத்தாள்.

''இல்லை, இல்லை. நீங்கள் நினைப்பதுபோல் இல்லை. புலவர் அங்கு சென்று துறவியிடம் எவ்வாறு கூறியிருப்பாரோ? நான் நினைப்பது போல் துறவி நான் தேடி வந்தவரோ அல்லது வேறு யாரோ? அப்படியே நான் நாடி வந்தவராக இருந்து நான் அவரை அடைவதற்கு வந்திருக்கிறேன்.

''ஆனால் மீண்டும் பேசத் துணிவாரா? அல்லது அவர் அறியாமலேயே அவரது குடிலுக்குச் சென்று வீணையின் நாதத்தை நான் எழுப்பி அதன் மூலம் அவர் என்னைத் தெரிந்து கொண்டுவிட்டால் அவர் மனநிலை எப்படியிருக்கும் என்றெல்லாம் பலவாறு எண்ணும்போது ஏனோ சொல்ல முடியாத பரபரப்பு ஏற்படுகிறது.

''இப்படியே திரும்பி ஊருக்குச் சென்றுவிடுவோமா என்ற எண்ணமும் ஏற்படுகிறது. தங்களுடைய பரிவையும், அன்பையும், உபசரணையையும் காணும்போது என் தாயின் நினைவு வந்துவிடுகிறது. தாயைக் காண வேண்டும் என்ற ஆவல் எழுகிறது!''

குமுதவல்லி இவ்வாறு சொல்லிக் கொண்டே போகும்போது காமவல்லியின் உடலில் ரோமாஞ்சலியே ஏற்பட்டது.

''நான் உங்களுக்கு இப்போது புதுச்சுமையாகிவிட்டேன். இல்லையா?'' என்று குமுதவல்லி கேட்டாள்.

சிந்தனைச் சுழலில் இருந்து மீண்ட காமவல்லி, ''ஆகா அப்படியெல்லாம் நான் நினைக்கவில்லை குமுதா. பணி விடை என்று நீ கூறியவுடன் உன் நினைவு வேறு எங்கோ சென்றது. துறவியாருக்குப் பணிவிடை செய்ய நானே செல்லலாமோ என்ற எண்ணம் ஏற்பட்டது'' என்றாள்.

''நீங்களா? அவருக்குப் பணிவிடை செய்வதற்கா?''

''ஆம்! நான் துறவியின் குடிலுக்குச் சென்று அவருக்குப் பணிவிடை செய்வேன். அவரது கவனத்தைக் கவர்வேன்.

● ஸ்னைப் பற்றி அவரிடம் எடுத்துச் சொல்வேன். இருவரையும் சேர்த்து வைப்பேன்.''

காமவல்லி இவ்வாறு கூறும்போது குமுதவல்லி விம்மும் ஒலி கேட்டது.

''எனக்காகத் தாங்கள் பெருஞ்சோதனையை மேற்கொள்ளப் போகிறீர்களா? தங்கள் உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்'' என்று குமுதவல்லி கூறும்போது அவள் குரல் தழுதழுத்தது.

குமுதவல்லியுடன் பேசிவிட்டு வந்த பிறகு காமவல்லியின் இதயத்தினின்று பெரும் பாரம் இறங்கியது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. குழம்பிக் கொண்டிருந்த பிரச்சனை நிறைந்த மனதில் தெளிவு ஏற்பட்டது. குழலியைக் கங்க நாட்டிற்கு அனுப்புவது என்றும், தானே சிவசேகர பண்டிதரின் குடிலுக்குச் சென்று தொண்டு செய்வதென்றும் முடிவுக்கு வந்தாள்.

∴ ∴ ∴

பொழுது புலர்ந்தது. காமவல்லி வழக்கம்போல் ஆற்றில் நீராடிவிட்டு வரும்போது குழலியின் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை யோசனை செய்து வந்தாள். அமைதியான தன் குடும்ப வாழ்வில் இப்போது ஒருவிதக் கலக்கம் ஏற்படுவதை அவள் உணர்ந்தாள். குழலியை அழைத்து அவள் நடந்து கொள்ள வேண்டிய உபதேசங்களைச் செய்தாள். பெட்டியில் பல வண்ண ஆடைகளையும், ஆபரணங்களையும் எடுத்து வைத்தாள்.

குழலியின் கண்கள் கலங்கின. தாயைப்போல் வளர்த்த காமவல்லியைப் பிரிய வேண்டும் என்ற துக்கம் அவள் நெஞ்சை அடைத்தது. பேச்சு வெளியே வர மறுத்தது. குஞ்சரிக்கும் ஏற்பட்ட வருத்தம் சொல்லி முடியாது.

''கங்கபாடிக்குச் சென்று அங்கு அரசர் முன்பு தாங்கள் கற்றுக் கொடுத்த நடனங்களை ஆடுவேன் நான், இரு நாட்களானாலும் சரி; ஒரு வாரமே இருக்கட்டும். பிறகு? நான் திரும்பி வந்துவிட வேண்டியதுதானே?'' என்று குழலி கேட்டாள்.

''நடனமாடி மகிழ்விக்க மட்டும் நீ செல்லப் போவதில்லை குழலி. உன்னுடன் நடன கோஷ்டி எனும் வேடத்தில் சோழ நாட்டு ஒற்றர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு நீ அவ்வப்போது சில செய்திகளைச் சொல்ல வேண்டியிருக்கும். அந்த விஷயத்தில் எல்லாம் நீ மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

''கலையை ரசிப்பதாகச் சொல்லி உன்னிடம் நெருங்கிப் பழக வருவார்கள். உன் நடனத்தைப் புகழ்வார்கள். உன் திறமையைப் பாராட்டுவார்கள். உன்னைத் தனியே சந்திக்க விரும்புவார்கள். அவை அனைத்தும் உன் கலைக்காக அல்ல; உன் அழகுக்காக; உன் இளமைக்காக என்பது கவனமிருக் கட்டும்'' என்று எச்சரித்தாள் காமவல்லி.

குழலி தலையசைத்தாள். ''அன்று வந்தாரே இளவரசர் அவரும் வருகிறார் என்று சொன்னீர்களே?'' என்று கேட்டாள்.

''ஆமாம்! அவர் இளவரசர் உடையில் வரமாட்டார். அவரை ஒரு போதும் இளவரசர் என்று கண்டுகொள்ளாதே; அரசாங்கக் காரியங்களை மிகவும் ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும். தவறினால் தலை போய்விடும்'' என்று கூறிய காமவல்லி, சற்று யோசித்து,

''இளவரசர் உத்தமசீலியிடமும் மிகவும் சாமர்த்தியமாக நடந்து கொள்'' என்றாள். குழலி சிரித்துக் கொண்டாள். அந்தச் சிரிப்பில் நாணம் கலந்திருந்ததா, அல்லது காமவல்லி கூறுவதை ஆமோதிப்பதற்கான நகைப்பு நிறைந்திருந்ததா என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

குழலி, புறப்படுவதற்காக ஏற்பாடுகளைக் கவனிக்கச் சென்றாள். காமவல்லி பூத்தொடுத்துக் கொண்டிருந்தபோது மாணிக்கப் புலவர் வேகமாக வந்தார்.

''துறவியாரைச் சந்தித்தீர்களா? குமுதாவைப் பற்றிக் கூறினீர்களா?'' என்று ஆவலுடன் கேட்டாள் காமவல்லி.

புலவர் உடனே அதற்கு மறுமொழி பேசவில்லை. சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ''காமவல்லி, இங்கு நடக்கும் செய்திகளைத் தெரிந்து கொண்டு யாரோ வெளியே சொல்லி வருகிறார்கள்'' என்றார்.

காமவல்லி அவரைக் கடைக்கண்ணால் நோக்கினாள். விஷமச் சிரிப்பு ஒன்று பூத்தது. ''நானும் அப்படித்தான் நினைக்கிறேன். நீங்களும் அப்படியே நினைக்கிறீர்கள். யார் அப்படிச் சொல்லக் கூடும் என்று நினைக்கிறீர்கள்? ஏதாவது தேவதை இருக்கிறதா?'' என்றாள்.

''தேவதை இல்லை, காமவல்லி; பிரம்மராட்சஸ் இருக்கிறது. பிரம்மராட்சஸ்! சிவசேகர பண்டிதர் கூறினார். உன் வீட்டில் பிரம்மராட்சஸ் என்னும் பிசாசு இருக்கிறதாம்'' என்றாள்.

சாதாரணமாக அவர் இப்படி கூறியிருந்தால் காமவல்லி அவருடைய பயந்த குணத்தையும், கோழைத் தனத்தையும் எடுத்துக்கூறி நகைத்திருப்பாள். ஆனால் சிவசேகர பண்டிதர் கூறினார் என்றவுடன், அவள் புலவரைக் கூர்ந்து நோக்கினாள்.

''ஆமாம் காமவல்லி; உன்னை அவர் சந்திக்க விரும்புகிறார்'' என்று கூறி பண்டிதர் கூறியவற்றை ஒன்றுவிடாமல் காமவல்லியிடம் கூறினார்.

''குமுதவல்லி என் வீட்டில் தங்கியிருக்கிறாள் என்பது அவருக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டாள் காமவல்லி.

''அதுதான் எனக்கும் வியப்பாக இருக்கிறது. யாராவது இங்கே நடப்பதை வெளியே சொல்கிறார்களோ என்ற சந்தேகம் அப்போதுதான் தோன்றியது'' என்றார் புலவர்.

காமவல்லி உடனே மறுமொழி கூறவில்லை. சிவசேகர பண்டிதர் கூறுவதை நம்பவும் முடியவில்லை; நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அவர் கூறுவதுபோல், குமுதவல்லி மானுட வடிவில் வந்திருக்கும் பிசாசா? அவளால் நம்ப முடியவில்லை.

''புலவரே! நீங்கள் என்னதான் சொல்லுங்கள். என்னால் நம்ப முடியவில்லை. குமுதவல்லி ஒரு பெண். அவள் பேயல்லள். அப்படி அவள் என் உயிரைக் குடிப்பதானாலும் நான் கவலைப்படமாட்டேன். என்றோ போகப் போகும் இந்த உயிர், இப்போதே போகட்டுமே!

ஆனால், அந்தத் துறவியிடம் ஏதோ ரகசியம் மறைந்திருக்க வேண்டும். அவரிடம் பணிவிடை செய்ய குஞ்சரியை உடனே அனுப்புமாறு இளவரசர் கட்டளையிட்ட உடனேயே நான் சந்தேகப்பட்டேன். இளவரசர் அந்தத் துறவியின் போக்கிலும் நடவடிக்கையிலும் சந்தேகம் கொள்கிறார் என்று'' என்றாள் காமவல்லி.

புலவருக்கு ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியம் தாங்கவில்லை. ''இளவரசர் சந்தேகப்படுகிறாரா? அதை எப்படி நீ அறிந்து கொண்டாய்?'' என்று கேட்டவர் சட்டென்று நிறுத்தி, ''அதெப்படியோ போகட்டும்; துறவி சக்தி வாய்ந்தவர் என்று தெரிகிறது. உனக்கு ஏன் வம்பு? அந்தப் பெண்ணை இப்போதே வீட்டைவிட்டு அனுப்பி விடு.

''எப்படியானாலும் அவளைத் துறவியின் குடிலுக்கு அழைத்துச் சென்று அங்கே விட்டுவிடத்தானே போகிறாய்?

நீ அந்தக் காரியத்தை ஏன் தலைமீது போட்டுக் கொண்டு செய்கிறாய். அந்தப் பெண்ணே வேண்டுமானால் போகட்டும். உன் அருமையான, விலை மதிப்பிட முடியா உயிரை ஏன் பிசாசுக்குப் பலி கொடுக்க ஆசைப்படுகிறாய்?'' என்றார்.

''என்னால் அந்தப் பெண்ணை அனாதைபோல் வெளியே அனுப்ப முடியாது புலவரே! அவளை நான் எப்படியும் அந்தத் துறவியிடம் சேர்ப்பிக்கத்தான் போகிறேன். மேலும் நானே அவரைச் சந்திக்கப் போகிறேன். அவருக்குப் பணிவிடை செய்யும் பொறுப்பை நானே ஏற்கப் போகின்றேன். குஞ்சரியை அனுப்பப் போவதில்லை'' என்றாள்.

புலவருக்குச் சற்று வருத்தம்தான், தான் சொல்லியும் அவள் கேட்கவில்லையே என்று. என்றாலும் காமவல்லி நேரே, துறவியைச் சந்திக்கப் போகிறாள் என்றறிந்தவுடன் சற்று நிம்மதியடைந்தார். துறவியை அவள் சந்தித்தால் அவரே பிரம்மராட்சசைப் பற்றி எடுத்துக் கூறி விடுவாரன்றோ?

ஃ ஃ ஃ

வெளியே ஏதோ ஆரவாரம் கேட்டது. இரு சிவிகைகளும் நான்கைந்து குதிரை வீரர்களும் காமவல்லி வீட்டு வாசலில் வந்து நின்றனர். குழலியை ஏற்றிச் செல்ல ஒரு பல்லக்கு. மற்றொன்று சிவசேகர பண்டிதரிடம் குஞ்சரியை அழைத்துச் செல்வதற்கு.

''பார்த்தீர்களா! அதோ அரச பல்லக்கே வந்துவிட்டது. குஞ்சரிக்கு மாறாக நானே செல்லப் போகிறேன். நான் செல்லப் போகும் செய்தியை குமுதவல்லியிடம் கூறிவிட்டு வருகிறேன்' என்று கூறி, காமவல்லி பின் கூடத்தில் குமுதவல்லி தங்கியிருந்த இருட்டறைக்குச் சென்றாள்.

கொல்லைப்புறக் கதவு திறந்திருந்தது. அதற்குப் பிறகு இருக்கும் புழக்கடைத் தோட்டத்து மதிற் சுவரின் கோடியில் இருக்கும் கதவும் திறந்திருந்நது. இருட்டறையின் கதவு திறந்திருந்தது. 'குமுதா, குமுதா' என்று மெல்ல அழைத்தாள் காமவல்லி. மறுமொழி ஏதும் வரவில்லை. சற்று உரத்த குரலில் கூப்பிட்டாள். உள்ளே சென்று தேடினாள். ஊஹூம் அங்கே அவளைக் காணவில்லை.

''குமுதா எங்கே, குமுதா எங்கே'' என்று வீட்டிலுள்ளோரை வினவினாள். இங்குமங்கும் பரபரப்புடன் தேடினாள்.

வெளியே வந்து நின்ற வீரர்களின் தலைவன் நேரமாகிறது என்றும், தஞ்சையில் புறப்படக் காத்திருக்கிறார்கள் என்றும், துறவிக்குப் பணிவிடை செய்யத் தக்கவரை அனுப்புவதாக இளவரசர் வாக்களித்திருப்பதால் இப்போதே ஒருவரை அனுப்பினால் அழைத்துச் செல்வதாகவும் வற்புறுத்தினான்.

காமவல்லிக்கு ஒன்றுமே புரியவில்லை. குழலியை ஒரு சிவிகையில் ஏறிக்கொள்ளும்படி கூறினாள். மற்றொன்றில் தான் ஏறுவதா, குஞ்சரியை அனுப்புவதா என்ற குழப்பம் அவளுக்கு ஏற்பட்டது. குமுதவல்லி எங்கே சென்றிருப்பாள் என்பதை அறிந்து கொள்ளாமல் தான் துறவியிடம் செல்வதில் பலன் இல்லை என்ற முடிவுக்கு வந்தாள். குஞ்சரியை மற்றொரு பல்லக்கில் ஏறிக்கொள்ளச் சொன்னாள். இரு சிவிகைகளும் அங்கிருந்து புறப்பட்டன.

வீதியில் அவை மறையும்வரை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, உள்ளே வந்த காமவல்லி, "துறவி கூறியது போல் அந்தப் பெண் குமுதா பிசாசு வடிவம் தானோ?" என்று வாய்விட்டுக் கூறினாள்.



அத்தியாயம் 16

உயிர் நண்பன்

வீரமாதேவி கலகலப்பற்றவளாக மாளிகையின் மேன் மாடத்தின் சாளரத்தின் வழியே கண்ணுக்கெட்டிய தொலைவு வரை தெரியும் காட்சிகளைக் கண்டவாறு அமர்ந்திருந்தாள். அவள் சிறு வயது முதல் கண்ட அதே தோற்றங்கள் தாம். தொலைவில் ஓடும் ஆறும், கோட்டை மதில் சுவரும், பலவிதப் பூச்செடிகளும் மரங்களும் நிறைந்த நந்தவனங்களும் காட்சியளித்தன. தளிக்குளத்தார் கோயில் விமானம் இன்னும் புதுப்பிக்கப்படாமல் காட்சியளித்தது.

அவள் இராட்டிரகூட நாட்டில் அரசியாகத் திகழ்ந்த சிறிது காலத்திற்குள்ளாகவே மான்யகேட நகரில் வாழ்க்கை உல்லாச மாகக் கழிவதற்காக வழிவகைகளைத் தேடிக் கொண்டுவிட்டாள். மாளிகைப் பணிப்பெண்களும் மற்றும் உயர்தர அதிகாரிகளின் மனைவிகளும் அவளுடன் இனிமையாகப் பேசிக் கலகலப்புடன் பழகினர்.

சோழ நாட்டுப் பெண் ஆதலால் மற்றவர்களுடன் கலந்து பேசும்போது இங்கிதமும் சாதுர்யமும் அவளுக்கு இயற்கை யாகவே கைவரப் பெற்றிருந்தமையால் அனைவரின் அபிமானத்தையும் எளிதில் கவர முடிந்தது.

இங்கே தஞ்சைக்கு மீண்டும் திரும்பி வந்த பிறகு பழைய வரவேற்பு தனக்கு இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை. சொந்த நாட்டுப் பெண்ணையே அந்நியப் பெண் போல் மற்றவர் பாவிப்பதாக அவளுக்குத் தோன்றியது.

சகோதரி அநுபமாதேவிகூடத் தன்னிடம் மனம்விட்டுப் பழகுவதாக அவளுக்குத் தோன்றவில்லை. அவளுடன் கூடவே இருந்து பழகலாம் என்றால் வீரமா தேவியின் கணவர் கோவிந்த வல்ல வரையர் அநுபமாவைப் பார்க்கும் பார்வை வீரமாதேவிக்கு பிடிக்கவில்லை. தன் கணவரின் குணம் இன்னும் மாறவில்லையே என்று நினைக்கும்போது அவளுக்குத் துயரம் சூழ்ந்தது.

மேலும் எளிதில் பழகும் அநுபமாவின் சுபாவத்தைத் தன் கணவர் தவறாக எடுத்துக் கொண்டு விடப் போகிறாரே என்ற பயமும் இருந்தது. அதனால் அநுபமாவை அடிக்கடி சந்திக்காமலே இருந்து வந்தாள். தன் தாயுடனேயே எவ்வளவு நேரம் இருக்க முடியும்? அரசிக்கு உள்ள கடமைகளில் நேரமிருக்காது. அதனால் கூடியவரை தனிமையையே அனுபவிக்கலானாள்.

∴ ∴ ∴

அன்றும் மாளிகையின் சாளரத்தின் வழியே வெளி உலகத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தபோது அவளது விழிகளை யாரோ பொத்தினார்கள். வளைக்கரங்கள் என்பதை உணர்ந்ததும் யாரென உடனே கண்டு கொள்ள முடியாத வீரமாதேவி 'யாரது?' என்று கேட்டு அந்தக் கரங்களை விலக்க முற்பட்டாள்.

கலகலவென்ற சிரிப்புடன் கரத்தை எடுத்து வீரமாதேவியின் முன்னால் வந்த அநுபமா "தேவி! என்ன ஆழ்ந்த யோசனையில் இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

அநுபமாவிடம் வழக்கத்தைவிட குதூகலம் அதிகமாகக் காணப்பட்டதை வீரமாதேவி உணர்ந்தாள். தன் சோகத்தையும் புலப்படுத்திக் கொள்ள விரும்பாதவளாய், "ஒன்றுமில்லை; கோட்டை மதில் சுவரின்மீது நமது வீரர்கள் ஏறி நின்று முரசு முழக்குவதும் கொம்புகள் ஊதுவதும் நிழல் வடிவமாகத் தெரிவதை ரசித்துக் கொண்டிருந்தேன்" என்றாள்.

"யாராவது முக்கியமானவர்கள் வருகிறார்களோ அக்கா?" என்று அநுபமா கேட்டாள். யார் வருகிறார்கள் என்றோ அல்லது வரப்போகிறார்கள் என்றோ வீரமாதேவிக்கு உண்மையிலேயே தெரியாது. தனக்குத் தெரியாது என்பதைத் தலையசைத்துத் தெரிவித்தாள். அதற்கும் அநுபமா நகைத்தாள்.

"உங்களுக்குத் தெரியாதா? மேற்கே கங்க நாட்டிற்குச் சென்றிருந்த வெள்ளங்கரைப் புதூர் வீரர் வருகிறாராம்!" என்றாள்.

"ஓகோ! வெள்ளங்குமரனா?" என்று தன் வியப்பைப் புலப்படுத்தாமல் தெரிவித்தாள் வீரமாதேவி.

"தேவி! அவருக்கு இப்போது நாட்டில் நல்ல பெயர், தெரியுமா?" என்று விழிகளை அசல விரித்துக் கூறினாள் அநுபமா.

இளவரசர் இராஜாதித்தனுக்கு மிகவும் நெருங்கிய நண்பராக மாறி அரசாங்கத்தின் மிக முக்கிய அலுவல்கள் வெள்ளங் குமரனிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதையே அநுபமா அவ்வாறு குறிப்பிட்டாள்.

வீரமாதேவிக்கும் தெரியும். வெள்ளங்குமரனைப் பற்றி, அவள் கேள்விப்பட்டிருக்கிறாளே தவிர, பார்த்ததில்லை. தஞ்சாவூருக்கு அவள் வருவதற்கு முன்பே வெள்ளங்குமரன் கங்க நாட்டிற்குச் சென்றுவிட்டான்.

அதனால் தஞ்சைக்கு அவன் எப்போது வந்து சேர்ந்தான் என்பதோ, முதலில் என்ன பதவி வகித்தான் என்பதோ இப்போது முக்கியமான எந்தப் பதவியை நெருங்கிக் கொண்டிருக்கிறான் என்பதோ அவள் அறியவில்லை. என்றாலும் இராஜாதித்தன் பேசிக் கொள்வதிலிருந்து வெள்ளங்குமரனை அவன் முக்கியமாக எதிர்பார்க்கிறான் என்பது தெரிந்தது.

அநுபமாவின் வாய் மூலமாகவே வெள்ளங்குமரனைப் பற்றி மேலும் அறிய முற்பட்டாள்.

''ஓகோ! அப்படியா! அநுபமா மிக முக்கியமாக ஒருவரைக் கருதுகிறாள் என்றால் அவர் நாட்டில் புகழ் பெறுவதில் அதிசயமில்லை. ஆமாம், வெள்ளங்கரைப் புதூர் வீரர் என்று கூறுகிறாயே அவருக்கு என்ன வயது இருக்கும்? நாற்பது வயது இருக்குமா?'' என்று சிரிக்காமல் மெல்லக் கேட்டாள் வீரமாதேவி. அநுபமாவுக்குக் கோபமாக வந்தது. அதே சமயம் சகோதரியின் அறியாமையை எண்ணிச் சிரிப்பும் வந்தது.

''நம் அண்ணனின் உயிர் நண்பன் என்றால் வயதானவர் என்று அர்த்தமா?'' என்று சற்றுப் பொய்க் கோபம் புலப்படும்படியாகக் கேட்டாள் அநுபமா.

''அப்படியா! எனக்குத் தெரியாது! அதனால் கேட்கிறேன். அநுபமா நாட்டின் முக்கிய அதிகாரிகள் எல்லாம் வயது முதிர்ந்தவர்களாக இருக்கிறார்களே என்பதனால் கேட்டேன்.

ஆமாம், வெள்ளங்கரைப் புதூர் எனும் ஊர் எங்கே இருக்கிறது? அந்த ஊரில் இருந்து வந்தவனா? பெயரைச் சொல்லாமல் ஊரை மட்டும் சொன்னால் பழுவேட்டரையர், சம்புவரையர், வாணகோவரையர் என்பதுபோல் வெள்ளங்கரைப் புதூர் பிள்ளையும் மிகவும் முக்கியமானவராக இருக்க வேண்டும், அப்படித்தானே?'' என்று வீரமாதேவி கேட்டாள்.

வெள்ளங்கரைப் புதூரின் ஆன வெள்ளங்குமரனை வயதானவனாக மாற்றும் வீரமாதேவியின் வார்த்தைகள் அநுபமாவுக்குப் பிடிக்கவில்லை. என்றாலும், ''சேர நாட்டில் பெரும் மலைகளின் நடுவே அந்த ஊர் இருக்கிறதாம். பழுவேட்டரையர், சம்புவரையர் போன்று அவருக்குத் தனி நாடு ஏதும் இல்லை.

சாதாரணமான குடும்பத்தில் பிறந்தவர்தானாம், சோழ நாட்டிற்கு வந்தவுடன் அவருடைய திறமையை இராஜாதித்த

. . .

அண்ணாதான் கண்டுபிடித்தார். குறிபார்த்து அம்பு எய்வதில் சமர்த்தராம்!'' என்றாள் அநுபமா.

''சேர நாட்டினருக்கு வில்வித்தையைக் கற்றுக் கொடுக்க வேண்டுமா?'' என்றாள் வீரமாதேவி.

''வாள் எடுத்துச் சுழற்றுவதில் வல்லவராம்'' என்று மேலும் புகழ்ந்தாள் அநுபமா.

''ஓகோ! அவனுடைய குணங்களை அறிந்து வைத்திருக் கிறாயே. ஆமாம், நீ 'அவர்' 'இவர்' என அழைக்கிறாய்! நான் 'அவன், இவன்' என்று அழைக்கிறேனே, உனக்குக் கோபம் ஒன்றும வராதே?'' என்று வீரமாதேவி கேட்டவுடன் அநுபமாவின் முகம் நாணத்தால் சிவந்தது.

⁂ ⁂ ⁂

வீரமாதேவி புரிந்து கொண்டாள். தன் சகோதரியின் உள்ளத்தை மேலும் புரிந்துகொள்ள விரும்பினாள்.

''அநுபமா! நான் மான்யகேட நகரில் இருக்கும்போது உறக்கம் வராமல் இருந்திருக்கும்போது உன்னைப் பற்றியே நினைப்பேன். திருமணப் பருவத்தை அடைந்துவிட்ட உனக்கு மிக ஏற்ற அரசகுமாரன் எந்த நாட்டிலிருந்து வருகிறானோ என எண்ணுவேன். எங்களிருவரது உறவினில் ஓர் இளம் வாலிபன் கீழைச்சாளுக்கிய நாட்டில் இருக்கிறான். அவனுக்கு மணம் பேசத் தூது அனுப்பலாமா என்று எண்ணுவேன்.

நம் தந்தைக்கு இருக்கும் இரு பெண்களும் வெகு தொலைவில் வாழ்க்கைப்பட்டால் சக்கரவர்த்தியின் பாச உணர்ச்சிக்கு சோதனை ஏற்பட்டது போலாகுமே என்று அந்த வரனை மறந்துவிட்டு வேறு யோசிப்பேன். பொத்தப்பி நாடு, சீட்புலி நாடு, கங்க நாடு எல்லாம் மனக்கண் முன்னே தோன்றும்.

பாண்டிய நாட்டில் மட்டும் உனக்கேற்ற அரசகுமாரன் இருந்திருந்தால் உனக்கு மணம் முடித்து, பாண்டியர்களுடன் நமக்குள்ள தீராப்பகையைத் தீர்த்துக் கொள்ளலாமே என எண்ணுவேன். பாண்டிய மன்னர் இருக்குமிடம் தெரிய வில்லையே? சேர மன்னருக்கு அழகிய மகன் இருக்கிறானே தெரியுமா? சேர நாட்டினின்று இதுவரையில் பெண் எடுத்திருக்கிறோமே தவிர, பெண் கொடுத்ததில்லை. வெள்ளங் கரைப்புதூர் இளைஞனைக் கேட்டால் தெரியுமே?'' என்று வீரமாதேவி கேட்டுவிட்டு கடைக்கண்ணால் அநுபமாவின் முக மாறுதலை நோக்கினாள்.

அநுபமாவுக்கு உண்மையிலேயே இப்போது கோபம் வந்தது. தனக்கு மணம் முடிகக எங்கெங்கோ உள்ள வேண்டாத வரனைப் பற்றி வீரமாதேவி பேசுவதை அவள் விரும்பவில்லை.

''என்ன வீரமாதேவி! தங்கைக்கு வரன் தேடுகிறாயா?'' என்று கேட்டுக் கொண்டே கோவிந்த வல்லவரையன் அங்கே திடீர் என்று வந்தான்.

தானும் சகோதரியும் பேசிக் கொண்டிருக்கும்போது தன் கணவர் வந்து தலையிடுவதை வீரமாதேவி விரும்பவில்லை என்பது அவள் முக உணர்ச்சி மாறுதலிலிருந்து தெரிந்தது. ஆனால் அநுபமா வல்லவரையரைக் கேலி செய்து குறும்புத் தனமாக பேசுவதில் ஆர்வம் உடையவளானாள்.

''ஆமாம், ஆமாம், அக்காவுக்குப் பொழுது போகவில்லை. எங்கெங்கே அரசகுமாரர்கள் இருக்கிறார்கள் என்று யோசிப்பதில் முனைந்திருக்கிறாள். அத்துடன் உங்களுக்கும் அந்தக் கஷ்டமான வேலை அளிக்கப் போகிறாள்'' என்று அநுபமா கூறினாள்.

தன் கணவருக்கு, வேறு வேலை ஏதுமில்லை என்பதைக் குத்திக் காட்டும் மறைபொருள் தங்கையின் பேச்சில் இருப்பதை அறிந்தாள் வீரமாதேவி.

''ஆகா, உனக்கேற்ற வரன்தானே; நான் தேடிக் கொண்டு வந்துவிடுகிறேன். அங்க, வங்க, கலிங்க, காந்தாரா, காச்மீரம் செல்கிறேன்... எப்பேர்ப்பட்ட மணாளன் உனக்கு வேண்டும்? வீர தீரமிக்கவரா? அழகில் சிறந்தவரா? கலை உணர்ச்சி மிகுந்தவரா? என்று கோவிந்தன் கேள்விகள் கேட்கும்போதே வீரமாதேவி எதிர்பார்த்தாள். தன் தங்கை அதற்குத் தகுந்தாற்போல் சுடச்சுட மறுமொழி கூறுவாள் என்று.

அது நடந்துவிட்டது.

''குந்தள நாட்டு மாமன்னரே! நன்றாக எட்டுத் திசையும் அலைந்து திரியுங்கள். ஆனால் மீண்டும் தஞ்சை மாநகருக்கு என்னையும் அழைத்துக் கொண்டு வந்து தங்கிவிடும் மணாளனாக மட்டும் பார்த்துவிடாதீர்கள்.....'' என்றாள்.

❖ ❖ ❖

வீரமாதேவிக்குத் துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது. அதன் எதிரொலியாக விழிகள் சோக நீரைப் பொழிய ஆயத்தமாகி விட்டன. நல்லவேளையாக அப்போது அங்கே வந்த இராஜாதித்தன் நிலைமை மோசமாகாமல் காப்பாற்றினான்.

''என்ன, திருமணப் பேச்சா நடக்கிறது? யாருக்குத் திருமணம்? எப்போது திருமணம்?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான் இராஜாதித்தன்.

அநுபமா குறும்பு நகை பொங்க, ''வல்லவரையருக்குத் தான் திருமணம்!'' என்று கூறவும், இராஜாதித்தன் அதைக்

காதில் போட்டுக் கொள்ளாமல், ''வல்லவரையரே! உங்களை நான் எங்கெல்லாம் தேடுவது? இங்கே இருக்கிறீர்களே!'' என்றான். வீரமாதேவிக்கு வேதனையாக இருந்தது.

''உங்கள் இளைய சகோதரிக்கு வரன் தேடும் வேலையை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள்'' என்று சிரித்தவாறு கூறினான் கோவிந்தன்.

''அநுபமா அந்த வேலையை யாருக்குமே வைக்க வில்லையே! அவள்தான் தனக்குப் பிடித்தவரை முன்பே தேர்ந்தெடுத்துக் கொண்டுவிட்டாளே!'' என்று இராஜாதித்தன் கூறி அநுபமாவைப் பார்த்துச் சிரித்தான்.

பிறகு, ''அநுபமா? உனக்கு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறேன். இவ்வளவு நாள் நீ ஏக்கத்துடன் காணாது காத்திருந்த வெள்ளங்குமரன் இன்று மாலை தஞ்சைக்கு வருகிறான். அவன் நேற்றே குடந்தை நகருக்கு வந்து அங்குத் தங்கியிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது'' என்றான் மகிழ்ச்சி நிறைந்த குரலில்.

''ஒற்றர்கள் உங்களிடம் சொல்வதற்கு முன்பே அநுபமா விடம் சொல்லிவிடுவார்கள் போலிருக்கிறது. வெள்ளங்குமரன் வரப்போகும் செய்தியை அப்பொழுதே சொல்லிவிட்டாளே, யாரோ! அதுதான் அவளுக்கு அவ்வளவு ஆவலோ?'' என்றாள் வீரமாதேவி.

''அப்படியா சேதி! ஒரு வேளை குமரன், அவளுக்குத் தனியாக லிகிதம் ஏதாவது அனுப்பியிருப்பான். கங்க நாட்டுச் செய்தியைவிட அநுபமாவின் நலன்தான் அவனுக்கு முக்கியமாகப் போய்விட்டது!'' என்றான்.

அநுபமா இதை எதிர்பார்க்கவில்லை. இராஜாதித்தன் இப்படித் தன் மனத்திலுள்ளதை உடைத்துப் புலப்படுத்திவிடுவான் என்று அவள் நினைக்கவில்லை. நாணிக் கண் புதைத்தாள்.

''இளவரசே! யார் அந்தக் குமரன் என்பவர்?'' என்று கோவிந்த வல்லவரையன் கேட்டான்.

வீரமாதேவி வெடுக்கென்று ''நம்மைப் போல் அவரும் நாடற்றவர்!'' என்றாள்.

அநுபமாவின் நாணம் பறந்தோடியது. சுட்டெரித்து விடுபவளைப்போல் சகோதரியைப் பார்த்தாள்.

வெள்ளங்குமரனுக்கு என்று இப்போது ஒரே ஒரு நாடு உண்டு. அது சோழ நாடுதான். அவன் உயிர், எண்ணம், வாழ்வு

எல்லாமே அதுதான். சோழ நாட்டிற்குச் சிறு அவமானம் நேர்ந்தாலும் அவன் தாங்க மாட்டான்.

''நீங்கள் தஞ்சைக்கு வந்து சோகத்துடன் தங்கியிருப்பதைக் கண்டு இவன் இங்கு இருந்திருந்தால் இவ்வளவு நாள் சும்மா இருப்பானா? மான்ய கேடயத்தில் புலிக்கொடி பறக்கும்! மீண்டும் என் உயிர்ச் சகோதரி அங்கு அரசியாக வீற்றிருப்பாள். நான் இன்னும் மேஷம் மிதுனம் பார்க்கிறேன்.

''என் தந்தை துறவியாரின் உபதேசத்தை எதிர்நோக்குகிறார். துறவியாரோ போரே வேண்டாம் என்று வற்புறுத்துகிறார். நான் என்ன செய்யப் போகிறேனோ! உயிர் நண்பன் குமரன் வந்துவிட்டால் இராஷ்டிரகூட நாட்டுப் படையெடுப்பைப் பற்றி முடிவு செய்துவிடுவேன். சோழ நாட்டு மானம்தான் அவனுக்கு இப்போது முக்கியம்!'' என்று இராஜாதித்தன் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான்.

''அநுபமா கெட்டிக்காரி, அதிர்ஷ்டசாலியும், கூட! வீரம் மிகுந்தவனைத் தான் தேர்ந்தெடுத்திருக்கிறாள். ஆனால், அந்த வீரன் ஆட்சி புரியச் சொந்த நாடொன்றிருந்தால் அநுபமா அரசியாகவே மாறிவிடுவாள்'' என்று கோவிந்தன் கூறியவுடன் வீரமாதேவிக்கு மீண்டும் இதயத்தில் ஒருவித வேதனை ஏற்பட்டது. அநுபமா சீற்றத்துடன் மறுமொழி கூறப் போகிறாள் என்று எதிர்பார்த்தாள்.

ஆனால், இராஜாதித்தன் கூறினான். ''வெள்ளங்குமரனுக்கு என்று வேறு ஒரு நாடா வேண்டும்? சோழநாடு அவனுடையது தான். சோழநாட்டின் படைத் தளபதியாகப் போகும் அவனுக்கு அதைவிட வேறு ஒரு நாடு எதற்கு? சக்கரவர்த்திக்கு வெள்ளங் குமரன் மீது கருணை பிறந்தால் அவனுக்கு நாடா கிடைக்காமல் போய்விடும்? கங்கநாட்டு பிருதிவீபதிக்கு திருவலத்தைக் கொடுத்து வாணகோவரையர் என்று பட்டம் சூட்டவில்லையா?'' என்று உற்சாகத்துடன் கூறினான்.

''அநுபமா அதிர்ஷ்டசாலி! தன் சகோதரரின் அபிமானத்தைப் பெற்றுவிட்டாள். சாதாரண சகோதரனா? இந்த நாட்டு இளவரசன் நாளையச் சக்கரவர்த்தி! அவன் தன் உயிர் நண்பனையே அவளுக்குப் பரிசாக வழங்கப் போகிறான். ஆனால், நாம் எல்லோரும் சேர்ந்து இராஜாதித்தனுக்கு என்ன பரிசு கொடுக்கப் போகிறோம்?'' என்று கோவிந்த வல்லவரையன் பொருள் பொதிந்த கேள்வியொன்றைப் போட்டான்.

''எனக்கு ஏற்ற வரனைத் தேடும் தாங்களே அந்தப் பரிசைத் தேடித் தரும் பொறுப்பையும் ஏற்கலாம். அழகில் சிறந்த குணத்தில்

வர்ந்த இளவரசியைத் தேடி சோழ நாட்டு இளவரசியாக்க முயலலாமே?'' என்றாள் அநுபமா.

கோவிந்தன், ''சோழநாட்டு மேன்மை தங்கிய இளவரசர் அவர்களே, தங்களுக்குப் பிடித்த கன்னி எங்கே போனாள் என்று சொல்ல முடியுமா? கனவில் கண்ட நினைவு படுத்திய முறியமாக வரைந்து வைத்திருக்கிறீர்களா? என்னிடம் மட்டும் சொல்லுங்கள். அந்த ரூபவதியின் வடிவழகை ஓவியமாக வரைந்து தருகிறேன்'' என்றான்.

ஆனால், இராஜாதித்தன் கல்யாணப் பேச்சையும் பேசிய கன்னியைப் பற்றிய பேச்சையும் கேட்டு மனம் மகிழ்ந்து விடவில்லை. அவன் உள்ளத்தில் எந்தவிதக் கிளுகிளுப்பும் ஏற்படவில்லை. மனம், மங்கை நல்லாளைப் பற்றிக் கற்பனை செய்து கொள்ளவில்லை.

அதைப் பற்றிய பேச்சை மேலும் வளரவிடாமல் அவன், ''என் திருமணமா இப்பொழுது எதிர்நோக்கியுள்ள பிரச்னை? என் அருமைச் சகோதரி வீரமாதேவி மீண்டும் மான்யகேட நகரில் சிங்காதனத்தில் கோவிந்த வல்லவரையருடன் சேர்த்து அமர வைப்பதே என் முதல் கடமை! அவள் கண்ணீரில் சோழ நாட்டின் மானமே மறைந்திருக்கிறது.

அவள் கண்ணீரைத் துடைப்பதற்கு நான் சபதம் செய்துவிட்டேன். போர்க்களத்தில் வெற்றித் திருவை மணக்காமல் மற்ற திருமணத்தைப் பற்றி நினைக்கவே மாட்டேன். என் நண்பன் குமரன் வந்தவுடன் படையெடுப்பு நாள் குறிக்க வேண்டியதுதான்'' என்று கூறினான்.

அதை ஆமோதிப்பதுபோல் தளிக்குளத்தார் கோவில் மணி 'டாண் டாண்' என்று ஒலித்தது.

வடக்குக் கோட்டை வாயில் மதில் மேல் இருந்து முரசு அதிரும் ஓசையும், கொம்பு ஒலிக்கும் சப்தமும் கேட்டன.

இராஜாதித்தன் காதுகொடுத்துக் கேட்டான். ''அதோ வெள்ளங்குமரன் வருகிறான். அவனை நான் வரவேற்கப் போக வேண்டும்'' என்று கூறியவாறு அங்கிருந்து விரைந்து சென்றான்.

வீரமாதேவியும், கோவிந்த வல்லவரையனும் அநுபமாவை நோக்கினர். அவள் முகம் நாணத்தால் புதுத் தாமரைபோல் சிவந்திருந்தது. அந்த நாண மலரின் நடுவே தானும் குமரனை வரவேற்கச் செல்ல வேண்டும் என்ற பரபரப்பும் துள்ளுவது தெரிந்தது.



அத்தியாயம் 17

குமரன் குரல்

அருமை நண்பன் வெள்ளங்குமரன் வந்தவுடனேயே இராஜாதித்தனுக்குத் புதுத் தெம்பு உடலில் சேர்ந்தது. கரை காணாமல் தவித்த கடற்பறவைக்குக் கரை தெரிந்தது போலாகியது. திசை தெரியாமல் தத்தளித்த மீகாமனுக்குத் துருவ நட்சத்திரம் தென்பட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

இளவரசன் இராஜாதித்தன் அமோக வரவேற்பு வெள்ளங் குமரனை மெய்சிலிர்க்க வைத்தது. இராஜாதித்தன் தன்னிடம் காட்டும் அன்புக்குத் தான் அருகதை உள்ளவன் தானா என்று குமரன் நினைத்தபோது, அவனுள்ளத்தில் பொங்கித் ததும்பிய கடமை உணர்ச்சி மேலும் பெருகியது.

"நான் எங்காவது போர்க்களம் சென்று, வெற்றி வாகை சூடி வந்தேனா? எனக்கு இவ்வளவு வரவேற்பு ஏன்?" என்று குமரன் எண்ணும்போது, விழிநீர் பெருகி குளமாகியது.

தோளோடு தோள் புதைய, இராஜாதித்தன் ஆறத்தழுவிய போது, ஒரு பக்கத்துத் தோளை அந்த விழிநீர் நனைத்தது.

"அதோ! அநுபமாவும் வந்திருக்கிறாள். உம்; அவளருகே மற்றொரு பெண் - கம்பீரமான தோற்றம்! ஆனால் அவள், விழிகளில் ஏனோ துயரம் தேய்ந்த ஏக்கம்?" என்று நினைத்தான் குமரன்.

"குமரா! நீ சென்ற பிறகு இங்கு எவ்வளவோ மாறுதல்கள்! ஈழத்துப் படையெடுப்பு எனக்கு வெற்றியைத் தந்தது. ஆனால், பலன், சென்ற காரியம் தோல்விதான். மகுடமும் வாளும் ஈழத்தில் கிடைக்கவில்லை..." என்று இராஜாதித்தன் பேசத் தொடங்கி விட்டான். அவன் உற்சாகமாகப் பேசினானே தவிர, குமரனின் விழிகள் வேறு எங்கோ சுழன்று நோக்கின அதைக் காணத் தவறவில்லை இராஜாதித்தன் புன்சிரிப்புடன் அவன்,

''அநுபமாவிடம் மாறுதல் ஒன்றுமில்லை; பழையபடி உன் வரவை எதிர்நோக்கியிருக்கிறாள். ஆனால், அவள் அருகில் நிற்கிறாளே வீரமாதேவி அவளை நீ இதற்கு முன்பு பார்த்திருக்க முடியாது.

என் சகோதரி என்பதால், நான் 'அவள்' என்று மரியாதை இல்லாமல் கூறிவிட்டேன். வீரமாதேவி ராஷ்டிரகூட நாட்டு அரசி. போதாத காலம், நாடு இழந்து இப்போது வந்து அடைக்கலம் புகுந்திருக்கிறாள். அவள் மட்டுமா? அவரும்தான் - ராஷ்டிரக்கூட நாட்டு அரசரும் தான். வியப்பாக இருக்கிறதா? சோழ நாட்டுக்கு ஏற்பட்ட அவமானத்தை நான் இன்னும் துடைக்காமல் இருக்கிறேனே, அதுவும் வியப்புத்தான்!'' என்றான்.

குமரனுக்கு அவன் சொல்வது அரைகுறையாகத்தான் புரிந்தது. தஞ்சை மாநகரிலேயே ஏதோ பெரும் மாறுதல் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று அவன் உள்ளுணர்வு சொல்லிக் கொண்டே வந்தது.

குமரனின் மௌனம் இராஜாதித்தனை திகைக்க வைத்தது. ''ஓகோ! அநுபமா காத்திருக்கிறாள் இல்லையா? அவளுடன் நீ பேச வேண்டியது இருக்க, நானே உன்னுடன் பேசிக் கொண்டே பொறுமையைச் சோதித்துவிட்டேன் இல்லையா?'' என்று கூறி அங்கிருந்து புறப்பட எத்தனித்த இராஜாதித்தனின் கரத்தைக் குமரன் பிடித்து நிறுத்தினான். ''இளவரசே? தங்களுடன் பேசுவதைவிட எனக்கு முக்கியமானது வேறு உண்டா? தஞ்சைக்கு ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நான் காதல் உரையாடவா இங்கு வந்தேன்?'' என்றான் குமரன்.

அவர்களுக்கிடையே நடைபெறும் உரையாடலைக் கேட்ட அநுபமா, மெல்ல அங்கிருந்து புறப்பட்டாள். அவளைத் தொடர்ந்து வீரமாதேவியும் சென்றாள். இராஜாதித்தனும் வெள்ளங்குமரனும் மனம் விட்டுப் பேசுவதற்கு வாய்ப்பும் இடமும் கிடைத்தன.

இராஜாதித்தனைவிட வெள்ளங்குமரனுக்கு ஓரிரண்டு வயது குறைவாக இருக்கலாம். வெள்ளங்குமரன் சோழ நாட்டுப் படைப் பிரிவு ஒன்றுக்கு தலைவனாயிருந்த போதிலும், இராஜாதித்தன் அவனை உயிர் நண்பனாகவே கருதினான். நண்பனைப்போல் அவனுடன் பழகினாலும் வெள்ளங்குமரன் அந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இளவரசருக்குள்ள பெரும் மதிப்பையும், மரியாதையும் அளித்து வந்தான்.

[illegible] இருவரும் இமை மூடவில்லை. [illegible], தான் ஈழத்துக்குச் சென்று வந்த [illegible] [illegible]றுவிடாமல் கூறினான்.

[illegible] பெரும் வெற்றி கண்டாலும், பாண்டிய மகுடத்தை [illegible] [illegible]டியவில்லையே என்ற தன் ஏக்கத்தைப் புலப்படுத்திக் [illegible]ண்டான். அவற்றை விவரித்து விட்டு, மேலும் இப்போது [illegible] உள்ளத்தில் அமைதியே இல்லாது துடிப்பதையும் கூறினான்.

வெள்ளங்குமரன் மௌனமாக இராஜாதித்தன் கூறுவதைக் கேட்டுக் கொண்டே இருந்தான்.

பிறகு மெல்ல, ''இளவரசே! தங்கள் உள்ளத்தில் அமைதி மிகவும் குலைத்துவிட்டதென்பதை நான் புரிந்து கொண்டேன். நமது சோழ நாட்டிற்கே பெரும் ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்ற கவலை என்னை வாட்டுகிறது. மிகவும் ரகசியமாகப் பல காரியங்கள் உருவாகிவருகின்றன. கங்க நாட்டில் பிருதிவீபதியின் செல்வாக்குக் குறைந்துவிட்டது.

''எந்த நொடியிலும் பூதூகன் கங்கநாட்டைத் தன் வயப்படுத்திக்கொண்டுவிடலாம். நான் அங்கே தங்கியிருந்த போது இரகசியமாகப் பல விஷயங்களை அறிந்து கொண்டேன். அங்கே கலகம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. அது சாதாரண அரசாங்க மாறுதலாகத் தோன்றலாம். ஆனால், விளைவு மிகப் பெரியதாக இருக்கும் என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டுவிட்டது'' என்று குமரன் கூறும்போது இராஜாதித்தன் குறுக்கிட்டான்.

''ஆம், இது மிகவும் பயங்கரமான செய்திதான். பிருதிவீபதியையும் அவர் மகன் விக்கியண்ணனையும் வீழ்த்த ஒருவன் புறப்பட்டுவிட்டான் என்றால், அது பயங்கரம்தானே! அந்த பூதூகன் யார்? அவனுக்கு இவ்வளவு வல்லமை எப்படி வந்தது?'' என்று வியப்புடன் கேட்டான் இராஜாதித்தன்.

''வடக்கே இரட்ட நாட்டில் கிழவன் அசோக வர்ஷனும் அவன் மகனும் பூதூகனைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். பூதூகனுக்குக் கங்க நாடு நியாயமாகச் சேர வேண்டுமாம்'' என்றான் குமரன்.

இராஜாதித்தனின் முகம் ஆத்திரத்தால் சிறுத்தது. ''அசோக வர்ஷனும், அவர் மகனும் யாருடன் விளையாடுகிறார்கள் என்பதை இன்னும் தெரிந்து கொள்ளவில்லை! என் சகோதரிக்குத் துயரளித்த அவர்களே இப்போது கங்கநாட்டிலும்

...லயிடுகிறார்கள். என் தோள் துடிக்கிறது. உடலெங்கும் ரத்தம் துள்ளுவது போன்ற பரபரப்பு...! குமரா; நாம் இதற்கு ஒரு முடிவு கட்டிவிட வேண்டும்'' என்று அவன் கூறும்போது வார்த்தைகள் கொப்பளித்து வந்தன.

''இவ்வளவு நாட்கள் தாமதித்ததே சரியில்லை என்று நான் நினைக்கிறேன், இளவரசே! வடக்கில் இரட்டர்களை நசுக்கினால் தான் பூதுாகன் அஞ்சுவான்'' என்று குமரன் கூறும்போது, இராஜாதித்தன், ''ஆமாம், ஆமாம் தாமதித்தது தவறுதான். நான் துடிப்புடன் என்றோ எழுந்துவிட்டேன். படை திரட்டும் வேலையைத் தொடங்கிவிட்டேன்! ஈழத்தினின்று திரும்பிய வீரர்களுக்கு ஓய்வு கொடுக்காமல் எப்போதும் ஆயத்தமாக இருக்கச் சொன்னேன். ஆயுதங்களைக் கூர்மைப்படுத்தும் வேலை நடந்து கொண்டிருக்கிறது'' என்றான்.

''எனினும் ஏன் தாமதம் இளவரசே?'' தாமதத்திற்குச் சக்கரவர்த்திகள் சம்மதிக்க மாட்டாரே. தன் மகளின் கண்ணீர் தீப்போல் அவரைச் சுடுமே?''

''ஐயோ! குமரா, நான் என்ன செய்வேன்? சக்கரவர்த்திகளின் மௌனம் என்னைக் கொல்லாமல் கொல்கிறது... பாண்டிய மகுடம் வேண்டும் என்று கட்டளை யிட்ட சக்கரவர்த்திகளுக்கு அது இருக்குமிடம் கூறினேன். உடனே படையுடன் செல்ல அனுமதி கேட்டேன். அவர் மௌனமாக இருந்தார்.''

''பாண்டியர் மகுடம் இருக்குமிடம் அறிந்துவிட்டீர்களா?''

''ஆம், நமது ஒற்றர்கள் தெரிந்து கொண்டுவிட்டனர். சேர நாட்டிலே மகுடம் இருக்கிறது. நமது நண்பர்கள் போல் நடிக்கும் சேர மன்னன் பாண்டிய மன்னனுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறான். அவனை முறியடிக்க வேண்டாமா?''

இராஜாதித்தன் இவ்வாறு கூறியவுடன் குமரனின் விழிகளில் புது ஒளி பிறந்தது. ''இளவரசே! நீண்ட நாட்களாக என் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் ரகசியம் ஒன்றைச் சொல்லாமல் வைத்திருக்கிறேன். வேளை வரட்டும் என்று காத்திருந்தேன். அதற்கு வேளை வந்துவிட்டது. சேர மன்னரின் நடவடிக்கையைப் பற்றிய பெரும் ரகசியம் ஒன்று எனக்குத் தெரியும்.

அதை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகுதான் சொல்ல வேண்டும் என்று இருந்தேன். இப்போது அதற்கு வேளை வந்துவிட்டது. சேர நாட்டவன்தான் நான்... என்றாலும் எனக்கு உத்தரவு கொடுங்கள்; நானே சேர நாட்டின் மீது படையெடுத்துச்

[illegible] நீங்கள் வடக்கே நோக்கிச் செல்லுங்கள். மேற்கே கங்க நாட்டுக்கு இளவரசன் அரிஞ்சயனை அனுப்புவோம்'' என்று குமரன் பரபரப்புடன் பேசினான். அந்தக் கணத்திலே [illegible] [illegible]களை விழ்த்தும் துடிப்பும் நிறைந்திருந்தது.

''குமரா! மிகத் திறமையுடன்தான் நீ பேசிவிட்டாய். ஆனால், சக்கரவர்த்திகள் சம்மதிக்கவில்லையே'' என்று சோர்வுடன் கூறினான் இராஜாதித்தன்.

குமரன் திடுக்கிட்டு, ''ஏன், சக்கரவர்த்திகள் இந்தத் திட்டத்தில் என்ன குறை கண்டுவிட்டார்? சேர நாட்டின் மீது வேண்டுமானால் இப்போது படையெடுப்பு வேண்டாம். ஆனால் இரட்டர் நாட்டின் மீதும், கங்க நாட்டின் மீதும் கிடுக்கித் தாக்குதலை நடத்தியாக வேண்டுமே'' என்றான்.

''இப்போது வேளை சரியில்லையாம் குமரா. என்னை ஒன்றும் கேட்காதே! சக்கரவர்த்திகளின் மனம் ஏனோ மாறியிருக்கிறது. இந்த ஊருக்கு அந்தத் துறவி என்று வந்தாரோ அன்று முதல் சக்கரவர்த்திகள் யுத்தமே வேண்டாம் என்கிறார். கோயில் திருப்பணிகளில் அவர் மனம் நாடுகிறது. நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர் கேட்கவில்லை'' என்று கூறினான் இராஜாதித்தன்.

''துறவியா? யார் அந்தத் துறவி? நீங்கள் அவரைச் சந்தித்தீர்களா?'' என்று குமரன் ஆவலுடன் கேட்டான்.

''வேண்டா வெறுப்பாகத்தான் நான் போய்ப் பார்த்தேன். அவரைச் சந்திக்காமல் இருப்பதுதான் நல்லது. அவரது ஒளி நிறைந்த கண்கள் நம் மனத்தை மாற்றும் சக்தி படைத்தவை. அவர் சொல்லும் நல்லுரைகளைக் கேட்கும்போது போரும் பூசலும் நாட்டை விட்டே ஒழிய வேண்டும் என்றுதான் தோன்றுகிறது. பாண்டிய மகுடமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் எனக் கூறத் தோன்றுகிறது.

''ஆனால், என் சகோதரி வீரமாதேவிக்கு ஏற்பட்ட அவமானம், அவளுக்கு ஏற்பட்ட துயரம் – அதை எப்படித் துடைப்பது? எனக்கு ஒன்றும் புரியவில்லை, குமரா ஒன்றும் புரியவில்லை... நீ வர வேண்டும் என்று காத்திருந்தேன். கங்க நாட்டு நடவடிக்கைகளைக் கண்டு, அறிந்து அங்கு விபரீதம் ஒன்றும் ஏற்படாமல் இருக்க இங்கிருந்து என் கடைசி சகோதரன் உத்தம சீலியையும், அழகிய நடனப் பெண் ஒருத்தியையும் கங்க நாட்டிற்கு அனுப்பியுள்ளேன்.''

''நடன மங்கையா, எதற்காக இளவரசே?''

''உத்தமசீலி மாறுவேடத்தில் அங்கு நடக்கும் செய்திகளை அறிந்து, சமயம் வரும்போது, பூதூகனை ஒழித்துவிடுவான். நடனப்பெண் தனது அழகால், கலைத்திறமையால் அரண்மனையில் செல்வாக்குப் பெறுவாள்.''

''ஓகோ! பொறுத்திருங்கள். அரசே! இவை ஏதும் பலிக்காது! பூதூகனை வாளால்தான் வெல்ல வேண்டும். தந்திரம் பலிக்காது, ம்ம்ம்! நடக்கிறவரையில் நாராயணன் செயல்!''

ஃ ஃ ஃ

இரவு கலையும் நிலைக்கு வந்துவிட்டது. குளிர்ந்த காற்று மெல்ல வீசியது. இராஜாதித்தன் படுத்தவுடன் உறங்கிவிட்டான். குமரனுக்கு உறக்கம் வரவில்லை. சோழ நாட்டை எதிர் நோக்கியுள்ள யுத்த அபாயத்தை அவன் முன்பே எதிர் பார்த்திருந்தான். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தன் திறமையைப் புலப்படுத்தி, சோழ நாட்டில் பெரும் பதவியை அடைய வேண்டும் என்பது அவனது லட்சியம். பெரும் பதவியுடன் கூட இப்போது மற்றொரு இலட்சியமும் சேர்ந்துவிட்டது.

''அந்த மான் விழிகளுக்குத்தான் எவ்வளவு சக்தி! நான் வரப்போகிறேன் என்றறிந்தவுடன் அநுபமா கோட்டை வாசலுக்கே வரவேற்க வந்துவிட்டாளோ! அநுபமாவை அடையக்கூடிய தகுதி எனக்கு இருக்கிறதா? என்ன இருந்தாலும் சாதாரணப் படைவீரன் தானே நான்; இளவரசரின் அபிமானத்துக்கு உரியவன் என்பதால் எனக்கு அரசமகளை மணம் செய்து கொடுத்துவிடுவார்களா?'' என்று குமரன் எண்ணியவாறு படுத்துக் கொண்டிருந்தான்.

பொழுது புலர்வதற்குச் சற்று முன்புதான் உறக்கம் அவனைச் சூழ்ந்தது. தன்னையறியாமலேயே அவன் உறங்கிவிட்டான். மெல்லிய கரம் ஒன்று அவன் கன்னத்தை வருடியது.

''ஆகா, அநுபமா இங்கு வந்துவிட்டாளா? என்னைத் தேடி வந்து விட்டாளா? அந்தக் கரங்களுக்கு தான் என்ன மென்மை? அவள் எங்கே என்னை அழைக்கிறாள்?'' நினைவு குரலாக மாறியது.

''இல்லை இல்லை, தேவி; சற்றுக் காத்திருக்க வேண்டும். விரோதிகளை ஒழித்துவிட்டுத்தான் திருமணத்தைப் பற்றிப் பேசசெல்லாம்'' என்று குமரன் கூறுகிறான்.

அவ்வள் சிரிக்கிறாள். அந்தச் சிரிப்பில் பெண்மைக்குரிய மென்மை இல்லை. குமரன் திடுக்கிட்டான், கண்விழித்துக் கொள்கிறான்; அவன் அருகே இராஜாதித்தன் உட்கார்ந் திருக்கிறான். ''இளவரசரா என்னைத் தொட்டது? அவரிடமா ஏதேதோ பிதற்றி விட்டோம்?'' குமரன் நாணத்தால் முகத்தை மூடிக் கொண்டான்.

இராஜாதித்தன் புரிந்து கொண்டான். ''குமரா! எழுந்திரு. சக்கரவர்த்திகளை நாம் காண வேண்டாமா? நேற்றுப் பேசியதை மறந்துவிட்டாயா?'' என்று கேட்டான்.

குமரனும் இராஜாதித்தனும் பராந்தகச் சோழ சக்கரவர்த்தியைக் காணச் சென்றபோது, அவருடன் துறவி சிவநேசப் பண்டிதர் ஏதோ அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

துறவியைக் கண்டவுடனே குமரன் திடுக்கிட்டான்.



அத்தியாயம் 18

விதியும் வாளும்

இராஜாதித்தனும் குமரனும் பராந்தக சக்கரவர்த்தி இருப்பிடத்திற்குள் நுழைந்தவுடனேயே சிவசேகர பண்டிதரும் சக்கரவர்த்தியும் பேசிக்கொண்டிருந்த பேச்சு அப்படியே தடைப்பட்டு நின்றுவிட்டது.

இராஜாதித்தனும், குமரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். சமய சந்தர்ப்பம் தெரியாமல் வந்துவிட்டோமோ என்று குமரன் எண்ணித் திரும்பிவிடுவதற்கு முயன்றான். இளவரசருக்கு எப்போதும் எங்கும் செல்ல உரிமை உண்டு; அவனும் அப்படிச் செல்லலாமா?

''வா. இராஜாதித்தா, வா. அது யார்? குமரனா? எப்போது கங்க நாட்டினின்று நீ வந்தாய்? அங்கே பிருதிவீபதி சௌக்யமா? அவர் மகன் விக்கியண்ணன் நோய்வாய்ப்பட்டிருப்பதாகக் கூறினார்களே இப்போது எப்படி இருக்கிறான்?'' என்று கேட்டுவிட்டுச் சக்கரவர்த்தி படுக்கையில் நன்றாகச் சாய்ந்து கொண்டார்.

குமரனால் எதுவும் பேச முடியவில்லை. பேசாமலும் இருக்க முடியவில்லை. மூன்றாவது மனிதர் இருக்கும்போது ராஜ ரகசியங்களைக் கூறலாமா என்ற சந்தேகம் அவனுள் எழுந்தது. மூன்றாவது மனிதர் மட்டுமா அந்தத் துறவி? குமரன், அவரைப் பற்றி நினைவுபடுத்திக் கொள்ள முயன்றான்.

ஒரு கணம்; ஒரே கணத்தில் நினைவுபடுத்திக் கொண்டு விட்டான். ''ஆம்; அவரே தான். இளவரசர் சொன்னது சரிதான்?'' துறவியின் ஒளி நோக்குக்கு ஈடுகொடுக்க அவனால் முடிய வில்லை. அந்த விழிகளுக்குத்தான் அவ்வளவு கூர்மை எங்கிருந்து வந்தது?

குமரன் ஏனோ தலைகுனிந்து கொண்டான். துறவியும் அந்த இடத்தினின்று எழுந்துவிட்டார்.

யாருக்கும் சிரம் சாய்க்காத பராந்தகர் மெல்ல எழுந்து கைகூப்பித் துறவியை வழி அனுப்புகிறார்.

விரைவிலேயே புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்வதாகக் கூறுகிறார். துறவியும் அவருடன் சேர்ந்தே வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறார். துறவி கை உயர்த்தி, ஆசி கூறி, கடைக்கண்ணால் குமரனைப் பார்த்துப் புன்சிரிப்புடன் இராஜாதித்தனை நோக்கி விடைபெற்றுச் செல்கிறார்.

பராந்தகச் சோழச் சக்கரவர்த்தி மஞ்சத்தில் மிகுந்த களைப்புடன் சாய்ந்து கொண்டார். அரசி கோக்கிழான் அடிகளார் கையில் மலர், பழம், பிரசாதத் தட்டுடன் வந்து விட்டார்கள். இனி சக்கரவர்த்தியுடன் பேசுவதற்குச் சற்று நேரந்தான் அவகாசம் கிடைக்கும்.

அரசமா தேவி கோக்கிழான் அடிகளை நோக்கிப் பராந்தகர், மெல்லப் புன்னகை புரிந்து, ''தேவி பண்டிதரின் அருள் உரையைக் கேட்டாயா? சோழ நாட்டிலே தெய்வ மணம் கமழ வேண்டுமாம். ஈசனுக்குக் கோயில் எடுப்பதில் உள்ள பெருமையும், புகழும் ஆயிரம் போர்க்களத்தில் அடையும் வெற்றியிலும் கிடைக்காது என்கிறார். உண்மைதானே! வடக்கும், தெற்கும், மேற்கும் சென்று பல போர்க்களங்களில் வெற்றி மாலை சூடினேன். ஆயிரக்கணக்கில் பொன் செலவாகியது. இதை ஈடு செய்யப் பொக்கிஷத்திலும், பொன்னும் பொருளும் சேர்த்தேன். என்ன பலன்? தில்லைச் சிற்றம்பலத்து விமானத்தில் ஒரு பகுதிக்குப் பொன் வேய்ந்தேனே, அதுதானே இன்றளவும் நின்று நிலவுகிறது.

''சிவசேகர பண்டிதரும், அந்தத் தொண்டிற்காக என்னைப் பெரிதும் பாராட்டுகிறார். பெரும் துறவியின் - மகத்தான பண்டிதரின் பாராட்டுதல் எனக்குக் கிடைப்பதை விட வேறு பாக்கியம் ஏது? என் வாழ்நாளின் மீதிக் காலத்தைச் சிவத் தொண்டிலே கழிக்க வேண்டும். தில்லைச் சிதம்பரத்தைக காண வேண்டும். என்ற ஆவலுடன் இருக்கிறார் பண்டிதர். குடும்பத்துடன் சென்று நடராஜபிரானைத் தரிசிக்க வேண்டும். புறப்படுவதற்கு ஆயத்தமாக இரு'' என்று சிறிதுகூட நிறுத்தாமல் பேசி முடித்தார்.

குமரனுக்குப் புரிந்துவிட்டது. இராஜாதித்தனை நோக்கினான் அவன். இராஜாதித்தனுக்கும் புரிந்துவிட்டது. பெரிய ரகசியம் ஒன்றுமில்லை. தில்லைச் சிற்றம்பலத்தைக் காண வேண்டும் என்று துறவிக்கு ஆசை. சக்கரவர்த்தியையும் உடன் அழைத்திருக்கிறார். சக்கரவர்த்தியும் புறப்படுவதற்குத் தன் சம்மதம் தெரிவித்துவிட்டார். அவ்வளவுதான் அவன் புரிந்து கொண்டது. ஆனால், குமரன் ஊகித்துக் கொண்டதோ வேறு.

சக்கரவர்த்தியின் கவனத்தைச் சற்றுத் தன் பக்கம் திருப்ப வேண்டும் என்று இராஜாதித்தன் விரும்பினான். அதனால் தன் தாயை நோக்கி, "அம்மா! அரண்மனை வைத்தியர் என்ன சொன்னார்? சக்கரவர்த்திக்கு இரத்த அழுத்தம் சீர் பெற்றிருக்கிறதா? தலைச்சுற்றலுக்கும் மயக்கத்துக்கும் மருந்து கொடுத்தாரா?" என்று கேட்டான்.

அவன் எதிர்பார்த்தது போல் அரசியார் மறுமொழி கூறுவதற்குள் சக்கரவர்த்தியே பேசினார்.

"இராஜாதித்தா, இந்த உடலுக்கு என்று தான் நோயில்லை. ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு வித நோய்க்கு ஆட்படுகிறது. பாசநோயும், காதல் நோயும், புகழ்வேட்கை நோயும் போர் நினைவு நோயுமாக ஒவ்வொரு சமயம் ஒவ்வொருவித நோய்க்கு அடிமையாகிறது. ஆனால், பக்தி நோய்க்கு மட்டும் ஏன் அடிமைப்பட மாட்டேன் என்று முரண்டு பிடிக்கிறது?" என்று கேட்டார்.

என்ன மறுமொழி கூறுவது என்று புரியாமல் குமரனும் இராஜாதித்தனும் திகைத்தவாறு இருக்கும்போது "குழந்தாய் இராஜாதித்தா, போர்க்களத்திலே வெற்றி வாகை சூடிப் பெருமை அடையத் துடிக்கும் நோய் உன்னைப் பற்றிக் கொண்டிருக்கிறது" என்று சக்கவரவர்த்தி மெல்ல நகைத்தவாறு கூறும்போது இராஜாதித்தன் குறுக்கிட்டு, "இவ்வாறு குறுக்கிடுவதற்காக என்னைப் பொறுத்தருளுங்கள் அரசே! புகழும் பெருமையும் பெறுவதற்கு நான் போர்க்களம் செல்லத் துடிக்கவில்லை. சோழ நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் அவமானத்தைத் துடைக்கவும், ஏற்படப் போகும் ஆபத்தை முளையில் கிள்ளவுமே துடிக்கிறேன். குமரன் கங்கநாட்டினின்று கொண்டு வந்திருக்கும் செய்தியைக் கேட்கும்போது ஒவ்வொரு நொடியும் தாமதமாகக் கழிக்கிறோமே என்று தான் தோன்றுகிறது" என்று படபடப்பாகப் பேசினான்.

பராந்தகர் முகத்தில் எந்தவிதச் சலனமுமில்லை. "ஆமாம், விக்கியண்ணன் உடல் நிலை மிகவும் கேடுற்று இருக்கிறது. பிருதிவீபதியைச் சிறைவைக்காத குறைதான். பூதூகன் கை ஓங்கிவிட்டது. இல்லையா?" என்று அவர் கேட்டவுடன், இராஜாதித்தனும் குமரனும் திடுக்கிட்டனர்.

சக்கரவர்த்தி இருந்த இடத்திலிருந்து எல்லா விஷயங்களையும் அறிந்திருக்கிறார். அறிந்தும், அவர் அமைதியாக இருக்கும் காரணமென்ன என்று புரியாமல் திகைத்தனர்.

"நமது அருமை நண்பன் பிருதிவீபதிக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் ஆபத்திலிருந்து காப்பாற்ற நாம் எந்தவிதத்தில்

உதவலாம் என்று நான் யோசித்து வருகிறேன்'' என்று தொடர்ந்து பராந்தகர் கூறினார்.

''இந்தச் சமயத்தில் கங்க நாட்டிற்கும் படைகளுடன் சென்று பிருதிவீபதிக்கு நாம் உதவலாம்'' என்று குமரன் மிகவும் பயந்து வாய்பொத்தி மெல்லிய குரலில் கூறினான்.

பராந்தகர் மெல்ல நகைத்தார். தன் பட்டத்து ராணி கோக்கிழான் அடிகளை நோக்கினார்.

''படையெடுத்தலிலும், போர்க்களம் என்று முன் நிற்பதிலும் என்னையும் இராஜாதித்தன் மிஞ்சிவிடுகிறானே என்று எண்ணினேன். அவன் நண்பனான இந்தப் பிள்ளையோ அவனையும் மிஞ்சிவிடுவான் போலிருக்கிறது!'' என்று கூறிவிட்டு, அவர் இராஜாதித்தன் பக்கம் நோக்கி, ''இராஜாதித்தா, கங்க நாட்டின் சிங்காசனத்தில் இப்போது யார் அமர்ந் திருக்கிறார்கள்?'' என்று கேட்டார்.

''பிருதிவீபதிதான்.''

''பிருதிவீபதி சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும் வரை தோழமை கொண்ட நாட்டிற்குள் நமது படைகளை அனுப்பலாமா? மேலும் உள்நாட்டு விவகாரம் ஏதோ நடைபெறுகிறது. அதில் தலையிடுவதாகாதா? பொறுத்திருந்து பார்ப்போம். நீ தான் வேவு பார்ப்பதற்காக உத்தமசீலியையும் காமவல்லியின் வளர்ப்புப் பெண் ஒருத்தியையும் அனுப்பி இருக்கிறாயே.''

ஃ ஃ ஃ

அரசர் இவ்வாறு கூறவும், இராஜாதித்தனால் ஒன்றுமே பேச முடியவில்லை. சக்கரவர்த்திக்கு ஒன்றுமே தெரியாது என்று நாம் யோசனை கூற முற்பட்டோமே என்று வெட்கித் தலைகுனிந்தான்.

ஆனால், குமரன் குனிந்த தலை நிமிர்ந்து, ''என்னைப் பொறுத்தருளுங்கள், சக்கரவர்த்தி! கங்க நாட்டில் நடைபெறுவது உள்நாட்டு விவகாரமில்லை. இராட்டிரகூட நாட்டு அசோக வர்ஷன் இந்தப் பூதுகனைத் தூண்டிவிட்டு நாட்டைக் கைப்பற்றிக் கொள்ள அனுப்பியுள்ளான்.

''பூதுகன் தனது ஆதரவாளர்களை நாடு எங்கும் முக்கிய இடங்களில் நியமித்திருக்கிறான். வாய்ப்பை எதிர்பார்த்து ஒரே நொடியில் பிருதிவீபதியைச் சிறையில் அடைத்து ஆட்சியைக் கைப்பற்றக் காத்திருக்கிறான். இந்தச் சமயத்தில் நம் படைகளுடன் சென்று பூதுகனை ஒழித்துவிட வேண்டியது நல்லதல்லவா?'' என்றான்.

குமரன் துணிவுடனே இந்தக் கருத்தை வெளியிட்டவுடன், இராஜாதித்தனுக்கு மீண்டும் உற்சாகம் பிறந்தது. அவன் உடனே தொடர்ந்து, "குமரன் தலைமையில் படைகளை அனுப்புவோம். அவ்வேளை இராட்டிரகூடர்கள் பூதுாகன் உதவிக்குப் படைகளை அனுப்ப முற்படலாம். அதைத் தடுக்கவும், கிழவன் அசோக வர்ஷனையும், அவன் மகன் கிருஷ்ணனையும் ஒடுக்கவும் நான் படைகளுடன் மான்ய கேடத்தை நோக்கிச் செல்கிறேன். அனுமதி கொடுங்கள் சக்கரவர்த்தி!" என்று பணிவுடனும், அதே சமயத்தில் குரலில் கம்பீரத்துடனும் கூறினான்.

அரசியார் இளஞ்சிங்கம் இரண்டும் முழக்கமிடுவதையும் சக்கரவர்த்தி அதற்குக் கூறும் மறுமொழியையும் புதிதாக எழுப்பும் பிரச்சினையையும் கேட்டு ராஜதந்திர போக்கின் சுவையை அறிய ஆவல் கொண்டவளாய், பராந்தகர் காலடியில் அமர்ந்து மெல்ல அவர் பாதங்களைப் பிடித்தவாறு கவனிக்கலானாள்.

"இராஜாதித்தா, மான்யகேட நகரம் இங்கிருந்து எவ்வளவு தொலைவு இருக்கிறது தெரியுமா? ஈழத்திற்கு நீ சென்றதைவிட இரு மடங்கு இருக்கும். வழியில் பெரும் பெரும் நதிகளைக் கடக்க வேண்டும். பெரும் மலைகளைத் தாண்ட வேண்டும். மூன்று நாடுகளிடையே நுழைந்து செல்ல வேண்டும்.

ஈழத்திற்கு நீ அழைத்துச் சென்றதைப்போல் நான்கு மடங்கு படைகள் வேண்டும். யானைப் படையும் குதிரைப்படையும் அதிகம் வேண்டும். மலைகள் நிறைந்த நாடானதால், குறி தவறாமல் அம்பெய்யக் கூடிய வில்லவர்கள் வேண்டும். நமது வேவு படையைச் சேர்ந்தவர்கள் ஒரு மாதத்திற்கு முன்பே அந்த நாட்டில் ஊடுருவியிருக்க வேண்டும். இராட்டிரகூட நாட்டின் தலைநகரை நமது படை சூழ்ந்திருக்கும்போது அசோகவர்ஷனுக்கு உதவியாக மற்ற திசையிலிருந்து படை வீரர்கள் நம்மைத் தாக்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

அதேபோல்தான் கங்க நாட்டின் நிலையும். பூதுாகன் முக்கியமான இடங்களிலெல்லாம் தனது ஆதரவாளர்களை நியமித்திருப்பதாகக் கூறுகிறாய். நமது படைகள் அங்கும் நாலாபுறமும் தாக்கப்பட்டால்?" என்று கூறிப் பெருங் கேள்வியொன்றைச் சக்கரவர்த்தி போட்டார்.

இருவரிடமிருந்து உடனே மறுமொழி வரவில்லை. பராந்தகரே தொடர்ந்து கூறினார்: "இராஜாதித்தா, குமரா, அயர்ந்து விடாதீர்கள்! எத்தகைய தாக்குதல்களையும் முறியடிக்கும் சக்தி உங்களிடமும் நமது படைகளிடமும் இருக்கின்றன என்று எனக்குத் தெரியும்.

ஆனால், படைபலம் இப்போதுள்ளதைவிட மூன்று மடங்கு வேண்டும். வடக்கிலும் மேற்கிலும் படையுடன் செல்லும்போது உள் நாட்டின் பாதுகாவலனுக்கும் படைகள் தேவைப்படும். இவற்றையெல்லாம் ஆலோசித்துச் செய்ய வேண்டும். எவ்வளவு நாட்கள்தாம் யோசித்துக் கொண்டேயிருப்பது என்று நீங்கள் கேட்கலாம்.''

''நான் தீவிரமாக யோசித்தவரையில் இப்போது நம் நாட்டிற்கு ஆபத்து ஏதும் வரவில்லை. திருச்சிற்றம்பலத்துப் பிரான் அருளால் பேராபத்து ஏதும் வராது. சிவசேகர பண்டிதரும் அவ்வாறுதான் கூறினார்.

நேற்று பகவதி தேவிக்குப் பூஜை செய்து நம் நாட்டின் வருங்காலம் பற்றிக் கேட்டாராம். எனக்குப் பிறகும் இந்த நாடு மிகவும் சிறப்பாகத் திகழுமாம். ஆனால், நமது காலத்தை இப்படிப் போர் வெறியிலேயே கழிக்கக் கூடாது என்று பண்டிதர் எச்சரிக்கிறார் என்றுமே பெருமை தரக்கூடிய கோவில் திருப்பணிகளை உடனே தொடங்குமாறு வற்புறுத்துகிறார்.''

''தொண்டை மண்டலத்திலிருந்து திறமை வாய்ந்த சிற்பி வந்திருக்கிறாராம். உடனடியாக அவருக்கு வேண்டிய நூற்றுக்கணக்கான கருவிகளை வடித்து தர கொல்லர்களுக்குக் கட்டளையிட வேண்டும். அதற்கு முன்பாக நாளையே நாம் சிதம்பரம் சென்று பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நாம் எல்லோரும் செல்கிறோம். வீரமாதேவியையும் அவள் கணவரையும் அழைத்து வா தேவி!'' என்று பராந்தகர் பேசினார்.

இடைவிடாமல் பேசியதால் அவருக்கு மூச்சுத் திணறியது. சோர்வு சேர்ந்தது. களைப்பு கண்களை மெல்ல மூடச் செய்தது.

இராஜாதித்தனும் குமரனும் ஒன்றுமே முடிவுக்கு வர முடியாமல் அவ்விடத்திலிருந்து வெளியேற நேர்ந்தது. அவர்கள் சென்றவுடனேயே அங்கே அதுவரை அந்தக் கூடத்தின் பெரும் தூணின் மறைவில் இருந்து அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை ஒன்றுவிடாமல் கேட்டுக் கொண்டிருந்த சிவசேகர பண்டிதரின் இளம் சீடன் ஒருவன், ஒருவரும் அறியாமல் பலகணியின் வழியாகக் குதித்து நந்தவனத்தில் நுழைந்து சிட்டுபோல் பறந்துவிட்டான்.

மறுகணம் அவை அனைத்தும் துறவிக்குத் தெரிவிக்கப்படும். அந்தச் சிறுவனின் உதவியுடன் தான் துறவி அரண்மனை ரகசியங்களையும், நாள்தோறும் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளையும் அறிந்து வந்தார். முற்றும் துறந்தவருக்கு அரசியல் விவகாரம் எதற்கு?

அந்தக் கேள்வியைத்தான் இராஜாதித்தன் குமரனை நோக்கிக் கேட்டான். "குமரா, எனக்கு ஏற்படும் ஆத்திரத்தில் அத்துறவியை அப்படியே குண்டுகட்டாகக் கட்டி ஓடும் பிரவாகத்தில் போட்டுவிட வேண்டும் என்று தோன்றுகிறது. காவி உடைக்குள்ளே என்ன கபடத்தை வைத்திருக்கிறாரோ? அவர்தான் சக்கரவர்த்தியின் மனத்தை மிகவும் கலைத்திருக்கிறார்" என்று ஆத்திரத்துடன் பேசினான்.

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த குமரன், இராஜாதித்தன் பேச்சைக் கேட்டுத் திடுக்கிட்டவனாக, "இளவரசே! துறவியின் விஷயத்தில் நாம் சற்றுக் கவனமாக இருக்க வேண்டும். இவ்வளவு நாள் என்னுடைய வரலாற்றைத் தங்களுக்கு முழுவதும் நான் தெரிவிக்கவில்லை. அதைத் தெரிவித்துவிட வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது.

நான் நினைப்பது உண்மையானால் துறவியின் நடவடிக்கையைக் கண்காணித்து அதற்குத் தகுந்தபடி நாம் செயல் புரியவேண்டும். துறவி மிகவும் கெட்டிக்காரர். அவர் சரியான உறுதியான - இடமாகப் பார்த்துப் பிடித்துவிட்டார் அவருடைய ஆசிரமத்தில் நடைபெறுவனவற்றைத் தெரிவிக்க யாரையோ நியமித்திருப்பதாகச் சொன்னீர்கள் அல்லவா?" என்று கேட்டான்.

"ஆம். காமவல்லியே அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறாள். அதுசரி, துறவியை நீ முன்பே அறிவாயா?" என்று இராஜாதித்தன் ஆவலுடன் கேட்டான்.

"இளவரசே, எனக்கு ஒரு நாள் அவகாசம் கொடுக்க வேண்டும். நான் சிலவற்றை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகுதான் சொல்ல முடியும் தங்களிடம் நான் ஒன்றையும் மறைக்க மாட்டேன் என்பது உறுதி" என்று குமரன் ஆவேசத்துடன் பேசினான்.

அப்போது அங்கே அநுபமா வந்து கொண்டிருந்தாள். தான் அங்கு அவர்கள் சந்திப்பிற்கு இடையூறாக இருக்கக் கூடாது என்று இராஜாதித்தன் விடைபெற்றுக் கொண்டான்.

தான் தனியே விடப்பட்டதால் சற்று நேரம் மன அமைதியுடன் இருக்கலாம் என்று எண்ணிய குமரனின் அருகே அநுபமா வந்து நின்றாள்.

"நாளைக்குச் சிதம்பரம் செல்லப் போகிறோம். நீங்களும் வருகிறீர்களில்லையா?" என்று அநுபமா கேட்டாள்.

மென்று விழுங்கிச் சொற்களை வரவழைத்து, "ஆம் போகிறேன்; இளவரசர் அழைத்திருக்கிறார்" என்றான் குமரன்.

''ஏன் சிவிகையை ஒட்டியே தாங்கள் குதிரையில் வந்தால் பேசிக்கொண்டே செல்லலாம் இல்லையா?''

''இல்லை, தேவி! சிதம்பரத்தில் நாம் தங்கியிருக்கும்போது வேண்டியது பேசுவோமே'' என்றான் குமரன்.

''என்ன பேசுவோம் வடக்கே படையெடுப்பதைப் பற்றித்தானே? வீரமாதேவியினால் எல்லாருக்குமே சங்கடம்'' என்று அநுபமா அலுத்துக் கொண்டாள்.

''அப்படிச் சொல்லாதே, அநுபமா! வீரமாதேவியை மீண்டும் மான்யகேட அரண்மனையில் அரசியாக அமர்த்துவதன் மூலம் சோழ நாட்டின் மதிப்பே மீண்டும் உயரப் போகிறது'' என்று குமரன் கூறினான்.

''ஒருநாளும் நடக்கப் போவதில்லை. வீரமாதேவி தஞ்சையை விட்டுச் செல்லவும் போவதில்லை.''

அநுபமா கூறியதைக் கேட்ட குமரனின் உடல் துடித்தது. சுடச்சுட அவளுக்கு மறுமொழி கூறி, துறவியின் கூற்று உண்மையில்லை என்று தெரிவிக்க வேண்டும்போல் தோன்றியது.

குமரன் இவ்வாறு எண்ணிக் கொண்டிருந்தபோது அநுபமா முகத்தை சுளித்து, ''ஏதோ சிந்தனையில் ஆழ்ந்துவிட்டீர்களே! இந்த நிலையில் என்னோடு எங்கே பேசப் போகிறீர்கள்? சந்தர்ப்பம் சரியில்லை...'' என்று கூறி அங்கிருந்து மெல்ல அகன்றாள்.

குமரன் தன் இருப்பிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது கிழவி ஒருத்தி மெல்ல அவனை நெருங்கி, ''நீங்கள் தானே ஐயா குமரன் என்பவர்?'' என்று கேட்டாள்.

''ஆமாம்'' என்று வியப்புடன் கூறினான் குமரன்.

''கருணை கூர்ந்தது என்னுடன் அருகேயுள்ள என் குடிசைக்கு வருகிறீர்களா?'' என்று கிழவி அழைத்தாள்.

ஒன்றும் புரியாமல் குமரன் கிழவியைப் பின்தொடர்ந்தான்.

சற்றுத் தொலைவில் மரங்களடர்ந்த தோப்பின் நடுவே அவளுடைய குடிசை இருந்தது.

குடிசைக்குள் நுழைந்த குமரனுக்கு ஒன்றுமே புரியவில்லை. இந்தக் குருபியை காணத் தன்னை ஏன் கிழவி அழைத்து வந்தாள் என்று அவனுக்குப் புரியவில்லை.

குடிசையின் ஓரத்தில் அழகு அழிந்த குமுதவல்லி படுத்திருந்தாள். அவள் தான் குமுதவல்லி என்று புரிந்து கொண்டவுடன் அவன் உள்ளத்தில் ஏற்பட்ட விளைவே வேறு!



அத்தியாயம் 19

தேவியின் சித்தம்

தில்லை சிதம்பரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. நகரம் முழுவதும் மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. நாற்சந்திகளிலும், முச்சந்திகளிலும் பந்தல் போட்டு நீலவிதானமிட்டு வாழை, கமுகு முதலியவை கட்டி பூச்சரங்களைத் தொங்க விட்டு அழகுபடுத்தியிருந்தனர்.

''ஊரில் என்ன விசேஷம்?'' என்று தெரியாத புது மனிதர் தெரிந்தவர்களைக் கேட்டார்.

''உமக்குத் தெரியாதா ஐயா? சோழ சக்கரவர்த்தி இன்று வரப் போகிறாராம்'' என்று உற்சாகமாகக் கூறினார் விவரம் தெரிந்தவர்.

''ஆகா; நமது சக்கரவர்த்தியா? வீர நாராயண பராந்தக சோழ தேவரா? மன்னர் என்றால் அவர்தான் மன்னர் ஐயா! நடராசர் திருச்சபைக்குப் பொன் வேய்ந்தவராயிற்றே'' என்று கூறிப் புளகாங்கிதம் அடைந்தவர் கேட்டார்.

பராந்தக சோழர் வருகிறார் என்றவுடன் ஊர் மக்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. மூர்த்திச் சிறப்பால் கீர்த்தி பெற்றிருந்த தில்லைக்கோயில் விமானத்தைப் பளபளவென ஜ்வலிக்கும் பொன் தகடு வேய்ந்து அழகுபடுத்தியவர் அவர். மரத்தாலான நிருத்ய சபை பழுதுபட்டு விடக்கூடாது என்பதற்காகத் தன் வசமிருந்த பொருள்களில் பெரும் பகுதியைப் பொற்றகடுகள் வேய்வதற்குச் செலவிட்டார். 'சிவசிவ' என்று சிவபிரான் திருநாமத்தை அதில் பொறிக்கச் சொன்னார்.

அந்தப் பணி நிறைவேறியபோது சிதம்பரம் வந்தவர் இப்போதுதான் மீண்டும் வருகிறார்.

தில்லை மூவாயிரவரும் கூடி மன்னரையும் பரிவாரங்களையும் வரவேற்பதற்கான ஏற்பாடுகளைச் சிறந்த முறையில் செய்திருந்தனர். மேலும் கோயிலின் முன்னேற்றத்திற்கான தானங்கள் பல கேட்பதற்கும் அவர்கள் ஒன்று கூடிப் பேசி முடிவு செய்திருந்தனர்.

மக்களின் கடலோசை போன்ற வாழ்த்தொலியுடன் துந்துபி, எக்காளம், முரசம் போன்ற பலவகை வாத்தியங்கள் முழங்க, மேளதாள நர்த்தன வரவேற்புடன் தில்லையின் எல்லையில் மன்னர் எதிர் கொண்டழைக்கப்பட்டார். மன்னருடனும் அரசியுடனும் இளவரசர் இராஜாதித்தனும், கண்டராதித்தனும் உடன் வந்தானர்.

வீரமாதேவியும் அநுபமாவும் வந்தனர். சிவசேகர பண்டிதர் தன் சீடப்பரிவாரங்களுடன் வந்தார். தஞ்சையிலிருந்து சிதம்பரம் வருவதென்றால் அரச பரிவாரங்களுக்கு நான்கு நாட்கள் கூட ஆகாது. ஆனால் வழிநெடுகப் பல இடங்களில் தங்கிப் பல ஊர் விண்ணகரங்களையும், திருஈச்சரங்களையும் தரிசித்து வரவேண்டியிருந்ததால் மேலும் ஓரிரு நாட்கள் தாமதமாகி விட்டன.

சிவசேகர பண்டிதர் சோழவள நாட்டுத் திருக்கோவில்களைக் கண்டு மெய்மறந்துவிட்டார் என்றே சொல்லலாம். தில்லைக் கோயிலைக் கண்டவுடன் அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

நடராஜர் திருமுன்பு சோழ ராஜர் நின்றார். அவர் அருகே சிவசேகரர் நின்றார். மெய்மறந்து அனைவரும் தில்லைக் கூத்தனை வேண்டி நின்றனர். ஆண்டவனைத் துதித்து வணங்கிய பிறகு, மன்னர் இளைப்பாற மாளிகைக்குச் சென்றார். சிவசேகர பண்டிதரும் அவரும் தனித்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

''தங்களுடைய வற்புறுத்தல் இல்லையென்றால் நான் இன்று நடராஜப் பெருமானை எங்கே தரிசித்திருக்கப் போகிறேன்'' என்று பராந்தகர் சிவசேகர பண்டிதரிடம் கூறினார்.

சிவசேகர பண்டிதர் உள்ளத்தில் கிளைவிட்டுப் பரவின; சிந்தனைக் கொடிகள் மேலும் பூத்துக் குலுங்கின. புன்முறுவலுடன் அவர், ''நான் இளம் வயதில் திருவஞ்சைக் களத்தில் இருக்கும்போதே அங்கே சிதம்பரத்தைப் பற்றிப் பேசிக் கொள்வார்கள். எங்கள் நாட்டு அரசர் ஒருவர் இந்தக் கோவிலில் சிவத்தொண்டு செய்து கொண்டிருந்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்று வினவினார் சிவசேகரர்.

பாராந்தக சோழர் ஆவல் மிகுதியுடன் துறவியின் முகத்தை நோக்கினார். சேர மன்னர் ஒருவர் சிதம்பரம் வந்து தங்கியிருந்த செய்தியை அறிந்து கொள்ள வேண்டும் என்னும் பரபரப்பு அவருக்கிருந்தது.

''சேரமான் பெருமாள் என்ற சேர மன்னர் அரச பதவியில் ஆசை கொள்ளாமல் உலகுக்கு எல்லாம் அரசரான நடராஜரைத்

தினந்தோறும் தரிசித்து அவருக்குத் தொண்டு செய்வதிலேயே நாட்டம் கொண்டு இங்கு வந்தார். சிவனடியார் சுந்தரமூர்த்தி நாயனாருடைய நட்பும் அப்பொழுதுதான் அவருக்குக் கிடைத்தது'' என்று பண்டிதர் சொன்னார்.

''அடிகளே! இந்த ஸ்தலத்திற்கு இவ்வளவு மகிமை இருக்கிறது என்று இதுகாறும் நான் அறிந்து கொள்ளாமல் இருந்துவிட்டேன்.

ஆனால், என்னை மிகவும் கவர்ந்த கோவில் இது. இல்லாவிட்டால் போர் ஒன்றில் மட்டும் நாட்டம் கொண்டு இளமை முதல் அலைந்து கொண்டிருந்த நான், கருவூலத்தில் உள்ள செல்வம் முழுவதையும் இங்கே செலவிட முன் வந்திருப்பேனா?'' என்றார் பராந்தகர்.

''சக்கரவர்த்தி அவர்களே; உலகில் அழியாத செயல் ஒன்று உண்டென்றால் அது கோவில் திருப்பணிதான், நான் துறவி. ஈசன் திருப்பாத நினைவு தவிர, வேறு ஒன்றும் அறியாதவன். அதனால் இப்படிக் கூறுகிறேன் என்று நினைக்க வேண்டாம். எக்காலத்திலும் நிலைத்து இருக்கக் கூடியது போர்க்கள வெற்றியன்று.

அதோ சூரிய ஒளியிலே பளபளத்துத் தெரிகிறதே விமானம்! அதை இன்னும் நூறு ஐநூறு, ஆயிரம் ஆண்டுகள் கழித்துப் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள் தெரியுமா? ஆகா இத்தகைய அரும்பெரும் செயல் செய்தவர் யார் என்று கேட்பார்கள். உடனே அருகில் இருப்பவர் வெகு காலத்திற்கு முன்பு சோழ நாட்டில் பராந்தக மன்னர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர்தான் இப்பெரும் பணியைச் செய்தார்' என்று தெரிவிப்பார். நாம் எல்லோரும் அழிந்துவிடுவோம்; ஆனால் அழியாமல் நிலைப்பது தெய்வத் தொண்டுதான். தாங்கள் செய்திருக்கும் இந்தத் திருப்பணி தான்'' என்றார் துறவி.

பண்டிதரின் வாக்கு வன்மையில், சொல் ஜாலத்தில் பராந்தகர் முன்பே மயங்கிவிட்டார். இப்போதோ துறவி தன்னைப் புகழ்வதைக் கேட்டு, தான் செய்த இந்தச் சிறு பணி ஒன்றுக்காகவே மிகவும் பாராட்டுவதைக் கண்டு பராந்தகர் உற்சாகமடைந்தார்.

''பண்டிதர் அவர்களே! தாங்கள் என்னை மிகவும் பாராட்டிவிட்டீர்கள். அதற்கு நான் அருகதை உடையவனே அல்லன். என் தந்தை ஆதித்த சோழர் தனது வாழ்நாளில் சிவநேசச் செல்வர்கள் பாடி மகிழ்ந்த பல ஊர்க் கோயில்களைச் சுற்றிக் கற்றளியாக்கினார்'' என்று பராந்தகர் கூறியவுடனே சிவசேகர பண்டிதர் முகமலர்ச்சியுடன், ''ஆகா தங்களுடைய தந்தையின்

பெயர் எட்டுத் திக்குகளிலும் பரவியிருக்கிறது. அவர் செய்த திருப்பணிகளைக் கேள்விப்பட்டுத்தானே நான் சோழ நாட்டிற்கு வந்தேன். ஆனால், ஏன் நீங்கள் தந்தையின் பணிகளைத் தொடரவில்லை?'' என்று கேட்டார்.

பராந்தகர் தம் இமைகளைச் சற்று மூடிக் கொண்டார். இதுவரை அவரைப் பார்த்துக் கேள்விகள் கேட்டவர்களே கிடையாது.

அப்பொழுது இராஜாதித்தனும், கண்டராதித்தனும், வீரமாதேவியும், அநுபமாவும் தந்தையைக் காண வந்தவர்கள் சற்று வெளியே தயங்கி நின்றனர். காலடியோசை கேட்டு கண்ணைத் திறந்த பராந்தகர் தன் செல்வங்களை ஆவலுடன் வரவேற்று, ''உள்ளே வர ஏதும் தடையில்லையே. பண்டிதரும் நானும் ரகசியம் ஏதும் பேசவில்லை. ராஜ தந்திர முடிவு ஏதும் செய்யவில்லை. உள்ளே வாருங்கள். இப்படி வாருங்கள். இராஜாதித்தா! பண்டிதர் கேட்கிறார், என்னை ஒரு கேள்வி. அதற்கு நான் விடை சொல்வதைவிட நீயே சொல்வதுதான் சரி'' என்றார்.

❖ ❖ ❖

அங்கே சிறிது நேரம் மௌனம் நிலவியது. அதைச் சிவசேகர பண்டிதரே கலைத்தார். ''சக்கரவர்த்தி அவர்களே! தந்தையின் மதிப்பு அறியா மகன் உண்டா? ஆனால், தாங்கள் ஒரு காரியத்தைச் செய்ததற்கும், செய்யாததற்கும் உள்ள காரியத்தை அவன் அறிந்திருக்க முடியாதல்லவா? அதனால் நீங்களே சொல்வதுதான் சிறப்பு உடையது'' என்றார்.

பராந்தகர் பழைய நினைவுகளை மனக்கண் முன்னே கொண்டு வருவதுபோல் சிறிது நேரம் மௌனமாக இருந்த பிறகு, ''துறவியாரே! நான் இன்றைய தினத்தைப்போல் எந்தக் காலத்திலாவது ஓய்வுடன் சுவாமி தரிசனம் செய்து மாளிகையில் இளைப்பாறி அமைதியாகப் பேசியிருக்கிறேனா என என் பட்டத்தரசியைக் கேட்டால் தெரியும். என்ன அப்படித்தானே'' என்று அவர் அரசியை நோக்கினார். அரசி மிகவும் பணிவுடன் புன்னகை புரிந்தாள்.

பராந்தகர் சற்று உணர்ச்சிவசப்பட்ட குரலில், ''எனக்கு விவரம் தெரிந்தவுடனேயே நான் என் தந்தை கட்டளையிட்டு அனுப்பும் போர்க் களங்களுக்குச் செல்வதைத்தான் எனது பணியாக ஏற்றேன். போர் தொடங்கும் முன்பு ஒற்றர்கள் கூட்டத்துடன் சேர்ந்து பண்டம் விற்பவன் போலவும், பவழ வியாபாரி போலவும், குதிரை வியாபாரி போலவும், வேடமிட்டுச் சுற்றித் திரிந்து இந்நாட்டின் கேந்திர ஸ்தாபனங்களை அறிந்து கொண்டேன்.

பிறகு அவை எனக்கு மிகவும் உதவியாக இருந்தன. முதலில் சிறு சிறு போர்க் களங்களில் வீரப் பிரதாபங்களைக் காட்டினேன். போர்த்தினவு இடைவிடாமல் ஏற்பட்டது. தோள்கள் எப்போதும் துடித்துக்கொண்டே இருந்தன.

''என் தந்தை ஆதித்த சக்கரவர்த்தி வீர மரணம் எய்தினார். அரியணையில் ஏறி அமர்ந்தவுடனேயே என்னைப் போர்க்களம் வரவேற்கும் என்று எதிர்பார்க்கவில்லை. பாண்டியர்கள் என் சீற்றத்தைத் தூண்டிவிட்டனர். எனக்கு உறுதுணையாகப் பழுவேட்டரையரும் கொடும்பாளூர் இளங்கோவும் படையெடுக்க உதவினர்.

நான் அவ்விதம் பாண்டிய நாட்டின் மீது படையெடுக்காமல் இருந்திருந்தால் கதையே வேறுவிதமாக மாறியிருக்கும். பாண்டிய மன்னர், ஈழத்து வேந்தன் காசியபனுடன் சேர்ந்து கொண்டு சோழ நாட்டை அழித்திருப்பான்...''

பிறகு தன் விழிகளை மூடிக்கொண்டு பழைய சம்பவங்களைக் கற்பனை படுத்திக் கொள்ள முயன்றார்.

''பாண்டிய வீரர்களை விரோதி நாட்டு வீரர்கள் என்று குறைவுபடுத்திக் கூறக் கூடாது. நாட்டுப்பற்று மிகுந்த போர் வீரர்கள் எப்படிப் போர் புரிந்தனர்! ஆகா! ராம ராவணயுத்தம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். மகா பாரதப் போரிலே ஆயிரக்கணக்கான வீரர்கள் கலந்து கொண்டு ரத்த ஆறு ஓடச் செய்த சம்பவத்தைப் பௌராணிகர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அன்று என் கண்களில் அத்தகைய பூமியைப் பார்த்தேன்.

எவ்வளவோ ஆண்டுகள் கழிந்துவிட்டன. என்னால் அந்தப் போர்க்கள நிகழ்ச்சியை மறக்க முடியாமல் சொல்கிறேன் என்றால், அந்தப் பயங்கரத்தை நினைத்துப் பாருங்கள்;

சோழ நாட்டின் சக்தி முழுமையையும் திரட்டிக் கொண்டு சென்றேன். உழவுத் தொழில் செய்வோரையும், நெசவுத் தொழில் செய்வோரையும், கல் தச்சர்களையும், ஒவ்வொரு வீட்டிற்கு ஓர் இளைஞர் வீதமும் படையில் சேர்த்தேன். போர் முரசம் கொட்டி, கட்டாயப்படுத்திச் சோழ நாட்டின் 'மானம்' என்ற பெயரால் புலிக்கொடியைக் காக்க வேண்டும் என்ற வீர கோஷமிட்டு அவர்களை அழைத்துச் சென்றேன்.

வெள்ளூர்! ஆகா! அழியாத பெயர் பெற்றுவிட்டது! அந்த வெள்ளூரை நெருங்கும்பொழுது பாண்டியன் எங்கள் வருகையை அறிந்து கொண்டு விட்டான். மூன்று பக்கங்களில் எங்களை வளைக்கக் கடல் போன்ற படைகளுடன் வந்தான் பாண்டியன் ராஜசிம்மன்.

நான் எதிர்பார்க்கவில்லை அந்தத் தாக்குதலை, மதுரையை நெருங்கும்வரை எதிர்ப்பே இராது என்ற ஆனந்தத்துடன் சென்று கொண்டிருந்த எனக்கு அந்தக் கிடுக்கித் தாக்குதல் சற்று அச்சத்தைத்தான் அளித்தது. அந்தச் சமயத்தில் வீரம் மட்டும் இருந்தால் பயன் இல்லை. நெஞ்சில் உறுதியும், தந்திரமும் வேண்டும். என் இரு புறங்களிலும் இரு புலிகள் இருந்தன. சிற்றரசர்கள் பழுவேட்டரையர் கண்டரன்மதுரனும், கொடும் பாளூர் இளங்கோவும் இலேசுப்பட்டவர்களா. எம் படைத் தலைவர் சென்னிப் பேரரையர் மட்டும் சளைத்தவரா? அவர்களது வீர கர்ஜனையும், உற்சாகமான பேச்சும், திறமையான திட்டமும் எனக்குப் புத்துயிரூட்டின.

''ஈழத்திலிருந்து பாண்டியர்களுக்குத் துணையாக காசியபன் சக்க சேனாபதி என்ற பொல்லாத முரடனின் தலைமையில் வீரர்களை அனுப்பியிருந்தான். மலைநாட்டு வீரர்களின் போர் முறையே விசித்திரமாக இருந்தது. எனினும் நாங்கள் நால்வரும் வெறி மிகுந்தவர்களானோம். எங்கள் கைவாள் திருமால் கரத்துச் சக்கரம் போல் சுழன்றது.

வாளுக்கே உயிர் ஏற்பட்டுவிட்டதோ என்ற பிரமை ஏற்பட்டது. சின்னாபின்னமாக்கப்பட்ட எதிரிகளின் பிணங்கள் மீது எங்கள் கரியும், பரியும் நடந்தன.

''ஆனால் எனது மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. ஒற்றர்கள் ஓடோடி வந்தனர். மதுரையை நாங்கள் நெருங்கும்வரை காத்திருந்து திடீரென்று தாக்குவதற்கு முன்பே சைன்யங்களுடன் சக்க சேனாபதி மீண்டும் வருகிறான் என்று அவர்கள் அறிந்தனர்.

வேல் முனையிலும், அம்பின் நுனியிலும் விஷம் தடவித் தாக்க வருவதாகத் தெரிவித்தார்கள். எம்மிடமுள்ள சைன்யங்களில் பாதிப்பேருக்கு மேல் நான் பலி கொடுத்திருந்தேன். என்ன செய்வது என்று எனக்குத் தோன்றவில்லை. தில்லைச் சிற்றம்பலவாணனை நினைத்துக் கொண்டேன். கடவுள் அருள் என் பக்கம் இருந்தது. வெற்றித் திருவின் கடைக்கண் பார்வையும் என் பக்கமே. சக்க சேனாதிபதிக்குத் திடீரென்று கொடிய விஷ ஜுரம் தாக்கியதால் இரவு படுத்தவன் மறுநாள் எழுந்திருக்க வில்லை என்ற செய்தி இரவோடு இரவாக எங்களுக்குக் கிடைத்தது.

''யுத்த உணர்ச்சி மேலிட்டது. மதுரையை உடனே கைப்பற்றிவிட வேண்டும் என்ற உத்வேகம் எழுந்தது. பொழுது விடிவதற்கு முன்பே மதுரையைச் சூழ்ந்து கொண்டோம்! மீன்கொடி இறக்கப்பட்டது. புலிக்கொடி கம்பீரமாகப் பறந்தது.

''இவற்றையெல்லாம் நான் எதற்காக சொல்கிறேன் என்றால் போரிலே அன்று கிடைத்த புகழ் மாலை, இளவயதிலிருந்து யுத்த பூமியில் நான் பெற்ற வெற்றி என்னைத் தணியாத போர்த் தாகமுடையவனாக்கிவிட்டது. திருப்பணி என்று நினைப்பேனா? கோயில் கட்டுவதைப் பற்றிய எண்ணம் தோன்றுமா? மதுரைப் போருக்குப் பிறகு ஈழத்துப் போர் என்று போர் மீது கவனம் சென்றது.

இப்பொழுதுகூடச் சொல்லுகிறேன். எனக்கு இன்னும் போர் வெறி தணியவில்லை. எந்தவிதமான ஆசையுடன் நான் மதுரைக்குச் சென்றேன்! அரியணையில் அமர்ந்து பாண்டிய மகுடத்தைச் சூடிக்கொள்ள விரும்பினேனோ அது கிடைக்காமல் போன ஏக்கம் என்னை இன்னும் வாட்டுகிறது.

'வீரமாதேவி இன்று கலங்கிய கண்களுடன் இங்கு வந்திருக்கிறாள். அவள் துயரத்தை நான் இன்னும் தீர்க்காமல் இருக்கிறேனாம். என் மருமகனை அடித்து விரட்டியவனை இன்னும் சிங்காதனத்திலிருந்து இறக்காமல் இருக்கிறேனாம்' இராஜாதித்தன் துடிக்கிறான். அவனுடன் ஒரு பிள்ளை சேர்ந்தே வருவானே - அவன்தான் குமரன் - அவன் இன்னும் அதிகமாகத் துடிக்கிறான். நான் தடுத்தால்கூட இனி நிற்க மாட்டான்.

பழங்காலத்தில் யுத்த களத்தில் பெற்ற வெற்றியெல்லாம் கூடப் பொய் என்று அவன் எண்ணிவிடக் கூடாது. துறவியாரே இப்பொழுது சொல்லுங்கள், இங்கிருந்து வெகு தூரத்திலுள்ள மான்யகேடம் நோக்கிச் செல்வது முறைதானா, போர்த் தந்திரப்படி நான் கேட்கவில்லை. பல காத தூரம் படைகளை நடத்திச் செல்லவேண்டுமே அது சரிதானா என்றும் கேட்கவில்லை. நீங்கள் வணங்கும் தேவி பகவதி என்ன சொல்கிறாள்? தேவியிடம் மீண்டும் கேட்டுச் சொல்லுவதாகக் கூறியிருந்தீர்களே, சொல்லுங்கள், படையெடுத்துச் செல்வதற்கு இது சரியான தருணம்தானா?'' என்று கேட்டார்.

∴ ∴ ∴

பராந்தக சோழ தேவர் பாண்டிய நாட்டின் மீது கொண்ட வெற்றியை வருணிக்கும்போதே, சிவசேகர பண்டிதரின் உடல் முழுவதும் வேதனையால் துடித்தது. கோபத் தீ இதயத்தில் கொழுந்துவிடத் தொடங்கியது. பராந்தகர் புகழ் அவர் செவியில் கொடுங்குரலாய் விழுந்தது.

சிவசேகர பண்டிதர் மெல்லத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அவர் என்ன சொல்லப் போகிறார் என்று அங்கிருந்த ஒவ்வொருவரும் எதிர்பார்த்தனர். இராஜாதித்தன் துறவியின்

முகத்தையும், தன் தந்தையின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தவாறிருந்தான். வெளிவாயிலை ஆவலுடன் அவன் நோக்கினான். வெள்ளங்குமரனை எதிர்பார்த்துத் துடிக்கின்றான்.

''சக்கரவர்த்தி அவர்களே! சோழ நாட்டிற்கு வந்த பிறகு, நான் இந்த நாட்டின் நலனுக்கு ஏற்றவைகளைத் தான் தேவி பகவதியிடம் கேட்பது வழக்கம். இரண்டு தடவைகள் தேவி என் முன்னால் தோன்றிக் கூறியவற்றைத் தெரிவித்து இருக்கிறேன்.

கடைசியாக விசேஷ பூஜை செய்தேன். தங்கள் குமாரியின் வருங்காலம் குறித்துக் கேட்டேன். தங்களுடைய வருங்காலம் குறித்துக் கேட்டேன். மன்னர் அவர்களே! தேவியின் சித்தம் வேறுவிதமாக இருக்கிறது. தங்கள் அருமைக் குமாரி தங்களுக்கு இதுவரை வெற்றித் தேடித் தந்த வீரமாதேவியின் நெற்றியில் திலகம் நிலைக்க வேண்டுமானால் அவள் மான்யகேட நகரை மறந்துவிட வேண்டியதுதான்.

மேலும் தொண்ணூறு நாட்களுக்குப் படையெடுக்கும் நினைவை இராஜாதித்தன் கொள்ளக்கூடாது. சோழ நாட்டிற்கும் அழிவில்லை. தங்கள் புகழுக்கும் குறைவில்லை. தேவி கடைசியாக என்ன கூறினாள், தெரியுமா? தங்கள் திருக்கரத்தால் சோழ நாட்டில் ஒவ்வொரு கோயிலிலும் பிரதிஷ்டை ஆக விரும்புகிறாள்.

பகவதியின் கட்டளையைக் கூறுவதற்கு இந்த நல்ல நாளையும் சிறப்பான தலத்தையும்விட வேறு இடம் கிடைப்பது அரிது. என் வேலையும் முடிந்துவிட்டது. ஒரே இடத்தில் பல நாட்கள் தங்கியிருப்பது என்னைப் போன்றவர்களுக்குச் சரியன்று. நான் இங்கிருந்து அனைவரிடமும் விடைபெற்றுக் கொள்கிறேன். பிறகு ஒரு சமயம் நான் தங்களைச் சந்திக்கிறேன்'' என்று விடைபெற எழுந்தார்.

மறுமொழியை ஒருவரிடமும் எதிர்பாராமல் நடந்தார். தன் சீடர்கள் இருவரிடமும் சென்றார். அவர்களையும் அழைத்துக் கொண்டு அவர் எங்கோ விரைந்தார்.

பராந்தகர் மௌனமாக இருந்தார். கண்டராதித்தர் பக்திப் பெருநிலையில் அமைதியாக இருந்தார். வீரமாதேவி ஏனோ கண்ணீர் விட்டாள். ஆனால் இராஜாதித்தன் அமைதியாக இல்லை. அவன் துள்ளி எழுந்து வீரமுழக்கம் செய்தது அந்த மண்டபத்தையே அதிர வைத்தது.



அத்தியாயம் - 20

பாண்டிய மகுடம்

இராஜாதித்தன் கடுமையான குரல் அந்தச் சபா மண்டபத்தையே குலுங்க வைத்தது. கண்டராதித்தன் திடுக்கிட்டான். வீரமாதேவி நடுங்கினாள். அநுபமா அங்கிருந்த தூணைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அரசியும் வியப்புடன் தன் மகனையே நோக்கினாள்.

சக்கரவர்த்தி பராந்தக சோழ தேவர்கூட, தன் மகன் இவ்வளவு கடுமையான குரலில் பேசுவான் என்று எதிர்பார்க்கவில்லை.

''அரசே! தங்களுடைய முகத்திற்காக அந்தத் துறவியை இங்கிருந்து போகவிட்டேன். இல்லாவிடில் அவரை இழுத்து நிறுத்தி அவரது நாவைத் துண்டித்திருப்பேன். அவருக்கு என்ன தைரியம், நமது சொந்த விஷயத்தில் தலையிட?

''அவர் துறவி அல்லர். அவர் கபட சந்நியாசி. ஆனால் அதை நிரூபிக்க போதுமான தடயம் என்னிடம் இல்லை. அவர் ஒரு பகைநாட்டு ஒற்றர். ஒற்றரைச் சிறை செய்து மரண தண்டனை அளிக்கலாம்.

''ஆனால், அதிகாரம் என்னிடமில்லை. அவர் ஒரு தந்திரசாலி நம் கவனத்தைப் போர் முனையிலிருந்து திருப்ப விரும்புகிறார். தந்திரசாலிக்குத் தண்டனை கொடுக்க முடியாது. தந்திரத்தை தந்திரத்தால் வெல்ல வேண்டும். நான் கடைசியாக சொல்கிறேன். என்னால் இனியும் முடியாது. விடுமுறை பெற்றுச் சென்றுள்ள என் படை வீரர்களை உடனே திரும்பி வருமாறு கட்டளை யிட்டுவிட்டேன். தாங்கள் எனக்கு அனுமதி தரப் போகிறீர்களா. அல்லது துறவி போட்ட தூபத்தில் மயங்கிவிடப் போகிறீர்களா?'' என்று அவன் முழக்கமிட்டான்.

பராந்தகன் அவன் கூறுவதைக் கூர்ந்து கேட்டுவிட்டு அமைதியான குரலில், ''இராஜாதித்தா! துறவியின் உண்மை சொரூபத்தைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? அவர் சொல்வது நமக்கு உகந்ததா இல்லையா என்றுதானே கவனிக்க வேண்டும்! சோழ நாட்டிற்கு நாற்புறமும் விரோதிகள்

பலமடையும் இராஜீய விஷயம் துறவிக்குத் தெரியாது. அவருக்கு உள்ள தவ வல்மையினால் நமக்கு இப்போது சாதகமான நேரம் இல்லை என்று கூறியிருக்கலாம். அதை அப்படியே ஏற்றுக் கொள்வதா வேண்டாமா என்பது வேறு விஷயம். ஆனால், கோவில் திருப்பணிகளைச் செய்யுமாறு துறவி கூறியதில் என்ன தவறு?'' என்று கூறினார்.

இராஜாதித்தன் அமைதியான குரலில், ''இங்குதான் துறவியின் தந்திரப் போக்கைக் கவனிக்க வேண்டும். திருப்பணிகள் செய்வது, புதுக்கோயில் எழுப்புவது, சமாதான கால நடவடிக்கை என்பது தங்களுக்குத் தெரியாததா? பயிரிடும் உழவர்களும், நெசவாளர் களும் வேறு வேலையின்றி இருக்கிறார்களா? பஞ்சம் தலை விரித்தாடுகிறதா? பஞ்ச கால நடவடிக்கையாக ஏராளமான மக்களுக்கு வேலை கொடுக்கப் போகிறோமா? யுத்தக் காற்று நம்மை நோக்கி வீசும்போது நாம் அதை கவனிக்காமல் இருக்கலாமா? துறவி நம் கவனத்தை வேறு திசையில் திருப்பப் பார்க்கிறார். அதை முறியடிக்க வேண்டும் என்பதே என் வேண்டுகோள்'' என்று கூறினான்.

பராந்தக சோழ தேவர் மெல்ல நகைத்து, ''துறவியால் நம் கவனத்தை வேறுவிதமாகத் திருப்பவே முடியாது. கண்ணைத் திறந்தார் என்று சொல்லலாம். இரு கண்களையும் அவர் திறந்தார். தெய்வத் திருப்பணி செய்யத் தூண்டியது ஒன்று; இரண்டாவது நமது ஒற்றர்களின் பணியைச் சுறுசுறுப்பாக இயங்கச் செய்தது'' என்று கூறியவுடன் இராஜாதித்தன் சக்கரவர்த்தியின் முகத்தை வியப்புடன் கூர்ந்து நோக்கினான்.

''இராஜாதித்தா! சிவசேகர பண்டிதர் தஞ்சைக்கு வந்தவுடனேயே நமது ஒற்றர் படையைக் கவனமாக இருக்கச் சொல்லிவிட்டேன். நீ எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளையும் பற்றி நான் அறிவேன். அவ்வளவு எளிதில் துறவியின் யோசனையில் நான் மயங்கிவிட மாட்டேன்.

''போர்ப் பணிகளை நீ கவனி. ஆனால் படையெடுத்துச் செல்வதற்கு இது உசிதமான சமயமன்று என்பதை மறக்காதே என்னுடைய இவ்வளவு ஆண்டு அனுபவத்திலிருந்து கூறுகிறேன்.

''படைகளைத் திரட்டு; ஆனால் படை எடுத்துச் செல்லாதே திருக்கோவலூர் வைதும்பராயன் மனம் இப்போது எப்படி இருக்கிறது என்று எனக்கு இன்னும் தெரியவில்லை. கங்க நாட்டுச் செய்தி இன்றளவும் வரவில்லை. இரண்டும் தெரிந்த

பிறகுதான் வடக்கே படையெடுப்பதைப் பற்றிய முடிவை எடுக்கலாம். அதுவரையில் நீ சிதம்பரத்திலேயே படைகளுடன் தங்கி இரு.''

மன்னரின் இந்தக் கட்டளை இராஜாதித்தனுக்கு ஓரளவு தான் சுவைத்தது. படைகளுடன் ஒரே இடத்தில் தங்கி இருக்குமாறு சக்கரவர்த்தி கூறுவதன் பொருள் அவனுக்கு விளங்கவில்லை.

அவன் உள்ளத்தில் சந்தேகம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்த பராந்தகர் அவனைத் தன் அருகே அழைத்து மெல்லிய குரலில், ''படை எடுத்துச் செல்வதைப் பற்றி இப்படி நாட்கணக்கில் பறைசாற்றிக் கொண்டிருக்கலாமா? படையெடுப்பதென்பது திடீரென்று செய்ய வேண்டிய காரியமன்றோ? ஆனால், தஞ்சையைவிட்டு நீ படைகளுடன் புறப்பட்ட உடனேயே பல மாறுதல்களை நாம் எதிர்பார்க்கலாம்! நீ சிதம்பரம் அடைவதற்குள்ளாகவே நான் வேறு உத்தரவு பிறப்பித்தாலும் பிறப்பிப்பேன். வீரமும் திறமையும் வேண்டும்; ஆனால் அவசரம் கூடாது; நிதானமும் சில சமயங்களில் கூடாது'' என்று கூறியவுடன், இராஜாதித்தனுக்குத் தந்தையின் பரந்த அனுபவம் புரிந்தது.

சுற்றுச் சூழ்நிலையை அறியாமல் சக்கரவர்த்தி இருப்பதாக நினைத்தது தன்னுடைய அறிவீனம் என்று அவன் உணர்ந்தான். இருந்த இடத்திலிருந்து இவ்வளவு செய்திகளைச் சக்கரவர்த்தி அறிந்து வைத்திருப்பது வியப்பை அளித்தது.

என்றாலும் துறவியினிடம் இன்னும் ஓரளவு நம்பிக்கையைச் சக்கரவர்த்தி வைத்திருப்பது அவருக்கு வருத்தமாக இருந்தது. இந்தச் சமயத்தில் வெள்ளங்குமரன் அங்கே வந்து, சிவசேகர பண்டிதரைப் பற்றித் தனக்குத் தெரிந்ததைக் கூறியிருந்தால் மிகவும் உபயோகமாயிருக்கும் என எண்ணினான். அவன் தன்னுடனே தில்லையின் எல்லை வரையில் வந்த குமரன் எங்கே போய்விட்டான் என்பது அவனுக்கு வியப்பாக இருந்தது.

ஃ ஃ ஃ

இராஜாதித்தன் வியப்படைந்தது போலவேதான் சிவசேகர பண்டிதரும் தனக்குப் பெரும் வியப்பு ஒன்று அன்று மாலை நேரத்திற்குள் ஏற்படும் என்று எதிர்பார்க்கவே இல்லை.

சோழ சக்கரவர்த்தியிடம் விடைபெற்றுக் கொண்டு புறப் பட்ட, சிவசேகர பண்டிதர் தனது சீடப் பரிவாரங்களுடன் அமைதி நிறைந்த உள்ளத்துடன் சிதம்பரத்திலிருந்து திருப்பாதிரிப் புலியூருக்குச் செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்தார்.

ஏதோ ஒரு மகத்தான காரியத்தை சாதித்துவிட்டோம் என்ற மனநிறைவு அவர் உள்ளத்தில் இருந்தது.

அவருக்கு வேண்டிய சிவிகை, யானை, குதிரை, மூடு வண்டி போன்றவைகளைச் சோழ அரசர் கொடுத்திருந்தார். சிவிகை அசைந்தாடும் குலுக்கலில் அவரது மனம் அமைதியை இழந்து, அடுத்துச் செய்ய வேண்டிய காரியத்திலும், செல்ல வேண்டிய இடத்திலும் ஈடுபட்டது.

கதிரவன் மெல்ல மேற்குத் திசையில் இறங்கிக் கொண்டிருந்தான். நீலவானத்தில் செம்பஞ்சுக் கூட்டங்கள் எங்கும் நிறைந்து போர்க்கள நினைவை ஏற்படுத்தின. சிவிகையினின்று வெளியே எட்டிப் பார்த்த சிவசேகர பண்டிதர் அந்தக் காட்சியைக் கண்டு, சிவிகையினின்று இறங்கினார்.

சிறு குன்றுகளுக்கு மேல் வட்டக் கதிரவன் பழுக்கக் காய்ச்சிய உருக்குத் தகடுபோல் பளபளக்கும் காட்சி அவர் மனத்தில் பற்பல கற்பனைகள் ஏற்படுத்தின. எங்கிருந்தோ கூட்டம் கூட்டமாகப் பறவைகள் பறந்து வந்தன. அவை அருகேயுள்ள கானக மரங்களில் சென்று அடைக்கலம் பெறும். துறவியின் உள்ளத்தில் அந்த இயற்கைக் காட்சி பெரும் சிலிர்ப்பை அளித்தது. இப்பறவைகள் எவ்வளவு அமைதியுடனும், சுதந்திரத்துடனும் வாழ்கின்றன.

ஆனால் இங்கே மன்னர்கள் ஏன் இப்படி ஒருவரோடொருவர் பூசலிட்டு மடிகிறார்கள்? ஒருவருடைய நாட்டை மற்றவர் கவரப் பார்க்கிறார்களே! நாடிழந்து தவிக்கும் மன்னர்களின் உள்ளம் என்ன வேதனைப்படும்! குஞ்சரம் ஊர்ந்த மன்னர் குடையிழந்து, நடை மெலிந்து வேறொரு ஊரில் சென்றுதானே அடைக்கலம் பெறுவர்?

ஆம்; அது முற்றிலும் உண்மை. அவர் கண்கூடாகக் கண்டறிந்த உண்மை. பாண்டிய மன்னர் தன் குடும்பத்துடன் நாடிழந்து சேர நாட்டில் அடைக்கலம் புகுந்திருப்பதை அவர் நேரிடையே கண்டிருக்கிறார். ஒளி நிறைந்த பாண்டிய மன்னர் ராஜசிம்மன் களையிழந்த முகத்துடன் வஞ்சி மாநகர் மாளிகைத் தோட்டத்தில் உலவுவதைப் பார்த்திருக்கிறார். மதிவதனப் பாண்டிய அரசி மங்கிய விளக்கைப்போல் சோர்வுற்றுக் கண்ணீர் சிந்தியதைக் கண்டிருக்கிறார்.

பற்றற்ற நிலையில் இந்த உலக ஆசாபாசங்களைக் கண்டும் காணாதும் இருக்க வேண்டிய துறவி, அரச குடும்பத்தின் சோக நிலையைக் கண்டு வேதனைப்படுவானேன்? அதற்குக் காரணம்

...? துறவி மனப்பான்மை என்பது ஒரு வேலை மாயம்தானா? ... சந்நியாசியாக அவர் நடிக்கிறாரா? இராஜாதித்தன் கூறியது ... அவர் ஒற்றரா?

ஃ ஃ ஃ

சிவசேகர பண்டிதர் அப்போது சிவசேகர பண்டிதராக ...லை. கலைபயிலச் சென்ற மாணவனாகத்தான் இருந்தார். ...தனாகத்தான் அவர் வஞ்சி மாநகரம் சென்றார்.

அச்சுதன் குமுதவல்லியுடன் ஓடி வந்ததும், பிறகு தன் ...யின் ஆசியுடன் வஞ்சி மாநகருக்குச் சென்றதும் பழைய ...தை. வஞ்சி மாநகரில் அச்சுதன் சென்றவுடனேயே மாளிகையில் ... உயர்தர அதிகாரிகளின் கவனத்தைக் கவர்ந்தான். சேர ...டின் பல பாகங்களிலிருந்து நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ...ஞ்சி மாநகர் மாளிகையில் கூடியிருந்தனர்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதக்கலையில் வல்லவராக ...ருந்தனர். எனினும் அனைவரும் வாள் வித்தை, சிலம்பம் ...ழற்றுதல், அம்பெய்தல் ஆகிய கலைகளில் வல்லவராக ...ண்டும் என்று சேர மன்னர் விரும்பினார்.

அச்சுதன் போர்க்கலை பயின்றதுடன், வஞ்சி மாநகர் அருகே ...ருந்த கொடுங்களூர் பகவதி அம்மன் கோயிலுக்கு அவ்வப் ...ாது சென்று வந்தான். அங்கு தான் மந்திர சாஸ்திரங்களில் ...தேர்ந்த மந்திரவாதி ஒருவன் அறிமுகமானான். புலனடக்கத்திலும், ...ஷ்ட தேவதையை வசப்படுத்துவதிலும் அந்த மந்திரவாதி ...றமை மிகுந்தவன்.

அச்சுதன் மந்திரவாதியிடம் நெருங்கிப் பழகும் போது ...ந்திரவாதி ஒருமுறை கூறினான்: ''உனக்கு நல்ல எதிர் காலம் ...ருக்கிறது. நீ கற்ற வித்தையை நல்ல முறையில் பயன் ...டுத்துவாய். ஆனால், எக்காரணம் கொண்டும் வாளெடுத்துப் ...போர் புரியக்கூடாது. யுத்த பூமியை மிதிக்கவும் கூடாது!''

அச்சுதன் மெல்ல நகைத்தான். அவன் போர்முறை பயின்று ...ந்தப் படையில் சேரப் போகிறான்? அதற்காகவா வஞ்சி ...ாநகருக்கு வந்தான்? பிறர் அறிய முடியாத கலைகளைக் கற்று ...ந்து குமுதவல்லியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் ...ன்ற நோக்கத்துடன் வந்தவனாயிற்றே!

குமுதவல்லி, தன் தாயின் வீட்டில் அவன் வருகைக்காகக் ...ாத்திருப்பாளே! அவள் ஏக்கத்துடன் வாட்ட முற்றிருப்பாளே! ...அவள் வேதனையைப் போக்க வேண்டாமா? அவள் மீண்டும்

வீணையை மீட்டு இன்ப நாதம் எழுப்புவதைக் கேட்டு மகிழ வேண்டாமா? அதனால் மந்திரவாதி கூறியதற்கு அவன் சம்மதித்தான்.

ஏற்கெனவே கொடுத்துள்ள ஓர் உறுதிமொழியை அவன் நிறைவேற்ற வேண்டியிருந்தது. ''உன்னைப் பிரியேன்'' என்று காதலி குமுதவல்லிக்கு அவன் வாக்குக் கொடுத்திருந்தான். அதை நிறைவேற்றியாக வேண்டும்.

இப்போது மந்திரவாதியிடம் மற்றொரு உறுதிமொழி யளித்தால் தான் அவர் மிகவும் முக்கியமான மந்திரத்தை உபதேசிப்பார் தேவி பகவதியை நேரே காணும் சக்தி ஏற்படும் வேண்டும் வரம் கேட்கலாம். அச்சுதனுக்கு இருந்த இளமை வேகத்தில், துடிப்பில் அவன் உறுதிமொழி கொடுத்துவிட்டான். ஆனால், திடீரென்று அவன் எதிர்பாராத ஒன்று நேர்ந்துவிட்டது.

⁂ ⁂ ⁂

திருவஞ்சைக் களத்து மாளிகையில் சர்வ சுதந்திரத்துடன் செல்லக்கூடிய ஓரிரு இளைஞர்களுள் அச்சுதனும் ஒருவன். ஒருநாள் இரவு, மாளிகையின் மேல் மாடத்து நடுக்கூடம் வழியாக அவன் வர நேர்ந்தது.

அங்கே இருந்த அறை ஒன்றில் யாரோ விசும்பும் ஒலி கேட்டது. ஒரு பெண் தாரை தாரையாகக் கண்ணீர் விட்டவாறு ஏதோ புலம்பிக் கொண்டிருக்கிறாள். அவள் அருகே கம்பீரமான தோற்றமுடைய இளம் பாலகன் உறங்கிக் கொண்டிருக்கிறான். சலனமற்ற அந்தச் சிறுவனின் முகத்தைப் பார்த்தவாறு யௌவன புருஷன் ஒருவன் நிற்கிறான்.

''இந்தக் குழந்தையின் முகத்துக்காகவாவது நீங்கள் யோசித்துத்தான் செய்தாக வேண்டும்'' என்று அந்தப் பெண் விம்மலுக்கிடையே கூறுகிறாள்.

அந்தப் பெண்தான் பாண்டிய நாட்டு அரசி, யௌவன புருஷன் பாண்டிய மன்னன் இராஜசிம்மன் என்பதைப் புரிந்து கொள்ள அச்சுதனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அந்த அறையின் வெளியே சற்று நின்று மேலும் அங்கே நடக்கும் சம்பாஷணையை அவன் உற்றுக் கேட்கலானான்.

''தேவி! நீ இவ்வாறு வேதனைப்படுவதன் காரணமே எனக்குப் புரியவில்லை. இதோ களங்கமற்ற முகத்துடனே உறங்குகிறானே இவனுடைய நல வாழ்வுக்காக நான் மீண்டும் ஈழம் சென்றுதான் ஆக வேண்டும். அங்குப் படைகளைத்

... டுவதற்கு ஈழ மன்னனுக்கு யோசனை கூறி ஊக்கம் அளித்து ... டு விரைவில் திரும்புகிறேன் தேவி.''

''இங்கு தங்கியிருப்பதில் எனக்கு நிம்மதியே இல்லை. சொந்த ... முந்து, மகுடமிழந்து மாற்றான் நாட்டில் தங்குவதால் ...காலத்திற்கு அழியாத அவமானம் தானே ஏற்படும்? இங்கு ...விதமான வசதிக் குறைவும் இல்லை; என்றாலும் அடர்ந்த ... டிலே தனித்து இருப்பதில் உள்ள சுதந்திர உணர்வு இங்கு ...வதில்லை. இந்தப் பேழையில் ஒளிமங்கிக் கிடக்கும் ...மகுடத்தைத் தாங்கள் அணிந்து தலை நிமிர்ந்து வாழ ...கிறதா?'' அரசி இதைக் கூறும்போது விம்மினாள். பாண்டிய ...னனின் விழிகளிலும் நீர் ததும்பியது.

அந்தச் சமயம் யாரோ அங்கு வரும் காலடியோசை கேட்டது. ...சுதன் தூணொன்றின் மறைவில் நின்றான். சேர மன்னர் ...ங்கு வந்து கொண்டிருந்தார். அவர் செவியிலும் பாண்டிமா ...வியின் வேதனைக் குரல் ஒலித்தது. யாரும் எதிர்பாராத ...கையில் அவர், அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்த ... த்தில் நுழைந்துவிட்டார்.

அந்த அறையின் நடுவே உள்ள பேழை ஒன்றில் ...ண்டியர்களின் பரம்பரையில் வந்த மணிமகுடம் இருந்தது. ...ர மன்னர் அதைக் கையில் எடுத்து, பாண்டிமாதேவி! ...ங்களுடைய வேதனையை நான் அறிவேன். பாண்டிய அரசு ...ரோதிகளிடம் சிக்கியிருப்பது வேதனையைத்தான் தருகிறது'' ...ன்றார்.



அத்தியாயம் - 21

குமரனும் துறவியும்

சேரமன்னன் உணர்ச்சி மிகுதியால் மேலும் தொடர்ந்து கூறினான்.

"தேவி, நீங்கள் இருக்கும் இந்த சேர நாடு மாற்றானுடையது என்று எண்ண வேண்டாம். சேர நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் மணவினைத் தொடர்பு எப்போதும் உண்டு. பாண்டிய மன்னர் ராஜசிம்மரின் தாய் இந்த நாட்டு அரச மகள். தாய்வழி உரிமை அவருக்கு உண்டு. அவரை எனக்குச் சரிசமமாய் நடத்துவதற்கு நான் என்றுமே சித்தமாயிருக்கிறேன்.

அதற்குச் சாட்சியாக இதோ மணிமகுடத்தை என் கையாலேயே அவர் சிரசில் சூட்டுகிறேன். சோழ மன்னன் இந்த மகுடத்திற்காக அலைந்து கொண்டிருக்கிறான்.

அவனுடைய ஒற்றர்கள் எங்கும் சுற்றி வருகிறார்கள். சேர நாட்டில் இருக்கிறது என்பதை அறிந்தவுடன் பராந்தகன் சீறியெழுவான். படையெடுத்து வருவான். அதற்கு முன்பாக நான் நாட்டிலுள்ள இளைஞர்களை ஒன்று திரட்டியுள்ளேன்.

எத்தகைய எதிர்ப்பையும் தாங்குவதற்கு வேண்டிய புதுச் சக்தியை உருவாக்கியுள்ளேன். அடுத்தபடியாக பாண்டிய நாட்டை மீட்டுத் தங்களை அங்கே அரியணையில் அமர்த்துவது தான் என் லட்சியம். அதற்காக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். கவலையை விடுங்கள் தேவி" என்று கூறி, இமை மூடித் திறக்கும் நேரத்தில் ராஜசிம்மனின் சிரசில் மகுடத்தைச் சூட்டினார்.

அந்த வெளிச்சமற்ற அந்த அறையில் கோடி சூரிய ஒளி ஏற்பட்டது போன்ற பிரகாசம் தோன்றியது.

பாண்டிமாதேவி கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். உறங்கிக் கொண்டிருந்த பாண்டிய குமாரனைத் தட்டியெழுப்பி, "மகனே! அதோ பார். உன் தந்தைக்குப் புது வாழ்வு பிறந்து விட்டது. இவ்வளவு நாள் மறைந்து கிடந்த மகுடம் அவர் சிரசில் கம்பீரமாக அமர்ந்துவிட்டது. தந்தையின் மகுடம் எங்கே

என்று கேட்பாயே! அதோ பார்! அந்த மகுடம் நாளைக்கு உனக்குத்தான் மகனே! மகுடத்தை அணிவதற்கு ஏற்ற தகுதியுடன் நீ நடந்து கொள்ள வேண்டும். வீரனாக வாழ வேண்டும்'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறினாள்.

இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த அச்சுதனின் மெய் சிலிர்த்தது. மகுடம் வீசிய ஒளி அவன் உடலெங்கும் புரிய முடியா விறுவிறுப்பை அளித்தது.

தெய்வீக மகுடம்தான் பாண்டிய மகுடம்! அதில் சந்தேகமே கிடையாது. அப்படி இல்லாவிட்டால் என் உள்ளத்தில் புதிய எண்ணத்தை ஏற்படுத்தியிருக்குமா? என் உடலில் புதிய விறுவிறுப்பு தோன்றியிருக்குமா?

பகவதி, அந்த மகுடத்தைக் காக்கும் பணியில் எனக்கு ஓர் இடம் கிடைக்கச் செய் என்று அச்சுதன் வேண்டிக் கொண்டான். உடனே படையில் சேர்ந்து தான் கற்ற வித்தையைப் புலப்படுத்திப் பாண்டிய நாட்டை மீட்டுக் கொடுத்துவிடுவது போன்ற உணர்ச்சி அவனுள்ளத்தில் தோன்றியது.

பகவதி கோயில் மந்திரவாதியிடம் சென்று தன் எண்ணத்தைத் தெரிவித்தான் அச்சுதன். அப்போது மந்திரவாதி நகைத்தவாறு சொன்னான்: "அச்சுதா! நீ ஓர் உறுதிமொழி கொடுத்திருக்கிறாயே, நினைவிருக்கிறதா? வாளெடுத்துப் போர் புரியக்கூடாது என்பதை மறந்து விட்டாயா?''

அச்சுதன் திடுக்கிட்டான். இரண்டு உறுதிமொழிகளும் இப்படி நிறைவேற்றப்படாமல் போக வேண்டியவைதானா? வருத்தம் நிறைந்த குரலில் சேர மாளிகையில் நடைபெற்ற சம்பவத்தை அச்சுதன் மந்திரவாதியிடம் தெரிவித்து எப்படியாவது பாண்டிய மன்னருக்குப் புது வாழ்வளிப்பதில் தன் சேவையும் சிறிது பயன்படத்தான் வேண்டும். அதற்கு மந்திரவாதி உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

வாளெடுத்துப் போர் புரியக்கூடாது. ஆனால், சேர நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் உதவ வேண்டும். மந்திரவாதி கூறிய யோசனையை அச்சுதன் ஏற்றான். போரைப் போரால் வெல்வதால் என்றும் பயனில்லை. போர் வெறி மிகுந்தவர்களின் அடிப்படை மனத்தையே மாற்ற வேண்டும் என்ற மு டிவுக்கு வந்தான். அதன் விளைவே சிவசேகர பண்டிதர் என்ற பெயருடன் கூடிய துறவி வடிவம்.

ஒரே நாளில் அவன் துறவியாகிவிடவில்லை. பகவதி கோயிலில் ஒரு மண்டலம் நியம நிஷ்டையுடனிருந்தான். உள்ளத்தை மேலும் பக்குவப்படுத்திக் கொள்ள ஒரு முறை!

தன் தாயைக் காண வந்தான். தன் உயிருக்குயிரான குமுதவல்லி கொடிய நோயில் வாடும் சங்கடத்தைக் கண்டான்.

தாய்ப்பாசம், காதல் பாசம் ஆகிய இரு பாசங்களும் அவனுடையத் திட்டத்தைக் குலைக்கவில்லை. மேலும் அவன் இதயம் உறுதியடைந்தது. துறவிகளுக்கேற்ற உள்ளத் தூய்மையும் சேர்ந்தது.

''சோழ நாட்டிற்குச் சென்று மன்னர் மனத்தை மாற்றுவேன். அவர்களது போர் முயற்சியைத் தந்திரமான முறையில் தடை செய்வேன், குலைப்பேன்'' என்று மூன்றாவது சபதத்துடன், சேர மன்னன் ஆசியுடன், உள்ளத்தில் உறுதியான முடிவுடன் சோழ நாட்டை நோக்கிப் புறப்பட்டான் அச்சுதன். இல்லை, இல்லை, சிவசேகர பண்டிதர்.

ஆனால், அவர் உள்ளத்தின் ஒரு மூலையில் ஒருவித அச்சம் இல்லாமலில்லை. அவருக்கு இணையான திறமை வாய்ந்த வெள்ளங்கரைப் புதூரினனான குமரன் அவருடன் மற்றொரு சபதம் செய்து கொண்டிருக்கிறானே! 'ஒருவேளை அவன் வென்றுவிட்டால்?' என்று எண்ணும்போது அவர் உடல் சிலிர்த்தது.

⁂ ⁂ ⁂

திருப்பாதிரிப்புலியூர் அருகே கெடில நதிக்கரையில் அன்றைய இரவைக் கழிப்பதற்குச் சிவசேகரர் ஏற்பாடு செய்தார். அன்று இரவு நெடுநேரம் அவருக்கு உறக்கம் வரவில்லை. யாரோ தன்னைத் தேடி வருவது போன்ற பிரமை, குதிரையின் குளம்படி ஓசை தொலைவிலிருந்து அருகே அருகே நெருங்கி வருவது போன்ற ஓசை!

அதோ அருகே வந்துவிட்டது. சிவசேகரர் திடுக்கிட்டு எழுந்தார். அவர் எதிரே யாரோ வந்து நிற்பதுபோல் அந்த மங்கிய ஒளியில் அவருக்குத் தோன்றியது.

''யாரது?'' என்று சிவசேகரர் மெல்லிய குரலில் கேட்டார்.

''நான்தான் உங்கள் உயிர்த்தோழன், வெள்ளங்கரைப் புதூரினின்று வந்த குமரன்'' என்று அழுத்தம் திருத்தமாய் மறுமொழி கூறினான் வெள்ளங்குமரன். அவன் முகத்தில் கடுமை நிறைந்திருந்தது.

குமரன் அந்தச் சமயம் வருவான் என்று சிவசேகர பண்டிதர் எதிர்பார்க்கவில்லை. பராந்தக சோழருடன் சிதம்பரத்தில் பேசிக் கொண்டிருந்தபோதே குமரனை எதிர்பார்த்தார் சிவசேகரர்.

குமரன் வெளியூரிலிருந்து வந்திருப்பான் என்பது அவர் எதிர்பார்த்ததே. குமரன் வருவதற்கு முன்பு தஞ்சையில்

தன்னுடைய தூபமிடும் வேலையை முடித்துவிட்டுத் திருக்கோவலூரை அடைந்துவிட வேண்டுமென்று அவர் திட்டமிட்டிருந்தார்.

சிதம்பரத்தில் அவர் புறப்படும் வரையில் குமரன் வராதது அவருக்கு மகிழ்ச்சியை அளித்தது. ஆனால், இராஜாதித்தனின் முகத்தில் ததும்பிய கோபமும், அவன் தன்னைப் பார்த்த பார்வையும் நிச்சயமாக இளவரசர் மனத்தை யாரோ மாற்றி, தன்னைப் பற்றிப் பெரும் பழியைச் சுமத்தியிருக்கிறார்கள் என்பது உடனே தெரிந்துவிட்டது. அதனால் அவர் அது நேரம் பராந்தக சக்கரவர்த்தியிடம் தங்காமல் திடீரென்று புறப்பட்டுவிட்டார்.

கெடில நதிக்கரையில் இரவைக் கழித்துவிட்டு, விடியும் முன்பு திருக்கோவலூரை நோக்கிச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்திருந்தார் அவர்.

குமரனைச் சந்தித்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்போதிருந்த குமரன் எங்கே? இப்போது தன் எதிரே நிற்கும் குமரன் எங்கே? இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள்; ஒன்றாகச் சகல கலைகளையும் கற்றவர்கள்.

ஆனால், சேர மாளிகைத் தொடர்பு குமரனுக்கு ஏற்பட வில்லை. குமரன் வாள்வித்தை, குதிரை ஏற்றம், யானை ஏற்றம் பயின்று சிறந்தான். போர் வீரனுக்கு ஏற்ற உடல்கட்டு அமைந்தது. யாரையும் மதிக்காத சுபாவம் வந்து சேர்ந்தது. இல்லாவிடில் இப்போது அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட முறையும், அதை வெளியிட்ட முறையும், அவன் பார்வையும் முற்றிலும் மாறியிருக்குமா?

''யார், வெள்ளங்குமரனா? வா, வா! எவ்வளவோ நாட்கள் ஆகிவிட்டன பார்த்து! உடல் நலமா? ஊரில் தாயார் நலமா?'' என்று சிவசேகர பண்டிதர் எழுந்து அவனை இறுகத் தழுவி வரவேற்று விசாரித்தார்.

அவரது தழுவலிலிருந்து குமரன் மெல்ல விடுபட்டு, ''அச்சுதன் சிவசேகர பண்டிதராக மாறிவிட்டான். ஆனால் குமரன் குமரனாகத்தான் இருக்கிறான்!'' என்று கூறிச் சிரித்தான்.

''என்றுமே நீ குமரனாக இருக்க வேண்டும் என்பது தான் என் ஆசை. அதுசரி, இப்போது இந்த வேளையில் எங்கிருந்து வருகிறாய்? நான் இங்கே இருப்பது எப்படி உனக்குத் தெரியும்...?'' என்று கேட்டார். அவர் விழிகள் அவன் உள்ளத்தை ஆராயத் தொடங்கிவிட்டன. விழியின் வேகத் தாக்குதலுக்குக் குமரனா அஞ்சுபவன்?

''உங்களைத் தேடித்தான் வந்தேன், தஞ்சையிலிருந்து தான் வருகிறேன்.''

''அப்படியானால் என்னைச் சிதம்பரத்திலேயே சந்தித்திருக்கலாமே?'' என்றார் துறவி கண்களில் ஒருவிதச் சிரிப்பைப் புலப்படுத்தி.

'ஏன் தஞ்சையிலேயே சந்தித்திருக்க முடியாதா? இவ்வளவு தொலைவு வரவேண்டுமா? இவ்வளவு விரைவில் மளமள வென்று சம்பவங்கள் நடைபெறும் என்று நான் நினைக்கவில்லை. தஞ்சையிலே இருந்து தங்கள் பூஜைகள் மூலம் சக்கரவர்த்தியின் மனத்தை மாற்றப் போகிறீர்கள் என நினைத்தேன்.

''ஆனால், வாளைவிட உங்கள் கூர்மையான மதி அதிக வேலை செய்கிறது. கடவுள் அருள் பெற்றுச் செய்வதை விட சுய தந்திரத்தால் பல திடுக்கிடும் சம்பவங்களை உருவாக்கி விட்டீர்களே!'' என்று குமரன் கூறும்போது துறவியின் முகத்தில் பலவிதச் சலனங்கள் ஏற்படுவதை எவ்வளவு அடக்கியும் தடுக்க முடியவில்லை.

குமரன் மேலும் தொடர்ந்து பேசுவதற்குள் துறவி, அவனை முந்திக் கொண்டு, ''சம்பவங்கள் சக்கரம் போல் சுழன்றால்தானே நல்லது. எதிர்பாராத சம்பவத்தை ஏற்படுத்த இருவரும் முனைந்து வருகிறோம். நாம் இருவரும் சபதம் செய்துவிட்டுப் பிரிந்ததை மறந்துவிட்டாயா?'' என்று கூறினார்.

குமரன் அந்தச் சம்பவத்தை மறந்துவிடவில்லை. சிறு வயதிலிருந்தே சோழ நாட்டிற்குச் செல்ல வேண்டும் என்ற ஆவல் அவனுக்கு இருந்தது. பழுவூரில் ஆண்டு வந்த பழுவேட்டரையரிடம் முக்கியப் பணிபுரிபவர் ஒருவர் அவனுக்கு நெருங்கிய உறவினர். பழுவூருக்கு வந்தால் பழுவேட்டரை யரிடம் குமரனை அறிமுகப்படுத்தி, சோழ நாட்டில் முக்கியமானதொரு பதவியை வாங்கித் தருவதாக கூறியிருந்தார்.

வெள்ளங்கரைப் புதூரினின்று ஒரு நாள் குமரன் புறப்பட்டுவிட்டான். அவன் கண் முன்னால் எதிர்காலம் நெடுவழி போல் விரிந்து பரந்து கிடந்தது. அதில் பயணம் செய்வது எளிதாய் இருக்குமோ, பயங்கரமாயிருக்குமோ என்ற கவலை அவன் உள்ளத்தில் சூழ்ந்து கொண்டது. பயணத்தின்போது அமராவதி நதிக்கரையில் அச்சுதனை சந்திக்காதிருந்தால் ஒருவேளை சோழ நாட்டிற்குத் திரும்பிச் செல்லாமலே இருப்பான்.

தனது நண்பன் அச்சுதனும் எங்கோ பயணத்திற்குப் புறப்பட்டிருப்பது கண்டு, அவனை நெருங்கி வினவினான்.

ஆனால், அச்சுதன் கூறியவை குமரனை திடுக்கிட வைத்தன. சோழ நாட்டின் போர் வெறியை அடக்கி, அவர்களைத் தங்கள் எல்லையை விட்டுத் தாண்டாதவாறு செய்யும் புனித யாத்திரையைத் தான் மேற்கொண்டிருப்பதாக பண்டிதர் தெரிவித்தவுடன குமரன் திடுக்கிட்டான்.

ஆரம்ப காலத்திலிருந்தே இருவருக்கும் உள்ளூரப் போட்டி உண்டு. குமுதவல்லியின் அபிமானத்தை அச்சுதன் கவர்ந்த காலத்திலிருந்தே அது ஆரம்பமாகிவிட்டது. குமரன் செல்வது சோழ நாட்டில் தொண்டாற்ற; அச்சுதன் செல்வது சோழ நாட்டை முறியடிக்க.

''அச்சுதா, திடீரென உனக்கு இந்த எண்ணம் ஏன் தோன்றியது?'' என்று கேட்டான் குமரன், தான் செல்லுமிடத்தைத் தெரிவிக்காமல்.

''குமரா, உன்னைப் போன்ற திறமைசாலி எனக்குத் துணையிருந்தால் சோழர்களின் கர்வத்தை ஒடுக்கிவிடலாம். உனக்குத் தெரியுமா, பாண்டிய மன்னன் சேர நாட்டில் அடைக்கலம் புகுந்து வேதனையுடன் இருப்பது?'' என்று அச்சுதன் கேட்டான்.

''ஆமாம், போரிலே தோல்வி கண்ட பாண்டியன் ஈழ நாட்டிற்கு ஓடினான். இப்போது சேர நாட்டிலே மறைந்து வாழ்கிறான், அதனால் என்ன?''

''அதனால் என்னவா? பாண்டியனுக்கு நேர்ந்த கதி மற்ற மன்னர்களுக்கு நேரிடாதா? சேர மன்னருக்கும் நேரலாம். சேர மன்னர்க்கு நேர்ந்தால் சேர நாட்டு மக்களாகிய நமக்கு அவமானமன்றோ!''

''அதனால் நீ என்ன செய்யப் போகிறாய்? சோழ நாட்டினரின் வெறியை அடக்க வேண்டிப் படைகளுடன் செல்கிறாயா?''

''இல்லை; படை பலத்தை இப்போது பயன்படுத்தப் போவதில்லை. நான் சோழ சக்கரவர்த்தியின் மனத்தை மாற்றப் போகிறேன். அவர்களது போர் வெறியைத் தணிக்கப் போகிறேன். அதற்கு என் மதியின் பலத்தைப் பயன்படுத்தப் போகிறேன்.

''சோழ நாட்டினர் படை திரட்டும் எண்ணத்தை விட்டிருக்கும் போது சேரர்களும், பாண்டியர்களும் படையைப் பலப்படுத்திக் கொள்வார்கள். குமரா, நீயும் என்னுடன் வருகிறாயா? சோழ நாட்டில் நடைபெறுவனவற்றை அறிந்து அவ்வப்போது எனக்குச் சொல்லும் பணியை மேற்கொள்கிறாயா?''

அச்சுதன் இவ்வாறு கேட்டவுடன் குமரனின் உள்ளத்தில் பலபல எண்ணங்கள் தோன்றின. அச்சுதனிடம் அவனுக்கு இயற்கையாக இருந்த பொறாமை ஓர் உருப்பெற்று எழுந்தது.

குமுதவல்லியை அவன் அடைந்துவிட்டதனால் அந்த நாளிலேயே ஏற்பட்ட ஏமாற்றமும் ஒன்று சேர்ந்தது. அச்சுதனுடைய திட்டத்தை முறியடிக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான். அச்சுதனின் உள்ளத்தை மேலும் அறிந்துணர விரும்பி, ''அச்சுதா! நீ மிகவும் பாக்கியசாலி. அழகி குமுதவல்லியின் அபிமானத்தைப் பெற்றாய். அவளுடனேயே ஊரை விட்டு ஓடிவிட்டாய். குமுதவல்லி இப்போது எங்கே? அவளைப் பிரிந்து வர உனக்கு எப்படி மனம் வந்தது?'' எனக் கேட்டான்.

அச்சுதன் உடனே மறுமொழி கூறவில்லை. பெருமூச்சு விட்டபடி வேதனை நிறைந்த முகத்துடன் ''குமரா! அவளைப் பற்றி இப்போது ஏன் நினைவுபடுத்துகிறாய்? குமுதவல்லி என் உயிர். உயிரை ஊரிலே விட்டுவிட்டு இப்போது வெறும் உடலுடன்தான் நடமாடுகிறேன். உடலுக்கு இரண்டு ஆத்மா ஏற்பட முடியாது.

''குமுதவல்லியைவிட நாடு எனக்குப் பெரிதாகத் தோன்றி விட்டது. பாண்டிமாதேவியின் விழிகளில் இருந்து பெருகிய கண்ணீர் என்னைக் கலங்கச் செய்துவிட்டது. சேர மன்னரின் பெருந்தன்மையுடன் கூடிய குணம் என் உள்ளத்தில் புத்துணர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.

அதனால் பிறந்த நாட்டிற்குத் தொண்டு செய்யக் காதலியையும் மறந்தேன். நான் எடுத்திருக்கும் பெரும் பணியில் வெற்றி கண்ட பிறகு, குமுதவல்லி அதுவரை உயிரோடிருந்தால் இந்திர போகமாக வாழ்வேன். நீ என்ன சொல்கிறாய் குமரா? நீ உதவுவாயா?'' என்று கேட்டான்.

குமரன் சற்று யோசித்தான். பிறகு, ''அச்சுதா, சோழ மன்னரின் மனத்தை அமைதியான முறையில் மாற்றிவிடுவது நடக்கும் காரியமா?'' என்றான்.

''அமைதியான முறையில் மாற்றுவேன் என்று நான் கூறவில்லை. தந்திரமான முறையில் அவர்கள் கவனத்தை வேறுவிதத்தில் திருப்பக்கூடிய காரியத்தைச் செய்யும் முறையில்...''

குமரன் கேட்டுச் சிரித்து, ''அச்சுதா, அசட்டுத்தனமான யோசனை செய்யாதே. பலம் மிகுந்த சோழ நாட்டை உன் தந்திரத்தால் வெல்ல முடியாது. அவர்களுக்குப் பலமும் இருக்கிறது; ராஜதந்திரமும் இருக்கிறது. உன் வாழ்நாளை ஏன் வீணாக்கிக் கொள்கிறாய்'' என்றான்.

அச்சுதனுக்கு கோபம் வந்தது. ''குமரா, என்னுடன் வர இயலாது என்றால், உன் திருவாயை மூடிக்கொள். நான் உறுதி

பூண்டுவிட்டேன். என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும்.

''எடுத்த காரியத்தில் நான் வெற்றி அடையாவிட்டால் சேர நாட்டுப் பக்கமே திரும்ப மாட்டேன். என் உயிர்க் காதலி குமுதாவைச் சந்திக்க மாட்டேன். இமயமலைச் சாரலுக்குச் சென்றுவிடுவேன். நான் வெற்றியடைந்துவிட்டால் நீ என்ன செய்வாய்? தலை நிமிர உன்னால் முடியுமா?'' என்று கேட்டான்.

அச்சுதனின் வார்த்தைகள் குமரனுக்குப் புதுவித வேகத்தை அளித்தன. அவனுடைய எண்ணம் நிறைவேறாமல் செய்வது தன் முன்புள்ள பெரும் கடமை என்று அவனுக்குத் தோன்றியது.

''அச்சுதா, உனக்கு மட்டும்தான் மதிக்கூர்மை இருக்கிறது என்று நினைக்காதே. எனக்கும் மதியுண்டு. அதைவிட வாளின் வலியுண்டு. சோழ நாட்டினரின் பலத்தைக் குறைத்து அவர்களை ஒடுக்குவதாக நீ உறுதி பூண்டால், நான் வாள் பலத்தால் அவர்களுக்கு உதவி, சோழ நாட்டின் பெருமை குன்றாது காப்பதற்கு முயல்வேன்'' என்று ஆவேசத்துடன் கூறினான்.

அச்சுதன் சாந்தத்துடன், ''குமரா! வேண்டாம் வீணே சபதம் செய்யாதே! நீ எடுத்த காரியத்தில் தோல்வி கண்டால்?'' என்று கேட்க, ''நான் எடுத்த காரியத்தில் தோல்வி கண்டால் உனக்கு அடிமை ஆகிவிடுகிறேன். நீ இடும் பணியைக் காலத்திற்கும் செய்து கொண்டு வாழ்நாளைக் கழிக்கிறேன்'' என்றான்.

இருவரும் இவ்வாறு சபதம் செய்து பிரிந்தனர். அச்சுதன் சிவசேகர பண்டிதரானார்.

குமரன் சோழ நாட்டின் இளவரசர் இராஜாதித்தனின் அபிமானத்தைப் பெற்று ஒரு படைப்பிரிவின் தலைவனாகவும், இராஜாதித்தனின் உயிர்த் தோழனாகவும் மாறினான்! பராந்தகன் மனத்தை மாற்ற முயன்ற துறவி இந்த அச்சுதன் தான் என்று அறிந்தவுடன் குமரன் திடுக்கிட்டான்.

மேலும் குமுதவல்லியைக் குரூபியான வடிவத்தில் கண்டவுடன் அவளையும் அழைத்துக் கொண்டு துறவியைச் சந்திக்க முயன்றான். ஆனால், அதற்குள் சிவசேகரர் சிதம்பரம் சென்று அங்கிருந்து. புறப்பட்டு திருப்பாதிரிப்புலியூரை அடைந்துவிட்டதறிந்தவுடன், அவரைச் சந்தித்துப் பேச விரைந்தான். சிவசேகர பண்டிதரை இதோ இப்போது சந்தித்துவிட்டான். இனிமேல்தான் விளைவை எதிர்பார்க்க வேண்டும்.



அத்தியாயம் 22

இரு சூரியர்கள்

பராந்தக சோழ சக்கவர்த்தி எதிர்பார்த்ததுபோல் அவர்கள் தஞ்சைக்குத் திரும்பிச் சென்றவுடனேயே, கங்க நாட்டினின்று துயர மிக்க செய்தி கிடைத்தது. கங்க மன்னன் பிருதிவீபதியின் ஒரே மகன் விக்கியண்ணன் நோய்வாய்ப்பட்டிருந்தவன் திடீரென்று இறந்துவிட்டான்.

அவன் இறந்த செய்தி மிகவும் தாமதமாகவே தஞ்சைக்கு எட்டியதிலிருந்து கங்க நாட்டுத் தலைநகரில் பூதூகனுடைய கை மிகவும் ஓங்கிவிட்டதென்பது தெள்ளத் தெரிந்தது.

பராந்தகர் உடனே இராஜாதித்தனை அழைத்தார். படைகளைத் திரட்டுமாறு உத்தரவிட்டார். தந்தையின் அந்தக் கட்டளையைத் தானே அவன் நெடு நாட்களாக எதிர் பார்த்திருந்தான்! அவன் அகமலர்ச்சியுடனும் தள்ளும் தோள்களுடனும், துடிக்கும் கரங்களுடனும் தந்தையின் எதிரே போய் நின்றான்.

''கங்க நாட்டிற்குச் சென்ற உத்தமசீலி என்ன ஆனான் என்றே தெரியவில்லையே. கங்க நாட்டில் பூதகனின் கை ஓங்கிவிட்டது என்று தெரிகிறது!'' என்று பராந்தகர் கூறினார்.

''ஓங்கட்டுமே! நாம் திடீரெனப் படைகளுடன் கங்க நாட்டில் பிரவேசிப்போம். உத்தமசீலியும் அங்கே உதவிக்குக் காத்திருப்பான். கங்க நாட்டின் மீது முற்றுகையிட்டால்தான் இரட்டர்கள் மீது படையெடுத்துச் செல்லச் சௌகரியமா யிருக்கும்'' என்று இராஜாதித்தன் உற்சாகமாகக் கூறினான்.

ஆனால், பராந்தக சோழ தேவர் இராஜாதித்தனை உற்று நோக்கினார்.

''மகனே, நான் முன்பே கூறியவற்றிலிருந்து ஏதும் மனத்தை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. சோழ நாட்டிற்கு வெளியே

எக்காரணம் கொண்டும் படைகளைக் கொண்டு செல்லக்கூடாது என்பது திடமான எண்ணம்.

''ஒருவேளை பூதுகன் திடீரென்று படைகளுடன் நம் நாட்டிற்குள் நுழைய முற்படலாம். அதைத் தடுப்பதற்காக நீ எச்சரிக்கையாகப் படைகளுடன் செல்லுமாறு உனக்குக் கூறவே அழைத்தேன். திருக்கோவலூரில் வைதும்பராயன் தங்கி இருக்கிறான்.

''அவன் பல ஆண்டுகளாகவே நமக்குச் செலுத்த வேண்டிய திறைப் பணம் செலுத்தவில்லை. நீ திருக்கோவலூர் அருகே ஒன்று பாடி வீடு அமைத்துத் தங்கி இரு. அங்கிருந்தே வைதும்பன் மீது ஒரு கண் வைத்திரு.

''அங்கு தங்கி இருக்கும்போது சும்மாயிராமல் சிவன் கோயில் ஒன்றைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய். நீ அங்கே தங்கியிருப்பது கோயில் திருப்பணிக்காக என்று காண்பவர்கள் நினைக்க வேண்டும்.

''ஆனால் உன் கண்ணும் கருத்தும் கங்க நாட்டினின்று ஏதாவது செய்தி வருகிறதா என்று காண்பதிலும், வைதும்பனின் மனப்பாங்கை ஆராய்வதிலும் இருக்க வேண்டும். உடனே படைகளுடன் புறப்பட்டு விடு'' என்று கட்டளையிட்டார் பராந்தகர்.

∴ ∴ ∴

தந்தையின் சொல்லை இராஜாதித்தனால் மீற முடியவில்லை. 'குமரனும் திருக்கோவலூருக்குத் தான் சென்றிருக்கிறான். தஞ்சையிலிருந்து படைகளுடன் புறப்பட்டுவிட்டால் பிறகு சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டு மளமளவென்று கங்க நாட்டை நோக்கியோ, மான்யகேடம் நோக்கியோ புறப்பட்டுவிட்டால், தந்தை வேண்டாம் என்றா கூறிவிடப் போகிறார்?' இந்த எண்ணத்துடன் இராஜாதித்தன் புறப்படும்போது வீரமாதேவி அவன் எதிரே வந்தாள்.

''தங்காய்! உனக்கு விடிவு காலம் வந்துவிட்டது. நான் படைகளுடன் புறப்படுகிறேன். நான் எடுத்த சபதம் நிறைவேறாமல் தஞ்சைக்குத் திரும்பமாட்டேன், தெரியுமா? என்று உற்சாகத்துடன் பேசினான்.

வீரமாதேவியின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் ததும்பியது. தனக்காகத் தன் சகோதரன் எடுத்துக் கொண்டுள்ள பெரும் முயற்சி அவளை மெய்சிலிர்க்க வைத்தது. எனினும் தன் சகோதரனுடன் வேடிக்கையாகப் பேச விரும்பினாள்.

''அண்ணா! நான் தஞ்சையில் தங்கியிருப்பது தங்களுக்குப் பிடிக்கவில்லையா? என்னைச் சீக்கிரமாக எங்கள் நாட்டிற் கனுப்பிவிடப் போகிறீர்களா?'' என்று கேட்டாள்.

தங்கையின் பேச்சில் மிளிர்ந்த வேடிக்கையை இராஜாதித்தன் உணரவில்லை; வீரமாதேவியைக் கோபத்துடன் பார்த்து, ''நீ இங்கே தங்கியிருப்பது எனக்குப் பிடிக்கவில்லைதான். நீ தங்கியிருக்கும் ஒவ்வொரு நொடியும் சோழ நாடு மானம் மரியாதை இழந்து வருகிறதென்று அர்த்தம்.

''இராட்டிரகூட நாட்டு அரசி, சோழ நாட்டில் பிறருடைய ஏச்சுக்கும், பேச்சுக்கும் இடம் கொடுத்து வாழலாமா? அதை நான் பார்த்துக் கொண்டு வாழலாமா? என் உடலில் வீர இரத்தம் ஓடவில்லையா? வீரமாதேவி! சோழ நாட்டை மறந்துவிடு. எங்கள் படைகளுடன் நீயும், உன் கணவரும் வரவேண்டும்.

''மான்யகேட நகரில் நான் வீரநடை போட்டு அசோக வர்ஷனை எமனுலகுக்கு அனுப்பி, கிருஷ்ணனை சிறைப்பிடித்து, உன்னையும் உன் கணவர் கோவிந்த வல்லவரையரையும் அரியணையில் அமர்த்தி மீண்டும் என் கரங்களால் முடி சூட்டுவேன். அதைச் செய்யாமல் நான் சோழ நாட்டு மண்ணை மீண்டும் மிதிக்க மாட்டேன். இது திண்ணம். இது உறுதி. இது சத்தியம். என் போக்கை யார் தடுத்தாலும் தயங்கமாட்டேன்'' என்று வீர சபதம் செய்ததைக் கேட்டும் இராஜாதித்தன் விழிகளில் வீசிய ஒளியைக் கண்டும், வீரமாதேவி, உடலில் ரோமாஞ்சலி ஏற்பட மெய்மறந்து நின்றாள்.

நெஞ்சு தழுதழுக்க அவள் இராஜாதித்தனின் கரங்களைப் பிடித்துக் கொண்டு கூறுகிறாள்: ''அண்ணா! நான் வேடிக்கையாகப் பேசினேன். தஞ்சையில் என்னால் இனி ஒரு கணமும் தங்க முடியாது. உனது படைகளுடன் நாங்களும் வருகிறோம்.''

''....மான்யகேட நகரில் உங்களுக்கும் திருமணம் நடத்தி அக்கோலாகலத்தை நான் கண்டுகளிக்க வேண்டும். கிருஷ்ணனுக்கு சகோதரி இளமங்கை நல்லாள் இருக்கிறாள். தங்களுக்கு ஏற்றவள்! அழகு உள்ளவள். வெற்றிப் பரிசாக நான் அவளை உங்களுக்குத் தரப்போகிறேன். அங்கே திருமணம் நடைபெறாமல் வேறு எங்காவது நடந்தால் நான் திருமண வைபவத்துக்கு எப்படி வருவேன்?'' என்றாள் வீரமாதேவி.

இராஜாதித்தன் மெல்ல நகைத்தான். ''தங்காய் வீரமாதேவி! வீரத் திருவை முதலில் மணந்த பிறகுதான் மற்ற மணத்தைப்

...ரிய பேச்செல்லாம் இதுவரை எடுத்த காரியம் இவ்வளவு ... தடையுற்றது போல், வேறு எப்போதும் நேரவில்லை.

...அதனால் முதலில் வெற்றி; பிறகுதான் திருமணம். நான் ...படட்டுமா? திருநாவலூர் போய்ச் சேர்ந்த பிறகு என் ...னேற்ற நடவடிக்கையைக் குறித்துச் செய்தி அனுப்புகிறேன். ... கோவிந்த வல்லவரையரும் வந்து விடலாம்'' என்றான்.

அவன் குரலில் உறுதி இருந்தது; உற்சாகமிருந்தது. ...தேவியும் இதுவரை இல்லாத மகிழ்ச்சியை அடைந்தாள்.

❖ ❖ ❖

திருக்கோவலூர் மலையமான்களின் தலை நகரம். சங்க ...லக்கியத்திலும் பிற்கால வரலாற்றிலும் மலையமான்கள் சிறந்த ...ம் பெற்றவர்கள்.

ஆனால் துரதிருஷ்டவசமாக, இடையில் மலையமான் ...ரம்பரை பலம்குன்றி, ஆள்வதற்குத் தக்க வாரிசு இன்றி ஒளி ...ந்றியிருந்தனர். சோழ மன்னர்களுக்கு நெருங்கிய ...தொடர்புடையவர்கள். ஆனால், வைதும்பராயன் தன் நாடிழந்து ...ருக்கோவலூரில் வந்து சேர்ந்த பிறகு, சோழர்களுடன் ...வைதும்பராயன் சுமூகமான தொடர்பு கொள்ளவில்லை.

பல ஆண்டுகளாகச் செலுத்த வேண்டிய திறையினையும் ...லுத்தவில்லை. சோழ நாட்டின் மிக முக்கிய கேந்திரமான ...த்தில் திருக்கோவலூர் இருந்தபடியால் பராந்தக சக்கரவர்த்தி ...வனுடைய நடவடிக்கையைக் கண்டும் காணாதவர் போல் ...ருந்தார்.

வைதும்பராயன் ராஜ தந்திரம் மிகுந்தவன். இராட்டிர கூட ...ாட்டு அசோக வர்ஷனும், கிருஷ்ணனும் அவனுடன் நெருங்கிய ...தொடர்பு கொண்டவர்கள். கங்க நாட்டிற்குச் செல்வதற்கு ...ன்பு பூதூகன், வைதும்பனிடம் வந்து அவனுடன் ரகசியமாகக் ...லந்தாலோசித்த பிறகே, கங்க நாட்டில் தன் கை வரிசையைக் ...ாட்டச் சென்றான்.

பூதூகனுக்கு வைதும்பன் உதவினான். திருவலத்தைச் ...ற்றியுள்ள நாட்டைக் கொடுப்பதாக பூதூகன் அவனுக்கு ...ாக்களித்திருந்தான்.

வைதும்பன் மகள் கல்யாணி தந்தையின் குணத்தினின்று, ...ற்றிலும் மாறுபட்டவள். இளம் பருவத்திலேயே இறைவன் ...மீது பக்தி இயற்கையாக அவள் உள்ளத்தில் குடிகொண்டது. திருக்கோவலூரைச் சுற்றியுள்ள தலங்களுக்கு அவ்வப்போது

சென்று வருவதிலும், இறைவன் அடியார்களின் வரலாற்றைக் கேட்டு மகிழ்வதிலும் அவள் உற்சாகம் கொண்டிருந்தாள்.

அன்று பொழுது புலர்ந்தது.

அரச மகள் கல்யாணி நீராடிவிட்டு மாளிகையின் மேல் மாடத்தில் கூந்தலை உலர்த்திய வண்ணம் உலவிக் கொண்டிருந் தாள். இரண்டு நாள்களாக அவள் உள்ளத்தில் ஒருவித சலனம் ஏற்பட்டிருந்தது.

சோழ நாட்டு வீரன், வெள்ளங்குமரன், வைதும்பராயனைச் சந்திக்க வந்தான். திருக்கோவலூர் கோட்டைக்குள்ளே குமரன், குதிரையின் மீது கம்பீரமாக அமர்ந்து வந்தான். நுழையும்போதே அவனைக் கல்யாணி தேவியின் தோழி கண்டுவிட்டாள்.

குமரனுடைய கம்பீரத் தோற்றத்தை உடனே கல்யாணியிடம் தெரிவிக்காவிடில், அவள் மண்டை வெடித்துவிடும் போலாகி விட்டது. கல்யாணிக்குக் கூந்தல் அலங்காரம் செய்து கொண்டே, குமரனுடைய வருகையைத் தோழி தெரிவித்தாள்.

''இந்த நாட்டிற்கே புதியவர் எனத் தோன்றுகிறது. தேவி! அவருடைய தோற்றத்தைக் காணும்போது, அவர் சாதாரண வீரராக இருப்பார் என்று தோன்றவில்லை'' என்று தோழி மெல்லக் குமரனைப் பற்றிய பேச்சைத் தொடங்கினாள். ஆனால்...

''... அரசரைத் தேடிக் கொண்டு எவ்வளவோ பேர்கள் வருகிறார்கள்; வந்துவிட்டுப் போகட்டுமே! சாதாரண வீரராக இல்லாவிட்டால் படைத் தளபதியாக இருப்பார்! நமக்கென்ன? சோழ நாட்டிலிருந்து வந்த வீரராக இருந்தால் சொல்லு சோழ நாட்டில் உள்ள ஒவ்வொரு கோவிலாகச் சென்று காணவேண்டும் என்ற ஆசை நீண்ட நாட்களாக இருக்கிறது!'' என்றாள் கல்யாணிதேவி.

''அதைத்தான் சொல்ல வந்தேன், தேவி. சபை மண்டபத்துக் காவல்காரர்களைக் கேட்டதிலிருந்து அவர் சோழ நாட்டைச் சேர்ந்தவர்தானாம். அருகே திருநாவலூரில் சோழ நாட்டு இளவரசர் தங்கியிருக்கிறாராம்...'' என்றாள்.

கல்யாணி தேவியின் ஆவலை இவ்வாறு தூண்டிவிட்டாள் தோழி. தந்தையிடம் குமரன் பேசிக் கொண்டிருக்கும்போதே கல்யாணிதேவி அங்குச் சென்றுவிட்டாள். தோழி கூறியது முற்றிலும் சரிதான். பொன்னிற மேனியென்று பெண்களை வர்ணிக்கும் பொழுதுதான் கூறுவார்கள்.

அதனால் குமரனுடைய பொன்னிற மேனியும், மலைநாட்டில் வளர்ந்ததால் உறுதியான உடலும் கல்யாணியின் உள்ளத்தைக் கவர்ந்தன. மேலும் சோழ நாட்டிலிருந்து வருபவர் என்றதால் அவள் ஆவல் மேலும் அதிகமாகியது!

வைதும்பராயனின் அருமை மகள் கல்யாணி, பிறந்த பிறகுதான் வைதும்பனுக்கு நிற்கவும் நிழல் கிடைத்தது. நாடோடியாக கீழைச் சாளுக்கிய நாட்டிலும், இரட்டர்கள் நாட்டிலும், உலவிக் கொண்டிருந்தவனுக்கு அசோகவர்ஷனின் ஆதரவு பிறகுதான் கிடைத்தது. அதனால் மகள் கல்யாணியின் மீது உயிரையே வைத்திருந்தான், அவன்.

கல்யாணி தந்தையின் செவியில் மட்டும் கேட்கும் வகையிலும், விழிகள் குமரனை நோக்கி ஆராயும் வண்ணமும் குனிந்து, ''தந்தையே அவர் சோழ நாட்டினின்றா வருகிறார்?'' என்று கேட்டாள். அதைக் கேட்பதற்குள் நாணம் அவள் முகத்தில் மட்டுமல்ல; உடலெங்கும் பரவியது!

குமரனுக்கு அங்கு இருப்பே கொள்ளவில்லை. வைதும்பன் பொல்லாதவன் போலிருக்கிறது? ராஜதந்திரத்தில் தான் வல்லவன் என்றாலும், அழகிய மகளைக் கூர்மையான ஆயுதங்களுடன் வைத்திருக்கிறானே என எண்ணினான்.

கல்யாணியின் வேல் போன்ற விழியின் கூர்மைத் தாக்குதலினின்று ஒருவரும் தப்ப முடியாது என்ற எண்ணத்தை அப்போதே உறுதிப்படுத்திக் கொண்டான். தன் உள்ளம் இவ்வாறு சலனம் அடைந்தால் வைதும்பராயனை வெல்வதுதான் எப்படி என்று எண்ணும்போது அவனுக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை.

''மீண்டும் வருகிறேன், வரும்போது இளவரசரையும் அழைத்து வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட எத்தனித்தான், குமரன்.

குமரனை நோக்கிச் சொல்வதுபோல் தந்தையைப் பார்த்து, ''அப்பா திருக்கோவலூர் மலையமான்கள் கொடை வள்ளல்கள் என்று பெயர் பெற்றவர்கள். வள்ளல்கள் உபசரணையிலும் சளைத்தவர்களல்லர். வந்தவருக்கு விருந்தளிக்காமல், விடை கொடுத்தனுப்புகிறீர்களே'' என்றாள்.

குமரனின் உடல் சிலிர்த்தது. வைதும்பன் தன் மகள் கூந்தலை வருடி, ''கல்யாணி! இன்று வந்துவிட்டு உடனே போய் விடுபவர்களல்லர் அவர்கள். இப்பொழுது மிகவும் முக்கியமான

காரியமாக திருநாவலூருக்கு வந்தவர்கள் என்னையும் காண வந்திருக்கிறார்கள். சோழ நாட்டு இளவரசரும் திருநாவலூருக்கு வந்திருக்கிறாராம். நானே போய் அவரைக் காண்பேன் என்று எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் வைதும்பன் சிற்றரசனாக அடிபணிந்து வாழ்ந்த காலம் போய் விட்டதென்பதைச் சோழ நாட்டினர் உணரவில்லை.

''நான் சுதந்திர அரசன். சேர, சோழ, பாண்டிய, கங்கர் என்பது போல் வைதும்பனையும், இனிச் சேர்த்துத்தான் சொல்ல வேண்டும். என் உறவு, நட்பு தொடர்பு வேண்டும் என்றால் அவர்கள் வந்து என்னைச் சந்தித்துத்தான் ஆக வேண்டும். பரிசுப் பொருள்களுடன் வருமாறு கேட்கவில்லை. பரிவான உள்ளத்துடன் வந்தால் போதும்!'' என்றான்.

வைதும்பனின் கர்வம் நிறைந்த இந்தப் பேச்சு குமரனைக் கொதிப்படையச் செய்தது. கல்யாணியின் இனிய முகமும், வைதும்பனை விரோதித்துக் கொள்ள முடியாத சூழ்நிலையும் அவனை அடக்கமாக இருக்கச் செய்தன.

குமரன் விடைபெற்றுச் சென்றதிலிருந்து கல்யாணியின் உள்ளத்தில் பெறும் மாறுதல்.

மீண்டும் எப்போது வருவார் என்ற ஆவல், அவள் உறக்கத்தையும் உள்ளத்தையும் கெடுத்தது!

அன்று பொழுது விடிந்து, அவள் வழக்கம்போல் நீராடிவிட்டு, மேல் மாடத்தில் உலவிக் கொண்டிருக்கையில், கல்யாணியின் தோழி விரைந்து வந்து, ''தேவி! தேவி! அன்று வந்தாரே அவரும் சோழ நாட்டு இளவரசர் இராஜாதித்தனும் வருகிறார்கள்!'' என்றாள்.

கல்யாணியின் மெய் சிலிர்த்தது. சபை மண்டபத்தில் அவர்கள் தன் தந்தையைச் சந்திக்கச் செல்லும்போது, தூணின் மறைவிலிருந்து நோக்கினாள். இரண்டு சூரியன்கள் உதயமானதுபோல் குமரனும், இராஜாதித்தனும், அவள் கண்களுக்குக் காட்சியளித்தனர்.



அத்தியாயம் 23

தந்தையும் மகளும்

கல்யாணிதேவி தன் தோழியை அன்புடன் அழைத்தாள். அவள் உள்ளம் அறிந்து தெரிவிக்கும் திறமை பெற்ற தோழியோ, "தேவி! வந்திருப்பவர் சோழ நாட்டு இளவரசர். இராஜாதித்த னென்று பெயர். அருகே திருவாவலூரில் தங்கியிருக்கிறார்" என்றாள்.

"அது எனக்குத் தெரியும். நான் உன்னைக் கேட்க வந்தது. அதைப் பற்றியன்று. அவருடன் இருக்கிறாரே, அவரை நீ சந்திக்க வேண்டும். சோழ நாட்டிலுள்ள முக்கியமான ஆலயங்களை நாம் காண வேண்டும் என்று தெரிவிக்க வேண்டும். இது என் தந்தைக்குத் தெரியக் கூடாது."

தோழி மயிலம்மாள் மெல்ல நகைத்தாள். கல்யாணிதேவியின் உள்ளத்தைச் சில நாட்களாக அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை! வெள்ளங்குமரன் எனனும் சோழப் படை வீரரைக் கண்டதிலிருந்து தேவி நிலைகொள்ளாமல் தவிக்கிறாள். இப்பொழுது சோழ நாட்டு இளவரசர் வந்தவுடனே, அவள் மனம் முழுமையும் சோழ நாட்டின் மீது இருக்கிறதா என்று அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

எனினும், கல்யாணிதேவியின் நல்ல குணங்கள் அவள் அறியாததா? வைதும்பராயனுக்கு நேர் மாறான குணவதி என்று மாளிகை வேலைக்காரர்கள் இரகசியமாகப் பேசிக்கொள்வதை முழு மனத்துடன் அவள் ஆதரிப்பாள்! வைதும்பராயன் பண்பட்ட அரசனல்லன். ஏதோ தவறிப்போய் மலையமான்கள் அமர்ந்த இடத்தில் அமர்வதற்கு வந்துவிட்டான்.

இராஜாதித்தன் வரும் செய்தி அறிந்தவுடனேயே மாளிகை வாயிலுக்கே வரவேற்க வந்தான் வைதும்பராயன் இராஜாதித் தனை இப்பொழுதுதான் முதன் முறையாக, வைதும்பராயன் காண்கிறான்.

இராஜாதித்தனின் கம்பீரத் தோற்றம், அவனை எடுத்த எடுப்பிலேயே கவர்ந்தது. பராந்தகச் சோழச் சக்கரவர்த்திக்கு இத்தகைய அழகு மகன் இருப்பான் என்று வைதும்பன் நினைக்கவேயில்லை.

தன் மகள் கல்யாணியை, சோழ நாட்டு இளவரசனுக்கு திருமணம் செய்து கொடுத்து, பராந்தகருடன் மணவினைத் தொடர்பு மூலம் மேலும் நெருங்கிப் பழகினால் என்ன என்றொரு கணம் வைதும்பன் யோசித்தான்!

சோழச் சக்கரவர்த்தியோடு தொடர்பு கொள்வதைக் காட்டிலும் இரட்டர்களுடன் நெருங்கிப் பழகுவதில்தான் ஆதாயம் இருக்கிறதென்பதை நன்றாக உணர்ந்தவன் அவன். அதனால் நினைத்துப் பார்ப்பதில்கூட, சோழ நாட்டு உறவை விரும்ப வில்லை?

இராஜாதித்தனுக்கும், குமரனுக்கும் வைதும்பராயன் பெரு விருந்தொன்று வைத்து மகிழ்வித்தான். இரவு விருந்துக்குப் பிறகு நிலா முற்றத்தில் அமர்ந்து வைதும்பராயன், அவனுடைய சேனைத் தலைவன், இராஜாதித்தன், குமரன் ஆகியோர் உரையாடிக் கொண்டிருந்தனர்.

விரைவில் திருநாவலூருக்கு அருகே உள்ள கிராமத்தில் சிவன் கோயில் ஒன்று கட்டப்போவதாக இராஜாதித்தன் கூறினான். மிக விரைவில் அக்கோயிலை எடுத்து, திருப்பணி முடித்து குடமுழுக்கு நடத்தவிருப்பதாகவும் இராஜாதித்தன் தெரிவித்தான்.

''கோயில் திருப்பணிகளை அமைதியாக செய்வது நல்லது. அவசரம் ஏன்?'' என்று வைதும்பராயன் கேட்டான்.

''காலம் பொல்லாதது, அது எப்படியெப்படி மாறுமோ தெரியாது. அமைதியான சமாதான காலத்திலேயே திருப்பணி வேலையை முடித்து விடுவதுதான் நல்லது'' என்றான் இராஜாதித்தன்.

''அமைதி குலைவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுவிடுமா!'' என்று கேட்டான் வைதும்பராயன். தெரிந்த ஒன்றைத் தெரியாதது போல் புலப்படுத்திக் கொண்டு வெள்ளங்குமரன் குறுக்கிட்டு,

''தங்களுக்குத் தெரியாதா கங்க நாட்டில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள்? விக்கியண்ணன் இறந்துவிட்டான்'' என்றான்.

வைதும்பன் இடிஇடியென நகைத்து, ''விக்கியண்ணன் இறந்தான். அவன் தந்தை பிருதீவிபதியும் மகனைத் தேடிக்

கொண்டுபோய்ச் சேர்ந்துவிட்ட சேதி தங்களுக்குத் தெரியாதா?'' என்றான்.

இடி இறங்கியது போலவே அந்தச் செய்தி குமரன் உள்ளத்திலும், இராஜாதித்தன் உள்ளத்திலும் வீழ்ந்தது.

''என்ன பிருதிவீபதி இறந்துவிட்டாரா?'' என்று கூவி, அங்கிருந்து எழுந்திருக்க முயன்றான், இராஜாதித்தன்.

அவனைக் கையமர்த்தி, ''நல்ல விருந்து வேளையில் துயரச் செய்தி கூறியதற்கு நான் வருந்துகிறேன். இளவரசே! எங்கள் நாட்டு நடனத்தைக் கண்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டு, கைதட்டி நடன மாதை அழைத்தான்.

''உங்கள் நாடு என்று தனியே பிரித்துக் கூறுகிறீர்களே! தமிழ் கூறும் நல்லுலகான சோழ, சேர, பாண்டிய நாட்டில், கலை அனைவருக்கும் பொது. இசை, இலக்கியம், நடனம் அனைத்திலும் நாங்கள் ஒன்று'' என்றான் இராஜாதித்தன், சற்று எரிச்சலுடன்.

கலையில் ஒன்று; ஆனால், நாட்டாசையில் வேறு அப்படித்தானே? சோழ நாட்டு இளவரசரே! நான் உங்களுடன் சேரமாட்டேன். எங்கள் நாடு வேறு; கலை வேறு; நடனம் வேறு; தனிப்பட்ட முறையில் உங்கள் ஒருவருடனும் சேராமல், தனிப்பட்ட சுதந்திர அரசாக வாழ்கிறேன். சோழ, சேர, பாண்டிய கங்க வைதும்ப எனும் ஐம்பெரும் நாடுகள் என்று இனி சொல்லும் காலம் வரும்!'' என்று கூறினான்.

கையிலே மதுக் குடத்துடன், மயக்கும் விழியுடன் மங்கை ஒருத்தி, ஒயிலாக நடந்து வந்தாள். பெண்களுக்கே இயற்கையான துவளுகிற நடையுடன் செயற்கையாக அவள் மேலும் குலுங்கிக் குலுங்கி நடந்து வந்தாள்! பருவத்தின் எழிலை அனைவருக்கும் பறைசாற்ற, குறைந்த ஆடையை உடுத்தி வந்தாள். வண்ண வண்ணத் துணிகள் ஒன்று சேர்ந்து அவள் உடலழகை மறைக்க முயன்றன.

விழிக்குத் தீட்டிய மை விரகதாபத்தை வளர்க்கும் பயங்கர வண்ணக் கோடாக அமைந்தது. வெற்றிலைக் காவியால் சிவந்த உதடு. ஆடவர் நெஞ்சிலே, போதை இரத்தத்தைப் பொங்கச் செய்யும் தன்மையுடையதாகத் திகழ்ந்தது.

அவள் பாடிய பாடல், விரசம் நிறைந்ததாகவும், விரக தாபத்தை வளர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். கொச்சைத் தமிழும் சிறிது பிராகிருதமும், தெலுங்கும் கலந்த ஒரு கதம்ப மொழியில் அவள் பாடினாள்.

வைதும்பராயன் நொடிக்கு ஒரு தரம் 'ஆகா ஆகா, என்று கூறிப் பாராட்டினான். தலையை அசைத்தான்' பெரிதாகச் சிரித்தான். தன் அருகே இருந்த சேனைத் தலைவர் தொடையில் உற்சாக மிகுதியால் தட்டினான்.

இராஜாதித்தன் பக்கம் திரும்பி, ''கேளுங்கள், இளவரசே! கேளுங்கள்! உங்கள் ஊரில் இதுபோன்று ஆடுவார்களா? பாடுவார்களா?'' என்று கேட்டான்.

இராஜாதித்தன் நகைத்தான். ''ஆமாம்; ஆமாம், எங்கள் ஊரில் இப்படிப்பட்ட கீழ்த்தர நடனத்தையும் பார்க்க மாட்டோம்; இசையையும் கேட்க மாட்டோம். இசைக்கே இருப்பிடமான திருவையாற்றிற்கு ஒருமுறை நீங்கள் வந்தால், காமவல்லி எனும் கலைவாணியின் இல்லத்திற்கு அழைத்துச் செல்கிறேன். அங்கே ஏகாந்தமான நடனத்திற்கு ஏற்பாடு செய்கிறேன். ஆனால், தரக்குறைவோ பண்புக் குறைவோ அங்கே தாங்கள் காணவோ, கேட்கவோ முடியாது'' என்றான்.

அதற்குள் அந்த விறலி நெளிந்து, வளைந்து ஆடி மதுக்குடத்தனின்று, வைதும்பராயனின் கிண்ணத்தில் மதுவை ஊற்றினாள். இடது கரத்தால் அந்த மங்கையைத் தன் பக்கம் இழுக்க முயன்றவாறு, வலது கரத்தில் மதுவை வாங்கிக் குடித்தான்.

இராஜாதித்தனும் குமரனும் மரியாதைக்காகத் தொட்டனரே தவிர, வைதும்பனோ அதற்குள் போதை தலைக்கு ஏறும்வரைக் குடித்துவிட்டான்.

இராஜாதித்தனும் குமரனும் அருகே அமர்ந்திருப்பது கூட அவனுக்குத் தெரியவில்லை. சேனைத் தலைவர் வைதும் பனையும் மிஞ்சிவிட்டார். திருக்கோவலூரில், மாளிகையில், நிலா முற்றத்தில் மதிப்பு மிகுந்த விருந்தினர் மத்தியில் அமர்ந்திருப்பதைக் கூட மறந்துவிட்டனர்.

வைதும்பராயன் இராஜாதித்தனை நெருங்கி, ''தம்பி! இது என்ன சாமான்யமான ரசமா? ஜவ்வாது மலைக்கு ஆளனுப்பித் தேனடைகளைப் பிழிந்து பூமிக்கடியிலே மூடி வைத்து, செங்கரும்பைப் பிழிந்து காய்ச்சிப் பாகாக்கி ஓராண்டுக் காலம் கழித்து எடுத்து இன்னும் போதை வகையெல்லாம் சேர்த்துக் கலந்தது! கொஞ்சம் சுவைத்துப் பாரேன்!'' என்றான்.

இராஜாதித்தன் மறுத்துவிட்டான். குமரனும் தொடவில்லை. வந்த இடத்திலிருந்து புறப்பட்டுவிட்டால் போதும் என்று

தோன்றியது அவர்களுக்கு! அவர்கள் வந்தது வைதும்ப ராயனுடன் கலந்து பேச.

ஒருவேளை படையெடுப்பு நேர்ந்தால் உதவி செய்வானா என்பதைக் கேட்டறிய, வைதும்பனோ அதைத்தவிர, மற்ற விஷயங்களை நேரம் போவது தெரியாமல் பேசியும், தனது சுயப்பிரதாபங்களை வானம் எட்டுமளவுக்கு அளந்தும், அறுசுவை விருந்தும் வைத்தான். அதுவும் போதாதென்று மதுக் கிண்ணத்துடன் மங்கையை ஆட வைத்தும், மற்றவர்களைச் சுவைக்குமாறு வற்புறுத்துகிறானே!

வைதும்பராயன் விழிகள் தணலெனச் சிவந்தன. கோபத்தால் அல்ல, குடிமயக்கத்தால்! அவனுடைய சிரிப்பில், சுய நினைவு இருப்பதாகத் தெரியவில்லை.

''என்ன தம்பி! இப்படிப் புதுப் பெண்போல் நடுங்குகிறாய்? அந்தச் சாமியார் வந்தாரே, அவர் எங்களுடன் சேர்ந்து பழரசம் பருகினார். இன்னும் மூன்று குடத்தில் ஊறப் போட்டிருக்கும் ரசத்தை நாளை தான் எடுக்கப் போகிறோம். என்றைக்குத் தெரியுமா? நாளைக்கு, நாளை மறுநாள் இங்கே பெரிய விருந்து. மிகப் பெரிய மனுஷர்கள் வரப்போகிறார்கள். வெகு தூரத்திலிருந்து வரப் போகிறார்கள். அவர்கள் இதுபோன்ற மதுவை வாழ் நாளிலேயே சுவைத்தது இல்லை என்று கூறப் போகிறார்கள். அவர்கள் கொடுத்து வைத்தவர்கள்'' என்றான். வைதும்பன் கூறிக் கொண்டிருக்கும் போதே, மதுமங்கையைத் தன் அருகே இழுத்து அணைத்துக் கொண்டு, அவளை மூச்சுவிட முடியாது செய்தான்.

அந்த இடத்தில் இராஜாதித்தனுக்கும், குமரனுக்கும் என்ன வேலை? இராஜாதித்தனுக்கும் கோபம் பொங்க அங்கிருந்து எழுந்தான். ''குமரா! நாம் இப்போதே திருநாவலூர் திரும்பி விடுவோம். வைதும்பன் உதவி நமக்கு வேண்டாம். பண்பற்றவன், கெடுமதியாளன்'' என்று ஆத்திரத்துடன் பேசினான், இராஜாதித்தன்.

''இளவரசே! மெல்லப் பேசுங்கள். வைதும்பராயனின் ஒற்றர்களின் செவிகளில் விழக்கூடாது. குடி மயக்கத்தில் வைதும்பன் கூறியதைக் கேட்டீர்களா? சாமியார் ஒருவர் வந்து அவனுடன் சேர்ந்து மது சுவைத்தாராம். அவர் யாராய் இருக்க முடியும் என்று நினைக்கிறீர்கள். சிவசேகர பண்டிதராய்த்தான் இருக்க முடியும்! திருக்கோவலூருக்குச் செல்லவில்லை என்று என்னிடம் போக்குக் காட்டிவிட்டு இங்கே வந்திருக்கிறார்.

''இப்போது பெரிய மனிதர்கள் வரப்போகிறார்களாம் இளவரசே! மகத்தான சதியை உருவாக்கப் பெரும் சக்திகள் வேலை செய்யப் போகின்றன. யார் வருகிறார்கள் என்று கவனித்து அறிய வேண்டும். நான் இங்கேயே தங்கிவிடுகிறேன். மறைந்து இரு நாட்கள் மாறுவேடத்தில் வாழ்கிறேன்'' என்றான்.

இராஜாதித்தன் குமரனை வியப்புடன் திரும்பிப் பார்த்தான். நடந்து கொண்டே அவர்கள் பேசினர். நிலா முற்றத்திலிருந்து வெளியேறுமிடத்தில், சற்று இருண்டிருந்த இடத்திலிருந்து யாரோ வரும் ஓசை கேட்டது. வளையல்கள் குலுங்கும் ஒலியினின்று குமரனும் இராஜாதித்தனும் வழிவிடுவதற்காகச் சற்று ஒதுங்கி நின்றனர். தோழி மயிலம்மாள் வந்து கொண்டிருந்தாள்.

''விருந்து முடியுமுன்பே புறப்பட்டுவிட்டீர்களே!'' என்று மயிலம்மாள் மெல்ல நகர்ந்தவாறு கேட்டாள்.

இராஜாதித்தன் மறுமொழி பேசுமுன்பே குமரன், ''விருந்தில் அதிக நேரம் தங்கியிருக்கும் தகுதி எங்களுக்கு இல்லை. அதனால் திரும்பிவிட்டோம். பெரியவர்கள் நாளை வருகிறார்களாம். அவர்களுக்கு ஏற்ற இடத்தில் இச்சிறு பிள்ளைகள் நாங்கள் தங்கலாமா?'' என்று கேட்டான்.

மயிலம்மாள் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, ''ஐயா, நாம் இங்கே நின்று பேச வேண்டாம். அதோ அந்த கெடில வீட்டிற்குப் போய்ப் பேசலாம். சோழ நாட்டு இளவரசருக்கு இங்கே நடைபெற்ற மரியாதையும், வரவேற்பும் இளவரசிக்கு மிகுந்த வேதனையை அளிக்கின்றன. தனது வேதனையைத் தெரிவித்துத் தங்களிடம் மன்னிப்புக் கேட்க அவர்கள் காத்திருக்கிறார்கள்'' என்று கூறினாள்.

'இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது' என்று இராஜாதித்தன் தயங்கவே குமரன் அவனது செவிகளில் மட்டும் விழும் வண்ணம், ''இளவரசே, நாம் போய்த்தான் பார்ப்போமே! எனக்கும் இம்மாளிகையில் ஒளிந்து கொள்ள ஓரிடம் வேண்டும். யாருடைய ஆதரவாவது வேண்டும். மேலும் இளவரசியின் குணம் தந்தையின் குணத்தினின்று மாறுபட்டது என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்'' என்று கூறவும் இராஜாதித்தன் கெடில வீட்டிற்குச் செல்லச் சம்மதித்தான்.

குமரன் வைதும்பனின் மகளைப் பற்றிப் புகழ்வதைக் கேட்க வியப்பாய் இருந்தது இராஜாதித்தனுக்கு. 'இளவரசியைப் பற்றி இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறானே இரண்டு மூன்று தடவை திருக்கோவலூருக்கு வந்ததிலிருந்து இளவரசியின் அபிமானத்தைப்

பெற்றுவிட்டானோ? இவனுக்காக அநுபமா அங்கே காத்திருக்கிறாளே...''

கெடில வீட்டில் இளவரசி கல்யாணிதேவி காத்திருந்தாள். நிலவு மெல்ல மெல்ல அந்தச் சிறு வீட்டின் கொடி களின் வழியே எட்டிப் பார்க்க முயன்றது. இடைவெளியின் வழியே நிலவு புகுந்து தரையில் புதுக்கோலத்தை வரைந்து கொண்டிருந்தது. தூங்கா விளக்கொன்று அங்கே எரிந்து கொண்டிருந்தது.

மங்கிய ஒளியில் கல்யாணி தேவியின் முகத்தாமரை அழகு வெளிப்பட்ட விதமே வேறு. அந்த முகத்தில் ஆவல் சூடி கொண்டிருந்தது. சோழ நாட்டில் சுற்றுப் பயணம் செய்ய வேண்டும் என்ற ஆவலா? கோயில்கள் தோறும் கண்டு களிக்க வேண்டும் என்ற ஆவலா? அல்லது இளவரசரைக் காண வேண்டும் என்ற ஆவலா?

இராஜாதித்தன், விழி வாங்காது கல்யாணி தேவியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தக் கொடி வீட்டில் அவர்கள் நால்வரைத் தவிர, வேறு யாரும் இல்லை.

''குமரா! கவனமிருக்கட்டும்; இங்கே அதிக நேரம் நாம் தங்கக்கூடாது'' என்று இராஜாதித்தன் மெல்லக் கூறினான்.

மயிலம்மாள், கல்யாணிதேவியைப் பார்த்த பார்வை 'அவர்களை அழைத்து வந்துவிட்டேன். இனி தங்களுடைய கடமை. என்ன பேசுவீர்களோ. பேசாமலேயே அனுப்பி விடுவீர்களோ' என்பதைப் புலப்படுத்தியது கல்யாணி தேவியின் குரலினிமையைப் போல் அவளுடைய அன்பும், ஆதரவுமான பார்வை மெல்ல மெல்ல ஒதுங்கிற்று!

''சோழ நாடு இனித் தெய்வீக மணத்துடன் திகழப் போகிறதாம். சில நாட்களுக்கு முன்பு இங்கே துறவியொருவர் வந்தார். அவர்தான் சொன்னார்'' என்று கல்யாணி தேவி பேச ஆரம்பித்தபோது குமரனும் இராஜாதித்தனும் ஒருவரையொருவர் திகைப்புடன் பார்த்துக் கொண்டனர்.



அத்தியாயம் 24

நட்பைக் குலைக்க வந்த காதல்

இன்னும் இருள் விலகவில்லை. இருளுடன் இணைந்த பனிப்படலம் தன் ஆட்சியை வான வெளியிலிருந்து பூமி வரை விரித்திருந்தது. அந்த வேளையிலும் எழுந்து தலை முதல் கால் வரை போர்த்திக் கொண்டு வேலை செய்யும் உழைப்பாளிகளின் நினைவு முழுவதும், தங்கள் விளை நிலத்தின் மீதே இருந்தது. இல்லத்தரசிகள் தெரு மாடத்தில் அகல் விளக்கை வைத்து கொண்டு வாயிலுக்குச் சாணம் தெளித்துக் கோலமிடும் பணியில் முனைந்தனர்.

மாளிகையில் பராந்தக சோழர் படுத்திருந்த அறையிலும் வெளிச்சம் தெரிந்தது. வழக்கத்தை விட அவர் விரைவாக எழுந்துவிட்டார். அவர் மெல்ல இருமினார். எழுந்து நடந்தார். அதைக் கண்ட பணிப்பெண்கள் துள்ளி எழுந்து தத்தம் காரியங்களைக் கவனிக்க விரைந்தனர். மன்னருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்வதற்கு அனைவரும் சித்தமாக இருந்தனர்.

பராந்தகர் உடனேயே இளவரசன் அரிஞ்சயனை அழைத்து வருமாறு கட்டளையிட்டார். தந்தை அந்த வேளையில் அழைப்பது அரிஞ்சயனுக்கு வியப்பாக இருந்தது. கடந்த சில நாட்களாகவே, சுறுசுறுப்பாகத் தந்தையின் கட்டளை என்று வரும் என்பதை எதிர்பார்த்து இயங்கிக் கொண்டிருந்த அவனுடைய விழிப்புணர்வு, தந்தையின் அழைப்பைக் கேட்டவுடன் கிளர்ந்தெழுந்தது.

''அரிஞ்சயா, உடனே படைகளுடன் நீ புறப்பட வேண்டும். திருநாவலூருக்கு அருகே இராஜாதித்தன் பாடி வீடமைத்துத் தங்கியிருக்கிறான். நீயும் அவன் அருகே உனது படைகளுடன் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய். உனது படைகள் காட்டிற்குள் தங்கட்டும்'' என்றார், பராந்தக சோழ தேவர்.

இராஜாதித்தன், திருநாவலூரில் படைகளுடன் தங்கி யிருக்கும்போது, தானும் எதற்குச் செல்ல வேண்டும் என்று அவனுக்குப் புரியவில்லை. 'கங்க நாட்டு நிலைமை தந்தைக்குத்

தெரியவில்லை போலிருக்கிறது. பூதூகன் கங்க நாடு முழுவதையும் தன் வசப்படுத்திக் கொண்டு மேலும் ஏராளமான ஆட்களைப் படைகளில் சேர்த்துப் படைகளை மின்னல் வேகத்தில் பலப்படுத்தி வருவது அவனது போர் வெறியைப் புலப் படுத்துகிறதே! இந்தச் செய்தி தெரியாதா?'

அரிஞ்சயன் ஏதோ சிந்திப்பதுபோல் தோன்றவே, பராந்தக சக்கரவர்த்தி அவனருகே வந்து அவன் தோளில் தன் கரத்தைப் பதித்து, ''அரிஞ்சயா, மிகவும் முக்கியமான சூழ்நிலையில் நீ திருநாவலூருக்குச் செல்கிறாய். சுந்தரர் பூசித்த கோயிலை இராஜாதித்தன் புதுப்பித்து மேலும் விரிவுபடுத்துகிறான். வீரர்கள் கோயில் திருப்பணியில் முனைந்திருப்பார்கள். அப்பணிகளை நிறுத்துமாறு உத்தரவிட்டுவிட்டுப் படைகளுடன் புறப்படுவான். வாணர்கள் நாட்டுத் தலைநகரான திருவல்லம் கோட்டையைப் பிடிப்பது அவனுடைய நோக்கமாக இருக்கும். இந்தச் சமயத்தில் அது ஆபத்தான முயற்சி. அதனால் இராஜாதித்தன் திடீரெனப் படைகளுடன் புறப்பட்டால், அவனைத் தடுத்து நிறுத்து வதற்காகத்தான் உன்னை அனுப்புகிறேன்'' என்றார்.

அரிஞ்சயனுக்கு என்ன செய்வது என்றே தோன்றவில்லை.

'வீர நாராயணன், வீர சோழன், சங்கிராம ராகவன்' என்று வீர விருதுப் பெயர்களைப் பெற்ற தன் தந்தையா இவ்வாறு படையெடுப்புக்கு அஞ்சுகிறார் என்று அரிஞ்சயன் வியந்தான். அவன் மனதில் இருப்பதை அறிந்து கொண்டவர்போல், வீரப் பராந்தக சோழர், ''படையெடுத்துச் செல்வதற்கு நான் அஞ்சவில்லை. பல்லாண்டுகளுக்கு முன்பு வாணர் நாட்டைக் கங்க நாட்டரசன் பிருதிவீபதிக்கு நாம் பரிசு கொடுத்தோம். இப்போது கங்க நாட்டில் பூதூகன் ஆட்சி செலுத்துவதால் கொடுத்த பரிசை நாம் திரும்பப் பெறுவதோ, பரிசைப் பறிப்பதோ தகாது. அந்தக் காரணத்தைக் கொண்டே நம் மீது பூதூகன் வீண்பழி சுமத்துவான். நாம் இவ்வாறு செய்வோம் என்று பூதூகன் முன்பே எதிர்பார்த்து, திருவல்லத்தில் ஏராளமான படைகளைக் குவித்திருப்பான். கிடுக்கித் தாக்குதலை நடத்து வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பான்'' என்றார்.

அரிஞ்சயனுக்கு மற்றொரு சந்தேகம் தோன்றியது. தன் மூத்த சகோதரன், இராஜாதித்தன் முன் கோபக்காரன், படைகளுடன் தான் வருவதை ஒரு நாளும் விரும்பமாட்டான். வீணாக அவன் தன் மீது கோபப்பட்டால், என்ன செய்வது என்று தயங்கினான். தந்தையிடம் அதை எப்படித் தெரிவிப்பது என்று அவனுக்குத் தோன்றவில்லை.

''திருவல்லத்தில் பூதுகன் கிடுக்கித் தாக்குதல் நடத்துவான் என்றால் நானும் மற்றொரு எதிர்த் தாக்குதலைச் செய்யக் கூடாதா?'' என்று அரிஞ்சயன் கேட்டான்.

''பூதுகன் போரில் இறங்கும்போது, அவனுக்கு உதவியாகப் பலர் வருவதற்குக் காத்திருக்கிறார்களடா மகனே. சக்கர வியூகத்தில் நாமே போய்ச் சிக்கிக் கொள்ளக் கூடாது. அதற்கு மாறாக நாம் ஒரு வலையை விரித்து, அதில் அவர்களை விழச் செய்ய வேண்டும். தாமதப்படுத்தாதே. உடனே புறப்படு. இராஜாதித்தன் எல்லையை மீறும்போது, இந்தக் கட்டளை ஓலையை நீட்டிவிடு'' என்றார்.

அரிஞ்சயனின் உடல் சிலிர்த்தது. தந்தையின் வாக்கைச் சிரமேற்கொண்டு படைகளை உடனே திரட்டி, திருநாவலூரை நோக்கிப் புறப்பட்டான்.

∴ ∴ ∴

திருநாவலூரில் கோயில் திருப்பணி மிகவும் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. திருக்கோவலூர் சென்ற வெள்ளங்குமரன் இன்னும் திரும்பி வரவில்லை.

இராஜாதித்தன் உறக்கம் பிடிக்காமல் வெளியே உலவ எழுந்தான். சிற்பிகள் செதுக்கிய பல சிலைகள் ஆரம்ப நிலையிலும், பாதி முடிந்த நிலையிலுமாக ஆங்காங்கே கிடந்தன. பகலெல்லாம் மிக வேகமாகத் தத்தம் பணிகளில் ஈடுபட்ட கல் தச்சர்கள் சுள்ளிகளைச் சேர்த்துத் தீமூட்டிக் குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள்.

மரத்தடியில் இருவர் மட்டும் தனியாகக் குளிர் காய்ந்து கொண்டிருந்தது, இராஜாதித்தனின் கண்களில் பட்டது. தலையில் பெரிய முண்டாசு கட்டி, உடல் முழுவதும் போர்த்திக் கொண்டு அவர்கள் குளிர் காய்வது போல் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இராஜாதித்தன் மரத்தின் மறைவில் நின்று கொண்டு அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''திருநாவலூர்த் திருப்பணியை இளவரசர் ஏன் இவ்வளவு விரைவாகச் செய்கிறார். வாள் பிடிப்பவர்கள் கையில் எல்லாம் சிற்றுளியைக் கொடுத்து வேலை வாங்குகிறாரே'' என்றது ஓர் உருவம்.

''இளவரசருக்கே திருப்பணி முடியும் வரையில், இந்த ஊரில் தாம் இருப்போமா என்ற நம்பிக்கை இல்லை. அதனால் எவ்வளவு விரைவில் முடியுமோ, முடித்துக் கொண்டு குடமுழுக்கைச் செய்யப் போகிறார்...''

''ஏன், அவர் வேறெங்காவது செல்லப் போகிறாரா?''

''வடக்கே படையெடுத்துச் செல்லத் திட்டம்...''

''அதற்கு இங்கே திருநாவலூரில் பாடி வீடமைத்து கோயில் திருப்பணி செய்வானேன்?''

''அதில்தான் இரகசியமே இருக்கிறது. இந்தத் திருக்கோவலூரில் வைதும்பராயன் தங்கியிருக்கிறாரல்லவா? அவருடைய மகள் கல்யாணி காந்தம்போல் இளவரசரை இழுத்திருக்கிறாள்...''

''ஓகோ! நல்ல ஏற்பாடுதான் கல்யாணி தேவியைச் சோழ இளவரசருக்கு மணம் புரிந்து கொடுத்து திருக்கோவலூரை என்றென்றும் நிலையாக அடைய முடிவு செய்து விட்டாரோ வைதும்பராயன்?''

''வைதும்பராயனுக்கு மற்றொரு சங்கடமும் இருக்கிறது. கங்க நாட்டில் அவனுடைய நண்பன் பூதூகன் செல்வாக்குப் பெற்றுவிட்டான். தன் மகளைப் பூதூகனுக்கு மணம் புரிந்து கொடுத்துவிட வேண்டும் என்பது வைதும்பனின் எண்ணம்...''

அதற்குமேல் இராஜாதித்தன் மரத்தின் மறைவில் இருந்து, அங்கு அவர்கள் பேசுவதைக் கேட்கவில்லை. கேட்டிருந்தால் ஒருவேளை தன் திட்டத்தை மாற்றிக் கொண்டிருப்பானோ... என்னவோ?

∴ ∴ ∴

கல்யாணி தேவியின் உருவம் இராஜாதித்தனின் கண்ணை விட்ட அகல மறுத்தது. 'கண்டவர் உள்ளத்தைக் கவரும் அந்த எழில் வடிவத்தில் தன் நண்பன் குமரனும் ஒருவேளை மயங்கி விட்டானோ? அதனால்தான் திருக்கோவலூர் மாளிகையில் தங்கி, அங்கு சூழ்ச்சி செய்து பேச வரப் போகிறவர்களைக் கண்டு அறிந்து வருவதாகத் தெரிவித்துத் தங்கிவிட்டானோ?''

இராஜாதித்தனுக்கு உறக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு படுத்தான். 'கங்க நாட்டுப் பூதூகனுக்குத் தன் மகளை வைதும்பன் கொடுக்க நினைக்கிறான். குமரனோ, தஞ்சையில் அவனுக்காகக் காத்திருக்கும் அநுபமாவை மறந்து இங்கே கல்யாணியின் கடைக்கண் பார்வைக்குத் துடிக்கிறான். நான் நினைத்தால்... ஒரு வார்த்தை கூறினால்... கல்யாணி தேவியை நான் அடைய முடியாதா?''

''வேண்டாம். இப்போது திருமணம் என்ற பேச்சே வேண்டாம். வீரமாதேவிக்கு மறுவாழ்வு கொடுத்து விட்டுத்தான் மணம் என்ற பேச்சு!''

∴ ∴ ∴

இராஜாதித்தன் விடியும் வரை புரண்டு படுத்துக் கொண்டிருந்தான். வீரமாதேவியும், கல்யாணியும் மாறி மாறி அவன் நினைவில் வந்து போய்க் கொண்டிருந்தனர். கல்யாணி அழகிதான்; ஆனால் அவளுடைய தந்தையோ, தன் குணத்திற்கு ஒத்து வரமாட்டாரே. சோழ நாட்டை மதிக்காத இடத்திலிருந்து பெண் எப்படிக் கொள்வது? நட்பு முறையில் நடக்காது. போர் ஒன்றுதான் வழி.''

இவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கும்போதே இராஜாதித்தனை உறக்கம் வந்து சூழ்ந்து கொண்டது. காலை இளங்காற்று அவன் மேனியை இதமாக அணைத்தது. காலையில் அவனை எழுப்ப வரும் பணியாட்கள் வழக்கத்துக்கு மாறாக இளவரசர் அயர்ந்து உறங்குவதைக் கண்டு திகைத்து நின்றனர். இளவரசர் தங்கியிருந்த இடத்திற்கு வெளியே இளவரசரைக் காண ஒற்றர்கள் சிலர் காத்திருந்தனர். ஒருவருக்காவது இளவரசரை எழுப்பும் துணிவில்லை.

வழக்கம்போல் 'கிணிங் கிணிங்' என்ற சிற்றுளிகளின் ஒலி எங்கும் கேட்க ஆரம்பித்துவிட்டது!

இராஜாதித்தன் செவிகளில் சதங்கை ஒலிக்க இளம் பெண்ணொருத்தி நடந்து வருவதுபோன்றே அது கேட்டது. காற்று அடிப்பதால் அசையும் மரங்கள் ஏற்படுத்தும் சலசலப்பு இளம் பெண் ஒருத்தி மெல்லச் சிரிப்பதுபோல் தோன்றியது. இராஜாதித்தன் துயில் மெல்லக் கலைந்தது.

வெள்ளங்குமரன் திருக்கோவலூரிலிருந்து விரைந்து திரும்பி வந்திருந்தான். அவனிடம் பரபரப்பு மிகுந்து காணப்பட்டது.

இளவரசர் இராஜாதித்தன் இன்னும் உறங்கிக் கொண்டிருப்பது அவனுக்கு வியப்பை அளித்தது. அருகே இருந்தவர்களிடம் ''முதல் நாள் இரவு இளவரசர் நீண்ட நேரம் கண் விழித்திருந்தாரா?'' என்று கேட்டான்.

வெளியே எங்கோ உலவச் சென்றதாகவும், பிறகு வந்து படுத்துவிட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். உறங்காமல் பற்பல இன்ப நினைவுகளில் இளவரசர் திளைத்திருந்தது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

குமரன் இளவரசரின் படுக்கை அருகே அமர்ந்து, மெல்ல அவர் கன்னங்களைத் தடவினான். குமரனது கரத்தின் சில்லென்ற உணர்ச்சி, இராஜாதித்தனைத் துள்ளியெழச் செய்தது.

''யார், குமரனா? எப்போது வந்தாய்?'' என்று இராஜாதித்தன் கேட்டான்.

‘‘இப்போதுதான் வந்து கொண்டே இருக்கிறேன். தப்பியது புனர்வாழ்வுதான்’’ என்றான் குமரன்.

இராஜாதித்தன் மெல்ல நகைத்தவாறு, ‘‘ஏன், வைதும்பராயன் மகள் மிகப் பொல்லாதவளாக இருக்கிறாளோ?’’ என்று கேட்டான்.

இராஜாதித்தன் கேட்கும் கேள்வியில் புதைந்துள்ள வேறு அர்த்தம் குமரனுக்கு உடனே விளங்கவில்லை.

‘‘இளவரசி பார்வைக்குப் பொல்லாதவளாக இருந்தாலும் உள்ளத்தில் நல்ல குணமுடையவள்.’’

‘‘ஓகோ! இளவரசியின் குணத்தை நன்றாகப் புரிந்து கொண்டுவிட்டாய் போலிருக்கிறதே?’’

‘‘திருக்கோவலூர் ஒரு மர்மமான கோட்டை. வைதும்பராயன் மிகவும் மர்மமானவன். அவனது நடவடிக்கைகளை ஒருவரும் அறிய முடியவில்லை. அவன் மாளிகையில் நேற்றுக் கூடிய பல நாட்டுப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் நடைபெற்றவைகளை இந்தக் காதால் கேட்கும்போது, என் உடல் சிலிர்த்தது. நான் மறைந்திருந்து கேட்கும் வாய்ப்பு கிடைத்திராவிடில், அவர்களுடைய சதித்திட்டத்தை அறிந்து கொண்டிருக்கவே, முடியாது மறைந்திருக்க எனக்கு இளவரசி கல்யாணிதேவி உதவியதை நான் மறக்கவே மாட்டேன்...’’

‘‘ஓகோ! கல்யாணிதேவி தன் அந்தப்புரத்திலே உனக்குத் தங்க இடம் கொடுத்தாளோ?’’

‘‘அந்தப்புரத்தில், தனது அந்தரங்கப் படுக்கை அறையில், உக்ராண உள்ளில், பளிங்கு மண்டபத்தில், கொடி வீட்டில் பழைய பண்டங்களைப் போட்டு வைக்கும் இடத்தில் எல்லாம் நான் மறைந்து இருக்க உதவினார்கள். இல்லாவிடில், உங்கள் எதிரே குமரன் வந்து நின்றிருக்க மாட்டான். கோட்டை மதிலின்மேல் குமரனுடைய உடல் வெட்டப்பட்டுக் கண்ட துண்டமாக்கப்பட்டு, கழுகுக்கு உணவாகப் போடப் பட்டிருக்கும்...’’

குமரன் கூறியவற்றை இராஜாதித்தன் கேட்டுக் கொண்டானோ இல்லையோ, குமரனது விழிகளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவன் சட்டென்று, ‘‘ஹூம் கல்யாணி தேவியின் இதயத்திலும் மறைந்து வாழ இடம் கிடைத்தது இல்லையா?’’ என்று கேட்டான்.

குமரனுக்கு இளவரசரின் கேள்வியின் உட்பொருள் புரிந்து விட்டது. கல்யாணிதேவி, அவன் சித்தத்தில் ஒரு சலனத்தை

ஏற்படுத்தியது உண்மைதான். ''மிகவும் சிரமப்பட்டுத் தனது புலனை அடக்கி, வந்த காரியத்தை முடித்துச் செல்லும் கடமை உணர்ச்சிக்காக அங்கே மறைந்திருந்த நாட்களில் அவன் கட்டுப்பாடு செய்து கொண்டதை இளவரசர் அறிவாரோ?'' இராஜாதித்தன் கேள்விக்கு வேடிக்கையாகவே மறுமொழி கூற முனைந்தான் குமரன்.

''ஆமாம், இளவரசியின் இதய பீடத்தில் மறைந்து கொள்ளாமலேயே வாழ இடம் கிடைத்தது என்றுதான் நினைக்கிறேன்...'' என்று நகைத்தவாறு கூறினான்.

இராஜாதித்தனுக்குப் பொறாமைத் தீ மெல்லப் புகைய ஆரம்பித்தது.

''இன்னும் சில நாட்கள் திருக்கோவலூரில் மறைந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் உனக்கு இருந்ததல்லவா?''

''இன்னும் ஓரிரு நாட்கள் இருந்திருந்தால் எவ்வளவோ விளைவுகளைக் கண்டிருக்கலாம்...''

''குமரா...'' என்று இராஜாதித்தன் கூவினான்.

''நாம் திருநாவலூரில் வந்து பாடி வீடமைத்துத் திருப்பணிகளைச் செய்து கொண்டு தங்கியிருப்பது இளவரசியின் இதயத்தில் இடம் பிடிப்பதற்காகவா? நம்மைச் சுற்றி சூழ்ந்திருக்கும் அபாயத்தினின்று எப்படி மீள்வது, சூழ்ச்சிகளை எப்படி நசுக்குவது என்பதில் முனைந்திருக்கும் போது, நீ இளவரசியின் இதயத்தில் இடம் பிடிக்கப் பார்க்கிறாய் இல்லையா?'' என்று ஆத்திரக் குரலில் கூறியபோது குமரன் திடுக்கிட்டுவிட்டான். என்றாலும், இளவரசரிடம் மேலும் வேடிக்கையாகப் பேச ஏனோ அவன் விரும்பினான்.

''இடத்தை நாமாகத் தேடிச் செல்வதில்லை; இடம் கிடைக்கும்போது அதை அடைவதில் தவறில்லையல்லவா?'' என்று குமரன் கேட்டான்.

இராஜாதித்தனின் ஆத்திரம் உச்ச நிலையை அடைந்தது. ''குமரா! நம் நாட்டின் பிடி மண்ணைக்கூட மாற்றான் கவரவிடக் கூடாது என்று நாம் படைகளுடன் இங்கு வந்து நிற்கும்போது, நீ வேறு ஒருவரை உன் உள்ளத்தில் குடியமர்த்தப் பார்க்கிறாயா?'' என்று சீறினான்.

''இளவரசே! என்ன கூறுகிறீர்கள்? திருக்கோவலூர்க் கோட்டைக்குள் நடைபெற்றது என்னவென்று தங்களுக்குத் தெரியுமா?'' என்று குமரன் கேட்டான் குரலில் அழுத்தம் தொனிக்க.

எனக்கு எப்படித் தெரியும்? நீ சொன்னால்தானே நான் அறிந்து கொள்வேன். வைதும்பராயன் மகள் உன்னுடன் என்ன பேசினாள் என்பதை நீ உள்ளது உள்ளபடி சொல்வாயா? காதல் போதை நட்பை மறைத்துவிடும்; நாட்டையும் மறந்துவிடச் செய்யும்.''

''ஒரு நாளும் இல்லை; காதலா; நாடா எது வேண்டுமென்றால், உண்மை வீரன் நாட்டைத்தான் நாடுவான். சிவ பக்தர் வேடம் பூண்ட சிவசேகர பண்டிதர் தன் ஆருயிர்க் காதலியை மறந்து நாட்டைக் காக்கச் சபதம் பூண்டார். அவரைவிட நான் குறைந்துவிட்டேனா? என்னைத் தவறாக மதிப்பிட்டு விட்டீர்களே. இந்த வாளின் ஆணையாகக் கூறுகிறேன். எனக்கு நாடுதான் முக்கியம். சேர நாட்டில் பிறந்தவன் என்றாலும் நான் சோழ நாட்டை இந்த வாளின் வலிமையினால் காப்பாற்றுவதாகச் சபதமிட்டிருக்கிறேன்.

''திருக்கோவலூர் கோட்டையில் நேற்று இரவு நடைபெற்ற பெரும் சதித்திட்டத்தைக் கேட்டறிந்த பிறகும் நான் வைதும்பராயனின் மகளின் கண் வீச்சுக்கு அடிமையாகிவிட்டால் என்னைப் போன்ற துரோகி வேறு இருக்கவே முடியாது. என்னைக் கழுவிலேற்றினாலும் அப்போது தகும்...''

குமரனின் பேச்சு கொஞ்சங் கொஞ்சமாகச் சூடு கண்டது. அவனுடைய குரலில் ஒலித்த நாட்டுப் பற்று, இராஜாதித்தனின் மனத்தை இளக வைத்தது.

''குமரா'' என்று உணர்ச்சி மிகுதியால் கூவிய இராஜாதித்தன். குமரனைக் கட்டித் தழுவிக் கொண்டு, ''என் மனத்தில் தோன்றியதை ஒளிக்காமல் கூறிவிட்டேன். அன்று கல்யாணி தேவியைப் பார்த்ததிலிருந்து என் மனத்தில் சஞ்சல மேற்பட்டுவிட்டது. திருக்கோவலூரில் அவளுடன் நீ நெருங்கிப் பழகியது, எனக்குப் பொறாமையை ஊட்டியது.

அதனால்தான் நான் இவ்வாறு பேசினேன். எனக்கு ஒன்று தோன்றுகிறது! இப்போதே திருக்கோவலூர்க் கோட்டையைச் சூழ்ந்து கொள்வோம். வைதும்பராயன் எதிர்க்க முடியாமல் திகைப்பான். சமாதானத்துக்கு வருவான். 'கல்யாணி தேவியை எங்கள் இளவரசருக்கு மணம் புரிந்து கொடுத்தால் சமாதானம்! இல்லாவிடில் கோட்டை தரைமட்டம்' என்று நீ தூது செல்ல வேண்டும். வைதும்பனால் அதற்கு மறுபேச்சுப் பேச முடியுமா? எப்படி என் யோசனை?'' என்று கேட்டான் இராஜாதித்தன்.

குமரன் முகத்தில் தோன்றிய உணர்ச்சி, இளவரசர் கூறியதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைத் தெரியப்படுத்தியது!



அத்தியாயம் 25

கல் ஒன்று, கனி இரண்டு!

பொழுது எப்பொழுது விடியும் என்று காத்திருந்தாள் கல்யாணி தேவி. பஞ்சணை மெத்தையில் படுத்தால் உறக்கம் வந்து கண்ணை மூடிக் கொள்ளும் என்ற அச்சத்தினால் அவள் உறங்காது சாளரத்தின் அருகிலேயே உட்கார்ந்து கொண்டு கோட்டை வாயிலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தீவர்த்தியின் வெளிச்சத்துடன் கோட்டைக் காவலர்கள் உலவுவது கொள்ளி வாய்ப் பேய்கள் நடமாடுவதுபோல அச்சத்தை ஏற்படுத்தியது. அதைப் போன்ற பலத்த காவல் இதற்கு முன்பு திருக்கோவலூர் கோட்டைக்கு ஏற்பட்டதில்லை.

குமரன் மாளிகையில் மறைந்திருந்து, பிறகு மந்திராலோசனை நடக்குமிடம் சென்று ஒருவரும் காணாதவாறு மறைந்திருந்து, அங்கு நடைபெற்ற சதிச் சம்பவங்களைக் கண்டறிந்தான். வைதும்பராயனுக்குக் கடைசியில்தான் இந்தச் சம்பவம் தெரிய வந்தது. அதிலும் குமரன் ஒளிந்திருந்து பார்த்தான் என்பது தெரியாது. யாரோ ஒரு வேற்று நாட்டான் மாளிகையில் நடமாடுகிறான் என்பது தான் அவனுக்குத் தெரியும். கோட்டைக் கதவுகளை மூடி, மிகவும் பலமான காவலிட்டு அந்த அந்நியனைச் சிறைப்பிடிக்க உத்தரவிட்டான். ஆனால், குமரனோ வந்த வழியே திரும்பவும் தப்பி ஓடிவிட்டான்.

இராஜாதித்தனைக் கோட்டைக்கு வெளியே கொண்டுவிட்ட பிறகு, குமரன் தன் குதிரையை மறைவான இடம் ஒன்றில் கட்டிவிட்டு விரைவாக நடந்து வந்தான் கல்யாணி தேவியின் தோழி மயிலம்மாள் முன்பே தன்னிடம் தெரிவித்திருந்தவாறு கோட்டைக்குள் நுழைய இரகசிய வழியொன்று மேற்குப் புறத்து மதில் சுவரருகே இருப்பதைக் கண்டறிந்து அதன் வழியாக விஷ ஜந்துக்களுக்கும் அஞ்சாமல் நுழைந்து மயிலம்மாளின் வீட்டை வந்தடைந்தான். அன்று பகல் முழுவதும் அவன் அங்கு மறைந்திருந்து இருட்டிய பிறகு அந்தப்புரத்திற்கு வந்து சேர்ந்தான்.

குமரனைக் கண்டதும் கல்யாணி தேவிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. தான் செய்யும் காரியம் தன் பிறந்த நாட்டிற்கு விரோதமானது என்று தெரிந்துங்கூட அவளுடைய உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் ஒரு புதிய சக்தியும், அதனால் ஏற்பட்ட உணர்ச்சியும், உணர்ச்சி விளைவித்த மாறுதலும் சோழ நாட்டவர்களுக்கு உதவ வேண்டும் என்ற மனப் பான்மையை அளித்தன.

காதல் நிலை அவளுக்குப் புதியது. இதுவரை குழந்தைபோல் விளையாட்டிலும், தோழிகளுடன் கேலிப் பேச்சிலும், பெற்றோர்களின் வாஞ்சையின் அரவணைப்பிலும் காலம் கழித்த அவளால் ஆடவரின் மோகன ரூபம் இதயத்தில் சலனத்தை ஏற்படுத்தவல்லது என்பதை நினைக்கக்கூட முடியவில்லை. அதனால் முதன் முதலில் திருக்கோவலூர்க் கோட்டைக்கு வந்த குமரனைக் கண்டதும் பரபரப்படைந்தாள். பிறகு குமரனுடன் இராஜாதித்தனும் வந்தவுடன் அவளுக்கு இன்னது செய்வதென்றே தெரியவில்லை.

சோழ நாட்டின் இளவரசரான இராஜாதித்தனிடம் சோழ நாடு முழுவதையும் சுற்றிப் பார்த்து மகிழ அனுமதி கேட்கலாம் என நினைத்தாளே தவிர, அவரது கரம் பிடித்துச் சோழ நாட்டு அரியணையில் அமருவதற்கு வழி வகை தேடிக் கொள்ளும் எண்ணம் உதிக்கவில்லை.

ஆனால், குமரனுடைய பார்வையில் அப்படி என்ன காந்த சக்தி இருக்கிறது? அவனுடைய கம்பீரத் தோற்றமும் மேனி அழகும், இளமையும், வீரமும் கலந்த முகமும் அவளுள்ளத்தில் புரிய முடியாப் பரபரப்பை ஏற்படுத்தின. மயிலம்மாள் இப்போது அவளைப் பார்த்துப் பொருள் நிறைந்த புன்னகைப் புரிவது கல்யாணி தேவியின் உடலைச் சிலிர்க்க வைத்தது.

''இங்கே வந்த துறவி கூறியது எவ்வளவு உண்மையாகி விட்டது பார்த்தீர்களா? திருக்கோவலூர் தெய்வீக மணத்துடன் திகழப் போகிறது என்பது உண்மையாவதற்கு ஏதாவது சூசகம் ஏற்பட வேண்டாமா? திருக்கோவில் நிறைந்த சோழ நாட்டவர்கள் திருக்கோவலூர் வரப் போவதைக் குறித்துத் துறவி ஆரூடம் கூறியிருக்கலாம்'' என்று கூறிவிட்டு மயிலம்மாள் கல்யாணி தேவியின் முகத்தைக் கடைக்கண்ணால் கூர்ந்து நோக்கினாள். பிறகு அன்றெல்லாம் அந்த இளங்காளைகள் இருவரைப் பற்றியும் புகழ்ந்த வாறிருந்தாள்.

குமரனுக்கு அன்று மறைந்திருக்க இடம் கொடுக்க வேண்டும் என்று மயிலம்மாள் கூறிக் கோட்டைக்குள் வரும் இரகசிய வழியைத் தெரிவித்த பிறகுதான் கல்யாணிதேவிக்கு மயிலம்மாளின் உள்ளம் புரிந்தது. குமரன் மீது மயிலம்மாளுக்கு அன்பு ஏற்பட்டுவிட்டதால் தானே, இவ்வளவு துணிவுடன் செயலாற்ற முனைந்துவிட்டாள் என்று எண்ணினாள்.

தன் உள்ளம்... அவளுக்குத் தன் உள்ளத்தை இன்னும் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் கண் எதிரே சோழ நாட்டு இளவரசர் இராஜாதித்தனும், அவரது தோழர் குமரனும் கம்பீரமாக நின்றனர். இனி அவளுடைய பொறுப்பு யாரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்பதுதான்.

'அவர்கள் இருவரும் ஏன் திருக்கோவலூருக்கு வந்தார்கள்? என் அமைதியைக் கெடுக்கத்தான் வந்தார்களோ?' என்று புலம்பினாள் கல்யாணி.

❖ ❖ ❖

மயிலம்மாளின் உதவியுடன் குமரன் மாளிகையில் தங்கியிருக்க முனைந்தபோது கல்யாணிதேவி தன் உள்ளத்தைச் சற்றுத் திடப்படுத்திக் கொண்டாள். ஒருவரும் காண முடியாத மறைவான இடத்தில் குமரனைத் தங்கச் செய்து அவனுக்கு உணவு கொண்டு கொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு அவனுடன் பேச முயன்றாள்; அவனுள்ளம் அறிய முயன்றாள்.

தன்னுடைய காரியம் நிறைவேற வேண்டுமே, அதற்காகக் குமரன் இளவரசியிடம் குழைந்து பேசினான். அவள் கேட்கும் கேள்விகளுக்குச் சலிப்பின்றி மறுமொழி புகன்றான். மெல்லிய எண்ணக் கீற்றின் பின்னால் மறைந்திருக்கும் மகத்தான விஷயங்களை உணரும் சக்தி படைத்தவன்.

''என் மீது மயிலம்மாளுக்குக் காதல்! கல்யாணிதேவியும் அந்தச் சலனம் ஏற்படும் வரம்பில் நிற்கின்றாள். நமக்கு வேண்டியது என்ன? இன்று இரவு வைதும்பராயனின் இரகசியக் கூட்டத்தில் ஏற்படும் முடிவுகளை அறியும் வரையில் இளவரசி என்ன, தேவலோக மடந்தையின் காதல் வலையிலும் விழத் தயார்!'' என்ற முடிவில் இருந்தான் அவன்.

❖ ❖ ❖

மறுநாள் முழுவதும் திருக்கோவலூர் அமளித்துமளிப் பட்டது. வைதும்பன் தன்னைக் காணவருபவர் மீதெல்லாம் சீறி விழுந்தான். பாதுகாவல் புரிபவர்களை இடம் மாற்றினான்.

கங்க நாட்டவரும், இரட்டர்கள் நாட்டுப் பிரதிநிதியும், சிவசேகர பண்டிதரும், பாண்டிநாட்டுத் தூதுவனும் கூடிப் பேசியவற்றைச் சோழ நாட்டைச் சேர்ந்த குமரன் மறைந்திருந்து கேட்டறிந்துவிட்டான் என்ற செய்தி வைதும்பனுக்குத் தெரியாது. ஆனால், யாரோ ஒரு வேற்று நாட்டு ஒற்றன் மாளிகையில் மறைந்திருந்து தப்பிவிட்டான் எனும் செய்தி வரையில்தான் அவன் அறிவான். கோட்டைக்குப் பலத்த காவலிட்டுவிட்டு இரகசியமாக வந்த ஒற்றன் யாராக இருக்கும் என ஆராயலானான். தாங்கள் இரகசியமாகப் பேசியதை அந்த ஒற்றன் அறிந்து கொள்ளவில்லை என்பது வரை நிம்மதியடைந்த வைதும்பன் பெருமூச்சு ஒன்று விட்டான். அதனால் பொழுது புலர்ந்து வெகுநேரம் வரை நிம்மதியாக உறங்கினான்.

பொழுது புலர்ந்த உடனேயே, கல்யாணி அலங்கரித்துக் கொண்டு தன் தந்தையைக் காணச் சென்றாள். இரவு தூக்கம் இல்லாமல் விழித்திருந்ததால், கண்களில் எரிச்சல் மிகுந்தது. ஆனால், உள்ளத்திற்குள்ளே ஏற்பட்ட ஒருவிதக் குதூகலம் அவளுடைய சோர்வைப் போக்கின.

''இரவெல்லாம் தங்கள் தந்தை விழித்திருந்து, கோட்டைக்குள் மறைவாக வந்த ஒற்றன் யாராக இருக்கும் என்பதைப் பற்றிச் சிந்தித்த வண்ணம் இருந்தார். அவனைக் கண்டுபிடிக்கக் கட்டளையிட்டுவிட்டு இப்போதுதான் படுக்கைக்குச் சென்றார். அவரை எழுப்பினால் எங்கள் கதி என்ன ஆகுமோ!'' என்று அச்சத்துடன் கூறினார் மெய்க்காவலர். அதுகேட்டுக் கல்யாணி தேவி திடுக்கிட்டாள்.

''ஒற்றன் யார் என்று தெரிந்து விட்டதா?'' என்று கல்யாணி நடுக்கத்துடன் கேட்டாள். அவர்கள் கண்டுபிடித்திருந்தால் முதல் பலியாகத் தன்னைக் கோட்டைக் கழுகுகட்கு இரையாக்கி விடுவார். மகள் என்றுகூடப் பார்க்கமாட்டார். அப்படி அவர் கரத்தால் இறப்பதைவிட இப்போதே தப்பிச் சென்று சோழ இளவரசரிடம் அடைக்கலம் புகுந்துவிடலாம் என்று எண்ணி அங்கிருந்து புறப்பட ஆயத்தமானாள்.

''ஒற்றனின் திட்டம் பலிக்கவில்லை. பாவம், உயிர் தப்பிப் போனானே, அது அவன் முன்னோர் செய்த புண்ணியம்'' என்று மெய்க்காவலன் கூறினான்.

'பிழைத்தோம்' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு மார்பை அமுத்திக் கொண்டாள் கல்யாணி. மேலும் அவனிடமிருந்து செய்தி அறிய விரும்பி ''ஒற்றன் எப்படிக் கோட்டைக்குள் வந்தானாம்?'' என்று ஒன்றும் அறியாதவள் போல் கேட்டாள்.

''முப்பெரும் நாட்டுப் பிரதிநிதிகள் கூடி, இரகசிய ஆலோசனை செய்யும் இடத்தில் மறைந்து மறைந்து அவன் சென்றபோது மாளிகைக் காவல் வீரன் ஒருவன் கண்டுவிட்டான். அவனைப் பிடிக்க முயன்றும் இயலவில்லை. உடனே கோட்டைக் கதவுகள் மூடப்பட்டன. ஓர் இடம் விடாமல் சோதனையிடப்பட்டது. ஆனால், அந்த ஒற்றனைக் காண வில்லை.

''எல்லா இடங்களையும் சோதனை போட்டீர்களா! இவ்வளவு பரபரப்பு நடந்திருக்கும் போது எனக்கு ஒன்றுமே தெரியாமல் போய்விட்டதே!''

''தேவி தங்களுடைய அந்தப் புரத்தையும் சோதனையிட அரசர் கட்டளையிட்டார்...''

''என் மீது அரசருக்குச் சந்தேகமா?''

''அப்படியில்லை, தேவி! ஓடி ஒளிய மிகவும் பாதுகாப்பான இடம் அந்தப்புரம் என்று எண்ணியிருக்கலாமல்லவா? நான்தான் மன்னரைத் தடுத்துவிட்டேன்.''

''அந்தப்புரத்திற்குள் வர மாட்டான் என்று தாங்கள் எப்படித் திட்டமாக முடிவு செய்தீர்கள்?''

''மயிலம்மாள் தங்கள் தோழி இருக்கிறாளே! அவள் அந்தப்புரத்து வாயிலில் விழிப்புடன் இருந்திருக்கிறாள். அவள் பார்வையிலிருந்து தப்பவே முடியாது. அதனால் நான் உறுதியுடன் நம்பினேன். மேலும் தங்கள் மாளிகைக்குப் பலத்த காவல் உண்டு. அதைத் தவிர இரகசியமாகக் கண்காணிக்கவும் காவலர்கள் இருக்கிறார்கள்.''

மெய்க்காவலர் இவ்வாறு கூறியதைக் கேட்டுத் திடுக்கிட்டாள் கல்யாணி. 'இவ்வளவு காவல் இருக்கும்போது மயிலம்மாள் குமரனை எவ்வாறு அந்தப்புரத்திற்குள் அழைத்து வந்தாள். பிறகு எவ்வாறு தப்பி ஓட வழி செய்தாள்? குமரன் மீது அவளுக்கு ஏற்பட்டிருக்கும் தணியாத காதல் இவ்வாறு பேருதவி செய்யுமாறு தூண்டியிருக்குமோ?''

''அப்புறம்...?'' என்று கேட்டாள் கல்யாணி, தன் பரபரப்பை மறைத்துக் கொள்ள.

''அப்புறம் என்ன? இனி மிகவும் கவனத்துடன் இருக்க மாட்டோமா? மேலும் போர் மூளும் அபாயகரமான சமயத்தில்...'' என்று கூறிய மெய்க்காவலர் தன் உதட்டை மெல்லக் கடித்துக் கொண்டார்.

''யாருக்கும் யாருக்கும் யுத்தம்?''

யுத்தம் ஏற்படப் போகிறது என்ற முடிவை ரகசியமாக வைத்திருக்க வேண்டியிருக்க, அதை இவ்வாறு தன் வாயால் வெளியிட்டு விட்டோமே என்று மெய்க்காவலர் அஞ்சினார்.

''ஆமாம் மகளே! யுத்தம் ஏற்படப் போகிறது. பயங்கரமான யுத்தம். யுகப் பிரளயம் போன்ற யுத்தம் பலருடைய தலைவிதியையே மாற்றப் போகிற யுத்தம் எருதும் புலியும் மோதப் போகின்றன. சிங்கமும் வராஹமும் மோதப் போகின்றன...'' என்ற கம்பீரமான குரல் கேட்டு இருவரும் திடுக்கிட்டனர்.

வைதும்பராயன் விழித்தெழுந்து வந்து மகள் எதிரே புன்முறுவலுடன் நின்றான்.

''புலி யார்? எருது யார் அப்பா?'' என்று கல்யாணிதேவி கேட்டாள், தந்தையின் மார்பிலே கலைந்திருந்த முத்து மாலையைச் சரி செய்து கொண்டே.

வைதும்பனின் சிரிப்பு பயங்கரமாக எதிரொலித்தது. ''மகளே! யார் புலியாக இருந்தால் என்ன? மாபெரும் யுத்தத்தை நாம் கண்ணால் காணப் போகிறோம். நமக்கு வாணகப்பாடி நாடு கிடைக்கப் போகிறது. உன்னை மணக்கப் போகிறவனுக்கு மீண்டும் அதைச் சீதனமாகக் கொடுக்கப் போகிறேன். ஒரு வேளை நமக்குப் பரிசாகக் கொடுக்கப் போகிறவருக்கே அதைத் திரும்பவும் கொடுத்தாலும் கொடுத்துவிடுவேன்'' என்று மகளின் முகத்தில் ஏற்படும் மாறுதல்களைக் கவனித்தவாறு கூறினான் வைதும்பன்!

''வாணகப்பாடி நாடு இப்போது யாரிடமப்பா இருக்கிறது?'' என்று கல்யாணி கேட்டாள்.

''இப்போது கங்க நாட்டவர் வசம் இருக்கிறது. முன்பு கங்க நாட்டவர் சோழர்களின் உயிர் நண்பர். இப்போது என் உதவியை நாடி வந்துவிட்டார்கள். கங்க நாட்டை பூதூகன் நொடியில் கைப்பற்றி விட்டான் என்பது தெரியுமா? அவன் வீரன், திறமைசாலி, தந்திரம் மிகுந்தவன், எல்லாவற்றிற்கும் மேலாகக் கண்ணுக்கு அழகாயிருக்கிறான். எனக்கு வேண்டியது வீரம், திறமை உனக்கு வேண்டியது...'' மெல்லக் கண்களைச் சிமிட்டிய வைதும்பன், ''நேற்று இங்கே பூதூகன் வந்திருந்தான், தெரியுமா?'' என்று கேட்டான்.

'தெரியாது' என்பதற்கு அடையாளமாகக் கல்யாணி தலையை அசைத்தாள்.



அத்தியாயம் 26

புரியாத புதிர்

பராந்தக சோழச் சக்கரவர்த்தியின் புதல்வர்களுள் மிகவும் விரைவாக முடிவெடுத்துச் செயல் ஆற்றக்கூடியவன் இராஜாதித்தன். கோபமும் அதைப்போலவே. எவ்வளவு விரைவில் கோபம் வருகிறதோ, அவ்வளவு விரைவில் அமைதி யோடு, கோபம் மறந்து பேச முற்படுவான். அரிஞ்சயனுக்கு அவ்வளவு விரைவில் கோபம் வராது. எதையும் உடனே முடிவு எடுத்துச் செய்யமாட்டான்.

ஆனால் கோபமும், ஆத்திரமும் அவனிடம் பிறந்துவிட்டால் சீக்கிரம் மாளாது. தன் சகோதரன் இராஜாதித்தன் மீது மிகுந்த மதிப்புடையவன். பிற்காலத்தில் சோழ அரியணையில் அமரப் போகிறவன் என்பதனால் மட்டுமல்லாமல், இராஜாதித்தனின் இதயத்தையும் உணர்ந்தவன் என்பதால் அன்பும் மதிப்பும் கொண்டிருந்தான்.

தன் தந்தை, திருநாவலூர் அருகே தங்கியிருக்கும் இராஜாதித்தனின் படைகள் போதாவென்றுதான் தன்னையும் ஏற்கச் செல்லுமாறு சொல்கிறார் என்ற எண்ணம் அவனுள் எழுந்து விடை காண முடியாது தவித்தான். ''காரணமில்லாமல் தந்தை கட்டளையிட்டிருக்கமாட்டார்'' என்று சமாதானப்படுத்திக் கொண்டு திருநாவலூர் நோக்கிச் சென்றான்.

பராந்தகச் சக்கரவர்த்தியிடம் பழுவேட்டரையர் கோபமாகப் பேசியது அரிஞ்சயனின் செவிகளில் வீழ்ந்தன. 'போர் மூண்டால் நிச்சயமாகத் தன் உதவி கிடைக்காது என்று அவர் கூறியது அரிஞ்சயன் செவிகளில் விழுந்தது. தன் பாட்டனார் ஒரு முடிவு எடுத்தால் அதை நிறைவேற்றியே தீருவார் என்பதும் அவனுக்குத் தெரியும்.

பழுவேட்டரையர் உதவியில்லாவிடில் எந்தப் போர்க் களங்களிலும் சோழர் படைகள் வெற்றியடையும் என்பது நிச்சயமில்லை. பின், தந்தைக்கும் பாட்டனாருக்கும் சமரசம் ஏற்படுத்துவது எப்படி? இப்போதோ புதிய பிரச்னை. இராஜாதித்தன் தன்னைக் கண்டவுடன் படைகளுடன்

வந்திருக்கும் நோக்கமென்னவென்று வினவினாய்? இராஜாதித்தனோ முன்கோபக்காரன்.

உடனே ஏதாவது கூறிவிடலாம். தனக்கும் கோபம் வரலாம். அல்லது சக்கரவர்த்தியின் உத்தரவை எடுத்து அவனிடம் காட்ட நேரிடலாம். இராஜாதித்தனுக்குத் தன் தந்தையின் மீதே வெறுப்பு ஏற்படலாம். இப்படி அரச குடும்பத்திற்கு மனத்தாங்கலும் பிளவும் வந்தால் எதிரிகளுக்குத்தானே கொண்டாட்டம்?

அரிஞ்சயனை இராஜாதித்தன் முக மலர்ச்சியுடன் வரவேற்க வில்லை. குமரனும், அருகே இருந்தான். சோழ சக்கரவர்த்தி, அன்னை இவர்களுடைய உடல்நலம் குறித்து விசாரித்தான். வீரமாதேவியின் சௌக்கியம் குறித்தும் வினவினான். வீரமாதேவியைக் குறித்து அரிஞ்சயன் கூறிய மறுமொழி, இராஜாதித்தனின் உள்ளத்தில் ஆத்திரத்தை மெல்ல மூட்டியது.

''தம்பி அரிஞ்சயா, வீரமாதேவிக்கு மறுவாழ்வு அளிக்கத் தானே இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம். பகலிலும் வெயிலிலும் தக்க உறைவிட வசதி இன்றி, வீரர்களை வாடச் செய்கிறோம். என் வலிமை போதாதென்றா, என் மீது நம்பிக்கை இல்லையென்றா உன்னையும் அனுப்பியிருக்கிறார் சக்கரவர்த்தி'' என்று இராஜாதித்தன் கூறும்போது அரிஞ்சயன் குறுக்கிட்டான்.

''அண்ணா அப்படி நினைக்காதீர்கள். அவசரப்பட்டுத் தாங்கள் வடக்கு நோக்கிப் படைகளுடன் சென்றுவிடப் போகிறீர்கள் என்பதற்காகவே தந்தை என்னை அனுப்பினார்.''

''சக்கரவர்த்தி பயந்துவிட்டார். அவரது மனத்தைத் தான் அந்தத் துறவி நன்றாகக் கலைத்துவிட்டாரே'' என்றான் குமரன்!

அரிஞ்சயன் இராஜாதித்தன் பக்கம் திரும்பி, ''அண்ணா, உங்கள் நண்பர் என்பதால் குமரனை ஒன்றும் செய்யாமல் விடுகிறேன். சக்கரவர்த்திகளின் போர்த் தந்திரத்தைக் குறை சொல்லுமளவுக்கு உங்கள் சலுகையை இவன் பயன் படுத்துகிறான்'' என்றான்.

இராஜாதித்தன் புன்னகையுடன், ''தம்பி அரிஞ்சயா, குமரன் ஒரு நாளும் மரியாதைக் குறைவான வார்த்தைகளைக் கூறமாட்டான்! அதிலும், மைத்துனனான உன்னிடம் அவ்வாறு பேசுவானா?'' என்றான்.

தன்னை விட்டுக் கொடுக்காமல் இளவரசர் பேசியது கண்டு குமரனுக்கு உற்சாகம் ஏற்பட்டது. அரிஞ்சயனை நோக்கி, ''இளவரசே! சோழ நாட்டுச் சக்கரவர்த்திகளிடம் தேனொழுகப் பேசிய அதே துறவிதான் பெரும் சதி செய்து சோழ சாம்ராஜ்யத்தையே ஒழித்துச் சாம்பலாக்கப் பார்க்கிறார். தாம்

இங்கே அமைதியாக இருக்கக்கூடாது என்றுதான் சொல்ல விரும்புகிறேன். நல்லவேளையாக நீங்களும் வந்து சேர்ந்தீர்கள். நீங்கள் கங்க நாட்டையும், இளவரசர் மான்ய கேடத்தையும், நான் திருக்கோவிலூர் கோட்டையையும் சூழ்ந்து அவர்களை முளையிலேயே கிள்ளிவிடுவோம்'' என்றான் உணர்ச்சி மிகுதியால்.

''இப்படி நடக்கக்கூடாது என்று சக்கரவர்த்தி எச்சரித்துள்ளார்'' என்று அரிஞ்சயன் குறுக்கிட்டுக் கூறினான்.

அவன் சொல்லி முடிப்பதற்குள், ''முடியாது, முடியாது! சக்கரவர்த்திகளின் கட்டளைக்குக் கீழ்ப்படிய முடியாது. அதனால் ஏற்படும் விளைவுகளை நான் ஏற்கச் சித்தமாயிருக்கிறேன். சிறைச்சாலையிலிட்டாலும், மகிழ்ச்சியுடன் ஏற்பேன். ஆனால், அதற்கு முன்பு வைதும்பனைத் தலை குனிய வைப்பேன். இரட்டர்கள் கொட்டம் ஒடுக்குவேன். பூதுகனைப் பணிந்து ஓடச் செய்வேன். தம்பி! நீ பேசாமல் வந்த வழியைப் பார்த்துச் செல். என் செயலில் குறுக்கிடாதே. நான் இராட்டிர கூடர்களை வென்று, மான்யகேடத்தில் புலிக்கொடியைப் பறக்க விடாமல் திரும்பமாட்டேன். சோழ நாட்டை அழிக்கச் சதி செய்யும் விரோதிகளுக்கு இடம் கொடுத்த வைதும்பராயனைத் தலைகுனிய வைத்து, சக்கரவர்த்திகளின் முன்னிலையில் கொண்டு நிறுத்தாமல் தஞ்சை வரமாட்டேன்...'' என்று கம்பீரமாகக் கூறினான்!

இராஜாதித்தன் வெறி பிடித்தவன்போல் இவ்வாறு பேசுவது குமரனுக்குச் சற்று அச்சத்தையே அளித்தது. 'சகோதரர்கள் இருவரும் மோதிக்கொண்டு எதிராளிக்கு எளிதாக்கிவிடப் போகிறார்களே' என்ற கவலை எற்பட்டது.

ஆனால், அரிஞ்சயன் தன் குரலைத் தாழ்த்திக் கொண்டான். ''அண்ணா, தங்களுடன் வாதிட்டு வேதனையளிக்க நான் இங்கே வரவில்லை. வெள்ளங்குமரன் கூறுவதுபோல் முப்புறமும் ஆபத்து சூழ்ந்திருக்கிறது என்பது எனக்கே தெரியாதா? சக்கரவர்த்திகள் அறியாமல் இருப்பாரா என்பது என் கேள்வி. எதற்கும், சக்கரவர்த்திகளின் பேச்சுக்கு மதிப்புக் கொடுப்பது நல்லதல்லவா? இப்போதைய நிலையைச் சக்கரவர்த்திக்கு எடுத்துச் சொல்லி, அவரது உத்தரவு பெற்று மேலே நடக்க வேண்டியதைச் செய்வோம்.''

அரிஞ்சயன் கூறுவது நியாயமாகத் தோன்றியது. ''சரி சக்கரவர்த்திகளிடம் மிக முக்கியமான அவசரச் செய்தியை யார் தெரிவிப்பது?'' என்று கேட்டான் இராஜாதித்தன்.

''படைகளுக்குத் தலைமை தாங்கி வந்திருக்கிறேன். மேலும் தங்களுக்கு மிக அருகே பாடி வீடமைத்து இருக்க வேண்டும்

என்பது சக்கரவர்த்திகள் கட்டளை. அதை மீறி நான் செல்வது தகாது. தாங்களும் இங்கிருந்து மீண்டும் தஞ்சைக்குச் செல்வது இயலாது..." என்று அரிஞ்சயன் கூறும்போது, "அப்படியானால் என் சபதம் என்ன ஆவது?" என்றான் இராஜாதித்தன்.

சிறிதும் தாமதிக்காமல், குமரன், "இளவரசே! நான் தஞ்சைக்குச் செல்கிறேன். காற்றினும் கடிய வேகத்தில் விரைந்து செல்கிறேன். தஞ்சையில் சக்கரவர்த்திகளைக் கண்டு சூழ் நிலையை விளக்குவேன், அனுமதி பெறுவேன். அதற்கிடையில், இளவரசே, திருக்கோவலூரைத் தாக்கிவிடாதீர்கள். இதுதான் எனது வேண்டுகோள்" என்றான்.

"ஓகோ! நீ தஞ்சைக்குப் புறப்படுகிறாயா? ஆமாம், ஆமாம், உனக்காக அங்கே அநுபமா காத்திருப்பாள். அவளைக் காண வேண்டியது நியாயம். அவளை நீ அவசியம் சந்திக்கத்தான் வேண்டும். அப்போது தான் உன் மனத்தில் இடம் பெற்றுவிட்ட வைதும்பன் மகள் மறைவாள். திருவல்லத்தில் உன்னைச் சிற்றரசராக முடிசூட்டி, அநுபமாவை உன் கரத்தில் பிடித்துக் கொடுக்க எண்ணியுள்ளேன்.

நீ அந்த எண்ணத்தில் மண்ணடித்து விடாதே, குமரா! சக்கரவர்த்திகளிடம் திருக்கோவலூர் சதியை விளக்கிக் கூறி, உடனே படையெடுப்புக்கு வேண்டிய உத்தரவு பெற்று வருவாயாக. அங்கே ஒரு பகல் கூடத் தங்கக் கூடாது. அநுபமாவை சந்தித்துப் பேசுவதைப் பிறகு வைத்துக் கொள்ளலாம். இப்போது போர், காதல் பிறகு!" என்றான்.

குமரன் பேசுவதற்கு முன்பு அரிஞ்சயன் சற்றுக் கடுமையான குரலில், "அண்ணா! அநுபமாவின் திருமணத்தைப் பற்றி முடிவு செய்ய நாம் யார்? பெரியவர்களாகப் பார்த்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். என் பாட்டனாருக்கு வேறுவிதமான எண்ணம் உள்ளது" என்று குமரனைக் கடைக்கண்ணால் பார்த்தபடி கூறினான்.

"நான் ஏன் முடிவு செய்யக் கூடாது? என் சகோதரிகளைத் தகுந்த மணவாளருக்கு மணம் புரிந்து கொடுக்க வேண்டியது என் கடமை. வீரமாதேவிக்கு நேர்ந்த முடிவு அநுபமாவுக்கும் ஏற்படக் கூடாது. வெள்ளங்குமரனை விட அநுபமாவுக்கு ஏற்றவன் எங்கே இருக்கிறான்? பாண்டிய நாடு, சேர நாடு என்று விரல் விட்டு எண்ணு. குமரன் தன் உழைப்பை இந்த நாட்டுக்கே அர்ப்பணிக்க வந்தவன். திருக்கோவலூர் மாளிகையில் முக்கூட்டுச் சதியைத் தன் உயிரைப் பணயம் வைத்து அறிந்து வந்திருக்கிறான்!" என்று இராஜாதித்தன் அரிஞ்சயனுக்கு மறுமொழி கூறினான்.

அரிஞ்சயன் போவதற்கு முன்பு குமரன் சொன்னான்:

''நம்மையெல்லாம் ஏமாற்றிப் பூண்டோடு அழிக்க முயன்று கொண்டு இருக்கிறார் சிவசேகர பண்டிதர்! அவர் கொண்ட காதலைவிட இந்த உலகில் இனி காதல் இலக்கியம் எழுதப்படப் போவதில்லை. அவரை நம்பி பெற்ற தாயை பிரிந்து வந்தாள் குமுதவல்லி என்னும் நங்கை. அவளைப் பிரியமாட்டேன் என்று உறுதியளித்தார் சிவசேகரர். அப்போது அவர் துறவி அல்லர். அச்சுதன் என்னும் அழகிய இளைஞன். ஆனால், அச்சுதன் ஒரு நாட்டைக் காப்பாற்ற உறுதி பூண்டார். அதனால் காதலை மறந்தார்.

''காதலி கடும் நோய்வாய்ப் பட்டிருப்பதையும், கவனிக்காமல் தான் எடுத்த காரியம் நிறைவேற்றத் துறவியானார். தஞ்சையில் அவர் சக்கரவர்த்திகளின் பெருமதிப்பைப் பெற்றார். அங்கும் தேடி வந்துவிட்டாள் அவருடைய காதலி! தன்னுடைய திட்டத்திற்கு அவளது வருகை இடையூறு அளிக்கும் என்று அவளை இரவோடு இரவாகக் காவிரியில் கைகால்களைக் கட்டிப் போடுமாறு செய்துவிட்டார் அந்தத் துறவி. ஏன் எதற்காக? அருமைக் காதலியை ஒரு காதலன் இவ்வாறு செய்யலாமா? ஆனால், காதலை விடக் கடமை பெரிதாக அவருக்குத் தோன்றியது.

''குமுதவல்லியைச் சந்தித்தால் தன் மனம் மாறிவிடக் கூடும் என்பதற்காக அவளை ஒழித்துக்கட்டவும் முயன்றார். அவர் கடமை வீரர்! சேர நாட்டின் உயர்வுக்கும், பாண்டிய மன்னர் கண்ணீர் துடைக்கவும் சபதம் எடுத்தவர். அவருக்கு எதிராக நான் சபதம் எடுத்திருப்பது தங்களுக்குத் தெரியாது.

''என்னுடைய வாளின் வலிமையினால் சோழ நாட்டின் பெருமையைக் காப்பாற்றுவதாக நான் உறுதி பூண்டிருக்கிறேன். தஞ்சைக்குச் சென்று அநுபமாவைச் சந்திக்க மாட்டேன். காதல், கலியாணம் எல்லாம் கங்கர் கொற்றம் ஒடுங்கிய பிறகு; வீரமாதேவிக்கு மறுவாழ்வு ஏற்பட்ட பிறகு தஞ்சையிலே நான் ஒரே ஒரு பெண்ணைத்தான் சந்திப்பேன்...' அவள்.. அவள்தான் குமுதவல்லி.

அவளை என்னுடன் அழைத்து வருவேன். சிவசேகர பண்டிதரை எங்கிருந்தாலும் சந்தித்து அவர் எதிரே அவளை நிறுத்தி ''துறவி அவர்களே, உங்கள் உறுதி என்ன ஆயிற்று. இந்த அபலையை ஏன் ஏமாற்றினீர்கள்? உயிரைக் கொடுக்க சக்தியற்ற பண்டிதரே! ஒரு பெண்ணின் உயிரைக் கெடுக்க முனைந்தது ஏன்?'' என்று வினவுவேன். துறவி தடுமாறுவார்; தத்தளிப்பார். தன்மானம் போகும் நிகழ்ச்சி ஏதும் அங்கே

நடந்துவிடக் கூடாதே என அஞ்சுவார். என்னைப் பெரிதும் வேண்டுவார். தன் காதலியை அழைத்துக்கொண்டு, சீடர்களுடன் மீண்டும் சேர நாட்டிற்கே ஓடிப்போகுமாறு வற்புறுத்துவேன். துறவி எல்லையினின்று ஒழிந்தால் நமக்குப் பாதி வெற்றிதான்'' என்று மூச்சுவிடாமல் பேசினான்.

''அந்தத் துறவியைப் பிடித்துக் கொன்றுவிட்டால்...'' என்று அரிஞ்சயன் கேட்டான்.

''அதற்கு நான் சம்மதிக்க மாட்டேன். அவர் ஆயுதமற்றவர். நிராயுதபாணியைக் கொல்வது யுத்த தர்மமாகாது. அத்துடன் நானும் அவரும் எடுத்துக் கொண்டுள்ள சபதம் நிறைவேற வேண்டுமானால் அவரைக் கொல்லக்கூடாது'' என்றான் குமரன்.

''விசித்திரமாக இருக்கிறதே!''

''ஆம்; எல்லாம் விசித்திர விளையாட்டுத்தான். நான் புறப்படுகிறேன் தஞ்சையை நோக்கி. அதுவரையில் மிகவும் கவனமாக இருங்கள். மீண்டும் துறவி இங்கே வரலாம். ஒருவேளை அவர் வந்தால் அவருடன் சமாதானமாகப் பேசி, அவரது யோசனையைக் கேட்பது போல் நடித்து அவரை இங்கேயே தங்க வைத்துவிடுங்கள். அவர் இங்கேயே தங்கினால் நமக்குப் பெரும் வெற்றி'' என்று கூறிக் குமரன் புறப்பட முனைந்தான்.

அப்பொழுது இரு வீரர்கள் விரைந்து வந்து, ''திருக் கோவலூரிலிருந்து இளவரசி கல்யாணிதேவி குடமுழுக்கு விழாவைக் காண வருகிறார்கள்'' என்று தெரிவித்தான்.

''நிஜமாகத்தானா? வைதும்பன் மகள் வருகிறாளா?'' என்று ஆவலுடன் கேட்டான் இராஜாதித்தன்.

''ஆம், இளவரசே! திருக்கோவலூர்க் கோட்டையை அவர்களுடைய சிவிகை தாண்டிவிட்டது. திருநாவலூர்க் கோயிலைக் காண வேண்டி வருகிறார்கள். கோயிலுக்குப் பல பரிசுப் பொருள்களும் கொண்டு வருகிறாள்'' என்றனர் வீரர்கள்.

''பல ஆண்டுகளாக நமக்குக் கொடுக்க வேண்டிய கப்பப் பணம் கொடுக்கவில்லை. அந்தப் பழி நீங்க ஆண்டவனுக்குக் கொடுக்க வருகிறார்களா?'' என்றான் அரிஞ்சயன்.

குமரன் ஏதோ சிந்தனையில் அங்கேயே நின்றான். பிறகு வீரர்களை நோக்கி, ''வைதும்பனும் உடன் வருகிறானா? வேறு யாராவது வருகிறார்களா?'' என்று கேட்டான்.

''கல்யாணிதேவியுடன் அவளுடைய பணிப் பெண்கள் வருகிறார்கள். துறவி ஒருவரும் வருகிறார்'' என்றான் ஒரு வீரன்.

கல்யாணிதேவியின் நினைவிலேயே இருந்த இராஜாதித்தன், குமரன் அங்கு இருந்தால் கல்யாணியின் கவனம் சிதறும் என்ற எண்ணத்தினால், "குமரா, இன்னுமா நீ நிற்கிறாய்? போ! விரைந்து செல். வெற்றியுடன் திரும்பி வா! வைதும்பன் மகள் நினைவுடன் செல்லாதே" என்று சிரித்துக்கொண்டே கூறினான்.

தஞ்சைக்குச் சென்று சக்கரவர்த்தியைக் குமரன் கண்டபோது அவர் ஓலையொன்றில் இரகசியச் சமிக்ஞையாக எழுதப் பட்டவற்றை ஆராய்வதில் ஈடுபட்டிருந்தார். உறையூர் அருகே சோழ ஒற்றரிடம் பிடிபட்ட ஒருவனிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஓலை அது. அதில் லிங்கம் ஒன்று வரையப்பட்டிருந்தது. புலி ஒன்று லிங்கத்தின் அருகே மண்டியிட்டு படுக்கிறது. லிங்கத்தின் வலது புறம் வில் ஒன்றும் அதற்கு அருகே மீன் ஒன்றும் காணப்படுகின்றன.

பராந்தகர் தீவிரமாகச் சிந்தித்தார். பிறகு ஓலையைத் தலையணையின் அடியில் மறைத்து வைத்து குமரனை உள்ளே வரச்சொன்னார்.

குமரன் நடந்தவற்றை ஒன்றுவிடாமல் எடுத்துக் கூறினான். முகத்தில் எந்தவிதச் சலனமும் ஏற்படாமல் பராந்தகச் சக்கரவர்த்தி குமரன் கூறுவதை விடாமல் கேட்டுக்கொண்டே வந்தவர், தன் தலையணையின் மறைவிலிருந்த அந்த இரகசிய ஓலையை எடுத்துக் கொடுத்து அதில் வரையப்பட்டுள்ள வரி வடிவங்கள் எவற்றைக் குறிப்பிடுகின்றன என்று கேட்டார்.

குமரன் சற்று நேரம் கவனமாக ஓலையை மேலும் கீழுமாகத் திருப்பிப்பார்த்து, "சக்கரவர்த்தி அவர்களே! சிவபக்தியில் புலி மயங்கிவிட்டது. மீனுக்கு உரியவர் வில்லெடுத்து வந்து புலியைக் கொல்ல இதுதான் சமயம் என்று பார்க்கிறார். இவை புலப்படுகின்றன" என்றான்.

சக்கரவர்த்திகள் முகம் மலர்ந்தது. "தம்பி, மேலும் தெளிவாகக் கூற முடியுமா... உன்னால்?" என்று கேட்டார்.

"சக்கரவர்த்திகள் அவர்களே, இந்த ஓலை சேரநாட்டு மன்னருக்கு எழுதப்பட்டிருக்கிறது. படையெடுப்பதையும், போரையும் விரும்பாமல், சிவ சிந்தனையிலும், சிவனுக்குக் கற்றளி எடுப்பதிலும், புலிக்கொடி வேந்தராகிய தாங்கள் ஈடுபட்டிருக்கிறீர்கள். ஆனால் மீன்கொடிப் பாண்டியன் சேர மன்னனின் உதவியுடன், சோழ நாட்டிற்குள் பிரவேசிக்கலாம் என்ற மறைபொருள் காணப்படுகிறது. இதை எழுதியவர் நிச்சயம் சிவசேகரப் பாண்டியர்தான்" என்றான் குமரன்.



அத்தியாயம் 27

இதயச் சிறை

தந்தையிடம் விடைபெற்றுச் செல்லக் கல்யாணிதேவி வந்து நின்றாள். அவள் உள்ளத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சி முகத்திலும் பிரதிபலித்தது! மகளின் உள்ளத்தில் என்ன இருக்கிறதென்று இன்னும் வைதும்பராயன் அறிந்து கொள்ளவில்லை. தன் மகளை உலகம் அறியாப் பேதை என்றே அவன் நினைத்திருந்தான். தன்னுடைய கருத்துக்கும், கட்டளைக்கும் அவள் மாறுபட்டு நடக்க மாட்டாள் என்ற நம்பிக்கை வைதும்பனுக்கு இருந்தது!

சோழர்களைத் தனக்குப் பிடிக்காதவர்கள் என்று முடிவு செய்துவிட்ட வைதும்பராயன், தன் மகள் சோழ இளவரசன் கட்டிய கோயிலைக் காணச் செல்வதற்கு அனுமதி தரக் காரணமும் இருந்தது.

தன் மகளுடன் இரகசியமாக ஒற்றர்கள் சிலரையும் திருநாவலூருக்கு அனுப்புவது அவனது முதல் எண்ணமாக இருந்தது. சிலரை அங்கேயே தங்கச் செய்து, அவ்வப்போது செய்திகளை அனுப்பி வர ஏற்பாடு செய்தான். அதனால் தன் மகள் செல்லும்போது மகிழ்ச்சியுடன் விடைகொடுத்து அனுப்பினான்.

திருநாவலூர்க் கோயிலைக் காணப் போகிறோம் என்ற மகிழ்ச்சி ஒருபுறம், குமரன் மற்றும் சோழ இளவரசர் இருவரையும் சந்திக்கப் போகிறோம் என்ற பேருவகை மற்றொரு புறமுமாகக் கல்யாணிதேவி திருநாவலூரை நோக்கிப் புறப்பட்டாள்.

வைதும்பராயன் மகள் இளவரசி கல்யாணிதேவி வரும் செய்தி அறிந்தவுடனேயே, ஊரின் எல்லைக்கு அவளை வரவேற்க இராஜாதித்தன் வந்துவிட்டான். இராஜாதித்தனுடன் அரிஞ்சயனும் வந்தான்.

கல்யாணிதேவியின் சிவிகையுடன் துணைக்கு இரு வீரர்களும் வந்தனர். குதிரையின் மீது பலர் காணிக்கைப் பொருள்களைச் சுமந்து வந்தனர். இளவரசருக்கு காணிக்கையாக்க அல்ல அவை!

குடமுழுக்கு விழா நடைபெறவிருக்கும் சிவபிரானுக்குக் காணிக்கையாக்க வைதும்பன் அனுப்பியிருந்தான்.

''இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது அண்ணா! சோழ நாட்டிற்குச் செலுத்த வேண்டிய கப்பத் தொகை பல ஆண்டு களாகத் தரப்படாமல் இருக்கிறது. ஆனால், கோயில் ஆண்டவனுக்குக் காணிக்கையாக ஏராளமான பரிசுப் பொருள்களை அனுப்பியிருக்கிறாரே வைதும்ப மன்னர்!'' என்று அரிஞ்சயன் கேட்டான்.

இராஜாதித்தன் பெரிய ஒலி எழுப்பிச் சிரித்தான். ''தம்பி அரிஞ்சயா! இதில் என்ன சூழ்ச்சி இருக்க முடியும்? திருக்கோவலூர் கோட்டையை விழா முடிந்தவுடன் முற்றுகையிடத் திட்ட மிட்டிருந்தேன்.

''ஆனால் வலையில் மான் தானே வந்து சிக்கிவிட்டது. தம்பி! இது ஒரு நல்ல வாய்ப்பு. விழா முடிந்த மறுநாள் கல்யாணிதேவி ஊருக்குப் புறப்படுவாள். ஆனால் அவளை நமது பாதுகாவலில் வைத்துவிட்டு வைதும்பனுக்குச் செய்தி அனுப்புவேன்.

''உன் மகளை இங்கே சிறைப்படுத்திவிட்டேன். உடனே எமக்குச் சேர வேண்டிய எல்லாவித கப்பத் தொகைகளையும், பரிசுப் பொருள்களையும் கொண்டு கொடுக்கவும்'' என்று செய்தி அனுப்புவேன்.

''தான் செய்த தவறான காரியத்திற்கு வருந்துவான். நமக்குப் பணியாமல் என்ன செய்வான்? ஆனால், அவன் கப்பத் தொகைகளை அளித்துவிட்டுக் கடைசியாகத் தன் மகளையும் பரிசாகத் தரும்படியான நிலைக்கு வந்துவிடுவான்...'' என்று இராஜேந்திரன் கூறும்போது, அரிஞ்சயன் திடுக்கிட நேரிட்டது.

''வைதும்ப இளவரசியைச் சிறைப்படுத்தி, நாம் என்ன செய்யப்போகிறோம்?'' என்று கவலை தோய்ந்த குரலில் கேட்டான் அரிஞ்சயன்.

''தம்பி! ஒரு பெண்ணைச் சிறையெடுத்து வருவது எதற்காக?'' என்று கேட்டான் இராஜாதித்தன்.

''பல காரணங்களுக்காக இருக்கலாம். எதிரியைப் பணிய வைக்கவும், அடிமையாக அந்தப்புரத்தில் வைக்கவும் பெண்களைச் சிறைப்படுத்தலாம்.''

''அவளை என் இதயச் சிறையில் என்றோ அமர்த்தி விட்டேன். திருக்கோவலூருக்குச் சென்று அவளை முதன் முதலில்

கண்டபோதே அவள் என் மனதை மாற்றிவிட்டாள்! அந்தக் காந்தக் கவர்ச்சிதான் இதுவரை வைதும்பன் மீது என்னைக் கடும் நடவடிக்கை எடுக்காது காத்து வந்தது! இப்போது தக்க வாய்ப்பு நேர்ந்துவிட்டது. கல்யாணிதேவியை நான் எப்படியும் அடைவது என்னும் திடமான முடிவுக்கு வந்துவிட்டேன்.''

''சக்கரவர்த்தி உங்கள் முடிவை ஏற்பாரா? சோழ நாட்டின் வருங்கால அரசியாகத் திகழ வேண்டியவர்களுக்குத் தக்க அந்தஸ்து இருக்க வேண்டும் என்று அவர் நினைக்கமாட்டாரா?''

''நினைக்கட்டுமே! சக்கரவர்த்தி அவர்கள் நினைப்பதைத் தடுக்க நாம் யார்? அவர் நினைப்பதற்கு விரோதமான செயல் ஏதும் செய்யவில்லையே? கல்யாணி அழகில் குறைவானவளா? சோழ நாட்டின் வருங்கால அரசியாகும் தகுதி அவளுக்கில்லையா?

''தம்பி! ஒன்று சொல்கிறேன். வைதும்பராயன் மகளை நான் மணக்கப் போகும் விஷயத்தில், சக்கரவர்த்தி குறுக்கே நின்றாலும், எனது ஆருயிர் நண்பன் குறுக்கே நின்றாலும், உடன்பிறந்த நீயே தடை சொன்னாலும், நான் ஏற்கமாட்டேன்... குடமுழுக்கு விழா இனிதே முடியட்டும். அதன்பின் நடைபெறும் அதிசயத்தைப் பார்!''

ஃ ஃ ஃ

''இராட்டிரக்கூடர்களின் படைகள் வடபெண்ணை ஆற்றைக் கடந்துவிட்டனவாம்'' என்று குதூகலம் முகத்தில் பொங்கக் கூறினார் துறவி சிவசேகரப் பண்டிதர்!

வியப்பு நிறைந்த விழிகளுடன் துறவியை நோக்கிய வைதும்பன், ''சுவாமி, தங்களுக்கு மட்டும் செய்தி முன்னதாகவே கிடைத்துவிடுகின்றனவே; தங்களுடைய ஞான திருஷ்டி காரணமா? அல்லது தங்கள் சீடர்களின் திறமையின் காரணமா?'' என்று கேட்டான்.

''இரண்டுந்தான்...!'' என்று கூறி மெல்ல நகைத்த துறவி, ''வைதும்ப மன்னரே! சோழ அரசை நாம் இந்தப் போரில் முறியடிக்காவிட்டால், பிறகு வாய்ப்பு ஏற்படுவது அரிது. சேர மன்னருக்கும் செய்தி அனுப்பிவிட்டேன். கங்கர்களும், இரட்டர்களும், கடல் முழக்கம் போன்ற படைகளுடன் சோழ நாட்டின் எல்லைக்குள் நுழையும்போது, தென் எல்லையில் பாண்டியர்களுடன் சேர்ந்து சேரர்கள் தாக்குவர். பராந்தகச் சோழ சக்கரவர்த்தி என்ன செய்வாரோ பார்ப்போம்!'' என்றார்.

''சுவாமி, என்னுடைய மகள் திருநாவலூர் சென்றிருக்கிறாள். அதற்குள் செய்தி அறிந்துவிட்ட சோழ இளவரசன் என் மகளைச்

சிறைப்படுத்திவிட்டால்? விரைவாக சூழ்நிலை மாறும்போது, சோழர்களின் ஒற்றர்கள் அறியாமலா இருப்பார்கள்?

''நான் நினைத்தது ஒன்று; இப்போது நடந்தது மற்றொன்று! என் மகளை மாற்றான் கையில் சிக்க வைப்பதா? இப்போதே நான் செய்தி அனுப்பி என் மகளை உடனே திரும்பி வருமாறு சொல்கிறேன்!'' என்று வைதும்பராயன் பரபரப்புடன் கூறினான்.

துறவி மெல்ல நகைத்தார்.

''வைதும்ப மன்னா! விரோதியின் நாட்டிற்கு உன் மகளை அனுப்பும் முன்பு, அதைப்பற்றி நீ யோசித்து இருக்க வேண்டும். கவலைப்படாதே மன்னவா! உன் மகளை இராஜாதித்தன் ஒருநாளும் சிறைப்படுத்த மாட்டான். அவன்தான் உன் மகளின் இதயச்சிறையில் இருக்கிறானே. நான் சொல்கிறேன், ஒருவேளை உன் மகளுடனே தொடர்ந்து இராஜாதித்தன் இங்கே வந்தாலும் வரலாம். அவன் வந்தால் கோட்டைக் கதவைப் பலமாக மூடிவிடு. சோழ இளவரசன் உன்னிடம் சிறைப்பட்டுவிட்டான் என்றால், சோழ நாட்டின் தலைவிதியே மாறிவிடும்.

''ஒருவேளை உன் மகளுடன் தொடர்ந்து இராஜாதித்தன் வராவிட்டால் அவனுடைய தூதன் வரலாம். தூதுவனிடம் மிகவும் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும். சோழ நாட்டிளவரசன் கோரிக்கைக்கு இணங்குவதுபோல் நடிக்க வேண்டும். அவனைத் திருக்கோவலூருக்கு அழைக்க வேண்டும். அவன் கட்டாயம் மகிழ்ச்சியுடன் வருவான்!'' என்றார்.

''ஒருவேளை இவை இரண்டுமே நடவாமல், என் மகளை அங்கே சிறைப்படுத்திவிட்டால்?''

''வைதும்பா, கவலைப்படாதே! திருநாவலூருக்குத்தான் செல்லப் போகிறேன். இராஜாதித்தனை நான் சந்திப்பது இதுதான் கடைசி முறையாக இருக்கும்! உன் மகளுடைய நலனை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்! எந்த நேரமும் போர் மூளலாம். உன் படைகளைச் சேகரித்து ஒழுங்குபடுத்துவதிலேயே கவனமாக இரு'' என்றார் துறவி.

⁂ ⁂ ⁂

சிவசேகர பண்டிதர் திருநாவலூரை அடையும்போது நீலவானம் கருமுகில்களால் சூழப்பட்டுக் காணப்பட்டது. பலநூறு யானைகள் மோதுவது போல் இடியோசை எங்கோ கேட்டது.

இராஜாதித்தன் உறக்கம் வராமல் தன் படுக்கையில் கிடந்தான்! கல்யாணிதேவி தங்கியிருக்குமிடம், மிக அருகில்தான் இருந்தது. கோயில் சுற்றுப்பிரகாரத்திலும் விதானத்திலும் இளவரசியை

அவன் பலமுறை சந்தித்துவிட்டான்! பணிப்பெண்களும், தோழியும் புடைசூழ இளவரசி இருக்கும்போது இராஜாதித்தனால் எதுவுமே பேச முடியவில்லை. விழிகள் பலமுறை சந்தித்துக் கொண்டன. கல்யாணிதேவி விழிகளினின்று அவனால் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த விழிகள் எதையோ தேடுவதைப்போல் பிரதிபலிக்கவில்லை.

'இந்த ஊர்க் கோயிலைக் காண்பதற்காகவா கல்யாணி வந்திருக்கிறாள்? கோயில் குடமுழுக்கு விழாவிற்காகவா அவள் வந்திருக்கிறாள்? வேறு நோக்கம் ஏதும் இளவரசிக்கு இருக்காதா? அவள் உள்ளத்தில் என் மீது காதல் ஏற்படாமலா இங்கு வந்திருப்பாள்? பெண்களின் உள்ளத்தை அவ்வளவு எளிதாகப் புரிந்துகொள்ள முடியாது என்று கூறுவார்களே! இளவரசியின் உள்ளத்தைப் புரிந்து கொள்வது அவ்வளவு எளிதாக இராது போலிருக்கிறதே!

'மேலும் திடீரென்று தன் மனத்தில் உள்ளதைச் சொல்லி விடுவாள் என்று எதிர்பார்க்க முடியுமா? குமரன் இங்கே இருந்திருந்தால் இளவரசியின் தோழியின் மூலம் இளவரசியின் விருப்பத்தை அறிந்து வரச் செய்யலாம். குமரன் எப்போது வருகிறானோ! குமரன் இல்லாததும் ஒருவிதத்தில் நல்லது என்றுதான் கூற வேண்டும்! குமரன் இங்கே இருந்தால், எனக்குப் போட்டியாக அவன் வந்துவிட்டால் நட்பு அன்றோ பிளவுபட்டுப் போய்விடும்!'

இராஜாதித்தனின் எண்ணக்கொடி மேலும் படர்ந்தது! 'இளவரசியை நேரில் சந்தித்து அவள் மனத்தை அறிந்தால் என்ன?' என்ற ஆர்வம் திடீரென அவனிடம் எழுந்தது. அரிஞ்சயன் அயர்ந்து மற்றொரு மஞ்சத்தில் உறங்கிக் கொண்டிருந்தான்.

'மறுநாள் பொழுது விடிந்தால் அவன் தன்னுடைய பாடி வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றுவிடுவான். குமரன் வருவதற்கு ஓரிரு நாட்கள் ஆகலாம். கல்யாணிதேவி அது வரை தங்கியிருப்பாள். குமரன் வருவதற்குள் கல்யாணிதேவியின் நெருங்கிய அபிமானத்தைப் பெற்றுவிட வேண்டும்' என்று இராஜாதித்தன் எண்ணினான்.

மழை பெய்து கொண்டிருந்தது. மின்னல் ஒளி, இருளைப் பொய்யாக்கியது. இராஜாதித்தன் போர்வையை உதறிவிட்டு எழுந்தான். தன்னிருப்பிடம் விட்டு வெளியே வந்தான். மேலே ஓர் அங்கியை அணிந்துகொண்டு விரைந்தான்! கல்யாணிதேவி தங்கியிருக்கும் இடத்தை அடைவதற்குள் நனைந்துவிட்டான்.

காவலாளிகள் இருவர் தூங்கி வழிந்து கொண்டிருந்தனர். கதவு திறந்திருந்தது. கல்யாணிதேவி படுத்திருக்கும் இடத்தில் தூண்டா விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

துவண்ட கொடி போல் மஞ்சத்தில் கல்யாணிதேவி படுத்திருந்தாள். மாளிகையில் எல்லாவிதச் சௌபாக்கியங் களுடனும் உறங்கும் இளவரசிக்கு அந்த இடம் வசதிக் குறைவுதான்! எனினும், கல்யாணியின் மனத்தில் மகிழ்ச்சி குடிகொண்டிருந்தது. உறங்கும்போது, அதரங்கள் புன்முறுவல் புரிவதுபோல் தோன்றின.

மெல்ல மூச்சு விடும்போது விம்மி எழும் தனங்கள், இதயத்திலுள்ள இரகசியங்களைப் பாதுகாக்கும் காவலர்கள் குறுக்கும் நெடுக்கும் சென்று வருவதுபோல் தோன்றின! வலது கரத்தைத் தலைக்கு ஆதாரமாக உயர்த்தி வைத்துக் கொண்டிருந்தாள். இடக் கரம் மார்பின் மீது துணையாகத் தவழ்ந்தது.

உறங்கும்போது இனிய கனவு கண்டதாலோ... என்னவோ அவள் அதரங்கள் மெல்ல விரிந்து நகை பூத்தன! அவனால் அதற்குமேல் அமைதியாக அங்கு நிற்க முடியவில்லை.

உள்ளுணர்வு உணர்த்தியதாலோ என்னவோ, திடுக்கிட்டுக் கண் விழித்தாள் கல்யாணிதேவி.

''யாரது?'' என்று பரபரப்புடன் துள்ளி எழுந்தாள்.

''நான்தான் தேவி, ஏன் பயப்படுகிறீர்கள்?'' என்று மெல்லப் பேசினான் இராஜாதித்தன்.

கல்யாணி எழுந்து மரியாதையுடன் நிற்க முயன்றாள். அவள் உடல் நடுங்கியது. கண்களைக் கசக்கிக்கொண்டு தான் காண்பது கனவா, நனவா என்று நோக்கினாள்.

''நான்தான் தேவி! வானம் திறந்து கொட்டுவது போல் மழை பெய்யும் இவ்வேளையில் நீங்கள் கவலையின்றி இருக்கிறீர்களா? என்று பார்க்க வந்தேன்'' என்று கூறினான் இராஜாதித்தன்.

''தங்கள் நாட்டில் கவலைகூட உண்டா?'' என்று மெல்ல நகைத்தவாறு கல்யாணி கேட்டாள்.

''இங்கு வந்த நாளாக தாங்கள் உற்சாகமின்றி இருப்பதாக எனக்குத் தோன்றியது! தங்களைச் சந்தித்துக் காரணம் கேட்க வந்தேன்'' என்று கூறுவதற்குள், இராஜாதித்தன் மிகவும் சங்கடப்பட்டு விட்டான்.

கல்யாணிதேவி சிரித்தாள்! அவனது தடுமாற்றம் அவளுக்குப் புரிந்துவிட்டது. மேலும் ஆடையெல்லாம் நனைந்திருந்ததால், குளிரால் அவன் மெல்ல நடுங்குவதையும் அவள் கண்டாள்.

''நன்றாக நனைந்து விட்டீர்களே! என்னைத் தேடி வரக் கொட்டும் மழையில் வர வேண்டுமா? எனக்கு இங்கே ஒருவிதக் குறையுமில்லை. தாங்கள் கட்டிய கோயிலைக் கண்டேன். வந்த காரியம் முடிந்துவிட்டது. நாளைக்குக் காலையில் புறப்படுகிறேன்'' என்றாள் கல்யாணிதேவி.

''நாளைக்கே புறப்படுகிறீர்களா? வந்த காரியம் முடிந்துவிட்டதா?''

''சோழ நாட்டுக் கோயில்கள் அனைத்தையும் காணத் துடிக்கிறேன். ஆனால்...''

''ஆனால் என்ன தேவி, இப்போது சொல்லுங்கள், புறப்படுவோம். தில்லை முதல் நாகைக் காரோணம் வரை செல்வோம். சீர்காழி முதல் திருவரங்கம் வரை செல்வோம். ஒவ்வொரு தலத்திலும் ஈசனை உங்களுடன் சென்று காண்பதில் ஏற்படும் மகிழ்ச்சிக்கு எல்லை உண்டோ?''

இராஜாதித்தன் இவ்வாறு கூறியதைக் கேட்ட கல்யாணிதேவி திடுக்கிட்டாள்! என்ன கூறி இளவரசனிடமிருந்து மீள்வது என்று துடித்தாள்.

''கல்யாணிதேவி! சோழநாட்டுத் திருக்கோயில்களைக் காண வேண்டும் என்ற தங்கள் ஆர்வம் நல்ல சகுனம். சோழநாட்டு இளவரசியாக வரப்போகும் வைதும்பனின் மகள், எங்கள் பண்பும் கலையும் அறிய ஆவலுடையவளாக இருப்பது நல்லதுதானே?''

''என் தந்தை, திருநாவலூர்க் கோயிலை மட்டும் கண்டுவிட்டு உடனே திரும்பிவிடுமாறு கட்டளையிட்டிருக்கிறார்.''

''ஏன் அப்படி? தங்கள் ஆர்வம் அவருக்குத் தெரியாதா?''

''தெரியும், தெரியும்; தெரிந்துதான் அவ்வாறு கூறினார். பெரும் யுத்தம் ஏற்படப் போகிறதாம். அதற்குள் நான் திரும்பிவிட வேண்டுமாம். இளவரசே! கருணைகூர்ந்து இங்கிருந்து போய் விடுங்கள். என் தோழி விழித்தெழுந்து விடப் போகிறாள். பணிப்பெண்கள் வந்துவிடப் போகிறார்கள். பிறகு தவறாக எண்ணி விடுவார்கள்.''

''நான் இங்கு வருவதில் தவறு என்ன? என்னைத் தவறாக நினைப்பவரும் இருக்கிறார்களா? சுற்றி வளைத்துப் பேச

என்னால் முடியாது. வைதும்பராயன் மகள் சோழ நாட்டு இளவரசியாகலாம்; அரசியாகலாம்; திருக்கோவலூரில் தங்களைச் சந்தித்தவுடனேயே நான் அந்த முடிவுக்கு வந்துவிட்டேன். தங்கள் விழிகளும் அவ்வாறுதான் பேசின. இங்குத் தாங்கள் வருகை புரிந்ததும் அதைத்தான் புலப்படுத்தின...''

இராஜாதித்தன் இவ்வாறு பேசிக் கொண்டே போகும்போது, கல்யாணிதேவி நடுநடுங்கினாள்! வெளியே ஏற்படும்படி ஓசை, அவள் நடுக்கத்தை மேலும் அதிகப்படுத்தியது.

''தாங்கள் தந்தை சோழநாட்டிற்கு விரோதமான நடவடிக்கையில் இறங்குவது எனக்குத் தெரியும். சோழநாட்டைப் பூண்டோடு ஒழித்துவிடச் சதித்திட்டம் தீட்டுவதையும் அறிவேன். ஆனால், தேவி! தங்களைப் பார்த்த கணத்திலிருந்தே என் இதய அரியணையில் ஏற்றிக் கொண்டுவிட்டேன். அதனால், தங்கள் தந்தையிடமுள்ள கோபம் எனக்குக் குறைந்தது. சோழ நாட்டு இளவரசியாகத் தாங்கள் மாறியதும் வைதும்பனை நான் மன்னித்துவிடுவேன். தங்கள் சம்மதம் கேட்கத்தான் இந்த இருளில், கொட்டும் மழையில் ஓடிவந்தேன். நான் அவ்வளவு எளிதில் மயங்கிவிடக் கூடியவனல்லன். ஆனால், உங்கள் இருவிழிகள் என் இதயத்தைக் கவர்ந்துவிட்டன! சொல்லுங்கள் என்னை ஏற்பதாக ஒரு வார்த்தை சொல்லுங்கள் தேவி! சரித்திரமே மாறிவிடும். திருநாவலூர் தெய்வ சந்நிதியில் தங்களை இளவரசியாக ஏற்கிறேன். சாட்சியாக என் இளவல் இருக்கிறான். சக்கரவர்த்தி என் முடிவுக்கு மாறுதல் கூறமாட்டார். இதனால் உங்கள் தந்தைக்குப் போரினால் ஏற்படப் போகும் களங்கம் மறையும். இதுவரை அவர் செய்த சோழநாட்டுத் துரோகச் செயல்களை மறந்துவிடுவேன். ஒரு வார்த்தை சொல்லுங்கள். தேவி தங்களுக்கு விருப்பம் இல்லாததைச் செய்யத் துணியமாட்டேன். நான் நினைத்திருந்தது வேறு. தங்களைச் சிறை வைத்துப் பணயமாக்கி, வைதும்பனைப் பணியவைக்க எண்ணினேன். இப்போது அதை எண்ணி வெட்கப்படுகிறேன், கல்யாணிதேவி! தங்கள் எண்ணத்தைக் கூறுங்கள். தங்களையே நினைத்து வாடும் எனக்கு நல்ல வாக்குக் கொடுங்கள்.''

இராஜாதித்தன் குரலில் ஏற்பட்ட குழைவு கல்யாணி தேவியை நடுநடுங்க வைத்தது. அவன் விழிகளில் தெரிந்த ஆர்வம் அவளை அஞ்சச் செய்தது. வெளியே 'மடமட'வென்று பேரிடி இடித்தது. அந்த இடத்தை மின்னல் ஒரு கணம் ஒளி மயமாக்கியது. கல்யாணி தேவி என்ன கூறப் போகிறாளோ என்ற ஆர்வம் இராஜாதித்தனிடம் பொங்கி நின்றது!



அத்தியாயம் 29

நிலவில் மலர்ந்த முல்லை

சேர நாட்டுக்கு இரகசியச் செய்தியைத் துறவி அவர்கள் அனுப்பியிருந்தும், அந்த ஒற்றனைச் சிறையில் அடைக்காமல் அவன் வழியே செல்ல விட்டுவிட்ட பராந்தக சோழ சக்கரவர்த்தியின் திட்டம் என்னவாக இருக்கும் என்று புரியாமல், குமரன் ஒருகணம் திகைத்தான்.

''வலையில் அகப்பட்ட புலியை நழுவவிட்டு விட்டேனே என்று நினைக்கிறாயா?'' எனச் சக்கரவர்த்தி கேட்டபோது, குமரனுக்கு வியப்பு மேலிட்டது. 'இல்லை' என்று சொல்லவும் முடியாமல், ''ஆமாம்' என்று ஏற்கவும் இயலாமல் தவித்தான்.

''குமரா! சிவசேகர பண்டிதரின் திட்டங்கள் யாவும் எனக்குத் தெரியும். அவரது போக்கின்படியே விட்டால்தான் பல உண்மைகள் வெளிவரும் என்று எண்ணினேன். அதன்படியே அவர் கங்கநாட்டுப் பூதுகனுடன் தொடர்பு கொண்டதும், மான்யகேட நகரத்திற்கும் செய்தி அனுப்பி, உடனே படைகளுடன் புறப்பட்டு வருமாறு கூறியதும், எனக்குத் தெரியும். அதனால்தான் இராஜாதித்தனை முன் எச்சரிக்கையாகத் திருநாவலூருக்கருகே தண்டு இறங்கச் செய்தேன்!'' என்றார்.

குமரனது விழிகள் வியப்பால் மலர்ந்தன. அவனை, மேலும் திகைக்க வைக்கும் முறையில், ''குமரா! துறவி அனுப்பிய ஒற்றனை நாம் இங்குச் சிறைப்படுத்திவிட்டோம் என்றால், அவர் விழிப்படைந்து விடுவார். நாம் எந்தவிதச் சதித் திட்டங்களையும் அறியாமல் இருப்பதாகவே இதுவரை அவர் நினைத்திருக்கிறார். எல்லாம் நமக்குத் தெரியும் என்று அவர் புரிந்து கொண்டுவிட்டால், அந்த முறைகள் மாறிவிடும்! நாம் அறியாத வகையில், அதை நடத்த முற்படுவார். சேர நாட்டரசனுக்கு அவர் உடனே படையெடுத்துவரும் செய்தியை அனுப்பி விட்டாரா? அச்செய்தி சேர மன்னருக்கு எட்டும் முன்பாக, நாம் சேர நாட்டிற்குள் நுழைந்து அவரை முறியடிப்போம்'' என்றார்.

குமரன் மௌனமாக நின்றான். அவன் சிந்தனை இயங்கிற்று! சேர நாட்டிற்குள் நுழைந்து சேர மன்னரை முறியடிக்கும் சக்தி பெற்றவர் யார் இருக்கிறார்கள் என்று அறிய ஆவல் கொண்டு ஒருவேளை அந்தக் கடமையைத் தன்னையே ஏற்குமாறு சக்கரவர்த்தி கட்டளையிட்டுவிட்டால்? தனது திட்டங்கள் என்னாவது? சிவசேகர பண்டிதர் எதிரே குமுதவல்லியைக் கொண்டு நிறுத்தி, அவரது உள்ளத்தில் பெரும் கலகலப்பை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணியதற்கு ஒரு வேளை பாதகம் ஏற்பட்டுவிடுமோ? என்று குமரன் அஞ்சினான்.

''குமரா! சேர நாட்டைப் பற்றி நன்றாக அறிந்தவன் நீ! தகுதி வாய்ந்தவன்; உன்னிடம்தான் சேர நாட்டுப் படை யெடுப்பை ஒப்படைக்க வேண்டுமென நான் எண்ணியதுண்டு. ஆனால் அதைவிட மிக முக்கியமான பணியொன்றை உன்னிடம் ஒப்படைக்கப் போகிறேன். குமரா! கங்க நாட்டினின்று உத்தம சீலி தப்பி வந்து கொண்டிருக்கிறான். அவனுடன் சென்ற நாட்டியப் பெண்களின் கதி என்னவென்று தெரியவில்லை! உத்தமசீலியை சேர நாட்டின் எல்லைக்கு அனுப்பப் போகிறேன்'' என்று கூறிச் சற்று நிறுத்தினார் சக்கரவர்த்தி!

குமரன் பெருமூச்சு விட்டான்.

''குமரா! திருக்கோவலூரில் நடைபெற்ற சதியைப் பற்றி நீ கூறியவற்றை நன்றாக மனத்தில் பதிய வைத்துக் கொண்டேன். நான் எதிர்பார்த்ததுதான் நடந்திருக்கிறது'' என்று கூறியவர் சற்று நேரம் ஏதோ சிந்திப்பவர் போலிருந்து, ''குமரா, வைதும்பராயன் மகளை நீ நேரில் பார்த்திருக்கிறாயா?'' எனத் திடீரென்று கேட்டார்.

குமரனின் உடல் சிலிர்த்தது.

''பார்த்திருக்கிறேன், சக்கரவர்த்தி, வைதும்பனின் மகள் பேருதவி செய்தாள். தன் அந்தப்புரத்தில் எனக்குத் தங்க இடம் கொடுத்ததன் மூலம்.''

''அவளுடைய ரூப சௌந்தர்யத்தைப் பற்றி எல்லாரும் புகழ்கிறார்களே... உண்மைதானா?''

குமரன் என்ன மறுமொழி கூறுவான்? ''கல்யாணிதேவி திருநாவலூருக்கு வருகிறாள் என்பதை அறிந்ததும், அங்கு நில்லாமல் வந்தோமே'' என்றுதான் குமரன் எண்ணினான்!

''இளவரசருக்குள்ள இதய தாபத்தை முன் எச்சரிக்கையாகச் சக்கரவர்த்தியிடம் கூறிவிடலாமா?''

ஏதேதோ எண்ணிக் கொண்டிருந்தான், குமரன்!

''குமரா? நான் கேட்பது உன் காதில் விழவில்லையா? ஏதோ நினைவில் ஆழ்ந்துவிட்டாயே, கவலைப்படாதே! உன்னைப் போன்ற உண்மை வீரர்கள், சோழ நாட்டின் நலனைப் பாதுகாக்கச் சபதம் எடுத்திருப்பவர்கள் இருக்கும் வரை வடக்கே கங்கரும் இராட்டிரகூடரும் சேர்ந்து நாட்டின் ஒரு சிறு கிராமத்தைக் கூடக் கைப்பற்ற முடியாது. ஆனால் - '' என்று சற்று நிறுத்திய சக்கரவர்த்தி, ''குமரா! நான் கேட்டேனே, வைதும்பன் மகளுடைய அழகைப் பற்றி, அதற்கு விடைகூறவில்லையே?'' என்று அவன் விழிகளை உற்றுநோக்கியவாறு கேட்டார்!

திடுக்கிட்டு சுயநிலைக்கு வந்த குமரன், ''இளவரசி கல்யாணிதேவியின் அழகைப் புகழும் சக்தி எனக்கில்லை என்றாலும், ஒரே சொல்லில் சொல்லக் கூடுமானால், நிலவில் மலர்ந்த முல்லை மலர் அவள், அந்த மலர் உயர்ந்தவர் தோளில் மாலையாகத் திகழ வேண்டும்'' என்றான்.

குமரன் வாளெடுத்துச் சுழற்றமட்டும் கற்றுக் கொண்டுவிட வில்லை; தோள் வலி மிக்க தீரனாக மட்டும் திகழவில்லை; பல ஆண்டுகள் குருகுல முறையில் சகல கலைகளையும், குறிப்பாகத் தர்க்கம், வியாகர்ணம், நீதி சாத்திரம் கற்றவனாகை யால், சக்கரவர்த்தி தன்னை நோக்கி வைதும்ப இளவரசியின் அழகை வினவியவுடன் நொடியில் புரிந்து கொண்டுவிட்டான். அதனால்தான் நிலவில் மலர்ந்த அழகு முல்லை உயர்ந்தோர் தோளில் திகழ வேண்டும் என்று குறிப்பாகக் கூறித் தன் இதயத்தில் இளவரசிக்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துவிட்டான்.

சக்கரவர்த்தி தலையை அசைத்துக் கொண்டே மெல்லப் புன்முறுவல் பூத்தார். மேலும் குமரன் தொடர்ந்து கூறினான்: ''சக்கரவர்த்தி அவர்களே! இந்த நேரத்தில் திருநாவலூருக்கு வந்திருக்கும் இளவரசியும், நமது இளவரசரும் சந்தித்துக் கொண்டிருப்பார்கள்....! ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டிருப்பார்கள்...? ஆனால், வைதும்ப மன்னன் தன் மகளை என்ன காரணம் கொண்டு துணிவுடன் திருநாவலூருக்கு அனுப்பினான் என்பது எனக்குப் புரியவில்லை. ஒருவேளை... ஒருவேளை... தன் மகளின் அழகில் இளவரசரை மயக்கிடச் செய்து, அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டிருக்கிறாரோ என அஞ்சுகிறேன். விளைவுகள் எப்படி மாறுமோ? நான் விரைந்துச் செல்ல விரும்புகிறேன்...''

சக்கரவர்த்தியின் புருவத்தில் விழுந்த சுருக்கங்கள் அவர் எதையோ எதிர்பார்த்தவர் போல் தோன்றின. ''குமரா!

கவலைப்படாதே. திருநாவலூருக்குத் தன் மகளை அனுப்பிய வைதும்பன், அவளுடன் தன் ஒற்றர்கள் சிலரை அனுப்பி, நமது படைபலம் அறிய முற்பட்டிருப்பான்! ஆனால் அவனுக்கு அரிஞ்சயனுடன் வந்திருக்கும் படைபலம் தெரிய முடியாதல்லவா?'' என்றார்.

பிறகு, ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்போல், ''குமரா! நான் மூன்று முக்கியமான திட்டங்களை உன்னிடம் கூறப்போகிறேன். அவற்றை உடனே விரைந்து சென்று கவனமாக நிறைவேற்று'' என்று கூற, அவனை அருகே அழைத்து அவன் செவிகளில் மட்டும் விழும் வகையில் ஏதோ கூறினார். அவ்வளவு அருகே அழைத்து இரகசியமாகக் கூறும் காரணம் அவனுக்கு முதலில் புலப்படவில்லை. 'சக்கரவர்த்தியின் அறைக்குள் மறைந்திருந்து கேட்கும் தைரியம் யாருக்கு உண்டு என்று எண்ணினான். ஆனால், மறுகணம் காவலர்கள் சிவசேகரப் பண்டிதரின் சீடனான அந்தச் சிறுவனைப் பிடித்திழுத்து வந்து அவர் எதிரே நிறுத்தி, ''இவன் எப்படியோ யார் கண்ணிலும் படாமல் தப்பி இந்தக் கூடத்திற்குள் நுழைந்துவிட்டான். கதவுக்கருகிலுள்ள திரைச்சீலையின் மறைவில் ஒண்டிக் கொண்டிருந்ததைக் கண்டோம். கேட்டால், தான் அரசரிடம் பாடல் ஒன்று கூறிப் பரிசுபெற வந்ததாகக் கூறுகிறான்'' என்றனர்.

சிவசேகர பண்டிதர், தன்னைத் தொடர்ந்துதான் இந்தச் சிறுவனை இரகசியமாக அனுப்பியிருக்கக் கூடுமென குமரன் உணர்ந்தான். சக்கரவர்த்தி மிகவும் மெல்ல, தன் செவிகளில் மட்டும் விழும்படியாகக் கூறியதன் காரணத்தைப் புரிந்து கொண்டான்!

''டேய், பயலே! மிகவும் கெட்டிக்காரனடா நீ! என்ன கவிதையைப் பாடவந்தாய்?'' என்று சக்கரவர்த்தி முழங்கினார். சிறுவன் நடுநடுங்கிவிட்டான்!

சிறிது நேரம் அவனை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்த சக்கரவர்த்தி, காவலர்களை நோக்கி சமிக்ஞை செய்தார். ஏதும் பேச்சின்றி அவனை இழுத்துச் சென்றனர், காவலர்கள்.

பிறகு சக்கரவர்த்தி குமரன் பக்கம் திரும்பி, ''குமரா! நான் சொன்னவற்றைக் கவனத்தில் வைத்துக்கொள். சுகமே சென்று வா'' என்று விடைகொடுத்தனுப்பினார்.

ஃ ஃ ஃ

குதிரை மீதேறி விரைந்து சென்றபோது, ''குமரன் உள்ளத்தில் பெரும் கவலை குடிகொண்டிருந்தது! சக்கரவர்த்தி கூறியவற்றுள்,

குமரனை மிகவும் கவலைக்கு உள்ளாக்கியது. துறவியை உடனே சிறைப்படுத்தி விடவேண்டுமென்பது, சிதம்பரத்தில் வந்துத் தங்கி இருக்கும் குமுதவல்லியைச் சந்தித்து, அவளை அழைத்துக் கொண்டு துறவியைச் சந்திக்க வேண்டும் என எண்ணியிருக்கும் குமரனுக்கு, சக்கரவர்த்தியின் கட்டளை அதிர்ச்சியை அளிக்காமல் என்ன செய்யும்?

சிதம்பரத்தை அடையும்போது, நன்றாக இருட்டிவிட்டது! குமுதவல்லி தங்கியிருக்கும் சுந்தரர் மடத்தை அவன் அடைந்தான். காலம் எப்படியெல்லாம் மாறுகிறது என்பதை நினைத்துப் பார்க்கும்போது குமரனுக்குச் சிரிப்பும், வருத்தமுமே மாறிமாறி வந்தன! ஒரு காலத்தில் குமுதவல்லி அழகியாக இருக்கும்போது அவளைக் கண்டு அவன் பலவீனப்பட்டதுண்டு! அதனால் நட்பு எனும் பாண்டத்தில் விரிசல் ஒன்று ஏற்பட்டதையும், அவன் நினைத்துப் பார்த்தான். அதே குமுதவல்லியை அழகு சிதைந்த வடிவத்துடன் தஞ்சையில் காண நேரிடும் என எண்ணவில்லை. உயிர் பிழைத்து மறுவாழ்வு பெற்ற குமுதவல்லியைச் சிவசேகரப் பண்டிதர் எதிரே கொண்டு நிறுத்தி ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தி, அவரது துறவிக் கோலத்திற்குப் பங்கம் நேரிடவைத்து, அதன் மூலம் அவரை நிலைகுலையச் செய்து, எடுத்த காரியத்தை முடிக்காமலேயே ஓடிவிடச் செய்ய வேண்டும் என்று குமரன் திட்டமிட்டிருந்தான்.

அதற்கு இப்போதுதான் தகுந்த சந்தர்ப்பம் நேர்ந்திருக்கிறது என்ற நம்பிக்கையுடன், தஞ்சையினின்று வரும்போது, சிதம்பரத்தில் குமுதவல்லியைச் சந்தித்து அவளையும் அழைத்துக் கொண்டு திருநாவலூர் செல்வதென்றும் சிவசேகரப் பண்டிதர் எங்கிருக்கிறார் என்பதை அறிந்து, அவரிடத்திற்கு குமுதவல்லியை அனுப்பி வைப்பது என்றும் முடிவு செய்த குமரன், மடத்தை அடைந்து கதவைத் தட்டினான்!

குமுதவல்லி யாரையோ எதிர்பார்த்து இருப்பவள் போல், உடனே கதவைத் திறந்தாள்! அந்தப் பெரிய சத்திரத்தில் அதிகம் பேர் தங்கியிருக்கவில்லை.

குமரன் அவளைத் தஞ்சை மாநகரில் குடிசையில் சந்தித்த போது, அவனை ஏன் சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்துடனே முகங்கொடுத்து அதிகம் பேச விரும்பவில்லை! ஆனால், அவன் எப்படியும் தன்னை உயிருக்கு உயிரானவருடன் சேர்த்துவிட உறுதி கொண்டிருப்பதை அறிந்தவுடன் குமரனது சொற்களை நம்பத் தொடங்கினாள் குமுதவல்லி!

அவன் கூறிய திட்டங்களையும் ஏற்றுக்கொண்டாள். அச்சுதனும் குமரனும் ஒருவரோடொருவர் போட்டிபோட்டுக்

கொண்டு சபதம் எடுத்துக் கொண்டதைக் குமரனிடமிருந்தே அறிந்து கொண்ட குமுதவல்லி, யார் வெற்றிபெற வாழ்த்துவாள் இப்போது?

தன் காதலன் வெற்றியடைய வேண்டுமென்றால், குமரனுடைய கோரிக்கைக்கு இணங்கக் கூடாது; உதவியை ஏற்கக் கூடாது! குமுதவல்லிக்குக் குழப்பம் சிறிது நேரமே இருந்தது. தன் உயிர்த் தெய்வத்தை எப்படியும் அடைய வேண்டும் என்ற உறுதியிலிருந்து அவள் மாறவில்லை. குமரன் தெரிவித்த திட்டங்களை ஏற்றுக் கொண்டாள். குமரனுடன் அவன் அழைத்த இடத்திற்கு வரவும் ஆயத்தமானாள். திருப்பாதிரிப்புலியூர் அருகே துறவியைச் சந்தித்துவிட குமரன் விரும்பினான். குமுதவல்லியையும் அழைத்துக் கொண்டு விரைந்தான்!

கருட நதிக் கரையில் தங்கியிருந்தபோது அவரைச் சந்தித்தான். ஆனால் குமுதவல்லியை அடுத்த கிராமத்திற்குச் சென்று அழைத்து வருவதற்குள், துறவி சென்ற இடம் தெரியாமல் மறைந்துவிட்டார். பிறகு அவரைத் திருக்கோவலூரில் வைதும்ப ராயன் சூழ்ச்சித் திட்டங்களுக்கு உதவிக் கொண்டிருந்தபோதுதான் கண்டான்! அவனுக்கு அப்போதும் தோல்வி; வென்றது துறவிதான்! வாளைவிட புத்திக்குச் சக்தி அதிகம் என்பதை உணர்ந்தான் என்றாலும் நம்பிக்கையை விடவில்லை. வாளின் வலிமையுடன் புத்தியையும் அதிகம் பயன்படுத்துவது என்ற முடிவுக்கு வந்தான். எப்படியிருப்பினும் கடைசியில் எதிர்த்து வரும் விரோதிகள் அனைவரையும் தோள் வலிமையால் வென்றுவிடலாம் என்ற நம்பிக்கை மட்டும் அவனுக்கு இருந்தது!

'இதுதான் கடைசி முறை. திருப்புமுனை. திருக்கோவலூரில் தான் துறவி இருப்பார். குமுதவல்லியை அழைத்துக் கொண்டு மாறுவேடத்தில் சென்று, அவர் எதிரே குமுதவல்லியை நிறுத்தி விட்டால் துறவி திடுக்கிட்டுச் சோர்ந்துவிடுவார்! அப்போது... அப்போது... சக்கரவர்த்தியின் கட்டளைப்படி சிறை செய்வோமா? 'தோல்வியை ஒப்புக் கொண்டு இந்தப் பகுதியை விட்டே ஓடிவிடு' என்று கட்டளையிடுவோம். அதுதான் சரி!' குமரன் உற்சாகத்துடன் இருந்தான். சுந்தரர் மடத்தின் கதவைத் தட்டியதும், உடனே குமுதம் கதவைத் திறந்ததும் அவனது உற்சாகம் பதின்மடங்கு அதிகமாகியது!

''குமுதவல்லி, இப்பொழுதே உன்னால் புறப்பட்டுவிட முடியுமா?'' என்று கேட்டான் குமரன். வழிப் பயணக் களைப்பு அவனைச் சோர்வு நிறைந்தவனாகத் தோன்றச் செய்தாலும்,

உடனே அவன் ஆற்ற வேண்டிய பணி, அவனை மிகவும் சுறுசுறுப்புள்ளவனாக ஆக்கிவிட்டது!

'குமரன் வருவான் வருவான்' என்று இவ்வளவு நாட்கள் காத்திருந்து ஏமாற்ற உணர்ச்சி மேலிட்டிருந்த குமுதவல்லிக்கு, உடனே மறுமொழி கூற முடியவில்லை!

''களைத்துப் போய்க் காணப்படுகிறீர்கள். சற்று இளைப்பாறிவிட்டுப் போகலாமே?'' என்றாள். குமுதவல்லி குமரனுக்குச் சோழ இளவரசி மீது ஏற்பட்டுள்ள காதலை அவள் கேள்விப்பட்டாள். குமரனுடைய வாழ்க்கையாவது நிம்மதியும், பொலிவும் பெற்றுத் திகழட்டுமே என்று மனத்திலேயே வாழ்த்திக் கொண்டாள்.

''களைப்பும் - சோர்வும் பார்த்தால் காரியம் நடக்காது. உடனே - இப்போதே புறப்படு. எல்லை வரையில் நடந்து வா. பிறகு குதிரை மீது உட்கார வைத்தே அழைத்துச் சென்றுவிடுகிறேன்'' என்று உற்சாகத்துடன் கூறினான் குமரன்.

''எங்கே போக வேண்டும்; இரவு வேளையிலா?'' என்று கேட்டாள் குமுதவல்லி.

''விடிவதற்குள் திருக்கோவலூர் சென்றுவிட வேண்டும். பொழுது விடியும்போது, உனக்கும் விடிவு ஏற்பட்டுவிடும். சிவசேகரப் பண்டிதர் திருக்கோவலூரில் தான் இருப்பார். அவரிடம் உன்னை ஒப்படைத்தால், என் பணி அத்துடன் முடிவடைந்து விடும்! பிறகு என் மற்றொரு கடமை தொடங்கும்.''

''பொழுது விடிந்து போகக் கூடாதா?''

''ஒவ்வொரு நொடியும் பெரும் மாறுதல்களைச் செய்ய வல்லது! சோழ நாட்டைப் பெரும் ஆபத்து நெருங்குகிறது. அதன் சூத்திரதாரி சிவசேகரப் பண்டிதர் வடிவில் இருக்கும் என் நண்பர். அவரது எண்ணத்தை நிறைவேறாமல் செய்தால் தான் சோழ நாடு பிழைக்கும்!

''வலிமை மிக்க சோழ நாட்டைத் துறவி ஒருவர் அழித்துவிட முடியுமா?''

''முடியாது என்று எனக்குத் தெரியும். ஆனால், துறவிக்குத் தெரியாது. அதை அவருக்கு எடுத்துச் சொல்லி ராஜ்ய விவகாரங்கள் உங்களுக்கு வேண்டாம் எனக் கூறி, உன்னுடன் இன்ப வாழ்வு நடத்த மீண்டும் சேர நாட்டிற்குச் செல்லுமாறு செய்யப் போகிறேன். இவை எல்லாம் உடனே செய்தாக வேண்டும். பிறகு காலந் தாழ்த்தினால் திட்டம் குலைந்துவிடலாம்.

தாமதிக்காதே உடனே புறப்படு'' என்று துரிதப்படுத்தினான் குமரன்.

''என் ஆருயிர்க்கு எதிராக என்னைப் பயன்படுத்தலாமா நீங்கள்?'' என்று குமுதவல்லிக் கேட்டவுடன், குமரன் திடுக்கிட்டான்.

''என்ன... என்ன...? அச்சுதனை அடைய வேண்டும் என்ற ஆசை உனக்கில்லையா? நாடு பல கடந்து நகரம் பல கடந்து, காட்டிலும் மேட்டிலும் நடந்து, இதுவரை உயிர் பிழைத்து நீ வந்தது. அவரை மீண்டும் அடைவதற்காக அல்லவா?''

''ஆமாம். ஆனால், அவருக்கு என்னால் தோல்வி ஏற்படுவது நியாயமா?''

''அச்சுதனுக்குத் தோல்வி ஏற்படுவது நிச்சயமே. தோல்வியுடன் அவமானமும் சேர்வது உறுதி. இன்னும் சொல்லப் போனால் அவரை உயிருடன் நீ பார்க்க முடியும் என்பதே சந்தேகம்தான். நான் சோழ சக்கரவர்த்தியிடமிருந்து வருகிறேன். துறவியை உடனே சிறைப்படுத்தி தஞ்சைக்கு அனுப்புமாறு சக்கரவர்த்தி உத்தரவிட்டிருக்கிறார். தஞ்சையில் அவருக்குக் கிடைக்கும் தண்டனை என்னவாக இருக்கும் தெரியுமா? மரண தண்டனை...!''

குமரன் இவ்வாறு கூறும்போது குமுதவல்லியின் உடல் சிலிர்த்தது!

''உனது ஆருயிர்த் தெய்வத்தைத் தேடிவந்த செல்வத்தை இழக்க நீ விரும்புகிறாயா? அவர் எடுத்த காரியத்தில் தோல்வியுற்றாலும் அவருடன் சேர்ந்து வாழ விரும்புகிறாயா? சொல் குமுதவல்லி; சீக்கிரம் சொல்... என் கடமையை நான் உடனே செய்தாக வேண்டும். உன்னையும், உன் தெய்வத்திடம் சேர்த்தாக வேண்டும்; சீக்கிரம் சொல்'' என்று பரபரப்புடன் கூறினான் குமரன்!

''திருக்கோவலூர் வரை வந்து சிரமப்பட வேண்டியதில்லை குமரா, தெய்வம் தன் பக்தையைத் தேடி வந்துவிட்டது'' என்ற குரல் இருளிலிருந்து கேட்டது! துறவி சிவசேகர பண்டிதர் இதுவரை சத்திரத்தின் ஒரு மூலையில் இருளில் மறைந்து இருந்தவர், அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்.



அத்தியாயம் 30

கடைசிச் சந்திப்பு

பேரிடி இடித்து, இருளையே அழித்துவிடும்படியான மின்னல் மின்னி, அந்தப் பகுதியையே அஞ்சச் செய்த வேளையில், சோழ நாட்டு இளவரசன் இராஜாதித்தன், வைதும்பன் மகள் என்ன சொல்லப் போகிறாளோ எனும் திகிலும் ஆவலும் கலந்தவாறு அவள் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தான். நல்ல வார்த்தை சொல்லாமல் அவள் இருக்க மாட்டாள் என்ற நம்பிக்கை அவனிடம் நிறைந்திருந்தது.

தன்னை விரும்புவதாக கூறாமல் வேறு என்ன கூறப் போகிறாள்? தன் மீது இளவரசிக்கு அன்பு இல்லாவிடில் திருநாவலூருக்கு அவள் ஏன் வரப்போகிறாள்? சோழர்களை விரோதியாகக் கருதும் வைதும்பனிடம் அனுமதி பெற்று அவள் வருகிறாள் என்றால் கோயில் குடமுழுக்கினைக் காணும் ஒரே எண்ணம் மட்டும்தானா அவளுள்ளத்தில் ஏற்பட்டிருக்கும்? பெண்கள் தங்கள் உள்ளக்கிடக்கையை உடனே புலப்படுத்திவிடுவர் என்று எதிர்பார்க்க முடியாது. மெல்ல மெல்லத்தான் மன மலர் விரியும்; மகரந்தம் சிந்தும்.

கல்யாணிதேவியின் செவ்விதழ்கள் மூடின. அந்த அறையிலிருந்த மங்கலான ஒளியில் இதழ்களின் துடிப்பை, விழி இமைக்காமல் இராஜாதித்தன் நோக்கியவாறிருந்தான். ''என் தந்தை சோழ சக்கரவர்த்திகள் வைதும்பனுடன் மணவினைத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதில் எந்தவிதத் தடையும் கூறமாட்டார். வருங்காலத்துச் சோழ அரியணையை அலங்கரிக்கும் அதிர்ஷ்டம் தங்களுக்கு ஏற்படப் போகிறது... சொல்லுங்கள் தேவி. நாளைப் பொழுது விடிந்தால் கோயில் குடமுழுக்கு விழாவின் போது நிறைந்த உள்ளத்துடன் நான் இருப்பேன். குதூகலத்துடன் நடமாடுவேன். வீரர்களுக்குப் பரிசுப் பொருட்களை அள்ளி வழங்குவேன். சொல்லுங்கள் தேவி...'' என்று கூறினான்.

கல்யாணிதேவியிடமிருந்து விம்மல் ஒலி எழுந்தது. வேதனையைப் பிரதிபலிக்கும் அந்த ஒலியைத் தொடர்ந்து ''இளவரசே! என்னை மன்னித்துவிடுங்கள். சோழ நாட்டின் அரசியாக ஆகும் பாக்கியம் எனக்கு இல்லை'' என்ற சொற்கள் மெல்ல உதிர்ந்தன.

இராஜாதித்தன் திடுக்கிட்டான் என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட முடியாது. வெளியே இடிக்கும் இடி அவன் இதயத்தை தாக்கியது போல் திடுக்கிட்டான்; துடித்தான்.

''தேவி என்ன சொல்கிறீர்கள்! என்னைச் சோதனை செய்வதற்காக இவ்வார்த்தை பேசுகிறீர்களா? என்னைச் சித்திரவதை செய்து துடிப்பதைப் பார்த்து மகிழப் போகிறீர்களா? சொல்லுங்கள் தேவி! தங்களை முதன் முதலில் பார்த்த உடனேயே என் உள்ளத்தை இழந்தேன். தங்களுக்காக என் உயிர் நண்பனையே சந்தேகப்பட்டேன். என் பாதையில் அவன் குறுக்கிடுவானோ என்று எண்ணி, அவனைத் தஞ்சைக்கு அனுப்பினேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...'' இராஜாதித்தன் குரலில் ஏமாற்றத்துடன் கூடி வேதனை பொங்கி வழிந்தது.

கல்யாணி தேவி நடுநடுங்கிவிட்டாள் என்றே கூறவேண்டும். விளக்கொளியில், சோழ இளவரசர் முகத்தில் நொடிக்கு நொடி மாறும் உணர்ச்சியைக் கண்டு என்ன சொல்வதென்றே அவளுக்குத் தோன்றவில்லை. இளவரசரின் இதயத்தில் மையலைத் தோற்றுவித்தது அவளுடைய குற்றமா? வயதுக்கு மீறிய வளர்ச்சி காட்டு மலர் போன்ற வனப்பின் குற்றம் என்று சொல்லலாமா என்று எண்ணினாள். விழிகள் செய்த குறும்பு என்று கூறலாம் என்று எண்ணினாள். நொடிக்கு ஒரு முறை முத்துப் பல்வரிசை காட்டி நகைத்ததுதான் காரணம் என்று எடுத்துச் சொல்ல விரும்பினாள்.

வைதும்பராயன் மகள் என்ன மறுமொழி கூறப்போகிறாளோ என்ற ஆவலுடன் இராஜாதித்தன் அவள் முகத்தையே நோக்கியவாறிருந்தான். தன்னுடைய உள்ளக் கிடக்கையை அவள் அறிந்தவுடனேயே நாணமுற்றிருப்பாள் என்று அவன் எண்ணினான். நாணத்தால் சிவக்கும் அந்த முக அழகைக் காண வேண்டும் என்னும் பேரார்வம் அவனுள் எழுந்தது. மங்கிய விளக்கொளியில் அதை ரசிக்க முடியாதே எனும் ஏக்கமும் குடிகொண்டது. அவள் முகத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்த இராஜாதித்தன் அந்த அறையின் வெளிச்சத்தை மேலும் அதிகரிக்க விரும்பினான். தூண்டா விளக்கின் திரியைத் தூண்டிவிடும்போது

உள்ளத்தின் உணர்ச்சியும் தூண்டப்பட்டது போல் துடித்து நின்றது. வெளியே பேரிடி இடித்தது, இருளையே ஒழித்து விடுவதுபோல், வானத்தையும் பூமியையும் அளக்கும் வகையில் மின்னல் மின்னியது. சாளரத்தின் வழியே மின்னல் ஒளி புகுந்து அவர்களிருவரது முகமாறுதலைப் புலப்படுத்தியது.

கல்யாணி தேவியின் செவ்விதழ்கள் மெல்லத் துடித்தன. நல்ல வார்த்தை கூறுவாள் என்றே இராஜாதித்தன் எண்ணினான். ஆனால், கல்யாணிதேவியோ மெல்லிய குரலில், ''இளவரசே'' எனத் தொடங்கினாள்.

இராஜாதித்தனுக்கும் இதுவரையில் ஏற்படாத ஒருவித படபடப்பு தோன்றியது. ''சொல்லுங்கள் தேவி! தைரியமாகச் சொல்லுங்கள். ஏன் இப்படி நடுங்குகிறீர்கள் இளவரசி! நான் ஒன்றும் தவறாக நடந்து கொள்ளமாட்டேன். இந்த நேரத்தில் இங்கு நான் வந்ததே முறையன்று.

''ஆனால் ஏதோ ஓர் வேகம் என்னை உந்தித் தள்ளியது. ஓடி வந்தேன். மழை என்று பாராமல் விரைந்து வந்தேன். சற்று முன்பு நான் கூறினேனே அதை எண்ணி அஞ்சுகிறீர்களா. தங்களைச் சிறைப்படுத்தி விடுவேனோ என்று பயப்படுகிறீர்களா? மாட்டேன்; அவ்வாறு செய்யமாட்டேன். வைதும்பனைப் பணிய வைக்கத் தங்களைப் பணயம் வைத்துவிட மாட்டேன்.

''ஆனால், தாங்கள் நினைப்பதை என்னிடம் சொல்லி விடுங்கள். தேவி... நான் உற்சாகத்துடன் இந்த உலகில் வாழ வேண்டும் என்று விரும்புகிறீர்களா? அல்லது நடைப் பிணம்போல் வாழ்க்கையைப் பயனற்ற முறையில் கழிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா. தஞ்சையிலுள்ள ஒரு பெண்ணுக்காக சபதம் ஒன்று செய்து அதை நிறைவேற்றக் கண்ணுங்கருத்துமாக இருக்கிறேன். திருக்கோவலூரில் உள்ள மற்றொரு பெண்ணின் அழகில் மயங்கி எது வேண்டுமானாலும் செய்யத் துடிதுடித்து நிற்கிறேன். முந்தியவள் என் சகோதரி; நீங்களோ -'' என்று இராஜாதித்தன் கூறினாள்.

கல்யாணி தேவி அவன் எதிர்பாராத விதமாக அவன் பாதங்களில் விழுந்து, ''இளவரசே! என்னையும் தங்களுடைய மற்றொரு சகோதரியாகக் கருதுங்கள். திருக்கோவலூருக்குத் தாங்கள் வந்தீர்கள்; தங்கள் நண்பர் வந்தார். என் உள்ளத்தில் புரிய முடியாத சலனம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால், இங்கே வந்த பிறகு கலங்கிய இதயத்தில் ஒரு தெளிவு பிறந்தது. கொந்தளித்த கடலில் ஓர் ஆழம் ஏற்பட்டு அமைதி உண்டாகியது.

காணும் தோற்றத்தின் மீதெல்லாம் காதல் கொள்ளும் பேதமையைத் துறந்துவிட வேண்டும் என்ற மலர்ச்சி ஏற்பட்டது.

''தங்களைக் காணும்போது என் உள்ளத்தில் தெய்வம் ஒன்றைத் தரிசிக்கும் மகிழ்ச்சிதான் ஏற்பட்டதே அன்றி, சோழ நாட்டு அரசியாவதற்குத் தங்களை மணக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றவில்லை. ஆனால் அதற்கு மாறாக, இளவரசே, என்னையும உங்களுடைய மற்றொரு சகோதரியாகக் கருதி என்னைத் தங்கள் நாட்டுப் புண்ணியத் தலங்களுக்கு அழைத்துச் செல்லுமாறு கேட்க ஒரு துடிப்பு ஏற்படுகிறது. அதனால், இளவரசர் அவர்களே, தங்களுடைய உள்ளத்தில் தவறான எண்ணம் உதயமாகுமாறு செய்ததற்கு மன்னித்துவிடுங்கள். என்னை உங்கள்.. '' என்றாள்.

இராஜேந்திரன் [illegible] தேவி. போதும்! போதும்! அதற்கு [illegible] நிறுத்துங்கள்'' என்று கூவினான். [illegible] இருவரையும அவன் இரு கரங்களாலும் பொத்திக் கொண்டான்.

ஃ ஃ ஃ

அவன் செவிகளில் எங்கோ பெரும் கடல் பொங்கி வருவது போன்ற ஓசை எழுந்தது. பெண்ணையாறும், வெள்ளாறும் ஒன்று சேர்ந்து பிரவகித்தெழுந்து அந்த ஊரையே சூழ்ந்துவிட்டது போன்ற பிரமை ஏற்பட்டது. போர் வீரர்கள் அணிவகுத்து ஏந்திய வேலுடன் உயர்த்திப் பிடித்த கேடயத்துடன் செல்வது போன்ற தோற்றம் கண்முன்னே எழுந்தது. குஞ்சரங்கள் அசைந்தாடி [illegible] போலவும், பரி மேல் தளபதிகள் ஆரோகணித்து [illegible] போன்றும், புலிக்கொடி பறக்கத் தேர் [illegible] தோன்றியது. யாரோ அவனை [illegible] உணர்வினின்று தவறி எங்கோ பெண் [illegible] இருக்கும் அவனைப் படைத்தளபதிகள் அழைக்கிறார்கள்.

இராஜேந்திரன் திடுக்கிட்டான்; திகைத்தான். வெளியே [illegible] து. ஆனால் இடியின் முழக்கம் மட்டும் கேட்டுக் [illegible] ருந்தது. எங்கோ மழை இன்னும் பெய்து கொண்டிருக்கிறது என்பதற்கு அறிகுறியாகக் குளிர்ந்த காற்று வீசியது. உறக்கம் சரிவர இல்லாமையாலும், நனைந்த ஆடை [illegible] பிழிந்து காய வைக்காததாலும் குளிர் காற்றாலும் [illegible] இது [illegible] வேதனையாலும் [illegible]

வெளியே யாரோ பேசும் குரல் கேட்டது. யாருடனோ வாக்குவாதம் செய்யும் சந்தடி எழுந்தது. "இளவரசரைப் பார்த்தாக வேண்டும். தடுப்பதற்கு நீங்கள் யார்?" என்று கடுமையான குரலில் பேசுவதும் கேட்டது.

இராஜாதித்தன் கூர்ந்து கவனித்தான். குதிரை படைத் தளபதியின் குரல் அவன் செவிகளில் தெளிவாக விழுந்தது.

"கடைசியாக ஒருமுறை கேட்கிறேன்; தங்கள் முடிவைப் புனராலோசனை செய்யுங்கள்" என்று இராஜாதித்தன் குழந்தை போல் கல்யாணி தேவியைக் கேட்டதும், அவள் மீண்டும் கைகூப்பித் தெய்வத்தை வணங்குவது போல் வணங்கினாள்.

இராஜாதித்தன் 'போய் வருகிறேன்' என்று கூடச் சொல்லிக் கொள்ளாமல் வெளியே பாய்ந்தான். சற்று முன்பு அவன் கண்டது கனவன்று; அங்கே சோழ நாட்டுப் படைகள் அணிவகுத்து நின்று கொண்டிருந்தன.

முடியூரிலிருந்து தம்பி அரிஞ்சயன் வந்திருந்தான். அவனருகே கொடும்பாளூர் இளவரசன் இளங்கோ நின்று கொண்டிருந்தான். கடல் போன்ற சோழப் படைகள் அணிவகுத்து நின்றிருந்தன. மழையிலும் குளிரிலும் அவர்கள் போர்க்கோலம் பூண்டிருந்தது ஏதோ ஆபத்தைப் புலப்படுத்தியது. இராஜாதித்தனின் பார்வை "என்ன விசேஷம்?' என்று கேட்பது போலிருந்தது.

"இளவரசே! இரட்டர்கள் படை காஞ்சியை நோக்கி வந்து கொண்டிருக்கிறதாம்! வடபெண்ணையைத் தாண்டிவிட்டதாக ஒற்றன் நள்ளிரவில் வந்து கூறினான். தங்களுக்கும் தெரிந்திருக்கும் என எண்ணினேன். அதனால் என் வசம் உள்ள வீரர்களை உடனே புறப்படச் செய்து தங்களுடைய பாடி வீட்டிற்கு வந்தேன்..." என்று அரிஞ்சயன் கூறினான்.

முன்யோசனையுடன் தன் சகோதரன் இவ்வளவு படைகளுடன் முடியூரில் தங்கியிருந்தது நல்லதுதான் என்ற எண்ணம் இராஜாதித்தனுக்குத் தோன்றியது. அவனுடன் கொடும்பாளூர் இளவரசன் எப்போது சேர்ந்து கொண்டான்?

இராஜாதித்தனின் பார்வையினின்று யூகித்து உணர்ந்து கொண்ட அரிஞ்சயன், "அண்ணா, கொடும்பாளூர் வேளிர்க் குலம் என்றுமே நமக்கு உதவுவதில் முன் நிற்பவர்கள். ஆனால் சிறிது காலமாக அவர்களுக்குச் சக்கரவர்த்தியிடம் சிறிது மனத்தாங்கல்" என்று கூற முற்பட்டபோது கொடும்பாளூர் இளவரசன் குறுக்கிட்டு, "அதையெல்லாம் எல்லாம்...

நினைவுபடுத்துகிறீர்கள்? ஏதோ ஒரு ஆசையால் எழுந்த கோபம்; அவ்வளவுதான். அந்தக் கோபமும் சோழ நாட்டுடன் நெருங்கி வர முடியவில்லையே என்ற வேதனையால் விளைந்ததுதான்'' என்றான்.

இராஜாதித்தனுக்கு அவர்கள் பேச்சின் மறுபுறம் புதைந்திருக்கும் சம்பவம் புரியவில்லை. கொடும்பாளூர் வேளிர்கள் என்றுமே சோழர்களிடம் அன்பு கொண்டவர்கள் என்பது அவனுக்குத் தெரியும். ஈழத்துப் படையெடுப்பின்போது கொடும்பாளூர் குறுநில மன்னர் செய்த உதவி போர்க்களத்தில் காட்டிய தீரம் அவன் நெஞ்சை விட்டு மறையவில்லை. பிறகு எப்போது கோபமும், வருத்தமும் ஏற்பட்டன? ஈழத்து வெற்றிக்குப் பின் கொடும்பாளூர் சிற்றரசர் சோழ் குலத்துடன் மணவினைத் தொடர்பு விரும்பினார். வீரமாதேவியை இராட்டிரகூட மன்னர் கோவிந்தனுக்கு மணம் புரிந்து கொடுத்ததில் அவருக்கு ஏமாற்றம்தான். அதனால் தஞ்சைக்கு அவ்வப்போது வராமலும், பராந்தக சக்கரவர்த்தியின் உடல் நலங்கூட விசாரிக்காமலும் இருந்துவிட்டார். இப்போது அவரது மனத்தாங்கல் மாறிவிட்டதென்றால் ஏதோ நடந்திருக்க வேண்டும்.

''ஆம், இளங்கோ! ஆசையால் எழுந்த கோபம்தான். எனக்கு முன்பே தெரிந்திருந்தால் நான் இந்தப் பிரச்சனையை எளிதாகத் தீர்த்திருப்பேன். என் சகோதரி அனுபமாவுக்கு உன்னைவிட நல்லதொரு மணவாளன் கிடைக்கப் போகிறானா? வீரமா தேவியின் கணவரைப் போன்றல்லாது நீ நாட்டை என்றுமே காப்பாற்றுவாய் என்று தெரியும்?'' அரிஞ்சயன் கூறும்போது இராஜாதித்தன் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போலிருந்தது.

அனுபமாவைக் கொடும்பாளூர் இளவரசனுக்கு மணம் புரிந்து தர முடிவு செய்துவிட்டார்களா? சக்கரவர்த்திகள் என்னை யோசனை கேட்பதில்லை என்ற திடமான முடிவுக்கு வந்து விட்டாரா? என் மீது அவருக்கு நம்பிக்கைக் குறைந்துவிட்டதா? என் உயிர் நண்பன் வெள்ளங் குமரனுக்கு அனுபமாவை மணம் புரிந்து அவனை வாணகப்பாடி நாட்டிற்கு அரசனாக்க எண்ணினேன். என் எண்ணம், செய்கை எதுவுமே வெற்றி யடையாதா?

இராஜாதித்தன் உடலில் ஓடும் இரத்தம் திடீரென்று கொதித்தது. ''எங்கே எதற்காக அனைவரும் வந்து நிற்கிறீர்கள்? வடபெண்ணையைத் தாண்டி இரட்டர்கள் படை வந்ததென்றால் உடனே விரைந்து செல்ல வேண்டியதுதானே?'' என்று கூவினான்.

''தங்கள் கட்டளையில்லாமல்...'' என்று அரிஞ்சயன் மெல்லக் கூறியவுடன் இராஜாதித்தன் சீறினான். என்னைக் கேட்டா எல்லாம் நடக்கின்றன? என் யோசனை கேட்டா முடியூரில் வந்து தங்கினீர்கள். அனுபமாவின் திருமண விஷயமாக என்னைக் கேட்டா முடிவு செய்தீர்கள். இப்போது மட்டும் என் கட்டளை ஏன்? பெண்ணை ஆற்றைக் கடக்கும் பகைவர் படையைத் தடுத்து நிறுத்த என் கட்டளை வேண்டுமா? வீராதி வீரர்களான உங்கள் யோசனைப்படியே செய்யுங்கள்! என் முன்னே நிற்காதீர்கள். போங்கள்! நான் குடமுழுக்கு விழாவை முடித்துக் கொண்டு நன்றிகெட்ட சோழ நாட்டிற்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு எங்காவது போகிறேன்... இனியும் நிற்காதீர்கள்... சோழ நாட்டு மானங்காக்க உடனே செல்லுங்கள். ஓடுங்கள்! பறந்து செல்லுங்கள்'' என்றான், சொல்லிவிட்டுத் திரும்பிக் கூடப் பாராமல் வேகமாகத் தன் இருப்பிடம் நோக்கி விரைந்தான்.

அவனுடைய சீற்றம் மெல்ல மெல்ல அடங்கிக் கொண்டிருக்கும்போது எதிர்பாராதவிதமாகத் துறவி சிவசேகர பண்டிதர் தன்னுடைய முன் திட்டப்படி அவன் எதிரே தோன்றினார். கடைசி முறையாக அவனைச் சந்திக்கப் போவதாக வைதும்பனிடம் கூறிவிட்டு வந்த துறவி, இராஜாதித்தன் கல்யாணிதேவியிடம் பேசி கொண்டிருக்கும்போது மறைந்துதான் இருந்தார். அவன் அங்கிருந்து சென்றவுடன் கல்யாணிதேவியிடம் மிகவும் முக்கியமான செய்தி ஒன்றைக் கூறிவிட்டு இராஜாதித்தனைச் சந்திக்க விரைந்தார். அவருடைய தந்திரங்களின் கடைசி ஆயுதம் அப்போது பயன்பட இருந்தது.



அத்தியாயம் - 31

துறவி சொன்ன செய்தி

அந்த வேளையில் சிவசேகர பண்டிதர் அங்கு வருவார் என்று குமரனும், குமுதவல்லியும் எதிர்பார்க்கவில்லை. குமுதவல்லிக்குத் தன்னுடைய இதய தெய்வத்தைக் கண்டு விட்டோமே என்று குதூகலம் இருந்தாலும், இரவு நேரத்தில், புதியதொரு இடத்தில் குமரனோடு பேசிக் கொண்டிருக்கும்போது அவர் தன்னைக் காண நேர்ந்துவிட்டதே என்ற வருத்தமும் அவள் மனதில் தோன்றியது. குமரனுக்கும் வியப்புத் தாங்க வில்லை. துறவி ஏதாவது புஷ்பக விமானம் வைத்திருக்கிறாரா? இங்கிருந்து அங்கும் அங்கு இருந்து இங்கும் ஒரு நொடியிலே செல்ல...'' என்று குமரன் ஆச்சரியப்பட்டான்!

''ஒன்றுமே பேசாமல் நிற்கிறீர்களே இருவரும் ஏதாவது பேசக் கூடாதா?'' என்று உதட்டிலே விஷமப் புன்னகை தெரியக் கேட்டார் துறவி!

குமரன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''பேசாமல் என்ன? கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல், நீங்கள் வந்துவிட்டதை நினைத்துச் சந்தோஷப் படுவதா? அல்லது வேதனைப்படுவதா? என்ற எண்ணத்தால் மௌனியாகி நான் நிற்கிறேன். தங்களை இங்கு கண்டதில் குமுதவல்லிக்கு மிகவும் சந்தோஷம். ஆனால், எனக்கோ வேதனைதான். தங்களைத் திருக்கோவலூரில் சந்தித்துத் திடீரென்று உங்கள் முன்னால் குமுதவல்லியை நிற்க வைத்து அதிர்ச்சி அடையச் செய்ய வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்த என் திட்டம் பாழாகிப் போய்விட்டதே என்ற வேதனைதான் எனக்கு!'' என்றான்.

துறவி சிரித்தார். அந்தச் சிரிப்பிலே எகத்தாளம் பொங்கி நின்றது. 'திருக்கோவலூரில் வந்து திகைக்க வைப்பானேன்? இங்கேயே அந்த நாடகத்தை நடத்தலாமே! குமரா, குமுத வல்லியைக் கண்டதனாலேயே நான் திகைத்துவிடமாட்டேன்! திக்பிரமையடைய மாட்டேன்'' என்றார் துறவி.

''தெரியும், தெரியும். தங்கள் உணர்ச்சியையே மிக உறுதி ஆக்கி இதயப் பாறைக்குள்ளே விதைத்து விட்டவராயிற்றே!

குமுதவல்லி உங்களுக்கு வேண்டாதவள். சத்தியம் செய்து கொடுத்து உறுதி கூறிக் கையடித்துக் கொடுத்ததையெல்லாம் கதையாக்கிவிட்டீர்கள். அத்துடன் அவளை ஒழித்துக் கட்டுவதற்கும் துணிந்து முனைந்து விட்டீர்கள். இவற்றை யெல்லாம் நான் இந்தக் கற்சுவர் எதிரே சொல்வதால் என்ன பலன்? நாலு பேர் எதிரே அதைச் சொல்லி உங்களுடைய கொட்டத்தை அடக்க வேண்டும்; தலைகுனிய வைக்க வேண்டும் என்று எண்ணியவன்தான். அது நிறைவேறாததால் இப்போது நான் தலைகுனிந்து நிற்கிறேன்.

''இதில் மட்டும்தானா தலைகுனியப் போகிறாய் குமரா? இன்னும் எவ்வளவோ காத்துக் கிடக்கின்றன! வீணே இந்த நேரத்தில் இங்கே என்னுடன் வாதாடிக் கொண்டிருப்பதை விடத் திருக்கோவலூருக்கு விரைந்து செல். அங்கே வெறிச்சோடிக் கிடக்கும் கோட்டையையும் ஆள் நடமாட்டமில்லாமல் பயங்கரமாகப் பாழ்பட்டுக் காட்சியளிக்கும் அரண்மனையையும் போய்ப் பார்த்து நிம்மதியாகப் பெருமூச்சு விடு.''

துறவி இவ்வாறு சொன்னவுடன் குமரனுக்குப் பரபரப்பு மிக அதிகமாகியது. துறவி பொய் சொல்லமாட்டார்! ஆனால், தந்திரமான வார்த்தைகளைக் கூறுவார். கவனத்தைத் திருப்பு வதற்குக் கற்பனையாகக் கதைகளைக்கூட கூறுவார். ஆனால், அவற்றைப் பொய் என்று எடுத்துக் கொண்டுவிட முடியாது. திருக்கோவலூர் பாழடைந்து விட்டதென்றால் வைதும்ப மகாராஜா என்ன ஆனார்? அவருடைய மகள் கல்யாணிதேவி திருகோவலூருக்கு வந்தார்களே... அவள் திரும்பிப் போய் விட்டாளா? அல்லது இளவரசர் இராஜாதித்தன் முன் திட்டப்படி அவளைச் சிறை செய்துப் பணயம் வைத்து அதற்காகக் கோட்டையை முற்றுகையிட்டு பாழ்படுத்தி விட்டாரா? இன்னும் அங்கு என்னென்ன நடந்ததோ? அதை அறிய ஆவல் கொண்டான் குமரன்.

ஆனால், எப்படிக் கேட்பது? பராந்தக அரசருடைய கட்டளையுடன், அவன் அங்கு விரைந்து வந்ததோ எங்கிருந்தாலும் துறவியைச் சிறைப்படுத்தி உடனே தஞ்சைக்கு அனுப்ப வேண்டியது. எதிரே நிற்கிறார் துறவி. நொடியிலே அவர் மீது பாய்ந்து அவரைக் கயிற்றாலோ, சங்கிலியாலோ பிணைத்துத் தஞ்சைக்கு அனுப்பிவிடலாம். ஆனால், அது அவ்வளவு எளிதாக முடியுமா என்பதைச் சற்று யோசித்துத்தான் செய்ய வேண்டும். சோழ நாட்டின் மிக முக்கியமான இடத்தில் துறவி தைரியமாக வந்திருக்கிறார் என்றால் அவர் தன்னந் தனியராய் வந்திருக்கமாட்டார்! அவருக்கு உதவியாக

வைதும்பனின் ஆட்களோ அல்லது பூதுகனுடைய வீரர்களோ, மாறுவேடத்தில் வந்து மறைந்திருக்கலாம்.

அதனால் அவசரப்படாமல் தந்திரத்தைப் பயன்படுத்தி வாளின் வலிமையைச் சிறிது நேரம் மறந்து, காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டியதுதான் முறை என்ற எண்ணத்தில் குமரன் துறவியினிடமிருந்து செய்தியைச் சாமர்த்தியமாக அறிந்து கொள்வதற்காக, திருக்கோவலூரின் அழிவிற்கு என்னுடைய கைங்கர்யமும் சேராமல் போய்விட்டது பற்றி நான் மிக வருந்துகிறேன். தஞ்சைக்கு நான் சென்றதே உங்களுடைய சதித்திட்டத்தால்தான். இல்லாவிட்டால் இவ்வளவு நேரம் திருக்கோவலூரை வீழச் செய்து, கங்க நாட்டை அழிக்கப் படைகளுடன் சென்றிருப்பேன். இந்த விஷயத்தில் உங்களுடைய தந்திரம்தான் பலித்தது என்று நான் உறுதியாகக் கூறுவேன். திருக்கோவலூர் அழிந்தால் என்ன? என் இளவரசருக்குக் கல்யாணிதேவி கிடைத்துவிட்டால், அதுவே போதுமானது'' என்றான் குமரன். இந்த வார்த்தைகளைக் கொண்டு துறவியிடமிருந்து மற்ற உண்மை நிகழ்ச்சிகளைப் பெற்றுவிடலாம் என்று எண்ணினான்.

துறவி நகைத்தார். உலகப் பற்றைத் துச்சமாக எண்ணிப் பிறருக்குத் தீங்கு செய்யாத குழந்தைபோல் வாழ வேண்டிய அறக்காவலரான அந்தத் துறவி சோழ நாட்டை வீழச் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்ததன்றி தன்னுடைய வெற்றியைக் குமரனிடம் கூறும்போது குதூகலமாகவும் இருந்தார். ''குமரா! கல்யாணி தேவி உங்கள் இளவரசருக்கு அவ்வளவு எளிதில் கிடைத்துவிட மாட்டார்கள். சோழ நாட்டை விட்டு வெற்றித் திருமெல்ல மெல்ல வெளியேறிக் கொண்டிருக்கும் பொழுது செந்திருவும் கலைத்திருவும் ஒன்று சேர்ந்ததுபோல் தோற்றமளிக்கும் இளவரசி, சோழ இளவரசரை அடைந்து விடுவாளா? அப்படி அடைவதற்காகவா நான் இருக்கிறேன்; வைதும்பரின் மகள் இராஜாதித்தனை மணந்து கொண்டு விட்டாள் என்றால், வெற்றி சோழ நாட்டின் பக்கம் திரும்பிவிட்டது என்றுதானே பொருள்?

''அவ்வளவு புத்திக் கூர்மையும் திட்டமிடும் செயலும் என்னை விட்டு அகன்றுவிட்டனவா? உன்னிடம் சபதம் செய்து வந்ததை நான் மறந்துவிட்டேனா? குமுதவல்லியை மறைத்து வைத்திருந்து தக்க சமயத்திலே திடீரென்று அஸ்திரம்போல் என் மேல் நீ ஏவிவிடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் உன்னுடைய எண்ணங்களை வெற்றியடைய நான் விட்டுவிடுவேனா! குமரா! நீ தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டிய நேரம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. ஆனால்,

உன்னைப் பார்க்கும் போது, ஐயோ பாவம் என்றுதான் தோன்றுகிறது! நாம் இருவரும் சேர நாட்டைச் சேர்ந்தவர்கள். சேர நாட்டிலேயே தஞ்சமடைந்த பாண்டியரின் கண்ணீரைக் கண்டு உள்ளம் நொந்தவர்கள்!

''ஆனால், நீ ஏனோ பாண்டியரின் துயர் தீர்க்க முற்பட வில்லை. உன் பிறந்த நாட்டின் மேல் விருப்பமில்லாமல் சோழ நாட்டை வந்து அடைந்துவிட்டாய். அது ஒன்றே என்னுடைய வைராக்கியத்தை மேலும் வளர்த்தது. நான் எடுத்த செயலில் உறுதியுடன் நடக்க வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. வாள் வலிமை மிக்கதா? அல்லது அறிவு வலிமை உடையதா? என்பதை மட்டும் நிறைவேற்றுவதற்காக நான் இந்தப் போட்டியில் இறங்கவில்லை.

''சோழ மன்னரின் வெறியை அழிப்பதற்காக நாடு பிடிக்கும் பேராசைக் கொண்ட பராந்தகனது நச்சு எண்ணத்தைப் பொசுக்குவதற்காகத்தான்! வாள் எடுத்துப் போராடவும் என்னிடம் தோள் வலிமையுண்டு. ஆனால், வாளின் வெற்றி நிலைக்காது! அறிவின் வெற்றிதான் என்றும் நிலைக்கும் என்பதை நிலைநாட்ட விரும்பும் நான், அப்படிச் செய்யலாமா? குமரா! இங்கே நின்றுகொண்டு பேசிக்கொண்டிருக்கும் நேரத்திற்குள் குதிரையைத் தட்டிவிட்டால் விடிவதற்குள்ளாகத் திருக் கோவலூருக்குப் போய்விடலாம். திருக்கோவலூரில் நடந்தது என்ன என்பதை நான் சுருக்கமாகச் சொல்கிறேன். அதைச் சொல்ல வேண்டிய கட்டாயமும், அவசியமும் கிடையாது.

''துடிக்கும் இதயத்துடன் வழிப் பயணம் செய்யும்போது நீ ஆவலுடனும், பரபரப்புடனும் செல்வாய். அந்தப் பரபரப்பைக் குறைக்க எனக்கு இப்போது ஆசை! ஆனால், நீ என் உயிர் நண்பன். இதோ இருக்கும் குமுதவல்லியின் காதல், நம் நட்பை ஒரு சமயம் பிரித்தது. இப்போது மீண்டும் இதே குமுதவல்லிக்காக நாம் இருவரும் வீணாக விரோதித்துக் கொள்ள வேண்டாம்! திருக்கோவலூரை விட்டு வைதும்பராயனும், கல்யாணிதேவியும் திருவலம் கோட்டைக்குச் சென்றுவிட்டனர். திருநாவலூர்க் கோயிலில் நிகழும் குடமுழுக்கு விழாவிற்குக் கல்யாணிதேவி தந்தையின் அனுமதி பெற்றுத்தான் வந்திருந்தாள்! அங்கே உங்கள் இளவரசர் அவள் மீது மோகம் கொண்டு தன் காதலை ஏற்றுக் கொள்ளுமாறு நடுநிசியில் வந்து வேண்டினார்.

''ஐயோ பாவம்! இளவரசியின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாதவர், அவர்! இளவரசியின் உள்ளம் எனக்குத் தெரியும். அவள் போக்கே விசித்திரமானது அவள் பார்வையினின்றும் பழக்கத்தினின்றும், விநயமாகப் பேசும் பேச்சினின்றும், புன்னகை புரிந்து வெண் பல் தெரியப் பேசுவதினின்றும்

அவளைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. அவள் உள்ளம் குழந்தை உள்ளத்தைக் காட்டிலும் மென்மையானது. தெய்வீக மனப்பான்மை மிக்க குழந்தையுள்ளம்! பற்பல திருத்தலங்களைக் கண்டு களிக்க வேண்டுமென்று பருவ நிலையில் உள்ள ஒரு பெண் எண்ணினாள் என்றால் அவள் உள்ளம் எவ்வளவு பக்குவம் அடைந்திருக்கும் என்பதை உங்களால் ஏன் நினைத்துப் பார்க்க முடியவில்லை?

''உங்கள் இளவரசர் அவளைத் தவறாக நினைத்துவிட்டார். தன்னை அவள் காதலிக்கிறாள் என்று எண்ணிவிட்டார். திருக்கோவலூர் கோட்டையை விட்டு வெளியே வராமலேயே காட்டு மலர்போல மலர்ந்த வெளிச்சத்தைக் காணாமலே இருந்த அவளுக்குத் திருநாவலூர்க் கோயில் கதிரவனைப்போல் காட்சி அளித்தது.

''அவள் திருவிழாவைக் கண்டுகளிக்க விரும்பினாள். தந்தையிடம் அனுமதியும் கேட்டாள். ஆனால், அவள் உள்ளத்தில் ஒரு வேளை வாலிப அழகுடைய உங்கள் இருவர் அழகும் சலனத்தை ஏற்படுத்தியிருக்கலாம். குடமுழுக்கு விழாவைக் காண வந்தவளை, உங்கள் இளவரசர் குழைந்து பேசித் தன் காதலை ஏற்க வேண்டினார். அவள் மறுத்துவிட்டதால் இளவரசரின் இதயத்திலே பேரிடி! இடிமேல் இடி விழுந்ததுபோல் மற்றொரு சம்பவமும் நேர்ந்தது. இராட்டிரகூட நாட்டு அரசன் கன்னரத்தேவன் எனப்படும் கிருஷ்ணதேவன் பெரும் படைகளுடன் முன்னறிவிப்பு ஏதும் இல்லாமலே வடபெண்ணை ஆற்றைக் கடந்துவிட்டான் என்கிற செய்தி அரிஞ்சயனுக்கு எட்டியிருக்கிறது.

''அவன் தன் படைகளுடன் திருநாவலூருக்கு விரைந்து வந்திருக்கிறான். அந்த நிசிவேளையில் இளவரசரைத் தேடியிருக்கிறான். மழை வேறு கொட்டிக் கொண்டிருக்கிறது. இடையிடையே ஏற்படும் மின்னலையும், இடியையும் அவன் பொருட்படுத்தவில்லை. உங்கள் இளவரசரே அவசரப்பட்டு எதையும் செய்துவிடக் கூடியவர் என்பதை முன்கூட்டியே அறிந்த பராந்தக சோழ சக்கரவர்த்தி மிகவும் சாமர்த்தியமாக திருநாவலூருக்கு அருகே முடியூரில் படைகளுடன் அரிஞ்சயனைத் தங்கச் செய்திருக்கிறார்.

''அவனை மட்டுமா படைகளுடன் அனுப்பியிருந்தார்? கொடும்பாளூர் இளவரசனும் அரிஞ்சயனுடன் வந்திருந்தான். தங்களுடைய ஆற்றலைக் காட்டப் போர் வீரர்கள் மிகவும் துடிக்கின்றனர். ஒற்றர்கள் மிகவும் சாமர்த்தியசாலிகள், வடபெண்ணையை நெருங்கும் பொழுதே செய்தியை இளவரசருக்குக் கொண்டு சேர்த்து விட்டனர்.

இளவரசரைத் தேடி வந்த அரிஞ்சயன், வைதும்பர் மகளுடன் இராஜாதித்தன் இருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான்; திகைத்தான். ஆனால், வெளிக்குப் புலப்படுத்திக்கொள்ளவில்லை. உடனே படைகளை அணி வகுத்துச் செல்ல அனுமதி கேட்டான், தங்கள் இளவரசர் இராஜாதித்தனிடம்!அரிஞ்சயன் அருகே நின்ற கொடும்பாளூர் இளவரசனை நோக்கிய இளவரசர் கோபத்தை விடுத்துச் சோழ நாட்டுடன் எப்பொழுது கொடும்பாளூர் சேர்ந்தது என்பதை அறிய விரும்பினார்.

அங்குதான் பேரதிர்ச்சி காத்திருந்தது. அவனுக்கு மட்டுமா பேரதிர்ச்சி. ''குமரா! இப்பொழுது நான் சொல்லப் போவது உனக்குக் கூடத்தான். உன் இதயத்தை உறுதிப்படுத்திக் கொள். கொடும்பாளூர் இளவரசனை உன்னுடைய உயிர் நண்பன் இராஜாதித்தனுக்கு அரிஞ்சயன் அறிமுகப்படுத்திச் சொன்னான்: ''கொடும்பாளூர் இளவரசர் சோழ நாட்டிற்கு உதவுவதற்காகப் படைகளுடன் விரைந்து வந்துவிட்டனர். அதற்குப் பரிசாக தன் சகோதரி அனுபமாவை மணம் புரிந்து கொடுப்பதற்குச் சக்கரவர்த்தி அனுமதி தந்துவிட்டார்'' என்று தெரிவித்தான்.

அதைக்கேட்ட இராஜாதித்தன், ''என்ன மனநிலையில் அமர்ந்திருப்பான் என்பதை என்னால் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை.'' இராஜாதித்தன் கோபத்துடன் கூறியது மட்டும் என் காதில் விழுந்தது. ''என்னை எதற்கும் கேட்க வேண்டாம். உடனே அணிவகுத்துச் செல்லுங்கள், பகைவரை முறியடித்துச் செல்வதற்குப் பறந்து செல்லுங்கள்'' என்று கூறியதுதான் என் காதில் விழுந்தது.''

இப்படிக் கூறிவிட்டுத் துறவி பொங்கிவரும் விஷமத்தனமான சிரிப்பை அடக்கிக்கொண்டார். அவனுடைய உள்ளத்தை ஊடுருவிக் கொடிய விழிகளால் குமரனை நோக்கினார். தான் திகைப்பிலே மூழ்கிச் சோர்ந்து போவது போன்ற உணர்ச்சி குமரனுக்கு ஏற்பட்டது. தான் பற்றியிருக்கும் கற்றூண் இற்று விழுந்து தளர்ந்துவிட்டது போல் குமரனுக்குத் தோன்றியது.

தன் எதிரே நிற்கும் துறவியும், குமுதவல்லியும் திடீரென்று தட்டாமாலை சுற்றிச் சுழன்று ஆடுவது போல் அவனுக்குத் தோன்றியது. 'அனுபமாவைக் கொடும்பாளூர் இளவரசருக்கு மணம புரிந்து கொடுக்கச் சக்கரவர்த்தி தீர்மானித்துவிட்டார். தாம் தஞ்சையிலிருந்து இப்பொழுதுதானே வருகிறோம். நமக்கு ஒரு செய்திகூடத் தெரியவில்லையே? நம்மிடம் சக்கரவர்த்தி எவ்வாறு குழைந்து குழைந்துப் பேசினார்? ஐயோ, என்ன தவறு செய்துவிட்டோம்; தஞ்சைக்குச் சென்ற பொழுது அனுபமாவை ஒரு கண நேரமாவது சந்தித்திருக்கக்கூடாதா?' என்று குமரன் வேதனையுடன் எண்ணினான்.

துறவி தன் குரலை மாற்றிக்கொண்டு, ''குமரா! உனக்கு அதிர்ச்சி ஏற்படும்படியான செய்தியை நான் சொல்லியிருக்கக் கூடாதுதான். என்றாலும் என்னுடைய பழைய நண்பனான உனக்கு உண்மையைச் சொல்லிவிடுவதுதான் நல்லது என்று எனக்குத் தோன்றியது. போராட்ட காலம் இது. காதலில் தோல்வி அடைந்ததை மனத்திலே வைத்துக்கொள்ளாதே. மேலும் நடக்க வேண்டியதைக் கவனி.

''உன்னுடைய உயிர் நண்பரும், சோழ நாட்டு இளவரசருமான இராஜாதித்தன் திருநாவலூரிலே சோர்ந்து போய்க் கோயில் மண்டபமே கதி என்று உட்கார்ந்திருக்கிறார். நீ சென்றுதான் அவரைத் தேற்றிப் போர்க்களத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். இவ்வளவு செய்தியையும் உன்னிடம் சொல்வதே கூடாது. என்றாலும், வேதனையுடன் இருக்கும் உனக்குச் சற்றுத் தெம்பு ஊட்டுவதற்காக நான் சில இரகசியங்களைச் சொல்கிறேன். இராட்டிரகூடர்களின் படைகள் பெண்ணை ஆற்றைக் கடந்து நேரே காஞ்சிபுரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. அவர்களைத் தடுத்து நிறுத்த அரிஞ்சயனும் கொடும்பாளூர் இளவரசனும் படைகளுடன் செல்லும்பொழுது, கங்க நாட்டுப் பூதுகன் பின்புறமாக வந்து சுற்றி வளைக்கப் போகிறான். இதை தடுத்து நிறுத்துவது உன் பொறுப்பு.

''யுத்த இரகசியத்தை நான் சொல்லிவிட்டேன் என்றாலும், தடுத்து நிறுத்தி வீரப்போர் செய்து அவர்களை வெல்ல வேண்டியது உன் கடமையல்லவா? அதற்கு நான் உதவ முடியாதல்லவா? இவ்வளவு அவசரமும் ஆபத்தும் நிறைந்த சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கும் பொழுது, நீ ஏதோ குமுதவல்லியை என் முன்னே நிறுத்திக் கலங்குமாறு செய்துவிடலாம் என்று வீண் மனப்பால் குடிக்கிறாய்.

''ஒருவேளை, போரிலே உன் சாமர்த்தியத்தினால் கங்கரும் இராட்டிரகூடர்களும் தோல்வி அடையலாம். உன் சபதத்தால் நீ அப்பொழுது வென்றவனாவாய். நிச்சயமாய் நான் அப்பொழுது உன்னைத் தேடிவந்து தோல்வியை ஒப்புக் கொள்கிறேன். துறவி வேடத்தைக் களைந்துவிடுகிறேன். இப்பொழுது நீ ஒரு கணம்கூடத் தாமதப்படுத்தாமல் செல்'' என்றார்.

துறவி சொன்ன செய்தி குமரனை ஒரு கண நேரங்கூட அங்கு நிற்க வைக்கவில்லை. இராஜாதித்தன் இருக்குமிடமான திருநாவலூர் நோக்கி குமரன் விரைந்தான்.



அத்தியாயம் 32

உயிர்ப் பிச்சை

இராஜாதித்தன் திருநாவலூரில் புதியதாகக் கட்டப்பட்டிருந்த கோவிலின் உள் மண்டபத்தில், ஊண் உறக்கமின்றிப் பிரமை பிடித்தவன்போல் அமர்ந்திருந்தான். கடைசியாகத் துறவி அவனைச் சந்தித்தபொழுது அவரைக் கண்டவுடன் அவனுக்குக் கோபம் வரவில்லை! அரிஞ்சயன் வந்து அவனைச் சந்திப்பதற்கு முன்பாகத் துறவி வந்திருந்தார் என்றால், நிச்சயமாக அவன் உடை வாளால் அவர் சிரத்தைக் கொய்திருப்பான்; அதற்கு மாறாகத் துறவி வந்து அவன் எதிரே நின்றபொழுது ஒன்றுமே பேசாமல் மௌனமாக அவரையே நோக்கியவாறு இருந்தான்.

''இளவரசே! மனவேதனையுடன் நீங்கள் இருக்கும் இந்த நேரத்தில் தங்களைச் சந்தித்து விடைபெற்றுக் கொண்டு செல்வதற்காக வந்திருக்கிறேன். என் மீது தங்களுக்குக் கோபம் இருக்கலாம். ஆனால் உங்களுக்கு நான் நல்லதையே செய்தேன். இதோ, இருக்கும் இந்தக் கோயில், சுந்தரர் இளம்பிராயத்தில் வழிபட்ட கோயில். இதைப் புதுப்பித்துப் பெரிதாக்கிக் குடமுழுக்கு செய்விக்கும் அளவிற்குத் திருப்பணி செய்த பெருமை தங்களுடையது அன்றோ!

''இதைச் செய்வித்த தங்களுடைய தொண்டு காலா காலத்திற்கும் மறையாமல் இருக்கப்போகிறது. தங்களுக்கு அழியாப் புகழைத் தேடிக் கொடுப்பதற்கு அடிகோலியவன் நான்தான் என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்! அந்த வகையில் என்னை நீங்கள் பாராட்டி வேறு ஏதாவது நான் உங்களுக்கு விரோதமாகச் செய்திருந்தால் மறந்துவிடுமாறு கேட்டுக் கொள்வதற்காகத்தான் வந்தேன்.

''நான் அணிந்திருப்பது காவி உடை, வளர்த்திருப்பது சடையும் முடியும். என் இதயத்தைவிட்டு தெய்வபக்தி கடுகளவுகூட மாறவில்லை. நான் மிகவும் கடினமாக விரதம் பூண்டிருந்து தெய்வத்தைக் காணும் சக்தியைப் பெற்றேன். என்றாலும், நான் ஒரு சபதம் செய்துவிட்டு வந்ததனால் சோழ

நாட்டிற்கு விரோதமான, சில செயல்களைச் செய்யும் வழியை மேற்கொண்டேன்.

''நான் உங்கள் முன்னே இதோ நிராயுதபாணியாகத்தான் நிற்கிறேன். ஆயுதம் இன்றிப் பாதுகாப்பில்லாத ஒருவனை நீங்கள் ஒன்றும் செய்யமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். அதிலும், மிகவும் குழம்பிப்போன உள்ளத்துடன் இருக்கிறீர்கள். வைதும்பராயன் மகள் உங்கள் காதலை ஏற்றுக்கொள்ளவில்லை.

''உங்களுடைய தந்தை உங்களை நம்பவில்லை, உங்களுடைய நண்பருக்கு உங்கள் விருப்பப்படி உங்கள் சகோதரியைத் திருமணம் செய்துவைக்க முடியவில்லை. அத்துடன் நாடிழந்து தஞ்சைபிலே வந்துத் தஞ்சம் புகுந்த உங்கள் உயிருக்கு உயிரான சகோதரியின் வாழ்க்கையை மலரச் செய்விக்கும் எண்ணம் இன்னும் உங்களுக்கு வெற்றியடைய வில்லை.

''எதிரிகளின் படை திரண்டு வந்து கொண்டிருக்கிறது. நீங்களோ இங்கே சோர்வுற்று இருக்கிறீர்கள். உங்களுடைய சகோதரரின் படைகள் காஞ்சியை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றன. போர்க்களத்தில் என்ன முடிவு நேருமோ தெரியாது. ஆனால், நான் ஒன்று மட்டும் சொல்வேன். இப்பொழுதுங்கூட ஒன்றும் நேரமாகிவிடவில்லை.

''ஒரு வார்த்தை சொல்லுங்கள். போர்ப்பூசலை விட்டொழித்து அமைதியாக வாழ்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள். நான் இப்பொழுதே பயங்கரமாக நடக்கவிருக்கும் போரை நிறுத்தி விடுகிறேன். வைதும்பனுடைய மனத்தை மாற்றி, அவனையும் தங்களிடம் வந்து மண்டியிடச் செய்து அவனுடைய மகளைத் தங்களுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும்படியாகச் செய்கிறேன். வைதும்பனைச் சுதந்திர அரசனாக்குங்கள்.

''கங்க நாட்டாருடன் என்றுமே போர் புரிய மாட்டோம் என்று உறுதி கொடுங்கள். இராட்டிரகூட நாட்டில் உங்கள் சகோதரியை மீண்டும் அரியணையில் ஏற்றி வைக்கப் பிரயத்தனப்பட மாட்டோம் என்றும் வாக்குக் கொடுங்கள். போர் நின்றுவிடும். பூசலும் மறைந்துவிடும். கல்யாணிதேவி உங்களுக்குக் கிடைப்பாள். சோழ நாட்டின் பரப்பளவில் இம்மியளவு கூடக் குறையாது!''

என்ன துணிவு இருக்க வேண்டும் இவ்வாறு அவர் கூற? தன் வார்த்தையில் இராஜாதித்தன் மயங்குவான் என்றே துறவி இப்போது எதிர்பார்த்தார்.

இராஜாதித்தன் பயங்கரமாகச் சிரித்தான். சோர்வுற்றிருந்த முகத்தில் ஒரு வெறித்தனமான ஒளி ஏற்பட்டது. ''துறவியாரே? கபட சந்நியாசியே! இராவணன் போன்ற பொய் வேடம் பூண்ட மாயச் சந்நியாசியே! உம்முடைய உபதேசம் போதும். சோழ நாட்டை மாற்றானிடம் மண்டியிடச் சொல்லும் அளவுக்கு மமதை கொண்ட நீர், இன்னும் தண்டிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் உமது காவி உடை ஒன்றுதான்!

''சோழ இளவரசன் ஒரு துறவியை - நிராயுதபாணியான ஒரு துறவியை வெட்டிக் கொன்றான் என்ற பழி எனக்கு வந்து சேர வேண்டாம். யுத்த பூமியிலே வாளுக்கு வாள் மோதிப் பலப்பரீட்சையில் எதிரியின் தலையைத் துண்டாடும் சக்தி பெற்ற சுத்த வீரனான நான், நரித்தனம் படைத்த உங்களை இந்தப் புனிதமான வாளுக்கு இரையாக்க வேண்டாம்; நீங்கள் போய்விடுங்கள் இங்கிருந்து. அமைதியாகக் கோவிலிலே வீற்றிருக்கும் என்னுடைய சிந்தையைக் கலைக்காதீர்கள். கல்யாணிதேவி மனம்மாறி, அவளே வந்து என்னை அடைய வேண்டுமேயொழிய, பயமுறுத்தியோ, அல்லது உடன்படிக்கை செய்து கொண்டோ அவளை நான் கரம் பிடிக்க மாட்டேன்.

கல்யாணி தேவியின் உள்ளத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பெண்ணுக்குரிய காதல் உணர்ச்சி அவளிடம் இற்றுப் போய்விட்டது. என்னைக் கண்டு அவளுக்குப் பிடிக்கவில்லை. வேறு யாரையாவது நேசிக்கிறாளோ என்பதையெல்லாம் கண்டுபிடிக்க முடியவில்லை. தானே மலராத மலரை மலர வைப்பது தவறு. தானே கனியாத கனியைப் புகைபோட்டுப் பழுக்க வைப்பது சுவைக்காது. இப்பொழுது நான் காதல் தோல்வியினால் உற்சாகமிழந்து உட்கார்ந்திருக்க வில்லை.

என்னுடைய சகோதரிக்கு மீண்டும் புதிய வாழ்வு அளிக்க வேண்டும் என்று சபதம் செய்த என்னுடைய சபதம் என்ன ஆகுமோ என்ற கவலையுடன் நானிருக்கிறேன். சபதத்தை நிறைவேற்றாது தஞ்சைக்குத் திரும்ப மாட்டேன். நான் இங்கேயே இந்தக் கோவிலிலேயே, கோழையைப் போல உட்கார்ந்திருக்க மாட்டேன். என் தந்தை என்னை நம்பாமல் என் சகோதரனைப் படைகளுடன் அனுப்பிவிடவில்லை. என் தந்தை என் மீது அபார நம்பிக்கை உடையவர். நான் வேளை அறியாமல் அவசரப்பட்டு நடவடிக்கை எடுத்துவிடப் போகிறேனோ என்று அஞ்சித்தான் அவர் எனக்குத் துணையாகப் படைகளை அனுப்பினார். என்னை அலட்சியம் செய்யக் கூடியவனாக என் சகோதரன் இருந்திருந்தால் என் கட்டளைக்காக அவன் வந்திருக்கக்கூட மாட்டான்.

''நான் அவனை முன்னேறிச் செல்ல அனுப்பிவிட்டேன். என் இதயத்தைச் சமனப்படுத்திக் கொண்டு புகைந்து கொண்டிருக்கும் இந்த எரிமலையைச் சற்றுத் தணித்துச் சோர்வுற்றிருக்கும் நரம்புகளுக்குப் புதுத் தெம்பை அளித்து நான் புறப்படுவேன். அதற்குள் கல்யாணிதேவி இங்கே சிறைப்பட்டிருப்பாள். அதை அறிந்த வைதும்பராயன் இழந்த படைகளுடன் தென்பெண்ணை ஆற்றங்கரைக்கு வந்து சேர வேண்டும்.

''முன்னெச்சரிக்கையாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் என் வீரர்கள் இதற்குள் அவளைச் சிறைப்பிடித்திருப்பார்கள். துறவியாரே! நீங்கள் இன்னும் இங்கே நிற்பது தவறு. என்னைப் போன்ற தர்ம சிந்தனையும் போர்க்களத்திலே நீதிமுறை பார்க்கும் உள்ளமும் கொண்டவரை எங்கும் நீங்கள் காண முடியாது.

''படைவீரர்கள் தங்களைப் பார்த்தால் வெகுண்டெழுந்து தங்களைக் கொன்றுவிடுவார்கள். நீங்கள் போய்விடுங்கள். உங்களுடைய இராஜதந்திரம் எல்லாம் இத்துடன் முற்றுப் பெறட்டும். துறவி உடையிலே சோழ நாட்டிற்குத் துரோகச் செயல் புரியவந்த உங்களுடைய தீய குணம் இத்துடன் பொசுங்கி மறையட்டும், போய்விடுங்கள்.

''என் மனம் மாறும் முன்பே போய்விடுங்கள். உங்கள் மீது கோபம் ஏற்படாததற்குக் காரணம் நீங்கள்தான். சோழ நாட்டிற்குத் தீங்கு செய்தவராய் இருந்தாலும் மறைந்திருந்த சிவபக்தியை என் மனத்தில் மீண்டும் கிளர்ந்தெழச் செய்தீர்கள். என் பாட்டனார் ஆதித்த சோழரைப்போல் நானும் பல திருப்பணிகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்படச் செய்தீர்கள்.

என் கோயில் கட்டும் இந்த ஆர்வத்தை என்னிடம் ஏற்படுத்தியிராவிட்டால் திருநாவலூரில் வந்து படைகளுடன் நான் அமைதியாகவே தங்கியிருப்பேன். இதற்குள் திருக்கோவலூரைப் படுசூரணமாக ஆக்கியிருக்க மாட்டேனா? என்னுடைய துடிப்பைச் சற்று நிறுத்தி நல்லதொரு செயலைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எழச் செய்தது நீங்கள்தான்.

''அதற்காக நான் தங்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் செலுத்த வேண்டும். அந்த நன்றிதான் இப்போது தங்களுக்கு உயிர்ப்பிச்சை அளித்துத் தப்பியோட வழியைச் சொல்லிக் கொடுக்கிறது. சென்றுவிடுங்கள் துறவியாரே! நான் கண்களை மூடிக்கொண்டு சற்றுநேரம் கடவுள் தியானத்தில் இருந்து மீண்டும் விழிகளைத் திறப்பதற்குள் நீங்கள் இந்த இடத்தை விட்டுச் சென்றுவிடுங்கள்'' என்றான் இராஜாதித்தன்.

அதேபோல் அவன் கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்து மீண்டும் விழிகளைத் திறந்தபோது அங்கே சிவசேகர பண்டிதர் இல்லை. அவர் முன்பே திட்டமிட்டபடி சிதம்பரம் நோக்கி விரைந்து சென்றார். அங்குதான் இரவு வேளையில் குமரனைச் சத்திரத்தில் குமுதவல்லியுடன் சந்தித்தார்.

இமை திறந்த இராஜாதித்தன் தன் எதிரே துறவி இல்லாததையும் இரண்டு வீரர்கள் மிகவும் பயபக்தியுடன் ஏதோ சொல்வதற்காக நின்று கொண்டிருப்பதையும் கண்டான்! அவர்கள் மிகவும் நடுங்கும் குரலில், ''இளவரசே கல்யாணி தேவியைக் காணவில்லை. நாங்கள், அங்குச் செல்வதற்கு முன்பாகவே இளவரசி தன் தோழியருடன் இருள் பிரியும் முன்பாகவே புறப்பட்டுச் சென்றது தெரிய வந்தது. ஆனால், அவர்கள் அதிக தூரம் சென்றிருக்க முடியாது வீரர்களை அனுப்பிச் சிறைபிடித்து வந்துவிடலாம் என்று எண்ணினோம். ஆனால், நமது துரதிருஷ்டம் வெள்ளாற்றிலும், பெண்ணையாற்றிலும் என்றுமே காணாத அளவுக்கு வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இப்பொழுது என்ன செய்வது?'' என்று கவலையுடன் கேட்டனர்.

இராஜாதித்தன் திடுக்கிட்டான். ''பெண்ணை ஆற்றிலே வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறதா? அப்படியானால் இங்கிருந்து சென்ற நம் படைகளின் கதி?'' என்று கவலையுடன் கேட்டான் இராஜாதித்தன்.

வீரர்கள் நடந்த செய்தியைச் சொல்வதற்கே அஞ்சினர் ''ஆற்றைக் கடந்து சென்று கொண்டிருந்த நமது படைவீரர்கள் நடுவழியில் வெள்ளத்திலே சிக்குண்டனர். சிலர் நீந்திக்கரை சேர்ந்தனர். நீந்தத் தெரியாதவர்கள் வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டார்கள். பாதிப்பேர் அக்கரையிலே நின்று கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக் கிறார்கள்.

''அரிஞ்சயன் என்ன ஆனான்?'' என்று கவலையுடன் கேட்டான் இராஜாதித்தன்.

''அவர் நதியைக் கடந்துச் சென்றுவிட்டார். கொடும்பாளூர் இளவரசர் ஆற்றைக் கடக்க முடியாமல் இங்கே தங்கியிருக்கிறார்'' என்றனர் வீரர்கள்.

எடுத்த எடுப்பிலேயே இவ்வாறு அபசகுனம் போன்று படைகளுக்கு நேர்ந்ததைக் கேட்டு இராஜாதித்தன் மேலும் தாமதித்து உட்கார்ந்திருப்பது தகாது என்று முடிவு செய்து அந்த இரு வீரர்களையும் தன் உடன் வருமாறு கூறிப் பெண்ணை ஆற்றங்கரையை நோக்கி விரைந்தான்.



அத்தியாயம் - 33

நீயா? நானா?

வேகமாக வெள்ளம் பெருகியது போலவே, வேகமாகவே வெள்ளம் வடிந்துவிட்டது பெண்ணையாற்றில். கரியும் பரியும் முண்டியடித்து ஆற்றைக் கடந்தன. திருக்கோவலூரை நெருங்கிய பொழுது, கோட்டைக்கதவு திறந்திருந்ததைக் கண்டான் இராஜாதித்தன். கோட்டையின் மீது காவலர்களைக் காணோம். வைதும்பனுடைய கொடியும் பறக்கக் காணோம். யானை கட்டும் கொட்டடிகள் வெறிச்சோடிக் கிடந்தன. அரண்மனையில் ராஜ குடும்பத்தினர் வசிக்கும் இடங்களில் பணிப்பெண்களைக் கூடக் காணோம்.

இராஜாதித்தன் திடுக்கிட்டான். ''இந்த நகரத்திற்கு என்ன நேர்ந்தது? வைதும்பன் எங்கு சென்றான்? தோல்விக்கு அஞ்சி ஓடிவிட்டானா? அல்லது அருகேயுள்ள காட்டுக்குச் சென்று மறைந்து நிற்கிறானா? தந்திரமாக ஏதாவது காரியங்களைச் செய்வதற்குத் திட்டமிடுகின்றனா?'' என்று அவன் சிறிதுநேரம் சிந்தனை செய்தான். பிறகு கொடும்பாளூர் இளவரசன் தலைமையின்கீழ் வந்திருந்த படைகளைக் காஞ்சிபுரம் நோக்கிச் செல்லுமாறு கட்டளையிட்டுவிட்டு, சிறிதளவு படைகளுடன் தான் திருக்கோவலூரில் தங்கினான்.

வைதும்பனின் மாளிகைக்குள் நுழைந்து ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டு வரும்பொழுது, அவனுக்குக் கல்யாணிதேவியின் நினைவு மீண்டும் வந்தது. என்னதான் அவள் தன்னை ஏற்காது மறுத்துவிட்டாலும், அவனால் இதயத்தினின்று அவள் நினைவை மாற்ற முடியவில்லை.

அவன் மனம் வேறு நினைவுக்குத் திரும்பியது. திருக்கோவலூர் மாளிகையிலேயே ஓரிரண்டு நாட்கள் தங்கியிருந்து காஞ்சிபுரத்திலிருந்து வரும் செய்தியை அறிந்து அதற்குத் தகுந்தாற்போல் நடவடிக்கை எடுக்கலாம் என்ற எண்ணத்தில் வைதும்பன் பிரத்யேகமாக உபயோகித்த அறையிலேயே தங்கினான். காஞ்சிபுரத்திலிருந்து செய்திகளை விரைவாக வந்து தெரிவிக்கத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தான். மேற்குத் திக்கிலிருந்து மலைத்தொடரின் கணவாய் வழியாக

கங்க நாட்டுப் படைகள் வரும் அறிகுறி தென்பட்டால் உடனே அறிவிக்குமாறு ஒற்றர்களை நியமித்தான்.

வெள்ளங்குமரனைத் தந்திரமாகத் திருக்கோவலூரை நோக்கிச் செல்லுமாறு அனுப்பிவிட்ட பிறகு வெற்றிப் புன்னகை புரிந்தார் துறவி. குமுதவல்லிக்குத் தன்னுடைய காதலன் அச்சுதனைப் பல நாட்களுக்குப் பிறகு மீண்டும் சந்தித்ததால் மகிழ்ச்சிதான் என்றாலும், அவளால் அந்த இன்பத்தைப் பூரணமாக இதயத்தில் தேக்கி வைக்க முடியவில்லை. அவளை அறியாமலேயே சோழ நாட்டின்மீது ஒருவிதப் பாசம் தோன்றியது. சோழ நாட்டிற்கு விரோதமாகச் சதித்திட்டம் தீட்டித் தொண்டாற்றும் துறவியின் மனப்பாங்கு எரிச்சலை ஊட்டியது.

பூண்டிருக்கும் வேடத்திற்கும், கற்ற கல்விக்கும் தொடர்பில்லாமல் மற்றொரு நாட்டின் வீழ்ச்சியிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் அச்சுதனைக் கண்ணெடுத்தும் பாராமல் இருந்துவிட்டால் என்ன என்று அவளுக்குத் தோன்றியது.

குமுதவல்லியை எப்படியாவது தவிர்த்துவிட வேண்மென்று சிவசேகர பண்டிதர் ஒரு சமயம் எண்ணியது உண்மைதான், தஞ்சை நகரில் பராந்தக சோழரைத் தன்னுடைய தந்திரத்தால் கவர்ந்து வயப்படுத்திக் கொள்ளும் சமயத்தில் குமுதவல்லி தன்னைத் தேடி வந்துவிட்ட செய்தியை அறிந்தவுடன், தன் திட்டத்துக்கு அவள் இடையூறாக இருப்பாள் என்று எண்ணி அவளை ஒழித்துவிட வேண்டுமென அவர் எண்ணியதும் உண்மைதான்.

ஓடும் காவிரி வெள்ளத்தில் அவளைத் தூக்கிப் போடச் செய்வதற்கு அவருடைய உத்தரவும் ஒரு காரணமாக இருந்தது. ஆனால் குமுதவல்லி திடமான ஆயுளைக் கொண்டவள். அதனால் அவளுடைய உயிரைப் போக்கும் சக்தி துறவியிடம் இல்லை. ஆண்டவனுடைய சித்தத்தை மாற்றுவதற்கு அவர் யார்?

காலம் விதித்த விதி மீண்டும் அவளை அவர் எதிரே கொண்டு வந்து நிறுத்திவிட்டது. இப்பொழுது கூட அவள் கண்ணில் படாமல் அவர் தப்பியிருக்கலாம். அவளைச் சந்திக்காமலேயே அவர் மீண்டும் சேர நாடு நோக்கிச் சென்றிருக்கலாம். ஆனால் குமரனுடைய போக்கை மாற்றி அவனைத் திருக்கோவலூருக்கும், திருநாவலூருக்கும் அலைய வைத்து, இராஜாதித்தனை திருக்கோவலூரிலிருந்து பிரித்து தன்னந் தனியாகக் காஞ்சிபுரம் நோக்கிச் செல்லுமாறு செய்து சோழர்களுடைய பலத்தின் சக்தியைக் குலைக்க வேண்டுமென்ற அவருடைய திட்டத்தினால் மீண்டும் குமுதவல்லியைத் தில்லையில் சந்திக்கும்படியான நிலை ஏற்பட்டது.

குமுதவல்லியை அறவே வெறுத்துவிட வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு எள்ளளவுமில்லை. சோழர்கள் தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டால், அவர்களுடைய பலம் குன்றிச் சக்தி அடங்கியவுடன் அவர் தன்னுடைய காவி உடையைக் களைந்து மீண்டும் யௌவன புருஷனாக ஆகி, குமுதவல்லியின் காதலனாக மாறி, சேர நாடு சென்று அவளை மணம் புரிந்து கொள்ள வேண்டுமென்பதே அவர் திட்டம்.

ஆனால், அவ்வளவு எளிதில் அது நடந்துவிடக் கூடியதான சூழ்நிலை தோன்றவில்லை. துறவி குமுதவல்லியை வெகுநேரம் வைத்த கண் மாறாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

''விரிந்த செந்தாமரை மலரை வாஞ்சையுடன் பார்த்த விழிகளால், உதிர்ந்து போய்க் கருகிய ஒரு மலரைக் காண உங்களுக்கு வேதனையாக இல்லையா?'' என்றாள் குமுதவல்லி.

துறவி தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''இது அன்றாடம் மலர்ந்து அழியும் சாதாரண மலர் அன்று. மணம் நிறைந்த பொன் மலர் நீ. பொன் சுடச்சுடத்தான் ஒளிவீசும். இழுக்க இழுக்கக் கம்பியாக மாறும். மண்ணிலே புதைந் திருந்தாலும் தனது மாற்றுக் குறையாது. அதனால் குமுதவல்லி, உன் அழகு குறைந்துவிட்டதனால், உன் உள்ளத்தின் உருவமும் மாறிவிட்டது என்று நான் நினைக்க முடியுமா?'' என்றார்.

''என்னை எதிரே நிறுத்திவிட்டதானல் நீங்கள் இந்த வார்த்தையைச் சொல்லித்தானாக வேண்டியிருக்கிறது இல்லையா? இல்லாவிட்டால் நான் தங்களுடைய உறுதிகளையும் நினைவுப்படுத்த மாட்டேனா? தர்மம் என்றும், கடவுள் கிருபை என்றும் பேசிக் கொண்டிருக்கும் தங்களைச் சத்தியத்தைப் பற்றிக் கேட்டுக் கலங்க அடிப்பேன் என்பது உங்களுக்குத் தெரியாதா?''

''எனக்கு எல்லாம் தெரியும் குமுதவல்லி! நீ அவசரப்பட்டு விட்டாய். நான் எடுத்துக் கொண்டிருக்கும் காரியம் என் தாயை விட, என் உயிரை விட, உயிருக்குயிரான உன்னைவிட முக்கியமானது. அதனால்தான் தாயையும், பிறந்த நாட்டையும் உன்னையும் மறந்துத் திரிந்தேன்.

''இன்னும் சொல்லப்போனால் என்னையே நான் துறந்து பூர்வாசிரமப் பெயரை மாற்றி ஆடை ஆபரணங்களைக் களைந்து காவி உடையுடன், கல்லிலும் முள்ளிலும் நடந்து, பெரும் சக்கரவர்த்தியின் எதிரே மிகத் தைரியத்துடன் பேசும் ஒரு பணியை மேற்கொண்டிருப்பேனா? அது வெற்றியடையும் வரை நீ காத்திருக்கக் கூடாதா? எனக்கு நேர் எதிராகச் சபதம் செய்து, உறுதி கூறிவிட்ட குமரனுடன் சேர்ந்து என்னுடைய திட்டங்களைத் தவிடு பொடியாக்கப் பார்க்கிறாயே, இதுதான் உண்மைக் காதலின் அடையாளமா?''

''நீங்கள் நினைப்பது தவறு. உங்களுடைய நிட்டத்தின் குறுக்கே நிற்க நான் வரவேயில்லை. உங்கள் ஒருவருக்காக என் பிறந்த வீட்டை மறந்தேன். அன்பே உருவான தாயை மறந்தேன். உங்கள் பாதத் தாமரையிலேயே விழுந்து கிடப்பதற்காக ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஓடி வந்தேன். உங்களையே தாயாகவும் தந்தையாகவும் தெய்வமாகவும் கருதிவிட்ட என்னை நீங்கள் பிரிந்து சென்றீர்கள். கடும் நோயால் உயிர் பிழைப்பேனோ மாட்டேனா என்று சாவின் எல்லைக்கோட்டில் நான் கிடந்த பொழுது நீங்கள் என்னைக் கவனிக்காமல் சென்றீர்கள். ஆனால், என்னால் தங்களை அப்படி மறக்க முடியவில்லை.

''நீங்கள் எங்கிருந்தாலும் நானே உங்கள் காலடியில் கிடப்பதற்காகப் புறப்பட்டு வந்தேன். உங்களுடைய துறவு நிலைக்குப் பங்கம் ஏற்படாமல் உங்கள் திட்டத்திற்குக் குறுக்கே நிற்காமல் என் விழிகளால் உங்களைக் கண்டு கொண்டிருந்தால் போதும் என்ற எண்ணத்துடன் ஓடிவந்தேன். என்னை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. நீங்கள்தான் அவசரப்பட்டு விட்டீர்கள். காலனிடம் கைப்பிடித்து என்னைக் கொடுப்பதற்கு முனைந்து விட்டீர்கள். இப்பொழுதும்கூட சொல்கிறேன்; எனக்கு உங்கள் காலடியில் இடம் கொடுத்தால் போதும். உங்கள் இதயத்தில்கூட வேண்டாம். என்னை முற்றிலும் மறந்து உங்கள் நினைவிலிருந்து அழிந்துவிட்டால்கூடக் கவலைப் படமாட்டேன். ஆனால், உங்கள் நிழலில் என்னைத் தங்கியிருக்க மட்டும் அனுமதி கொடுங்கள்.

''தாங்கள் என்னை வெறுத்து ஒதுக்கினாலும் நான் உங்களைப் பின்தொடராமல் இருக்க மாட்டேன். நான் இனி எங்கே சென்று வாழ்வேன்? வாழ்ந்தால்தான் யாருக்குப் பயன்? உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. சகல சாஸ்திரங் களையும் கற்றதோடன்றி தெய்வீகச் சக்தியைப் பூரணமாகப் பெற்றுவிட்ட உங்களுக்கு நான் என்ன சொல்லப் போகிறேன்? என்னை உங்களுடைய பரிவாரத்தில் ஒரு பணியாளாக ஏற்றுக் கொள்ளுங்கள் அதுபோதும்'' என்று குமுதவல்லி கூறி விம்மினாள்.

அவளுடைய உருக்கமான பேச்சை வேறு ஒருவர் கேட்டிருந்தால் மனம் கலங்கியிருப்பார்கள். ஆனால், இதயத்தை எப்பொழுதோ கல்லாக மாற்றிக் கொண்டுவிட்ட துறவி அவளுடைய கண்ணீருக்குக் கலங்கவில்லை. அவளுடைய உருக்கமான வார்த்தைகளைக் கேட்டு நெகிழ்ந்துவிடவில்லை. அவருடைய எண்ணமெல்லாம் அவளிடமிருந்து அந்தச் சமயத்தில் விடுபட்டுப் போவதிலேயே இருந்தது. ஆனால்,

ஒரேயடியாக அவளைத் தவிர்த்து விட வேண்டுமென்ற எண்ணம் அவருக்கில்லை.

இன்னும் ஒரு காரியம் முடியவேண்டியது மீதி இருக்கிறது. அதுதான் முக்கியமான ஒன்றாகும். அதுதான் சோழர்களுடைய தலைவிதியைக் கணிக்கும் ஜீவ மரணப்போர். அந்தப் போர் காஞ்சியில் நடைபெறுமோ? திருக்கோவலூரில் நடைபெறுமோ? அல்லது தஞ்சைக்கே வந்து புலிக்கொடியை இறக்கிவிடக் கூடிய போராக அமையுமோ என்று அவர் எண்ணிக் கொண்டிருந்தார். அதுவரையில் குமுதவல்லி சற்று அமைதியாக - பொறுமையாக இருந்தால், கடைசியில் மிக்க மகிழ்ச்சியுடன் அவர் அவளை ஏற்றுக்கொள்வார்.

''குமுதவல்லி, நான் உனக்குக் கொடுத்த உறுதியை எல்லாம் மறக்கவே மாட்டேன். வாய்மையில் இருந்து மீளுபவனாகவும் உன்மத்தனாகவும் மாறமாட்டேன். ஆனால் நான் எடுத்துக் கொண்ட காரியத்தை முற்றிலும் முடிக்காமல் உன்னை என்னோடு அழைத்துச் செல்வதென்பது இயலாத காரியம். அதனால் நான் ஒன்று சொல்கிறேன். நீ இங்கிருந்துப் புறப்பட்டு நேரே கரூருக்குச் சென்றுவிடு. நான் இன்னும் பதினைந்து தினங்களில் உன்னை வந்து ஏற்றுக்கொள்கிறேன். இது நிச்சயம்.

''என்னை நீ உயிருக்குயிரானவன் என்று நினைப்பது உண்மையானால், உன்னுடைய தெய்வம் என்று என்னை நீ கருதுவது நிச்சயமானால், நான் வெற்றிப் புருஷனாக வருவதை நீ விரும்புகிறாயா? அல்லது சோர்வுற்றுச் சபதத்திலே தோல்வியுற்று உலகத்தைவிட்டே சென்றுவிடக்கூடிய வெற்றுடல் தாங்கிய அச்சுதனாக வருவதை விரும்புகிறாயா? அதனால் நான் சொல்வதை நீ சற்றுக் கவனமாகக் கேள். பிறருடைய யோசனையைக் கேட்டுத் தவறான வழியில் செல்லாதே. நாளைக் காலையில் நீ இங்கிருந்துப் புறப்பட்டு விடு. நான் தவறாமல் உன்னை குறிப்பிட்ட நாளில் வந்து சந்திப்பேன்'' என்றார்.

குமுதவல்லி ஏதும் மறுமொழி பேசவில்லை. அவளிடமிருந்து விம்மும் ஒலிதான் மிஞ்சியது.

துறவி இனிமேலும் நின்று கொண்டிருப்பது சரியல்ல என்ற எண்ணத்தில் குமுதவல்லியிடமிருந்து திட்டவட்டமான முடிவை எதிர்பார்த்தவர்போல் எழுந்து நின்றார். காற்றிலே அலைபாயும் சுடர் விளக்கினைப்போல் அவளுடைய நெஞ்சம் அலைந்தது. அவரும் நிலை கொள்ளாமல் அந்த அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார்.

கடைசியில் பொறுமையை மீறியவராக, ''குமுதவல்லி! நான் சொல்வதை நீ ஏற்றுக்கொள்ள மாட்டாயா? கடைசியாகச் சொல்கிறேன். நான் சொல்வதை நீ கேட்கவில்லையென்றால்

எனக்கு உன்னைவிட என் கொள்கைதான் முக்கியம். நான் எடுத்துக்கொண்ட திட்டம்தான் முக்கியம் என்ற எண்ணத்தால் உன்னை நான் அறவே மறந்துவிடுவேன். அதனால் நான் செய்த சபதத்திலிருந்து மீறிய குற்றத்திற்கு ஆளானாலும் கவலை கொள்ள மாட்டேன்.

''பாவத்திற்குரிய தண்டனை அடுத்த பிறவியிலேதான் வந்து அடையப் போகிறது. ஆனால், இந்தப் பிறவியிலேயே நான் எடுத்துக் கொண்ட காரியம் தோற்றுவிட்டால் என்னால் பலருக்குத் தொல்லையும், தோல்விகளும் கிடைத்துவிடும்; அதை நான் ஒப்பமாட்டேன். இன்னும் சில விநாடிகள் அவகாசம் கொடுக்கிறேன். என் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு செல்வ தென்றால் செல். இல்லாவிட்டால் இங்கிருந்து நான் சென்று விடுகிறேன்'' என்றார்.

குமுதவல்லி அதற்குச் சம்மதிக்கவில்லை என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள்.

துறவி ஆக்ரோஷத்துடன் துள்ளித் திரும்பி, ''நீ செல்ல வில்லையென்றால் இதோ நான் செல்கிறேன். இனிமேல் என்னை நீ அடுத்த பிறவியில்தான். ஒருவேளை கடவுள் அருள் இருந்தால் சந்திக்கலாம்!'' என்று சொல்லிவிட்டு அந்த அறைக் கதவைக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டு வெளியேற முயன்றவர், சற்றுத் திகைத்துப் பின்னுக்குத் திரும்பினார்.

சோழ வீரர்கள் இருவர் அவரை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்களுக்குத் தலைவர்போல் நின்ற சோழ நாட்டு ஒற்றர் படைத் தலைவன், ''துறவியாரே! நீங்கள் ஏன் இங்கிருந்து செல்ல வேண்டும்? உங்கள் இருவரையும் மிக இராஜமரியாதையுடன் பராந்தக சோழ சக்கரவர்த்தி அழைத்து வருமாறு உத்தரவிட்டிருக்கிறார். வெளியே சிவிகை நிற்கிறது. உங்கள் திட்டம் நிறைவேறுவதற்காக நீங்கள் கஷ்டப்பட வேண்டாம். உங்கள் அருமைக் காதலியின் மனம் நோகச் செய்ய வேண்டாம். தஞ்சையில் உல்லாச மாளிகையில் நீங்கள் இராஜ உபசாரத்துடன் வாழ நீங்கள் விரும்பினால் இந்தத் துறவி உடையை நீக்கி விட்டுக் குமுதவல்லியை மணந்து கொண்டு சௌகரியமாகக் காலம் கழிக்கலாம். அதனால் கவலைப்படாமல் எங்களுடன் வாருங்கள்'' என்று வினயமாகக் கூறினான்.

வெளியே எட்டிப் பார்த்தார் சிவசேகரப் பண்டிதர் இரண்டு சிவிகைகள் நின்று கொண்டிருந்தன. அதற்குக் காவலாக வெளியே மற்றும் இரண்டு வீரர்கள், துள்ளும் குதிரைகளை அடக்கியவாறு நின்று கொண்டிருந்தனர்!

*

அத்தியாயம் 34

முடிவை நோக்கி....

இரட்டர்கள் படை திருவொற்றியூரையும் தாண்டி காஞ்சியை நோக்கி நெருங்கி வந்து கொண்டிருக்கும் செய்தி அரிஞ்சயனுக்கு எட்டியது. வெள்ளங்குமரனும் அரிஞ்சயனும் கலந்தாலோசித்துப் படைகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டனர். கிடுக்கிப் போல் இருபுறங்களில் சென்று இரட்டர் படைகளைத் தாக்குவது என்பது அவர்களது திட்டம். இளங்கோவின் படை காஞ்சிக் கோட்டையின் பாதுகாவலாக இருக்க வேண்டும் என்பது அவர்களது திறமையான முடிவு.

வெள்ளங்குமரனுக்கு இராஜாதித்தன் மீதே கவனமெல்லாம், திருநாவலூரில் இருக்கிறாரோ, திருக்கோவலூரில் இருக்கிறாரோ என்ன செய்யப் போகிறாரோ என்ற கவலை ஒருபுறம் இருந்தாலும் உடலில் எதிரிகளைத் தாக்கும் போர் வெறி குறைந்து விடவில்லை.

கங்கர்களுடைய படை நடமாட்டம் எவ்விதம் இயங்குகிறது என்று ஒருவருமே அறியாமல் திகைத்திருந்தனர். மேற்குப் புறத்திலிருந்து வந்தால், அவர்களைத் தடுத்து நிறுத்த மற்றொரு படைப் பிரிவை ஏற்பாடு செய்ய வேண்டிய கவலை வெள்ளங்குமரனுக்கு இருந்தது.

காஞ்சிக்கு வெளியே பாடி வீடமைத்துத் தங்கியிருந்தபோது, விடிவதற்கு ஒரு நாழிகை இருக்கும்போது கடல் போன்ற முழக்கத்துடன் இரட்டர் படைகள் வந்து கொண்டிருக்கும் செய்தி வெள்ளங்குமரனுக்கு எட்டியது. அரிஞ்சயனுக்குச் செய்தி அனுப்பிவிட்டு வீர முழக்கத்துடன் சோழப் படைகள் வெகுண்டெழுந்து விரைந்தன!

கீழ்த் திசையிலே செங்கதிரோனின் ஒளி மெல்லப் படரத் தொடங்கும்போது தக்கோலம் அருகே கடல் போன்று வந்த இரட்டர் படைகளைச் சோழ நாட்டுப் படைகள் தடுத்து நிறுத்தின.

வீரர்களும், வீரர்களும் மோதினர். கேடயமும் கேடயமும் உராய்ந்தன. வேலோடு வேல் பொறி பறக்கப் பாய்ந்தன.

கங்க நாட்டுப் பூதூகன் திறமையான திட்டமொன்றைத் தயாரித்தான். இரட்டர்களுடன் போர் நடந்து கொண்டிருக்கும் போது போர்க்களத்தை இருபுறமிருந்தும் தாக்கும் திட்ட மிட்டிருந்தான். காஞ்சியை வைதும்பன் தலைமையில் படைகள் தாக்குவதென்பதும், பூதூகன் தக்கோலப் போர்க்களத்தில் மேற்குத் திசையில் பக்கவாட்டில் பாய்வது என்பதும் திட்டம்.

ஆனால், சோழ குலத்தைத் தோன்றாத் துணையாயிருந்து காப்பாற்றும் திருச்சிற்றம்பலமுடையான் அருளினால் இராஜாதித்தன் உள்ளத்தில் புதிய உற்சாகம் தோன்றவே தன்னிடமிருந்த சொற்பப் படைகளுடன் திருவலம் நோக்கிப் புறப்பட்டான். அவனுக்கு மீண்டும் ஒரே ஒரு தடவை வைதும்பன் மகள் கல்யாணியைச் சந்தித்து விடவேண்டும் எனும் ஆவல் கடைசி முறையாக அவளைச் சந்தித்துத் தன் எண்ணத்தை வெளியிட்டுத் தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்க வேண்டும் எனும் துடிப்பு.

காஞ்சிக் கோட்டையை அணுகாமலே திருவலம் நோக்கிச் செல்லும்போது, வல்லம் கோட்டைக்குச் சற்றுத் தொலைவில் வீரர்களுடன் பாடி வீடமைத்துத் தங்கியிருக்கும்போது, இராஜாதித்தனுடன் வந்திருந்த ஒற்றர் படையினருள் ஒருவன் வைதும்பன் ஏராளமான படைகளுடன் புறப்படும் செய்தியைத் தெரிவித்தான். மேலும் அவன் தக்கோலம் அருகே பெரும் போர் நடைபெறும் சூழ்நிலை உதயமாவதையும் தெரிவித்தான்.

இராஜாதித்தன் வெகுண்டெழுந்தான். வைதும்பன் வெளிப்படையாகவே சோழர்களுக்கு விரோதமாகக் கிளர்ந் தெழுந்த செயல் அவனுடைய கோபத்தை மேலும் வளர்த்தது. தனது வீரர்களுக்குத் தக்கபடி உத்தரவிட்டு, வைதும்பன், படைகளுக்குத் தலைமை வகித்து வரும்போது திடீரென்று தாக்கி, வைதும்பனை அஞ்சி ஓடச் செய்தான். வைதும்பன் படைகள் தீடீர் தாக்குதலை எதிர்பாராமல் அஞ்சி ஓடின வைதும்பன் தன்னந்தனியாக நிற்கும்போது அவனைத் தாக்க விரும்பினான் இராஜாதித்தன்.

அவனைச் சிறைப்படுத்தி தஞ்சைக்கு அழைத்துச் செல்லு மாறு உத்தரவிட்டு, வல்லம்கோட்டைக்குள் கல்யாணிதேவியைச் சந்திக்க விரைந்தான். ஆனால், வல்லம்கோட்டைக் கதவினைப் பிளந்து உள்ளே நுழைவதற்குள், மற்றொரு பயங்கரமான

செய்தி இராஜாதித்தனை எட்டியது. தக்கோலத்தில் விண்ணவரும் அஞ்சும் போர் நடைபெறுவதாகவும் பூதுகனும் போரில் கலந்து கொள்ள விரைந்து வருவதாகவும் அச்செய்தி கூறியது. அப்போது கதிரவன் உச்சி வேளையைக் கடந்து கொண்டிருந்தான்.

இராஜாதித்தன் ஒரு கணம் யோசித்தான். போர்க்களப் பூமியில் வெற்றித் திருமகளை நாடும்போது, காதல் திருமகளுடன் உறவாடுவது தகாது என்ற முடிவுக்கு வந்து, கோட்டைக்குள் கல்யாணிதேவி எங்கிருந்தாலும் தக்க காவலுடன், எந்தவித மரியாதைக் குறைவுமின்றித் தஞ்சைக்கு அழைத்துச் செல்ல உத்தரவிட்டான். கணம் கூடத் தாமதிக்காமல் தக்கோலம் நோக்கி விரைந்தான்.

தக்கோலப் போர்க்களம் மிகவும் பயங்கரமாகக் காணப் பட்டது. வெள்ளங்குமரனும், அரிஞ்சயனும் தனது போர்த் திறமைகள் எல்லாம் புலப்படுத்திப் போரிட்டும் சோழர் படைகள் ஆயிரக்கணக்கில் மாண்டன. ஆனால், ஒவ்வொரு சோழ வீரனும் எதிரிப் படையினர் இருவரையாவது மாய்த்துவிட்டுத்தான் உயிரிழந்தனர். எதிர்ப்படையின் எண்ணிக்கை சோழப் படையினரின் எண்ணிக்கையைப் போல் மும்மடங்காக இருக்கக் கூடுமென்று அன்று மாலை போர் முடிந்த பிறகு அரிஞ்சயனும் வெள்ளங்குமரனும் மதிப்பிட்டனர்.

மாலைக் கதிரவன் மலைவாயில் கவிந்த பிறகும், செவ்வொளி வானவீதியின் மேல் கோட்டில் மறையவில்லை. வீரர்கள் பெற்ற ரணங்களின் நிறத்தை அவை நினைவூட்டின.

திடீரென போர்க்களத்தில் பெரும் ஆரவாரம். சோழர் பாடி இறக்கியிருந்த இடத்தை தாக்க பூதுகனின் படைகள் வந்து கொண்டிருப்பதாகத் தகவல் வந்தது, யுத்த தர்மத்தை மீறிய செய்கைதான். களைப்பால் சற்று ஓய்வெடுத்து மறுநாள் போருக்கு இழந்த பலத்தைப் புதுப்பித்துக் கொள்ள முயன்ற சோழ வீரர்கள் திடுக்கிட்டு விரைந்து தத்தம் ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு எழுந்தனர்.

ஆனால், பூதுகனின் அடாத செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க இராஜாதித்தன் விரைந்து வந்து கொண்டிருந்தான். இராஜாதித்தனுக்குத் துணைக்கு வந்த சிறந்த வீரர்கள் பூதுகன் படையினைத் தாக்கி நிர்மூலமாக்கினர். ''வெற்றி வேல் வீரவேல்'' என்று கோஷமிட்டு கங்கர் படைகளை ஓட ஓட விரட்டிய தோடன்றி இரட்டர் படைகள் தங்கியிருந்த இடங்களைச் சுற்றியும் தீ வைத்தனர்.

இருள் சூழ்ந்து விட்டது. இராஜாதித்தன் வெற்றிப் பெருமிதத்துடன் யானை ஒன்றின் மீது அமர்ந்து தீ வத்தி வெளிச்சத்தில் எதையோ தேடிக் கொண்டிருந்தான். இது வரையில் உயிரினும் மேலாக அணிந்திருந்த முத்துமாலை ஒன்று போர்க்களத்தில் எங்கோ அறுந்து வீழ்ந்துவிட்டது. அதை எப்படியும் தேடி அணிந்த கொள்ள வேண்டும் என்ற ஆவலுடன் போர்க்களத்திலே தானே முன்நின்று தேடச் சென்றான். அதேசமயத்தில் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடக்கும் சோழ வீரர்களைத் தேடி அழைத்துச் செல்வதும் அவன் நோக்கமாக இருந்தது.

அந்த இருளில் திடீரென்று இடி முழக்கம் போன்ற குரலொன்று கேட்டது. இராஜாதித்தன் திரும்பிப் பார்த்துத் தனது உடைவாளை எடுப்பதற்குள், யானை மீது தாவி ஏறிய உருவமொன்று இராஜாதித்தன் மார்பில் தன் உடைவாளை பாய்ச்சியது.

வெற்றி மாலையை அணிந்து முத்து மாலையைத் தேடிய சோழர்க் குலக்கொடி மண்ணிலே சாய்ந்தது!

மூவேந்தர்கள் ஒன்று சேர்ந்து எதிர்த்தும் அவர்களை ஓட ஓட விரட்டிய சோழ வீரர்களுள் தலை சிறந்த வீரன் இராஜாதித்தன், குருதி வெள்ளத்திலே மிதந்தான்!

தன் சகோதரியின் நல்வாழ்வுக்காக சபதம் செய்து, வெற்றி பீடத்தில் அமரும் சமயத்தில் கொடிய பூதூகன் பின்புறமாக வந்து அவனைச் சாய்த்துவிட்டான்.



அத்தியாயம் 35

போய் வருகிறேன்!

பராந்தகச் சோழ சக்கரவர்த்தியின் எதிரே கம்பீரமாக நின்றார் சிவசேகர பண்டிதர்.

''நான் வணங்கும் தெய்வத்தின் பெயரால் திகழும் தங்களை இப்படிச் சிறை செய்து வருமாறு கட்டளை இட்டது எனக்கே வருத்தமாக இருக்கிறது. என்ன செய்வது? தங்களுடைய நடவடிக்கைகள் எல்லையை மீறிவிட்டன. தங்களுடைய பேச்சைக் கேட்ட நான் சோழ நாட்டுப் படைகள் அனைத்தையும் கலைத்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? நல்லவேளையாக தாங்கள் கூறியவற்றுள் எவை ஏற்றவையோ அவற்றை ஏற்றுக் கொண்டேன். சோழ நாட்டினரை ஒரேடியாக வீழ்த்திட நீங்கள் நினைத்தது முடியவில்லை'' என்று கூறினார் பராந்தகச் சோழர்.

சிவசேகரர் ஏதும் கூறவில்லை. மௌனமாக நின்று கொண்டிருந்தார். தனக்குக் குறைந்த பட்சம் மரண தண்டனை யாவது கிடைக்கும் என்று எண்ணினார் சிவசேகரர்.

''பண்டிதரே! நான் தங்களுக்குக் கடுந்தண்டனை கொடுக்கப் போவதாக நீங்கள் நினைக்கலாம். தங்களைக் காதலித்துத் தங்களை அடைவதற்குக் கடைசி வரையில் எவ்வளவோ தொல்லைகளைப் பட்ட அந்தப் பெண்ணிற்காக நான் கருணை காட்டுகிறேன். தங்களை நான் சிறையில் அடைக்கப் போவதில்லை. என்னுடைய மகன் போரில் வென்று, தான் செய்த சபதத்தை நிறைவேற்றித் தன் சகோதரி வீரமாதேவியை மான்யகேடத்தில் மீண்டும் அரியணையில் அமர்த்தித் திரும்பி வரும் வரையில் விருந்தினர் மண்டபத்தில் தங்கியிருங்கள். பிறகு கோலாகலமாக என் புதல்வர்களும், வெள்ளங்குமரனும் வந்த பிறகு அவர்களையும் கலந்தாலோசித்துத் தங்களுக்குத் தண்டனை வழங்குகிறேன்'' என்றார்.

சிவசேகரர் சிரித்தார். ''சக்கரவர்த்தி அவர்களே! நான் அதிகம் பேச விரும்பவில்லை. தங்கள் விருப்பப்படியே விருந்தினர்

மாளிகையில் தங்கியிருந்து தங்கள் நல்வாழ்வுக்கும் பூஜை செய்து வருகிறேன்...''

வீரமாதேவி தந்தையிடம் விரைந்து வந்தாள். அநுபமா மகிழ்ச்சியுடன் வந்தாள்.

''வீரமாதேவி, உன் சகோதரன் வெற்றி மாலையுடன் வரப்போகிறான். தஞ்சை விட்டுப் புறப்பட ஆயத்தமாயிரு. சிவசேகர பண்டிதர் நமது நல்வாழ்வுக்காகப் பூஜை செய்யப் போகிறாராம்'' என்று கூறி மீண்டும் இடிபோல்பெரும் ஒலியுடன் நகைத்தார்.

ஆனால், பராந்தச் சோழர் எதிர்ப்பார்த்ததுபோல் வடக்கே யிருந்து செய்தி வரவில்லை. தனது தலைமகன் இறந்துவிட்டான் என்ற செய்தி கேட்டு மூர்ச்சையடைந்த பராந்தகன், அவன் சுயநிலை அடைவதற்கு பல நாட்கள் பிடித்தன.

தஞ்சை மாநகரம் பெரும் துக்கத்தில் ஆழ்ந்தது வெள்ளங் குமரன் போர் உடையைக் களைந்து சாதாரண பிரஜையைப் போன்று உடையணிந்து பராந்தக சோழ சக்கரவர்த்தியின் முன் வந்து நின்றான். தன் உடைவாள் கேடயம் மற்றும் போர்க்கலன்களை அரசர் எதிரே வைத்து தலைகுனிந்து நின்றான்.

துக்கம் தொண்டையை அடைக்க சக்கரவர்த்தி கேட்டார். ''குமரா! நீ எங்கே புறப்பட்டு விட்டாய்? சோழப் படைகளின் வெற்றிக்கு நீயும் ஒரு காரணமாய் விளங்கியிருக்கிறாய். உன்னைப் படைத்தலைவனாக்க நான் எண்ணியிருந்தேனே, நீ எங்கே போகிறாய்?''

வெள்ளங்குமரனின் கண்களிலும் நீர் தேங்கியது. ''சக்கரவர்த்தி அவர்களே! என்னைப் பொருத்தருளுங்கள். எனது உயிர் நண்பரே உலகை விட்டுச் சென்ற பிறகு எனக்கு மட்டும் இங்கு என்ன வேலை? அவரைத் தொடர்ந்து வீர சொர்க்கம் அடையும் துணிவும் சக்தியும் எனக்கில்லை. அதனால் இந்தத் தொழிலுக்கே ஒரு முழுக்கு போட்டு விடுகிறேன். எங்கோ போகிறேன். முதலில் சிவசேகரப் பண்டிதர் எங்கே இருக்கிறார் சொல்லுங்கள்!

''உனது உயிர் நண்பர் இராஜாதித்தன் சபதத்தை நிறைவேற்ற வேண்டாமா? வீரமாதேவிக்கு மீண்டும் பட்டமளிக்க வேண்டாமா? நீ அவற்றை நிறைவேற்றாது சென்றால் உன்னுடைய நண்பனின் இதயம் திருப்தியடையுமா?'' என்று அரிஞ்சயன் கேட்டான்.

''இளவரசர் அவர்களே! நான் இப்படிச் செய்வதற்கு பொறுத்தருளுங்கள். நானும் ஒரு சபதம் செய்திருக்கிறேன். வாளின் வலிமையைவிட மதியின் வலிமை சிறந்தது என்பதை ஒப்புக் கொண்டுவிட்டேன். நான் செய்த சபதத்தை நிறைவேற்றியாக வேண்டும். வீரமாதேவியை மான்யகேட நகரில் மீண்டும் அமர்த்துவதற்குப் பெரும் படைகள் தேவை வாள்வலி தேவை. சிவசேகர பண்டிதரின் மதி வலி வெற்றி யடைந்த பிறகு நான் தோல்வியை ஒப்புக்கொண்டு வாளைக் கீழே போட்டுவிடத்தான் வேண்டும்! நான் இனி போர் செய்யவே மாட்டேன். யுத்த களம் எனக்குப் பெரும் பாடம் கற்பித்து விட்டது. என் உயிர் நண்பரின் தியாகம் எனக்குப் பெரும் படிப்பினையை அளித்துவிட்டது.

மேலும் மனம் விட்டுச் சொல்லுகிறேன். காதலிலும் நான் தோல்வி கண்டுவிட்டேன். சோழநாட்டிலே நான் இருந்தால் என் மனம் வேறுவிதமாக மாறலாம். அதனால் தான் சோழ நாட்டைவிட்டே செல்கிறேன். இளவரசர் இராஜாதித்தன் என் மடியில்தான் உயிர் நீத்தார். அவரது கடைசி வேண்டுகோள் வைதும்பராயன் மகள் கல்யாணி தேவியை இளவரசர் அரிஞ்சய சோழருக்கு மணம் புரிவிக்க வேண்டும் என்பது. அதை உடனே நிறைவேற்றி வைக்குமாறு சக்கரவர்த்திகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

''மற்றொன்று; சிவசேகர பண்டிதருக்கு எந்தவிதத் தண்டனையும் வழங்கக்கூடாது என்பது, நான் போய் வருகிறேன். மற்றொரு சமயம் இறைவன் அருள் கூட்டுவித்தால் தஞ்சை மாநகரம் வந்து உங்கள் எல்லோரையும் சந்திக்கிறேன். அப்போது நான் வெள்ளங்கரைப் புதூரினின்று வந்த குமரனாக வர மாட்டேன். முற்றும் துறந்த துறவியாக சாதாரணப் பண்டிதராக வருவேன்.

''அப்போது தஞ்சை மாளிகையில் அரிஞ்சயனும் கல்யாணி தேவியும் களிப்புடன் வாழ்வதைக் காண்பேன். கொடும்பாளூர் இளவரசரும், அநுபமாதேவியும் சிறப்புடன் வாழ்வதைக் காண்பேன். செம்பியன் குலத்துதித்த பராந்தகச் சோழ சக்கரவர்த்தி அவர்கள் சிவநேச செல்வராய் நீடூழி வாழக் காண்பேன். நான் வருகிறேன், வணக்கம்'' என்று வெள்ளங்குமரன் அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டான்.

- முடிவடைந்தது -

இராஜாதித்தன் சபதம்

